# பகுதி II

# பகுதி II

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கணக்குகளும் நிதியும் | 1 |
| 2. | வங்கி மேற்பார்வை | 59 |
| 3. | வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் | 63 |
| 4. | தொடர்பூட்டல் | 63 |
| 5. | நாணயம் | 66 |
| 6. | உள்நாட்டுத் தொழிற்பாடுகள் | 67 |
| 7. | பொருளாதார ஆராய்ச்சி | 71 |
| 8. | ஊழியர் சேம நிதியம் | 74 |
| 9. | செலாவணிக் கட்டுப்பாடு | 77 |
| 10. | நிதியியல் உளவறிதல் பிரிவு | 81 |
| 11. | நிதியியல் முறைமை உறுதிப்பாடு | 83 |
| 12. | ஆளுநர் செயலகம் | 84 |
| 13. | மனிதவளங்கள் முகாமைத்துவம் | 85 |
| 14. | தகவல் தொழில்நுட்பம் | 90 |
| 15. | பன்னாட்டுத் தொழிற்பாடுகள் | 92 |
| 16. | முகாமைத்துவக் கணக்காய்வு | 94 |
| 17. | கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு | 96 |
| 18. | கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு | 100 |
| 19. | பணிமனை | 101 |
| 20. | மாகாண அலுவலகங்கள் கண்காணிப்பு | 101 |
| 21. | பொதுப்படுகடன் | 103 |
| 22. | பிரதேச அபிவிருத்தி | 108 |
| 23. | செயலகம் | 114 |
| 24. | பாதுகாப்புப் பணிகள் | 114 |
| 25. | புள்ளிவிபரவியல் மற்றும் கள அளவீடுகள் | 115 |
| 26. | வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை | 117 |
| 27. | நலன்புரி | 122 |

## கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

# இலங்கை மத்திய வங்கி

## நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழு அறிக்கை

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வுக் குழுவானது நாணயச் சபையின் நியமன உறுப்பினரான திருமதி. மனோ இராமநாதன் (கணக்காய்வுக் குழுவின் தலைவர்) திரு. எம். ஆர். மிகூலர் (கே. பி. எம். ஜி. போர்ட், றொட்டஸ் தோற்டன் அன்ட் கம்பனி பங்காளர்) மற்றும் திருமதி ஏ. எம். ஜே. பற்றிக் (எஸ். ஜே. எம். எஸ். பங்காளர்) ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. துணை ஆளுநர்களான திரு. பி. டி. ஜே. பர்னாந்து (2009 ஏப்பிறலிலிருந்து திரு. பீ. டி. ஜே. ஏ. சில்வா (2010 மாச்சு வரை) மற்றும் முனைவர் டபிள்யு. எம். ஹேமசந்திர (2010 மாச்சிலிருந்து) ஆகியோர் 2010ஆம் ஆண்டுப் பகுதியில் குழுவிற்கான செயலாளர்களாகப் பணியாற்றினார்கள்.

2010ஆம் நிதி ஆண்டில், கணக்காய்வுக் குழுவானது 7 தடவைகள் கூடி பின்வரும் பணிகளை மேற்கொண்டது.

- கணக்காய்வாளர் கையொப்பமிடுவதற்கு முன்னதாக 2009ஆம் ஆண்டிற்கான வரைவு இறுதி கணக்குகளை மீளாய்வு செய்ததுடன் குறிப்பிட்ட வெளிப்படுத்துகைகளுடன் இணங்கிக் கொண்டது.
- இலங்கை மத்திய வங்கியின் 2009ஆம் ஆண்டுக் கணக்குகள் தொடர்பாக வெளிக் கணக்காய்வாளர்களினால் அவர்களது இடைக்காலப் பிரச்சனைகளின் புரிந்துணர்வு மற்றும் முகாமைத்துவக் கடிதத்தில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கவனத்தில் எடுத்தது.
- இடைக்காலப் பிரச்சனைகளின் புரிந்துணர்வு மற்றும் முகாமைத்துவக் கடிதம் தொடர்பாக கணக்காய்வுக் குழுவினால் பின்வரும் விதந்துரைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.
    - கொடுகடன் தகவல் பணியகத்திலுள்ள இலங்கை மத்திய வங்கியின் உடமைகளில் 19.9 சதவீதத்திற்கும் கூடுதலானதை 2010இன் 1ஆம் காலாண்டுப் பகுதியில் அகற்றுதல்.
    - வங்கிக்காக இரகசியக் கணனிக் குறியீட்டினை உருவாக்கி அதனை வங்கியின் அனைத்து முறைமைகளுக்கும் பிரயோகித்தல்
    - பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் - 9 இனை நேரகாலத்துடன் பின்பற்றுவதில்லையென உடன்பாடு காணப்பட்டது.
    - 2010ஆம் ஆண்டிற்கான மேற்கொள்ளப்பட்ட காப்பீட்டுக் கணிப்பு மதிப்பீடுகளைக் கொண்ட உண்மையான அறிக்கையின் சமர்ப்பித்தல் அவதானிக்கப்பட்டது.
    - நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் மத்திய வங்கி அலுவலர்களுடன் பணியாற்றுவதற்கு வெளித்தரப்பினரை வாடகைக்குப் பெறுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.
    - பொறிகள் மற்றும் கருவிகளின் சொத்துக்களின் கீழ் லொயிட்ஸ் கட்டடத்தினை கையேற்பது தொடர்பான தீர்மானத்தினை மேற்கொள்ளல்
    - அனைத்து பன்னாட்டு நிதியியல் அறிகையிடல் நியமங்களையும் நாளது வரை பூரணப்படுத்துவதற்கு ப.க.நி. சபையின் வெப்தள பணிக்கு சந்தா வழங்குதல்
- இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வினை விருத்தி செய்வதற்கு பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றினை தெரிவு செய்வது தொடர்பாக தொடர்பு நியதிகள் விதந்துரைக்கப்பட்டன.
- பன்னாட்டு நாணய நிதியத்தின் பாதுகாப்பான மதிப்பீடுகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட ப.நா. நிதியத்திற்கான மேலதிக ஒப்படைப்புக்களை மேற்கொள்வதற்கு எர்னஸ்ட் அன்ட் யங்கிற்கு இது அதன் சம்மதத்தினை தெரிவித்தது.
- திருத்தப்பட்ட ப.நி.அ. நியமம் மற்றும் ப.நி.அ. நிதியத்திற்கான முன்னேற்றம் தொடர்பாக காப்பீட்டு மதிப்பிடலுக்காகப் பயன்படுத்தப்பட்ட எடுகோள்களின் நியாய பூர்வ தன்மை, உள்நாட்டு திறைசேரி உண்டியல் சொத்துப்பட்டியலின் விலைக் குறிப்பீட்டு பெறுமதிகளின் வெளிப்படுத்தல் மற்றும் கணக்கீட்டுக் கொள்கை தொடர்பான விடயங்களில் 2009இல் கணக்காய்வின் போது எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகளின் மீது எர்னஸ்ட் அன்ட் யங்குடன் இணக்கம் காணப்பட்டது.
- நலவுரித்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றுவதனை தவிர்ப்பதற்காக, கணக்காய்வுக் குழுவின் சம்மதத்துடன் கணக்காய்வு செய்யப்படாத வேலைகளை வெளிக் கணக்காய்வாளர்களிடம் ஒப்படைப்பதற்கு விதந்துரைக்கப்பட்டது.
- கள மீட்டாளர்களினால் செய்யப்பட்ட சமர்ப்பிப்புக்கள் மீளாய்வு செய்யப்பட்டன.
- முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் புதிய கணக்காய்வாளர் பட்டயத்திற்கும் ஒழுக்கக் கோவைக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டதுடன் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வுத் திட்டமிடல் முறையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான வரைவு தொடர்பு நியதிகளை தொடங்குவதற்கான ஒப்புதல்களும் வழங்கப்பட்டன.
- முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் தொடர்பாக மலேசியாவில் உள்ளகக் கணக்காய்வாளர் நிறுவகத்துடன் சேர்ந்து கொலம்பஸ் அட்வைஸ்ஸரீஸ் சேர்விஸ் சென்ட் பத்ட் இனால் தயாரிக்கப்பட்ட மீளாய்வு அறிக்கையின் தர மதிப்பீடு பற்றி செய்யப்பட்ட விதந்துரைப்புக்களும் அவதானிக்கப்பட்டன.
- திறந்த நிலையின் சந்தை மதிப்பீடு தொடர்பான கணக்கீட்டுப் பிரச்சனைகள் ஆராயப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணி வணிகம், பிணையக் கடன்பாடுகள், நிதியமல்லாச் சொத்துக்களாகத் தங்கம், மாகாணக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் சந்தைப் பெறுமதி, தொழில்நிலை நன்மைகள் திட்டத்தின் கணக்கீட்டு மதிப்பீட்டிற்கான கணக்கீடு மற்றும் இலாப நட்டக் கணக்குகளிலுள்ள உண்மையான இலாபம்/ நட்டத்தினை அங்கீகரித்தல், மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கான (நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 40இன் படி) செலவினை பிற்போடுதல், தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களை வெளிப்படுத்தல், வேளாண்மைத் துறைக்கான கட்டாயக் கடன் வழங்கல், கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டம், காணி, கட்டடம் மற்றும் முதலீட்டுச் சொத்துக்களின் மீள்மதிப்பீடு.
- முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு பயிற்சி பெற்ற அலுவலர்கள் தேவைப்படுவதனால் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அலுவலர்களைச் சுழற்சி முறைமைத் திட்டத்தினைப் பிரயோகிக்கும் பொழுது அது பற்றி நாணயச் சபைக்கு அறிவிக்குமாறு கணக்காய்வுக் குழுத் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.
- முகாமைக் கணக்காய்வுப் பணிப்பாளரின் காலாண்டு முன்னேற்ற அறிக்கை தொடர்பாக விதந்துரைப்புக்கள் செய்யப்பட்டன.
- கணக்காய்வுக் குழுவின் கூட்டம் நடைபெறும் கால இடைவெளி பற்றியும் அறிக்கையிடும் நடைமுறை பற்றியும் கணக்காய்வுக் குழு நாணயச் சபைக்கு அறிக்கையிடுவதற்கு இயலக் கூடிய காலம் பற்றியும் கணக்காய்வுக் குழுவின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.
- 2011ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளரை நியமிப்பது தொடர்பான முன்னேற்றம் பற்றி மீளாய்வு செய்யப்பட்டது.

# இலங்கை மத்திய வங்கி

**முகாமைத்துவக் கூற்று**

## இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களுடன் தொடர்புடைய பொறுப்புடைமையும் நிதிச் செயலாற்றமும்

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பான நிறுவனமாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இச் சட்டத்திற்கிணங்க, வங்கியானது பிரதானமான குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுகின்ற பொறுப்பை ஏற்றுள்ளது.

ஆதலால் மத்திய வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகளின் வெற்றிகரத் தன்மைக்கான பொறுப்பபுடைமையின் அடிப்படையானது அதன் பிரதானமாக குறிக்கோள்களை அடையப் பெறுவதை முன்னிட்டான அதன் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் நற்பயன் தொடர்பாகவேயன்றி அதன் இலாபகரத்தன்மை தொடர்பில் அத்தியாவசியமானதாயிராது. இக் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் ஏனைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கியை பிரித்துக் காட்டுகின்ற சிறப்புத் தன்மையைக் கொண்ட அடிப்படைப் பண்புகளாக உள்ளன. இதற்கிணங்க மத்திய வங்கிக்கு வட்டி வீதத்திலும் செலாவணி வீதத்திலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அதன் நாணயக் கொள்கைச் செயற்பாடுகளினூடாக அதற்கே உரியதான இலாபத்தை உருவாக்கிக் கொள்ளும் சிறப்புமிக்க ஆற்றல் அதற்குள்ள போது, இலாபகரத் தன்மையுடன் தொடர்புடைய அணுகு முறைகள் கடைப்பிடிக்கப்படும் பட்சத்தில் அதன் பெறுபேறாக பிரதானமான குறிக்கோள்களை விட்டுக் கொடுத்து இலாபத்தைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய நிலை உருவாகும். ஆதலால் தற்காலிகமானதாக அல்லது புலமை வாய்ந்ததாக மட்டும் இருந்தாலன்றி மத்திய வங்கியின் குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுதல் சிறப்புமிக்கதாகவும் தனியே இலாபத்தைப் பெறும் குறிக்கோள்களிலிருந்து விலகியதாக இருத்தலும் அவசியமாகின்றது.

இப் பின்னணியில், மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களில் அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள், செலாவணி வீத முகாமைத்துவம், நாணயங்களை வெளியிடல் ஆகியவற்றை அமுலாக்குகின்ற போது உருவாகின்ற இலாபம் மற்றும்/ அல்லது நட்டம் உணர் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதால், இக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள நிதிச் செயலாற்றுகையானது இச் சூழலமைவிற்கிணங்க வரைவிலக்கணம் அளிக்கப்படுதலும் புரிந்து கொள்ளப்படுதலும் அவசியமாகும்.

வங்கியானது நாணய விதிச் சட்டத்தின் 42 மற்றும் 43ஆம் பிரிவுகளின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிவாரிக் கணக்காய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதற்கமைய பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியொழுகுதலை உறுதி செய்யும் பொருட்டு பன்னாட்டு கணக்காய்வு நியமங்களின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வதற்கு எர்னஸ்ற் அன்ட் யங் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சேவையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெற்றுள்ளார். உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறை மீளாய்வுகள் ஆகிய இரண்டிலும் மேற்கொள்ளப்படும் இக் கணக்காய்வுகள் நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடையதாகும்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல / My No. } ஈஎப்/ஜே/சீபீ/எவ்ஏ/2010
ඔබේ අංකය / உமது இல / Your No. }
දිනය / திகதி / Date } 2011 மாச்சு 29

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை மத்திய வங்கியின் (இமவ) 2010 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றல் கூற்று, ஆண்டு முடிவிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் நிதிசார் கூற்றுக்களுக்கான (இல. 1 தொடக்கம் 40 வரையான) ஏனைய விளக்கக் குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய இலங்கை மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்கள் 1971இன் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13ஆம் பிரிவு மற்றும் நாணய விதிச் சட்டத்தின் (422ஆம் அத்தியாயம்) 42 (2)ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பன்னாட்டு நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்கும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு என்னால் நியமனம் செய்யப்பட்ட பொதுச் சேவையிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக் கூற்றுக்களை பன்னாட்டு நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க தயாரிப்பது மற்றும் நியாய பூர்வமாகச் சமர்ப்பித்தலுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க பாதிப்புக்கள் தொடர்பாக பிறள் கூற்றுக்களற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாய பூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டினை வடிவமைத்தல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தல் மற்றும் பிரயோகித்தல், சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான முறையில் கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன இப்பொறுப்புக்களில் உள்ளடங்குகின்றன.

### 1.3 கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வு பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இக்கணக்காய்வு பன்னாட்டு கணக்காய்வு நியமங்களுக்கிணங்க மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் போதியளவான பிழைகளற்றவை என்பது தொடர்பாக நியாயமாக உறுதிப்படுத்தக் கூடியவாறு கணக்காய்வினைத் திட்டமிட்டு அமுல்படுத்துவது இந்நியமத்தின் பிரகாரம் அவசியமானவையாக உள்ளது. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகள், வெளிப்படுத்தல்கள் என்பவை தொடர்பான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறைகளை அமுல்படுத்துதல் கணக்காய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தவறுகள் மற்றும் மோசடிகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவான தவறான கூற்றுக்கள் தொடர்பான எச்சரிக்கையினை மதிப்பீடு செய்வதையும் உள்ளடக்கி கணக்காய்வாளரின் தீர்ப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விடரை மதிப்பீடு செய்யும் போது நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போதும் சமர்ப்பிக்கும் போதும் சந்தர்ப்பத்திற்கேற்ற கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை கணக்காய்வாளர் கருத்திற் கொள்ள வேண்டிய போதிலும் உள்ளகக் கட்டுப்பாட்டின் செயற்றிறன் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகள், முகாமையால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினை மதிப்பாய்வு செய்தல், அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலை மதிப்பாய்வு செய்தல் என்வற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் அமைய கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் பெறப்பட்டன என்றும் அதற்கமைய எனது அபிப்பிராயத்திற்கான போதியளவு அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நான் நம்புகிறேன். 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3) மற்றும் (4)ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பினையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

### 1.4 அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் கூற்றுக்கள் வங்கியின் 2010 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலைமைகளையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் பன்னாட்டு நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க அனைத்து பொருண்மையான அம்சங்களையும் நியாயமாக வழங்குகின்றது என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.5 பாராளுமன்றத்தின் அறிக்கை

அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எச் ஏ எஸ் சமரவீர
**பதில் கணக்காய்வாளர் நாயகத்தினால்**
**கையொப்பமிடப்பட்டது**

නිදහස් චතුරශ්‍රය,
කොළඹ 07, ශ්‍රී ලංකාව

சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07, இலங்கை

INDEPENDENCE SQUARE,
COLOMBO 07, SRI LANKA

දුරකථනය / தொலைபேசி / Telephone } 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ – மெயில் / E-mail } oaggov@sltnet.lk

# இலங்கை மத்திய வங்கி

**ஐந்தொகை**

**2010 திசெம்பர் 31இல் உள்ளவாறானது**

| | குறிப்பு | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|---|
| **துக்கள்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசு நிலுவையும் காசுக்குச் சமமானவையும் | | **189,664,726** | 147,871,157 |
| நிதியியல் சொத்துக்கள் | | | |
| - இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 5 | **183,729,813** | 56,275,323 |
| - விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 5 | **346,935,603** | 315,342,452 |
| ஏனைய வெளிநாட்டிலிருந்தான பெறுகைகள் | | **8,534,829** | 2,429,319 |
| ப.நா. நிதித்துடன் தொடர்பான சொத்துக்கள் | 6 | **71,199,269** | 76,509,781 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **800,064,240** | 598,428,032 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| முதலீட்டுப் பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள் | | **20,497,816** | 43,450,557 |
| அரசுக்கான முற்பணங்கள் | 7 | **77,878,823** | 73,880,500 |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | 8 (அ) | **2,459,846** | 1,136,596 |
| ஏனைய உள்நாட்டில் பெறத்தக்கவை | 8 (ஆ) | **3,274,892** | 595,444 |
| நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் | 9 (அ) | **41,236** | 43,855 |
| ஏனைய சொத்துக்கள் | 9 (ஆ) | **1,272,621** | 1,497,973 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **105,425,234** | 120,604,925 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | **905,489,474** | 719,032,957 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல்லாச் சொத்துக்கள்** | | | |
| தங்கத்தில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் | | **54,007,207** | 84,834,269 |
| **உள்நாட்டு நாணய நிதியியல்லாச் சொத்துக்கள்** | | | |
| பொருட்களின் இருப்பு | 10 | **2,814,784** | 2,157,200 |
| நானாவிதச் சொத்துக்கள் | | **4,170,077** | 4,092,428 |
| சொத்து, பொறிகள், இயந்திரங்கள் | 11 | **9,344,340** | 9,342,947 |
| அருவச் சொத்துக்கள் | 12 | **17,753** | 16,383 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழில்நிலைக்குப் பின்னான நன்மைத் திட்டங்கள் | 36 | **869,700** | 293,476 |
| **ஏனைய மொத்தச் சொத்துக்கள்** | | **71,223,861** | 100,736,703 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **976,713,335** | 819,769,660 |
| **பொறுப்புக்களும் பங்குகளும்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய தொகை | 13 | **3,127,136** | 18,068,841 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை | 14 | **65,044,407** | 29,836,531 |
| ப.நா.நி. தொடர்பான பொறுப்புக்கள் | 15 | **275,420,837** | 218,171,021 |
| ஏனைய வெளிநாட்டுச் செலுத்தப்படத்தக்கவை | 16 | **5,014,191** | 5,008,035 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **348,606,571** | 271,084,428 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 17 | **104,853,445** | 86,085,866 |
| அரச, அரச முயற்சிகளிலுள்ள மீதிகள் | 18(அ) | **3,088,659** | 2,347,709 |
| மீள் கொள்வனவின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 18(ஆ) | **113,454,891** | 84,022,645 |
| ஊழியர்கள் நன்மைகள் திட்டத்திலுள்ள மீதிகள் | 19(அ) | **977,154** | 1,050,255 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 19 (ஆ) | **27,779,723** | 25,981,654 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **250,153,872** | 199,488,129 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | | **598,760,443** | 470,572,557 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 20 | **255,652,217** | 217,429,835 |
| பிற்போடப்பட்ட அரச கொடைகள் | 21 | **4,605** | 567 |
| நானாவிதப் பொறுப்புக்களும் ஒன்று சேர்ந்தவையும் | | **74,381** | 66,895 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | | **255,731,203** | 217,497,297 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **854,491,646** | 688,069,854 |
| **பங்குகள்** | | | |
| மூலதன நிதியம் | 22 | **25,000,000** | 25,000,000 |
| ஒதுக்குகள் | | **97,221,689** | 106,699,806 |
| **மொத்தப் பங்கு** | | **122,221,689** | 131,699,806 |
| **மொத்தப் பொறுப்புக்களும் பங்குகளும்** | | **976,713,335** | 819,769,660 |

**இந் நிதிக் கூற்றுக்களை வெளியிடுதல் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் 2011 மாச்சு மாதம் 07ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.**

.................................................................
அஜித் நிவாட் கப்ரால்- ஆளுநர்

.................................................................
எம்.ஐ.சுப்பியான் - முதன்மைக் கணக்காளர்

(பகுதி II - 8) தொடக்கம் (பகுதி II - 58)ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி
**வருமானக் கூற்று**
**2010 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்பு | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 24 | **10,841,880** | 4,595,856 |
| விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறாத இலாபம் (நட்டம்) | | **(3,484,968)** | (4,177,107) |
| விலை மாற்றங்களிலிருந்தான தேறிய இலாபம் (நட்டம்) | | **27,643,286** | 6,689,834 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **35,000,198** | 7,108,583 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்** | | | |
| வட்டிச் செலவு | 25 | **(3,881,159)** | (1,832,436) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு** | | **(3,881,159)** | (1,832,436) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம் (நட்டம்) | | **(8,659,222)** | 8,842,035 |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்** | | **22,459,817** | 14,118,182 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 24 | **5,904,437** | 28,111,337 |
| வட்டிச் செலவு | 25 | **(10,123,663)** | (2,534,820) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **(4,219,226)** | 25,576,517 |
| ஏனைய வருமானம் | 26 | **825,681** | 544,217 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | **19,066,272** | 40,238,916 |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | |
| **ஆளணிச் செலவுகள்** | 27 | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | | **(2,224,931)** | (2,128,264) |
| - வரைவிலக்கணம் செய்யப்பட்ட பகிர்ந்தளிப்புத் திட்டச் செலவு | | **(305,487)** | (276,101) |
| - தொழிலுக்குப் பின்னரான வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நன்மைகள் திட்டச் செலவு | | **262,190** | - |
| | | **(2,268,228)** | (2,404,365) |
| பெறுமானத் தேய்வும் கடன் தீர்ப்பனவும் | | **(278,453)** | (295,759) |
| பொருட் பட்டியல் செலவு | | **(1,621,189)** | (1,350,463) |
| நிர்வாகச் செலவுகள் | 28 | **(1,155,182)** | (913,307) |
| அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்கள் மற்றும் தேறிய நானாவித பதிவழிப்புக்கள் | | **(1,108,000)** | - |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவுகள்** | | **(6,431,052)** | (4,963,894) |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்** | | **12,635,220** | 35,275,022 |
| **வருமான வரி** | 29 | **(891,267)** | (1,636,373) |
| **இவ்வாண்டிற்கான தேறிய இலாபம்** | | **11,743,953** | 33,638,649 |
| ஆண்டுக்கான தேறிய இலாபம்/நட்டம் | | **11,743,953** | 33,638,649 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | | |
| விற்பனைக்குள்ள பிணையங்களுக்கான தேறிய சந்தைப் பெறுமதி இழப்பு | | **(5,889,977)** | (2,887,636) |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | **5,853,976** | 30,751,013 |

(பகுதி II - 8) தொடக்கம் (பகுதி II - 58)ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி

**உரிமை மூலதன அசைவுக் கூற்று**

**2010 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | பங்களிக்கப் பட்ட மூலதனம் ரூபா 000 | மூலதனமாக ஒதுக்கப்பட்ட ஒதுக்குகள் ரூபா 000 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூபா 000 | ஏனைய ஒதுக்கங்கள் (குறிப்பு 22) ரூபா 000 | திரட்டிய இலாபங்கள் ரூபா 000 | மொத்தம் ரூபா 000 |
|---|---|---|---|---|---|---|
| **2009 சனவரியில் உள்ளவாறு** | **15,000** | **24,985,000** | **2,706,067** | **68,891,661** | **24,351,065** | **120,948,793** |
| தேறிய இலாபம் | - | - | - | - | 33,638,649 | 33,638,649 |
| அதே நேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றம் | - | - | - | 95,043 | (95,043) | - |
| சந்தை மதிப்பீட்டு ஒதுக்கிற்கான மாற்றம் | - | - | - | 2,211,883 | (2,211,883) | - |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள் மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றம் | - | - | - | 8,842,035 | (8,842,035) | - |
| இலங்கை மத்திய வங்கி விசேட ஒதுக்கிற்கான மாற்றம் | - | - | - | 269,798 | (269,798) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | | | (2,887,636) | - | (2,887,636) |
| அரசுக்கான இலாப மாற்றல் | - | - | - | - | (20,000,000) | (20,000,000) |
| **2010 சனவரி 1இல் உள்ளவாறு** | **15,000** | **24,985,000** | **2,706,067** | **77,422,784** | **26,570,955** | **131,699,806** |
| தேறிய இலாபம் | - | - | - | - | 11,743,953 | 11,743,953 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றம் | - | - | - | 107,559 | (107,559) | - |
| பொது ஒதுக்கிற்கான மாற்றம் | - | - | - | 700,975 | (700,975) | - |
| சந்தைப் பெறுமான ஒதுக்குகளுக்கான மாற்றல் | | | | (4,177,107) | 4,177,107 | |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள் மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல் | - | - | - | (8,659,222) | 8,659,222 | - |
| இலங்கை மத்திய வங்கி விசேட ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | 206,998 | (206,998) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | - | - | - | (5,889,977) | - | (5,889,977) |
| இ.ம.வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | - | (439) | (439) |
| மீதி இலாபத்தினை அரசிற்கு மாற்றுதல் - 2009 | | | | | (5,000,000) | (5,000,000) |
| முன்கூட்டியே இலாபத்தினை அரசிற்கு மாற்றுதல் - 2010 | - | - | - | - | (10,000,000) | (10,000,000) |
| தன்னிச்சையான வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் | | | | | | |
| - இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கான முதலீடு நிதிய மாற்றல் | - | - | - | (331,653) | - | (331,653) |
| - மாகாண ரீதியான கொடுகடன் திட்டத்திற்கான நிதிய மாற்றல் | - | - | - | 2,900,000 | (2,900,000) | - |
| **2010 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **15,000** | **24,985,000** | **2,706,067** | **62,280,356** | **32,235,266** | **122,221,689** |

(பகுதி II - 8) தொடக்கம் (பகுதி II - 58)ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
## காசுப் பாய்ச்சல் கூற்று
## 2010 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| **மூலம்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **8,444,272** | 3,620,945 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **401,620** | 452,164 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **27,643,286** | 6,992,342 |
| பெறப்பட்ட செலாவணி இலாபம்/ (நட்டம்) | | **(2,150,718)** | 673,475 |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **657,674** | 468,899 |
| | | **34,996,134** | 12,207,825 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **3,695,818** | 1,963,574 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **10,481,347** | 2,156,462 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **2,818,927** | 3,747,815 |
| வழங்குனர்களுக்கான கொடுப்பனவு | | **4,954,522** | (21,256,640) |
| செலுத்தப்பட்ட வருமானவரி | | **884,633** | 1,857,983 |
| | | **22,835,247** | (11,530,806) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்:** | 30 | **12,160,887** | 23,738,631 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்:** | | | |
| **மூலம்:** | | | |
| ஏனைய உள்ளூர் நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய (அதிகரிப்பு) /குறைப்பு | | **(81,150)** | (1,879,364) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் அளவீடுகள் | | **791,118** | 2,688,757 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகளின் விற்பனை / மீட்டல் | | **2,619** | 6,874 |
| சொத்து, பொறி, கருவிகளின் விற்பனை | | **4,332** | 1,367 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் முதலீடுகள் மீதான வருமானம் | | **11,695** | - |
| மீள விற்பதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு/(குறைப்பு) | | **29,432,245** | 70,279,644 |
| | | **30,160,859** | 71,097,278 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய அதிகரிப்பு/ **(குறைப்பு)** | | **183,338,571** | 286,976,540 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு/ (குறைப்பு) | | **(1,800,539)** | 1,496,343 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/ (குறைப்பு) | | **(26,948,525)** | 40,717,160 |
| ஏனைய உள்ளூர் வைப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/ (குறைப்பு) மற்றும் கொடுபடத்தக்கவை | | **(2,861)** | 4,290 |
| கொடைகள் தவிர்ந்த சொத்துப் பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவுகள் | | **280,027** | 387,795 |
| தங்க இருப்பிலான தேறிய அதிகரிப்பு/ (குறைப்பு) | | **(29,680,126)** | 75,691,109 |
| ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் | | **1,954,823** | 2,203,105 |
| வைப்புக் காப்புறுதி நிதியச் சொத்துக்களின் மாற்றல் | | **331,653** | - |
| | | **127,473,023** | 407,476,342 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(97,312,164)** | (336,379,064) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **மூலம்:** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை வெளியிடுதல் | | **(260,277,179)** | (218,514,268) |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை மீளப் பெறல் | | **298,499,562** | 249,845,187 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் தேறிய வழங்கல் | | **38,222,383** | 31,330,919 |
| **கழிக்குக:** | | | |
| அரச, கொடுக்கல்வாங்கல் மீதான சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய மீளப்பெறல் | 31 | **(25,210,557)** | (147,556,788) |
| வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல்வாங்கல்களிலுள்ள சுற்றோட்ட நாணயத்தின் தேறிய மீளப்பெறல் | 32 | **(18,866,241)** | (4,149,819) |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய மீளப்பெறல் | | **(44,076,798)** | (151,706,607) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | **82,299,181** | 183,037,526 |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் மீள் கொள்வனவு | | **(67,310,167)** | (121,365,370) |
| ஏனைய நிதிகளின் கொடுப்பனவுகள் | | **439** | - |
| அரசுக்கான மிகைக் கொடுப்பனவுகள் | | **15,000,000** | 20,000,000 |
| | | **(52,309,728)** | (101,365,370) |
| **நிதியியல் நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | | **134,608,909** | 284,402,896 |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு** | | **49,457,632** | (28,237,537) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **(7,664,063)** | 8,769,887 |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | **147,871,157** | 167,338,807 |
| **2010 திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 33 | **189,664,726** | 147,871,157 |

(பகுதி II - 8) தொடக்கம் (பகுதி II - 58)ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி
### 2010 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் விளக்கக் குறிப்புகள்

**1. அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதித் தளம்**

இவை இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்குப் பொறுப்பான அதிகாரம் வாய்ந்த நிறுவனமாக 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலகக் நாணய விதிச் (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் (வங்கி அல்லது இ.ம.வ.) பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைய விசேட நோக்கத்தையுடைய நிதிக்கூற்றுக்களாகும். இலங்கை மத்திய வங்கியானது, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினுள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளதோடு, கொழும்பு 01, சனாதிபதி மாவத்தை, 30ஆம் இலக்கத்தில் அமையப் பெற்றுள்ளது.

மேற்படி நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்கு ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் 2010 மாச்சு 07ஆம் திகதி நாணயச் சபையின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்டது.

**2. கணக்கீட்டுக் கொள்கைகள்**

**2.1 தயாரிப்பு அடிப்படை**

இந் நிதிக்கூற்றுக்கள், கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினால் அடையாளம் காணப்பட்டவாறு, காணி, கட்டடம் மற்றும் ஒரு சில நிதிச் சொத்துக்கள் தவிர்ந்த ஏனையவை நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டு வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**அறிக்கையிடல் முறை**

வங்கியானது நிதிச் சொத்துக்களையும் நிதிப் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும் செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி வெளிப்படுத்துகிறது. நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களும் பொறுப்புக்களும் குறிப்பிட்ட வகைகளின் திரவத்தன்மை ஒழுங்கு வரிசையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையிடும் அணுகுமுறை குறிப்பு 4இல் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளவாறு, வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

**இணக்கக் கூற்று**

2010 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந் நிதிக்கூற்றுக்கள் பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன. நாணய விதிச் சட்டத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டு சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. ப.நி.அ. நியமங்களின் ஒரு சில தேவைப்பாடுகளின் காரணமாக, வகைப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடையதான தொகைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களை விட இந் நிதிக்கூற்றுக்களில் வித்தியாசமானதாக அமையலாம்.

**சமர்ப்பித்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட நாணயம்**

வேறு விதமாக கூறப்பட்டிருந்தாலொழிய அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவின் ஆயிரத்திற்கு கிட்டிய தொகையில் தரப்பட்டுள்ளன.

**2.2 முக்கியமான கணக்கியல் தீர்ப்புகளும் மதிப்பீடுகளும்**

கணக்கியல் கொள்கைகளைப் பிரயோகிக்கும் செயன்முறைகளிலே, நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளின் மீது, மிக முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மதிப்பீடுகளுடன் சம்பந்தப்பட்டவை தவிர்ந்தனவற்றில், வங்கி பின்வரும் தீர்ப்புக்களை மேற்கொண்டுள்ளது.

**விற்பனைக்குள்ள முதலீடுகளின் முடக்கம்**

நியாயப் பெறுமதியானது அதன் கிரயத்திற்குக் கீழே கணிசமான அளவு, அல்லது நீண்டகாலப் போக்கில், வீழ்ச்சியடையும் போது வங்கியானது, விற்பனைக்குள்ள முதலீடுகளின் முடக்கத் தன்மையை நிர்ணயிக்கிறது. குறிப்பிடத்தக்க அல்லது நீண்ட காலப்போக்கு எது என்பதை நிர்ணயிப்பதற்கு அவதானிப்புக்கள் அவசியமாகின்றது.

**ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நலத் திட்டங்களும்**

குறித்துரைக்கப்பட்ட நலத் திட்டங்களின் செலவு ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது, கழிவு வீதங்கள், சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வீதங்கள், எதிர்கால இழப்பீட்டு அதிகரிப்புகள், இறப்பு வீதம் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் ஆகியவற்றின் கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இத் திட்டங்களின் நீண்டகால இயல்பின் காரணமாக மேற்படி மதிப்பீடுகள் கணிசமான அளவு நிச்சயமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. பயன்படுத்தப்பட்ட கருதுகோள்கள் குறிப்பு 36இல் தரப்பட்டுள்ளன.

**2.3 கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல்களின் மாற்றங்கள்**

வங்கியினால் பின்பற்றப்பட்ட பின்வரும் நியமங்கள், கணக்கீட்டுக் கொள்கைகள் கடந்த ஆண்டில் பின்பற்றப்பட்டவையுடன் ஒத்திசைவானவையாகும். பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு செய்யப்பட்ட முன்னேற்றங்களிலிருந்து தோன்றிய திருத்தங்கள் பின்வரும் நியமங்கள் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதியியல் நிலைமை அல்லது வங்கியின் செயலாற்றத்தில் எந்தவொரு தாக்கத்தினையும் கொண்டிருக்கவில்லை.

- ப.நா.நி.அ. நியமங்கள் 2 பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு: குழும காசு தீர்ப்பனவு - தீர்ப்பனவுப் பங்கு - அடிப்படையிலான கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்கள் 2010 சனவரி 1 இலிருந்து நடைமுறைக்கு வந்தது.

- ப.நா.நி.அ. நியமங்கள் 3 வியாபார இணைப்புக்கள் (திருத்தப்பட்டது) ப.க. நியமம் 27 2009 யூலை 01ஆம் நாள் நடைமுறைக்கு வந்த திரட்டப்பட்ட மற்றும் தனித்தனியான நிதியியல் கூற்றுக்கள் (திருத்தப்பட்டது) ப.நி.அ. நியமம் 2, ப.நி.அ. நியமம் 5, ப.நி.அ. நியமம் 7, ப.க. நியமம் 7, ப.க. நியமம் 21, ப.க. நியமம் 28, ப.க. நியமம் 31 மற்றும் ப.ந.நியமம் 39 என்பனவற்றையும் உள்ளடக்கியிருந்தது.
- ப.க. நியமம் 39 நிதியியல் கருவிகள்: அங்கீகாரமும் அளவுகளும் - 2009 யூலை 01ஆம் நாள் நடைமுறைக்கு வந்த தகுதியுடைய பாதுகாப்பு விடயங்கள்
- ப.நி.அ.வி. குழு - 2009 யூலை 01ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. உரிமையாளர்களுக்கான காசல்லா சொத்துக்களின் 17 விநியோகங்கள்

**ப.நி.அ. நியமங்களுக்கான முன்னேற்றங்கள்**

2008 மேயில் வழங்கப்பட்டது

- ப.நி.அ. நியமம் 5. 2010 சனவரி 01ஆம் நாள் தொடக்கம் விற்பனைக்காக வைத்திருக்கப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களும் நிறுத்தப்பட்ட தொழிற்பாடுகளும் 2010 சனவரியில் நடைமுறைக்கு வந்தது.

2009 ஏப்பிறலில் வழங்கப்பட்டவை

- ப.நி.அ. நியமம் 2 பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு
- ப.க. நியமம் 1 நிதியியல் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்
- ப.க. நியமம் 17 - குத்தகைகள்
- ப.க. நியமம் 38 அருவச் சொத்துக்கள்
- ப.நி.அ.வி. குழு 9 மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுதிகள்

### 2.4 நியமங்கள், வெளியிடப்பட்டு இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாத நியமங்களுக்கான விளக்கங்களும் திருத்தங்களும்

நியமங்கள் வெளியிடப்பட்டு, வங்கியின் நிதிக்கூற்றுக்கள் வழங்கப்பட்ட திகதி வரை நடைமுறைக்கிடப்படாத நியமங்களின் பட்டியல் கீழே தரப்படுகிறது. இப் பட்டியல் யாதெனில் வங்கி எதிர்காலத் திகதியில் பிரயோகிப்பதற்கு என நியாயமாக எதிர்பார்த்து விடுக்கப்பட்ட நியமங்களும் விளக்கங்களுமாகும். இந் நியமங்கள் நடைமுறைக்கு வரும் பொழுது அவற்றை பின்பற்றுவதற்கு வங்கி எதிர்பார்க்கிறது.

**(ப.க. நியமம் 24 தொடர்பான தரப்பினர் வெளிப்படுத்தல்கள் (திருத்தம்))** - திருத்தப்பட்ட நியமம், 2011 சனவரி 1 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்கும் ஆண்டுக் காலப்பகுதியில் நடைமுறையிலிருக்கும். இது அத்தகைய உறவு முறைகளை அடையாளம் காண்பதனை இலகுபடுத்துவதற்காகவும் விண்ணப்பத்திலுள்ள முரண்பாடுகளை நீக்குவதற்காகவும் தொடர்பான தரப்பினர் என்பதன் வரைவிலக்கணத்தினை தெளிவுபடுத்துகின்றது. திருத்தப்பட்ட நியமம் அரசிற்கான - தொடர்பான நிறுவனங்களுக்கான வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளின் விலக்கல்களது ஒரு பகுதியினை அறிமுகப்படுத்துகின்றது. ஒன்றில் அரசு தொடர்பான நிறுவனங்களுக்கான அல்லது முழு நியமங்களுக்கான பகுதியளவான விலக்கல்களை நேர காலத்துடன் பின்பற்ற அனுமதிப்பது வங்கியின் நிதியியல் நிலைமைகளில் அல்லது செயலாற்றத்தில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தும் என அது எதிர்பார்க்கவில்லை.

**(ப.க. நியமம் 32 நிதியியல் கருவிகள்: வகைப்படுத்தலும் அளவிடுதலும்)** - ப.க. நியமம் 32 இற்கான திருத்தங்கள் 2010 பெப்புருவரி 1ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பமாகும் ஆண்டுக் காலப்பகுதியில் நடைமுறைக்கு வரும் என்பதுடன் உரிமை வழங்கல்களை வகைப்படுத்தும் பொருட்டு நிதியியல் பொறுப்புக்களின் வரைவிலக்கணங்களும் திருத்தப்பட்டன. (அத்துடன் குறிப்பிட்ட விருப்பார்வங்கள் அல்லது உத்தரவாதங்கள்) பங்குக் கருவிகள், அத்தகைய உரிமைகள் நிறுவுனமொன்றின் பெறுமதியல்லா பங்குக் கருவிகளின் அதே வகுப்பிலுள்ள தற்போதுள்ள அனைத்து உரிமையாளர்களுக்கும் விகிதத்தின் அடிப்படையில் வழங்கப்படுமிடத்து அல்லது ஏதேனும் நாணயத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொகையொன்றிற்காக நிறுவனங்களின் சொந்த பங்குக் கருவிகளின் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையை கொள்வனவு செய்யப்படுமிடத்து அப் பங்குக் கருவிகள். இத் திருத்தம் ஆரம்ப விண்ணப்பங்களுக்கு பின்னர் வங்கியின் மீது தாக்கமெதனையும் கொண்டிருக்காது.

**(ப.நி.க. நியமம் 9 நிதியியல் கருவிகள்: வகைப்படுத்தலும் அளவிடலும்)** - ப.நி.அ. நியமம் 9 வழங்கப்பட்டவாறு ப.க. நியமம் 39 இற்குப் பதிலாக ப.க. நியம வங்கிகளினது பணிகளின் முதலாவது சட்டத்தினைப் பிரதிபலிப்பதுடன் ப.க. நியமம் 39இல் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டிற்கும் பிரயோகிக்கப்படுகிறது. இந் நியமம் 2013 சனவரி 1ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்கும் ஆண்டுக் காலப்பகுதியில் நடைமுறைக்கு வரும். அதன் பின்னரான கட்டங்களில் அவை பழுதுறாத மற்றும் பாதுகாப்புக் கணக்கீடுகளை வலியுறுத்தும். இச் செயற்றிட்டம் 2011இன் நடுப்பகுதியில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. ப.நி.அ. நியமம் 9இன் முதலாவது சட்டத்தினை பின்பற்றுவது முக்கியமாக வங்கியின் நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டில் தாக்கமொன்றினைக் கொண்டிருக்கும். தற்பொழுது வங்கி ப.நி.அ. நியமம் 9இனைப் பின்பற்றுவதன் தாக்கத்தினை மதிப்பிட்டு வருகின்றதெனினும், பின்பற்றுவதனால் ஏற்படும் தாக்கம் பின்பற்றப்படும் திகதியில் வங்கி வைத்திருக்கும் சொத்துக்களின் மீது தங்கியிருக்குமென்பதனால் தாக்கத்தினை அளவிடுவது நடைமுறைச் சாத்தியமானதல்ல.

**(ப.நி.அ.வி. குழு 14 குறைந்தபட்ச நிதியிடல் தேவைப்பாடுகளின் முற்கொடுப்பனவு (திருத்தம்))** ப.நி.அ. நியமம் 14இற்கான திருத்தம் 2011 சனவரி 01ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்கும் ஆண்டுக் காலப்பகுதியில் நடைமுறைக்கு வரும். பின்னோக்கிய

பிரயோகங்களைப் பொறுத்தவரை, திருத்தங்கள் தேறிய ஓய்வூதிய சொத்துக்களின் அறவிடத்தக்க தொகையினை மதிப்பிடுவதன் மீது வழிகாட்டல்களை வழங்குகின்றது. திருத்தமானது குறைந்தபட்ச நிதியிடல் தேவைப்பாடுகளின் முற்கொடுப்பனவினை சொத்தொன்றாகக் கருதுவதற்கு நிறுவனமொன்றினை அனுமதிக்கிறது. இத் திருத்தம் வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் மீது தாக்கமெதனையும் கொண்டிருக்காது என எதிர்பார்க்கிறது.

**(ப.நி.அ.வி. குழு 19 பங்குக் கருவிகளுடன் நிதியியல் பொறுப்புக்களை இல்லாமல் செய்தல்)** - ப.நி.அ.வி. குழு 19 2010 யூலை 01ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்கும் ஆண்டுக் காலப்பகுதியில் நடைமுறைக்கு வரும். நிதியியல் பொறுப்பினை நீக்குவதற்காக கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட பங்குக் கருவிகள் பரிசீலனைக்கெடுக்கப்படுவதற்கு தகைமை பெற்றவையென விளக்கம் தெளிவுபடுத்துகிறது. வழங்கப்பட்ட பங்குக் கருவிகள் அவற்றின் சந்தைப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. இவற்றினை நம்பகரமான முறையில் அளவிடமுடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் அவை நீக்கப்பட்ட பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்தில் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் உடனடியாக அடையாளம் காணப்படுகின்றது. இவ் விளக்கங்களைப் பின்பற்றுவது வங்கியின் நிதியியல் கூற்றுக்களில் தாக்கமெதனையும் கொண்டிருக்காது.

**ப.நி.அ. நியமங்களுக்காக முன்னேற்றங்கள் (2010 மேயில் விடுவிக்கப்பட்டவை)**

ப.க. நியம சபையானது ப.நி.அ. நியமங்களுக்கு முன்னேற்றங்களையும் அத்துடன் இதன் ப.நி.அ. நியமங்களுக்கு பல்வேறு திருத்தங்களையும் விடுத்தது. திருத்தங்கள் 2010 யூலை 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரான அல்லது 2011 சனவரி 01 அன்று அல்லது அதற்குப் பின்னரான ஆண்டுக் காலப்பகுதியில் நடைமுறைக்கு வரவுள்ளதால் திருத்தங்கள் பின்பற்றப்படவில்லை. திருத்தங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- ப.நி.அ. நியமம் 3 வியாபார இணைப்புக்கள்
- ப.நி.அ. நியமம் 7 நிதியியல் கருவிகள்: வெளிப்படுத்துகைகள்
- ப.க. நியமம் 1 நிதியியல் கூற்றக்களை சமர்ப்பித்தல்
- ப.க. நியமம் 27 திரட்டப்பட்ட மற்றும் தனித்தனியான நிதியியல் கூற்றுக்கள்
- ப.நி.அ.ஏ. குழு 13 வாடிக்கையாளர் விசுவாச நிகழ்ச்சித்திட்டங்கள்.

எனினும், வங்கி அதன் நிதியியல் நிலைமை அல்லது செயலாற்றம் மீதான திருத்தங்கள் பின்பற்றுவதிலிருந்தும் தாக்கமெதனையும் எதிர்பார்க்கவில்லை.

## 3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 3.1 வெளிநாட்டு நாணய மாற்றுவீதங்கள்

வங்கியின் நடைமுறை மற்றும் சமர்ப்பண நாணயம் இலங்கை ரூபாவாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், அவை இடம்பெற்ற நாளுக்கு ஏற்புடையதான நடைமுறை நாணயத்திலேயே பதிவு செய்யப்பட்டன. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதி நிலைமை பற்றிய கூற்றின் திகதியில் ஏற்புடையதாகவிருந்த செலாவணி வீதத்திற்கேற்ப இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. அனைத்து வேறுபாடுகளும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம் மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான இலங்கை ரூபா செலாவணி வீதங்கள் பின்வருமாறு:

| | 2010 ரூபா | 2009 ரூபா |
|---|---|---|
| 1 அவுஸ்திரேலிய டொலர் | **112.8836** | 101.9909 |
| 1 கனேடிய டொலர் | **110.9031** | 109.2914 |
| 1 யூரோ | **147.5619** | 163.7184 |
| 1 யப்பானிய யென் | **1.3611** | 1.2413 |
| 1 சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ) | **170.837** | 178.6670 |
| 1 ஸ்டேர்லிங் பவுண் | **171.4113** | 181.7454 |
| 1 ஐக்கிய அமெரிக்க டொலர் | **110.953** | 114.3844 |

நிதியியல்லாத விடயங்கள் ஆரம்பக் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியன்று உள்ளவாறான செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி, வெளிநாட்டுச் செலாவணியின் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் அளவிடப்பட்டுள்ளது.

### 3.2 நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

வங்கியானது, நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அத்துடன், இணைந்த வருமானம் மற்றும் செலவுகளையும், வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சமர்ப்பிக்கின்றது. வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாட்டிலிருந்தே உருவாகின்றன. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், ரூபா நாணயங்களின் வெளியீடு மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.

இந் நடவடிக்கைகளைத் தனித்தனியாக விளக்குவதன் மூலம் வங்கியின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றுகை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களின் நடவடிக்கைகளை இணைந்து அறிக்கையிடுதல் நிதிக் கூற்றுக்களின் தகவல் பெறுமதியை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

அனைத்து முதலீடுகளும் ஆரம்பத்தில் செலவு நியதிகளில் இனங்காணப்பட்டதுடன் இச் செலவு முதலீட்டுடன் இணைந்த கொள்வனவுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட நியாயமான பெறுமதியினையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்பு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுத் தளங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன. நிதிச் சொத்துக்களின் அனைத்து கிரமமான வரியிலான

கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் முறையே வர்த்தகம் நடைபெற்ற திகதியைக் கொண்டு இனங்காணப்படுகின்றன. கிரமமான வரியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் என்பன பொதுவான ஒழுங்குவிதிகளில் அல்லது சந்தையின் மரபுவரி முறைகளினால் நிறுவப்பட்ட கால வரையறையினுள் சொத்துக்களின் விநியோகத்தைத் தேவைப்படுத்தும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளாகும்.

**இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள்**

வர்த்தகப்படுத்தக் கூடிய நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள "பிணையங்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள்" வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பின்னர் மேற்படி பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்டு சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றி கூற்றில் வர்த்தகப்படுத்தக்கூடிய பிணையங்கள் பெறுமதியில் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ காட்டப்படுகின்ற அதேநேரம் இதன் மூலம் எழும் இலாபங்களும், நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

பிணையம் வங்கிக்குச் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம் அல்லது நட்டம் விலை மீள் பெறுமதியிடலிலிருந்து பெறப்படாத இலாபமாக/ (நட்டமாக) அறிக்கையிடப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட இலாபமாக/ (நட்டமாக) அறிக்கையிடப்படும்.

**வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள்**

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒதுக்குகளின் கீழ் பிணையங்களின் விற்பனைக்காகவுள்ள பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ அடையாளங் காணப்படும்.

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழும் இலாபமும் நட்டமும் முதலீடுகள் விற்கப்படும் வரை அல்லது சேகரிக்கப்படும் வரை அல்லது வேறு விதமாக இதனை அகற்றும் வரை அல்லது முதலீட்டினை இல்லாதொழிப்பது என தீர்மானிக்கப்படும் வரை மூலதனப் பங்கின் (நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஏனைய ஒதுக்குகளின் கீழ் காட்டப்பட்டுள்ள) தனியொரு கூறாக இனங்காணப்படுகிறது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் முன்னைய மூலதனப் பங்காக அறிவிக்கப்பட்ட ஒன்று சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் வருமானமாக உள்ளடக்கப்படும்.

**நிதிப் பெறுமதிக் கருவிகள்**

பெறுமதிக் கருவிகளில் வங்கியின் ஈடுபாடு முக்கியமாக முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களுக்கு ஏற்புடையதாயுள்ளது. அத்தகைய நிதிப் பெறுமதிக் கருவிகள் நியாயமான பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன. முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களின் நியாயப் பெறுமதியாக, இதையொத்த முதிர்ச்சித் தோற்றப்பாட்டுடனான ஒப்பந்தங்களுக்கான முன்னோக்கிய நடைமுறை செலாவணி வீதத்துடன் தொடர்புடைய வீதங்களில் கணிக்கப்படுகின்றன. இலாப அல்லது நட்டம் நிலையிலுள்ள அனைத்துப் பெறுமதிக் கருவிகளும் வெளிநாட்டு நாணய வர்த்தகத்தின் நிலுவையில் அல்லது நிதி நிலைமை பற்றிய கூற்றிலுள்ள விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களில் பதிவு செய்யப்படுகின்றன.

**பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி.) தொடர்புடைய நிலுவைகள்**

வங்கியானது இலங்கை அரசின் முகவராக செயற்படுவதனை காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையில், ப.நா.நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இந் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன் அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்று சேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. ப.நா. நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு நிதி நிலைமை பற்றிய கூற்றின் திகதியிலுள்ள செலாவணி வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள்பெறுமதியிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

**காசும் காசுக்குச் சமமானவைகளும்**

காசும் காசுக்குச் சமமானவைகளும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலுள்ள காசு மற்றும் குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன.

உள்நாட்டு நாணயங்களினது நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்கின்ற போதிலும் இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந் நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான

கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் ஏலத்தில் கோரப்படாத பகுதியின் கொள்வனவு உட்பட அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நிதிக் கொள்கைப் பொறிமுறையாக வங்கியினால் பிரயோகிக்கப்படுகிறது. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. இவை இந் நிதிக்கூற்றில் 31, 32 ஆம் இலக்கக் குறிப்புகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணய விதிச் சட்டத்திற்கிணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வழங்குகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்ற அதேநேரம் உடமையாளரின் கையிலுள்ள காசாகவும் இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவு, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பித்தல் மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்த விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி காசு/ கொடுப்பனவுக் கட்டளைகள் ஊடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில், பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசு பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பொறுப்பில் அல்லது வர்த்தக வங்கிகளுடனான மீதிகளுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/ வெளிநின்ற கொடுப்பனவுக் கட்டளைகள் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

**மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்**

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. மீள்கொள்வனவுகள் கொடுக்கல்வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், ஒன்று சேர்ந்த வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி கொடுக்கல்வாங்கல் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

**இ.ம. வங்கிப் பிணையங்கள்**

வங்கியானது அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் கீழ் சந்தையிலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்த்துக் கொள்ளும் பொருட்டு காலத்திற்குக் காலம் இ.ம.வ. பிணையங்களை வழங்குகின்றது.

வழங்கப்படும் பிணையங்கள் பொறுப்புகளாகப் பதிவு செய்யப்படுகின்றன. வழங்கப்பட்ட விலைக்கும் முகப்புப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசம் வருமானக் கூற்றில் செலவாகப் பதிவு செய்யப்படுகின்றது.

**முதலீட்டுப்பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள்**

வங்கியின் முதலீட்டுப்பட்டியல் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை உள்ளடக்குகின்றது. இவை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதனால் நிதி நிலைமை பற்றிய கூற்றில் இச் சொத்துப்பட்டியல் கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதியப்படுகிறது.

**அரசிற்கான முற்பணங்கள்**

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

**ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்**

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் வழங்கப்பட்ட ஆரம்பத் தொகையிலிருந்து அறவிடமுடியாத தொகை ஏதுமிருந்தால் அதைக் கழித்த பின்பு இனங்காணப்பட்டு, பேணப்படுகின்றது. வரவேண்டிய எல்லாத் தொகையையும் சேகரிப்பதற்கு வங்கியினால் முடியாத தன்மைக்கு போதிய சான்று காணப்படுமிடத்து ஐயக்கடன் (பெறமுடியாத கடன்கள்) ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கொடுப்பனவுத் தொகையானது புத்தகத்திலுள்ள தொகைக்கும் மதிப்பிடப்பட்ட மீளப் பெறப்படத்தக்க தொகைக்குமிடையிலான வேறுபாடாகும். அறவிடமுடியாக் கடன்கள் அடையாளம் காணப்படும் போது பதிவழிக்கப்படுகின்றன.

**பிணையங்களின் கடன்பாடுகளும் பிணையங்களின் கடன் வழங்குதலும்**

வங்கி அதன் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளுக்காக காலத்திற்குக் காலம் முக்கிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களைக் கடன்படுகிறது. இவ்வாறு கடன்பட்ட பிணையங்கள் சந்தையில் காணப்படும் மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிணைங்களின் கடன்பாடுகள் என்பது வங்கியிடமிருந்து அப் பிணையங்களை திருப்புவது, இணங்கப்பட்ட கட்டணத்தினை செலுத்துவது, வழங்கலின் போது ஏதேனும் தவறும் இடம் பெறும் சந்தர்ப்பத்தில் சந்தை வீதங்களில் இழப்பீட்டினைச் செலுத்துவது (வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதனிலைச் சந்தை பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சந்தை வீதங்கள்) என்பனவற்றிற்காக வங்கியிடமிருந்து பெறப்படும் பொதுவான உத்தரவாதமெனப்படும். கடன்பட்ட பிணையங்கள் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாத பிணையங்களினதும் சந்தைப் பெறுமதி எதிர்பாராத பொறுப்புக்களாக பதிவு செய்யப்படுகின்றன. தரகு ஒன்று சேர்ந்த அடிப்படையில் செலவிடப்படுகின்றன.

சொத்தாண்மையின் இடர்நேர்வும் வெகுமதியும் மாற்றம் செய்யப்படாதவிடத்து கடன் வழங்கல் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் இணைத்தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல் நிதியியல் நிலைமைக் கூற்றில் மட்டுமே பிரதிபலிக்கப்படும்.

**நிதிச் சொத்துக்களின் பழுதுறக் கூடிய தன்மை**

ஒவ்வொரு நிதி நிலைமை கூற்றுத் திகதியிலும் ஒரு நிதிச் சொத்து பழுதுறக் கூடியதா என வங்கி மதிப்பிடுகிறது.

**கடன்தீர் கிரயத்திலுள்ள சொத்துக்களின் அளவு**

கடன் மீதான நட்டத்தின் பழுதுறக் கூடிய தன்மை மற்றும் கடன்தீர் நிதிக் கிரயத்தின் பெறுகைகள் எடுத்துச் செல்லப்படுதல் ஏற்பட்டு, ஒரு புற உண்மைச்சான்று இருக்குமானால் அந்த நட்டத் தொகையானது சொத்துக்கள் எடுத்துச் செல்லும் தொகைக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்கால பெறுமதிக்கும் இடைப்பட்ட வித்தியாசமாக அளவிடப்படுகிறது. (ஏற்படாத எதிர்காலக் கடன் நட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை) நிதிச் சொத்துக்களின் அசல் தாக்குமிகு வட்டி வீதம் கழிவு கொடுக்கப்பட்டுள்ளது. (பயனுறு வட்டி வீதம் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டளவில் கணிக்கப்பட்டுள்ள). சொத்தின் எடுத்துச் செல்லும் தொகையானது ஒன்றில் நேரடியாகவோ அன்றேல் படிகளின் கணக்கை உபயோகிப்பதன் ஊடாகவோ குறைக்கப்படும் வருமானக் கூற்றிலே நட்டத் தொகை இனங்காணப்படும்.

தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த நிதிச்சொத்துகளுக்காக தனிப்பட்ட முறையிலுள்ள முடக்கத்தின் புறவுண்மைச் சான்றுகளாக, தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் பெறாத நிதிச் சொத்துக்களுக்காக தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக உள்ள முடக்கத்தின் புறவுண்மைச் சான்றுகளா என முதலில் வங்கி மதிப்பிடுகிறது. முக்கியமானதோ இல்லையோ, தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு நிதிச் சொத்துக்கு முடக்கம் இருப்பதற்கான புறவுண்மைச் சான்றுகள் இல்லையென அது தீர்மானிக்குமிடத்து, அச் சொத்தானது ஒத்த கடன் அபாயக் குண அம்சங்களைக் கொண்ட நிதிச் சொத்துக்களின் குழுவில் உள்ளடக்கப்படுகிறது. அத்துடன் நிதிச் சொத்துக்களின் குழுவானது முடக்கத்துக்கு உள்ளானது என கூட்டாக மதிப்பிடப்படுகிறது. முடக்கத்திற்காக தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் அவைகளுக்கு முடக்க இருப்பு இருப்பின் அல்லது இனங்காணப்பட்டவையாகத் தொடர்ந்து இருப்பின் முடக்கத்தின் கூட்டு மதிப்பீட்டிற்குள் அவைகள் உள்ளடக்கப்படமாட்டாது.

தொடர்ந்து வந்த ஒரு காலப்பகுதியில் முடக்க இருப்பின் தொகை வீழ்ச்சி அடைந்தால் அந்த வீழ்ச்சியை புறவுண்மை ரீதியாக முடக்கம் இனங்காணப்பட்டதன் பின்பாக கடந்த ஒரு நிகழ்வுடன் தொடர்புபடுத்த முடியும். முன்னதாக இனங்காணப்பட்ட முடக்க இருப்பும் நீக்கப்படும். அதைத் தொடர்ந்து வந்த முடக்க இருப்பின் நீக்குதலும் சொத்தின் எடுத்துச் செல்லும் பெறுமதி, அதனுடைய கடன்தீர் நிதிக் கிரயத்தை அந்த நீக்குதல் திகதியில் விஞ்சிவிடாது இருக்கும் அளவிற்கு வருமானக் கூற்றிலே இனங்காணப்படுகின்றது.

**விற்பனைக்குள்ள முதலீடுகள்**

விற்பனைக்குத் தயாராகவுள்ள ஒரு சொத்து முடக்கப்படுமாக இருந்தால் அதனுடைய கிரயத்திற்கும் (எந்தவொரு முதன்மைக் கொடுப்பனவும் கடன்தீர் நிதியும் நீங்கலாக) அதன் தற்போதைய நியாயப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசத்தை உள்ளிட்ட தொகையானது, இலாபத்திலோ நட்டத்திலோ முன்னதாக இனங்காணப்பட்ட எந்தவொரு முடக்க இழப்பையும் கழித்து, நிகரச் சொத்துக்களின் பெறுமதியிலிருந்து வருமானக் கூற்றிற்கு மாற்றப்படுகிறது. விற்பனைக்குத் தயாராகவுள்ளதாக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களின் கருவிகள் சம்பந்தமான நீக்குதல்கள் இலாபத்தில் இனங்காணப்படுவதில்லை. கடன் கருவிகளின் மீதான முடக்க நட்டங்களின் நீக்குதலானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நீக்கப்படுகிறது. அந்தக் கருவியின் நியாயப் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படுவதானது புறவுண்மை ரீதியாக இலாபம் அல்லது நட்டத்தில் முடக்க நட்டம் இனங்காணப்பட்ட பின்பாக இடம்பெறும் நிகழ்வோடு தொடர்புடையதாக இருக்க முடியும்.

**வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்கள்**

வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்கள், கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. இப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றின் நியதிப் பொறுப்புக்களின் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படுகிறது. வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்களின் பெறுமதியில்

ஏற்படுகின்ற மாற்றத்தின் விளைவாகத் தோன்றும் வருமானமும் நட்டமும் உடனடியாகவே வருமானக் கூற்றில் செலவுகளாக இனங்காணப்படுகின்றது. பொறுப்பு இன்னமும் செலுத்தப்பட வேண்டியிருக்குமிடத்து இலாபமோ அல்லது நட்டமோ விலை மீள்பெறுமதியிடலிலிருந்தான பெற்றுக் கொள்ளப்படாத நட்டமாக (இலாபமாகப்) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்பட்டிருக்குமிடத்து (பொறுப்பின் மீள்கொடுப்பனவின் ஊடாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நட்டங்களாக (இலாபமாக) பதிவு செய்யப்படுகிறது.

**நிதியியல் உத்தரவாதங்கள்**

நிதிப் பிணைகள் ஏனைய செலுத்தப்படத்தக்க நியாயப் பெறுமதியின் கீழ் நிதிக்கூற்றுக்களில் நியாயப் பெறுமதியில் இனங்காணப்பட்டுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்னர் ஒவ்வொரு பிணையின் கீழான வங்கியின் பொறுப்பும், பிணையின் விளைவாக எழுகின்ற நிதிக் கடப்பாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றைத் தீர்ப்பதற்குத் தேவையான செலவினங்களின் மிகச் சிறந்த மதிப்பீட்டின் மீதே அளவிடப்படுகின்றன.

**ஏனைய நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயத் தாள்கள், காசு வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன வர்த்தகம் செய்யப்படும் நாளில் இனங்காணப்படுகின்றன.

## 3.3 ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்

**தங்கம்**

பன்னாட்டு ஒதுக்கத்தின் உள்ளடக்கத்தினைக் குறித்துரைக்கின்றதான நாணய விதிச் சட்டத்தின் 67(1) ஆம் பிரிவு மேற்படி ஒதுக்கத்தின் ஒரு பகுதியாக இ.ம.வ. தங்கத்தை வைத்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றது. ஆதலால், 2009 திசெம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறு வங்கியானது அதன் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக ரூ.54 பில்லியனை தங்கத்தில் வைத்திருந்தது. மேற்படி தங்கமானது பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இருந்தமையால் பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது ஒரு வர்த்தகப் பண்டமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதோடு, தங்கமானது நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுகளுக்கு மாற்றப்பட்டன. வருமான ஒதுக்கீடுகளுக்கு முன்னர் தங்கத்திலிருந்தான தீர்க்கப்படாத இலாபங்கள் அல்லது நட்டங்கள் தொடர்புபட்ட ஒதுக்குக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டன.

**துணை நிறுவனங்களில் முதலீடு**

விற்பனைக்காக வைத்திருக்கப்படுவனவற்றுடன் சேர்த்து துணை நிறுவனங்களில் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் குறைந்த கிரயச் செலவு முறையில் கணிக்கப்படுகின்றன.

**இருப்புக்கள்**

இருப்புக்கள் குறைந்த கிரயச் செலவிலும் விற்றுப் பெறக்கூடிய பெறுமதியிலும் வைத்திருக்கப்படுகின்றன. கிரயச் செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. கொடுப்பனவு மெதுவாக அசையும் இருப்புகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

**ஆதனங்களும் பொறிகளும் உபகரணங்களும்**

ஆதனம், பொறி, உபகரணம், நாளாந்தப் பராமரிப்புச் செலவுகளைத் தவிர்த்து பெறுமானத் தேய்வு ஏற்பாட்டைக் கழித்து பெறுமதியின் முடக்கத்தை ஒன்று சேர்த்துக் கிரயத்தில் கூறப்பட்டுள்ளது. இனங்காணல் விடயத்தை பூர்த்தி செய்வதற்காக இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றீடு செய்யும் போது ஏற்படும் செலவீனங்களையும் இந்தக் கிரயம் உள்ளடக்கியிருக்கிறது. காணியும் கட்டடங்களும் கட்டடம் மீதான பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு மீள்பெறுமதியிடல் திகதியை தொடர்ந்தான முடக்கம் அறவிடப்பட்டு நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது.

சொந்தக் காணி தவிர்ந்த ஏனையவற்றில் பின்வரும் மதிப்பீடு செய்யப்பட்ட பயனுள்ள இருப்புக் காலத்தில், பெறுமானத் தேய்வானது நேர்கோட்டு முறையில் கணிக்கப்படுகிறது.

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் சுட்டிக்காட்டும்

| சொத்தின் வகை | பயனுள்ள இருப்புக் காலம் |
|---|---|
| சொந்தக் காணியின் மீதான கட்டடங்கள் | 50 வருடங்களுக்கு மேல் |
| குத்தகைக் காணிகள் மீதான கட்டடங்கள் | குத்தகைக் காலத்திற்கு மேல் |
| பொறியும் பொறியின் முக்கிய பகுதிகளும் | 20 வருடங்கள் |
| தளபாடங்கள் மற்றும் கருவிகள் | 10 வருடங்கள் |
| உந்து ஊர்திகள் | 5 வருடங்கள் |
| கணனி வன்பொருள் | 4 வருடங்கள் |
| ஏனையவை | 3 வருடங்கள் |

பொழுது பொறிகளினதும் உபகரணங்களினதும் எடுத்துச் செல்லும் பெறுமதிகள் முடக்கத்திற்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. கிரயத்தின் ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து, காணி மற்றும் கட்டடங்கள் மீள் மதிப்பிடப்பட்ட தொகையில் எடுத்துச் செல்லப்படுகின்றன. இது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட திகதியில் நியாயப் பெறுதியாக உள்ள பொழுது, கட்டடங்கள் மீதான பின் தொடர்ந்து வந்த ஒன்று சேர்க்கப்பட்ட பெறுமானத் தேய்வுகளும், பின்தொடர்ந்து வந்த ஒன்று சேர்க்கப்பட்ட முடக்க நட்டங்களும் கழிக்கப்பட்டு இருக்கும்.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நியாயப் பெறுமானம், அதனுடைய எடுத்துச் செல்லும் தொகையிலிருந்து உள்ளடக்க ரீதியில் பெரிதும் வேறுபடாது இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, பெறுமதி மதிப்பீடுகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன.

எந்த மீள்மதிப்பீடு மிகையும் நிதி நிலைமை பற்றிய கூற்றின் நிகரச் சொத்துப் பிரிவில் உள்ளடக்கப்பட்டு, மீள்மதிப்பீட்டு ஒதுக்கில் வரவு வைக்கப்படுகிறது.

வருமானக்கூற்றிலே முன்னதாக இனங்காணப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சி, மறுதலையாகாத அளவிற்கு, அந்த நிலைமைகளிலே அந்த அதிகரிப்பானது வருமானக்கூற்றிலே இனங்காணப்படுகிறது. அதே சொத்தின் மீதான நேரடியாக குறைநிரப்பும், ஒரு முந்திய தொகையின் பற்றாக்குறை மீள்மதிப்பீட்டு மறுதலையின் மிகைக்கு எதிராக நேரடியாக மிகை நிரப்புவது தவிர்ந்த நிலைமைகளில், ஒரு மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை வருமானக்கூற்றிலே இனங்காணப்படுகிறது. கழிக்கும் நிலையில், குறிப்பிட்ட விற்கப்படுகின்ற சொத்தோடு தொடர்புடைய எந்த மீள்மதிப்பீட்டு மிகையும், தக்கவைத்துக் கொள்ளும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது. ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரணம், அகற்றுகையின் போது அல்லது எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்காது என எதிர்பார்க்கப்படும் போது இனங் காணப்படுகிறது. அச்சொத்தின் இனங்காணல் முடிவடைவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுகை நடைமுறைக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்து இனங்காணப்படல் முடிவடைந்த வருடத்தின் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. மிகுதியாகவுள்ள சொத்தின் பெறுமானங்கள் பயனுள்ள இருப்புக் காலங்கள் மற்றும் முறைகள் மீள்பார்வை செய்யப்படுவதுடன் பொருத்தமாய் இருப்பின் கிரமமாகத் தக்கவாறு அமைத்துக் கொள்ளப்படுகிறது.

**அருவச் சொத்துக்கள்**

கணனி வன்பொருள்களில் முழுமையாக உள்ளடங்காதுள்ள கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டு கிரயச் செலவில் இனங்காணப்பட்டுள்ளன. ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து 4 வருட கால பயனுள்ள ஆயுட்கால அடிப்படையில் திரண்ட கடன்தீர் நிதி எவையேனும் இருப்பின் கழிக்கப்பட்டு கிரயச் செலவில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

**பெறக்கூடியவை**

புலப்படத்தக்க சான்றுகளின் அடிப்படையில், பெறக்கூடியவை ஐயக்கடனுக்கான ஏற்பாட்டினைச் செய்த பின்னர் எதிர்பார்க்கப்படும் பெறப்படத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகிறது.

**நானாவிதச் சொத்துக்கள்**

**பணியாளர்களுக்கான கடன்கள்**

வங்கியின் பணியாளர்கள் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். மேற்படி கடன்கள் ப.க..நி. 39இன் பிரகாரம் கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சலைப் பயன்படுத்தி நியாயமாகப் பெறுமதியிடப்பட்டுள்ளன.

**கழிவு வீதம்** - மேற்படி வீதமானது இ.ம.வ. யின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் ஐ.அ.டொலர் - வர்த்தக வட்டி வீதத்துடன் வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் இணங்கப்பட்டவாறு 1 சதவீத இடர்நேர்வுத் தவணைத் தொகையையும் சேர்த்து நீண்டகாலப் பணவீக்க இலக்கின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு கழிவு வீதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, கடன் காலத்தைப் பொறுத்து இது வேறுபடுகின்றது (15 ஆண்டுகள் வரை 11.21 சதவீதம் 15 தொடக்கம் 30 ஆண்டுகள் வரை 8.91 சதவீதம்).

ஆண்டின் இறுதிக்கும் ஆண்டின் ஆரம்பத்திற்கும் இடையிலுள்ள பணியார்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதியின் வித்தியாசமானது, சலுகை வீதத்தில் மேற்படி கடன் வழங்கப்படுவதால் வங்கிக்கு ஏற்க நேரிடுகின்ற செலவைப் பதிவதற்காக வருடாந்தம் கடன்தீர் நிதியாக தீர்க்கப்படும் என்பதோடு, சந்தை வீதத்தில் இக் கடன் வழங்கப்பட்டிருப்பின் வங்கியினால் ஈட்ட முடியுமாயிருக்கும் வருமானத்தைப் பதிவு செய்யும் பொருட்டு, அதற்குச் சமமான தொகை ஏனைய வருமானத்தில் பதியப்படும்.

**சந்தைப் பெறுமதியைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்**

- பணியாளர்களுக்கான கடன்கள் 2008 ஆண்டிலிருந்து வழங்கப்பட்டதாகக் கருதுதல்.
- பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்ட திகதியாக சனவரி 01 ஆம் திகதியைக் கருதுதல்.
- மேற்படி கடன்களில் எவ்விதத் திருத்தமும் அல்லது தீர்ப்பனவும் செய்யப்படவில்லை எனக் கருதுதல்.

ஏனைய நானாவிச் சொத்துக்கள் எதிர்பார்க்கப்படும் விற்றுப் பெறத்தக்க பெறுமதியில் கொண்டு செல்லப்படுகின்றன.

**நிதிசாராச் சொத்துக்களின் முடக்கம்**

சூழ்நிலைகளின் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் முன்கொண்டு செல்லும் பெறுமதியில் முடக்கத்தை உண்டுபண்ணலாம் என்பதைக் காட்டுகின்றனவா என்பதையும் நிதிசாரா சொத்துக்கள் முடக்கப்படலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளதா என்பதையும் அறிக்கை செய்யும் ஒவ்வொரு திகதியிலும் வங்கி மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்படின், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை வங்கி மேற்கொள்ளும். ஒரு சொத்தின் முடக்கப்பட்டதாகக் கருதப்படுவதுடன் அதன் மீளப்பெறக்கூடிய தொகைக்கு குறைத்தெழுதப்படும்.

**ஏற்பாடுகள்**

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருக்குமிடத்து ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு அக் கடப்பாட்டைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதுடன், இக் கடப்பாட்டுத் தொகையை நம்பத் தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறிய முடியும். ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக மீளளித்தல் இனங்காணப்படுகிறது.

**சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு நிதி நிலைமை பற்றிய கூற்றில் முகப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

**ஓய்வூதியம் மற்றும் தொழில்நிலைக்குப் பிந்திய ஏனைய நலத்திட்டங்கள்**

வங்கியால் கையாளப்படும் ஊழியர் நிலைக்குப் பிந்திய ஓய்வூதியம் மற்றும் ஏனைய நலத்திட்டங்கள் குறிப்பு 36இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்**

ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், விதுரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், இளைப்பாற்றுப் பணிக்கொடை மற்றும் வேலைக் காலத்திற்குப் பிந்திய மருத்துவ நலன்கள் போன்ற குறித்துரைக்கப்பட்ட நலத்திட்டங்களை வங்கி செயற்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களையும் பொறுத்தவரையில் வங்கியும் தகுதியுள்ள பயனாளியும் பிறிதாக நிர்வகிக்கப்படும் நிதியங்களுக்குப் பங்களிப்பினைச் செய்கின்றனர். எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் ஆயுட்கால மதிப்பீட்டு முறையை உபயோகித்து, ஒவ்வொரு திட்டத்திற்கும் குறித்துரைக்கப்பட்ட திட்டங்களின் கீழ் நன்மை வழங்கும் செலவு நிர்ணயிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படுகிறது.

சேவைக்குப் பின்னரான செலவானது, நன்மை கிடைக்கும் வரை சராசரிக் காலப்பகுதி மீதான நேர்கோட்டு அடிப்படையில் ஓர் செலவீனமாக இனங்காணப்படுகிறது. நன்மைகள் ஏற்கனவே நலத்திட்டத்தின் அறிமுகத்தைத் தொடர்ந்தோ அல்லது மாற்றங்களினாலோ உடனடியாகக் கிடைக்கப் பெற்றிருப்பின் சேவைக்குப் பின்னரான செலவு உடனடியாக இனங்காணப்படுகிறது.

அனுபவ அடிப்படையிலான சீராக்கங்கள் மற்றும் திட்டமிடல் சொத்துக்களின் பெறுமதியில் 10 சதவீதத்திலும் விஞ்சியதான ஆயுட்கால எடுகோள்களின் மாற்றங்கள் அல்லது நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகளின் 10 சதவீதம் என்பவற்றிலிருந்து எழுகின்ற ஆயுட்கால இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஊழியர்களுடைய எதிர்பார்க்கப்படும் மிதமாகவுள்ள சராசரி வேலைக் காலத்தின் மீதான வருமானத்திற்கு எதிராக ஓர் ஒழுங்கு முறையில் அறவிடப்படும் அல்லது வரவு வைக்கப்படும். இதன் விளைவாக ஆயுட்கால இலாபங்கள் அல்லது நட்டங்கள் விரைவாக இனங்காணப்படுகிறது.

**நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள்**

ஊழியர்கள், ஏற்புடைய நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்களாகும்.

**கொடைகள்**

கொடைகள் (பெறப்படும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் இணங்கி ஒழுகப்படும் என்பதற்காக உறுதிப்பாடு இருக்குமிடத்து) அவற்றின் நியாயமான பெறுமதியில் இனங்காணப்பட்டு, மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும் பொழுது, ஒழுங்குமுறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கணக்குக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, நியாயப் பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, ஏற்புடைய சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்குமுறையான அடிப்படையில் வருமானக்கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

**ஆளணிச் செலவுகள்**

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. சம்பளங்கள் தொடர்பான செலவுகள் மற்றும் ஆண்டின் இறுதியில் ஒன்று சேரும் விடுவிப்புக்கள் என்பன மற்றைய உள்ளூர் கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**தொழிற்பாட்டிலுள்ள குத்தகைகள்**

வங்கி, குத்தகைதாரராக இருக்குமிடத்து தொழிற்படு குத்தகைகள் மீது செலுத்தத்தக்க வாடகைகள் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளுடன் இசைந்து செல்லும் அடிப்படையில் குத்தகையின் தவணையைக் கருத்திற் கொண்டு வருமானக் கூற்றில் இனங்காணப்படுகிறது.

**வருமான வரி**

வங்கியின் வருமானமானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 118ஆம் பிரிவின் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

**வருமானங்களும் செலவினங்களும்**

வங்கிக்குப் பொருளாதார நன்மைகள் பெரும்பாலும் கொண்டு வரக்கூடியதாகவும் அவ் வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகும் உள்ள போது வருமானமானது இனங்காணப்படுகின்றது. மேற்கொள்ளப்பட்ட செலவின்றும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் இனங்காணப்பட்டுள்ளன. வியாபாரத்தைக்

கொண்டு நடத்துவது தொடர்பாகவும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும் போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்ததையும் செலவினத்தையும் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

**வட்டி**

சேகரித்தல் ஐயத்திற்கிடமில்லாதவிடத்து உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி ஒன்று சேர்ந்த அடிப்படையின் மீது அனைத்து வட்டி உழைக்கும் கருவிகளுக்குமான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. வட்டி வருமானமானது, நிலையான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படுகின்ற பிணையங்கள் என்பன மீதான வட்டி வருவாய்களையும் கொடுபட வேண்டிய கழிவுகளையும் திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும் வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

**பங்கிலாபங்கள்**

பங்குடமையாளர்கள் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்பட்டதுடன் பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகிறது.

**பல்தரப்பட்டவை**

பல்தரப்பட்ட வருமானமும் செலவினங்களும் ஒன்று திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன.

ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மீதான வருமானத் தன்மையின் தேறிய இலாபங்களும், நட்டங்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

தற்செயலான நடவடிக்கை மற்றும் முக்கிய வருமானத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து எழும் இலாபங்களும், நட்டங்களும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

**கூற்றுச் சாராத நிதியியல் நிலைமை விடயங்கள் உட்பட எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்**

நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு வெளிவாரியான விடயங்களைப் பிரதிபலிக்கின்ற படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு வெளிவாரியான விடயங்களாக இனங்காணப்பட்டு உரிய தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவைப்படுமிடத்து அவ்வாறான தொகைகள் மிகச் சிறந்த மதிப்பீடுகளில் அளவிடப்படுகின்றது.

## 4. நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க திருத்தப்பட்ட நாணய விதிச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் அல்லது பின்பற்றுவதற்கு அங்கீகாரமளிக்கப்படும் கொள்கைகளை அல்லது நடவடிக்கைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக மத்திய வங்கியின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன ஒப்படைக்கப்பட்டதுடன் பொதுவாக வங்கியின் முகாமை, தொழிற்பாடுகள் மற்றும் நிர்வாகம் என்பவற்றிற்கும் பொறுப்பாக இருக்கும். வங்கி, இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறை என்பவற்றின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருப்பதுடன், அரசாங்கத்தின் இறை முகவராண்மையாகவும் தொழிற்படுகிறது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

- நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்
- நாணய வெளியீடு
- நிதி முறையில் சுதந்திரமான போட்டியையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துதல்
- வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் மேற்பார்வையிடலும்
- வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறையினை ஒழுங்கு செய்தலும், முகாமைப்படுத்தலும், மற்றும் கொடுப்பனவு முறையின் சுமூகமான தொழிற்பாட்டினை மேம்படுத்துதலும்
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குக் கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படுகின்ற முகவர்களுடனும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படும்

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்துகின்ற நோக்கத்துடனும் அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வகைப்படுத்திக்கொள்ள முடியும். மேற்படி நடவடிக்கைகளின் பெறுபேறுகள் வருனாக்கூற்றில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

**வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்**

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழான இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியல் வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயங்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட ஏனைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணய இனங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண் மற்றும் யப்பானிய யென் என்பன காணப்பட்டன. இவ் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதிக் கருவிகள், முக்கியமாக வேறு நாடுகளினது பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

**உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்**

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள்: திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் துறையிலிருந்து நிதியங்களை மீளப் பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்து தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கியதாக முதலீட்டுப் பட்டியலொன்று வைத்திருக்கப்படுகின்றது. வர்த்தக நோக்கத்திற்கன்றி நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம் முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

**நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்**

கட்டுக்காப்பு மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகை, அவை வங்கியின் நிதிக்கூற்றுக்களின் ஆக்கக் கூறுகளில் ஒரு பகுதியாக அமையாததால் இந் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

**5. நிதிச் சொத்துக்கள்**

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள் | **183,729,813** | 56,275,323 |
| விற்பனைக்குள்ள முதலீடுகள் | **346,935,603** | 315,342,452 |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | **530,665,416** | 371,617,775 |

**6. ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்**

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளை வைத்திருத்தல் | **273,070** | 2,286,331 |
| ப.நா.நி. பங்கு | **70,624,016** | 73,860,938 |
| ப.நா.நி. யுடனான வைப்புக்கள் | **134,753** | 140,929 |
| முன்கூட்டிச் செலுத்தப்பட்ட கடப்பாட்டுக் கட்டணம் | **167,430** | 221,583 |
| **மொத்த ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்** | **71,199,269** | 76,509,781 |

**சிறப்பு எடுப்பனவு உரிமைகளைக் கொண்டிருத்தல்**

சிறப்பு எடுப்பனவு உரிமைகளைக் (சிஎஉ) கொண்டிருத்தலென்பது, ப.நா.நி. அங்கத்தவர்களுக்கு எவ்விதத் தடைகளுமின்றிப் பயன்படுத்தக் கூடியதாயுள்ள நாணய வகைகளுக்கான நிலையான உரிமையாகும். அதாவது சிஎஉ வைத்திருப்பவர்களால் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைப் பரிமாறிக் கொள்ள முடியும். இவ்வங்கத்தவர்கள் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைத்திருப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் கடப்பாடுடையவர்களாதலாலும் அத்துடன் சிஎஉ முறைமையின் நெறிப்படுத்தல்களுக்கு ஏற்புடையதான நானாவிதப் பொறுப்புகளுக்கு மதிப்பளிப்பதற்கு கடப்பாடுடையவர்களாதலாலும் ஒதுக்குச் சொத்தாக சிஎஉ முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது. தடையின்றிப் பயன்படுத்தக்கூடியதான நாணயத்தின் மீது சிஎஉ இற்குள்ள உரிமைக்கு இரண்டு விதத்தில் மதிப்பளிப்பதை ப.நா.நி. உறுதி செய்கின்றது. அதாவது, பலவீனமான வெளிநாட்டு நிலைமைகளிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து சிஎஉ வைக் கொள்வனவு செய்வதற்குப் பலம் வாய்ந்த வெளிநாட்டு நிலைமையிலுள்ள அங்கத்தவர்களைப் பெயரிடுவதன் மூலமும் மற்றும் முகாமைக்குட்படுத்தப்பட்ட சந்தையினுள் அங்கத்தவர்களிடையே தாமாக முன்வந்து பரிமாற்றிக் கொள்வதன் மூலமுமாகும். மேற்குறிப்பிடப்பட்ட நாணயங்களில் நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு ஏற்புடையதான தினத்தில் வங்கி வைத்திருந்த மொத்தத் தொகை காட்டப்பட்டுள்ளது.

**ப.நா. நிதிய அனுமதிப் பங்கு**

பன்னாட்டு நாணய நிதியம் (ப.நா.நி.) 187 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பன்னாட்டு அமைப்பொன்றாகும். பன்னாட்டு நாணய ஒத்துழைப்பு, செலாவணி நிலைப்பாடு மற்றும் ஒழுங்கு முறையான செலாவணித் திட்டமிடலை மேம்படுத்துவதற்காகவும் பொருளாதார வளர்ச்சியையும்

தொழில் நிலையையும் மேல் மட்டத்திற்குக் கொண்டு வருவதனை விருத்தி செய்வதற்காகவும் சென்மதி நிலுவையின் சீராக்கலை இலகுபடுத்தும் பொருட்டு நாடுகளுக்குத் தற்காலிக உதவிகளை வழங்குவதற்காகவும் இது நிறுவப்பட்டது. ப.நா. நிதியத்தின் அடிப்படை மூலம் மூலதனப் பங்காகும். ப.நா.நி. வளங்கள் அதன் அங்கத்துவ நாடுகளிலிருந்து கிடைக்கின்றன. பரந்தளவில் ஒரு நாட்டின் பொருளாதார நிலைமையையும் அதற்குச் சமமான நாடுகளின் அனுமதிப் பங்குத் தொகைகளும் கருத்தில் கொள்ளப்பட்டு ஒவ்வொரு நாட்டினதும் பங்களிப்பு அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தில் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாடு அதற்குரிய அனுமதிப் பங்குத் தொகையில் நூற்றுக்கு 25 வீதத்தினை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் மூலம் அல்லது சிஎஉ யில் செலுத்துதல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய 75 வீதத்தினையும் தம் நாட்டுப் பணத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும்.

ஒரு அங்கத்தவரின் அனுமதிப் பங்கின் மூலம் ப.நா. நிதியத்துடனான நிதி மற்றும் ஒழுங்கமைப்பு ரீதியான தொடர்பு பற்றிய அடிப்படை அம்சங்கள் எடுத்துக்காட்டப்படுவதோடு அவற்றில் பின்வருபவையும் உள்ளடங்குகின்றன.

**பங்களிப்பு**: ப.நா. நிதியத்திற்கான அங்கத்தவரின் பங்களிப்பானது அங்கத்தவரின் அனுமதிப் பங்குக்குச் சமமாகும். அதன் மூலம் அங்கத்தவர் ப.நா. நிதியத்திற்கு வழங்குவதற்கு கடப்பாடுடைய கூடியபட்ச நிதி வளங்களின் தொகை தீர்மானிக்கப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்பை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும். 25 சதவீதத்தினை ப.நா.நி. தீர்மானிக்கின்ற ஒதுக்குச் சொத்துக்களிலிருந்து (சிஎஉ அல்லது பயன்படுத்தக்கூடிய நாணயங்களில்) செலுத்துதல் வேண்டும் எஞ்சிய தொகையை அங்கத்தவரின் நாணயத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும்.

**வாக்களிக்கும் உரிமை**: ப.நா.நி. தீர்மானங்களின் போது அங்கத்தவரின் வாக்களிக்கும் உரிமையானது அனுமதிப் பங்கின் மூலம் வரைவிலக்கணம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ப.நா.நி. அங்கத்தவரும் 250 அடிப்படை வாக்குகளுக்கும் அனுமதிப் பங்கின் ஒவ்வொரு சிஎஉ 100,000 க்கு ஒரு மேலதிக வாக்கு வீதமும் உரித்துடையவராவர்.

**நிதியியல் வசதி**: அங்கத்தவரால் பெற்றுக்கொள்ளக் கூடிய நிதி வசதிகளுக்கு (வசதியின் எல்லை) அங்கத்தவருடைய அனுமதிப் பங்கு அடிப்படையாய் அமைகிறது. துணைநில் ஒழுங்குவிதிகள் மற்றும் விஸ்தரிக்கப்பட்ட திட்டங்களுக்கேற்ப அங்கத்தவரால் நடைமுறை ரீதியில் வருடாந்த அனுமதிப் பங்கின் 200 சதவீதமும் திரண்ட ரீதியில் 600 சதவீதம் வரையிலும் கடன் பெறலாம். அசாதாரணமான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு இவ் வசதி இதை விட அதிகரிக்கலாம்.

**சிஎஉ ஒதுக்கல்:** அங்கத்தவருடைய அனுமதிப் பங்குகளின் விகிதாசாரப்படி இவர்களுக்கான சிஎஉ ஒதுக்குத் தொகை தீர்மானிக்கப்படுகிறது.

ஆதலால் சிஎஉ பங்கு ஒரு சொத்தாகும். வங்கியினால் ப.நா.நிதியத்துடன் நடத்தப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் இலங்கை அரசின் முகவராண்மை என்ற ரீதியிலன்றி தனது அதிகாரங்களின் பிரகாரம் நடத்தப்படுவதால் ப.நா.நி. அனுமதிப் பங்கு வங்கியின் சொத்தாக அதன் நிதியியல் கூற்றுக்களில் காட்டப்படுகிறது. ப.நா.நி. அனுமதிப் பங்குக்காகச் செலுத்தப்பட வேண்டிய நாணயத் தொகை 15ஆவது குறிப்பில் பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதியம்**

பன்னாட்டு நாணய நிதியத்தில் நிர்வகிக்கப்படும் விசேட எதிர்பாரா நிகழ்வுக் கணக்கு (எ.நி. கணக்கு) இற்குப் பிந்திய கணக்கில் இலங்கையின் வைப்பிலிருந்து சிஎஉ 0.789 மில்லியனை மாற்றுவதன் மூலம் 2000 ஏப்பிறல் 21ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்பு வைப்பு மேற்கொள்ளப்பட்டது. எ.நி. கணக்கை முடிவுறுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்ட போது, இலங்கைக்கெதிராக எ.நி. கணக்கில் வைக்கப்பட்டிருந்த மீதியை மாற்றுவதன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் இந்தக் கணக்கு உருவாக்கப்பட்டது. எ.நி. கணக்கிற்குப் பிந்திய கணக்கிலுள்ள மீதிகளை முழுமையான நன்கொடையாக அல்லது பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி கடனுக்கு மானியம் வழங்கும் ஒரு வழியாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக்கு வழங்குவதற்கு கவனத்தில் கொள்ளுமாறு அந்தக் கணக்கில் மீதிகளைக் கொண்டிருந்த நாடுகளை பன்னாட்டு நாணய நிதியம் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கம், எ.நி. கணக்கிற்குப் பிந்திய கணக்கிலுள்ள நிதிகளை முழுமையான நன்கொடையாகவன்றி 2018 வரையிலான வட்டியில்லா வைப்பாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக் கணக்குக்கு மாற்றுவதற்கு இணங்கியது.

## 7. அரசுக்கான முற்பணங்கள்

| | 2010<br>ரூபா 000 | 2009<br>ரூபா 000 |
|---|---|---|
| சுழலும் கொடுகடன் | **77,878,823** | 73,880,500 |
| | **77,878,823** | 73,880,500 |

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் 89ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட ஒவ்வொரு முற்பணமும் ஆறு மாதத்திற்குள் மீளச் செலுத்தப்படுமெனில், அத்துடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீதியாயுள்ள மொத்த முற்பணத் தொகை, முற்பணம் வழங்கப்படுகின்ற வருடத்தினுள் இலங்கை

அரசின் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் பத்து சதவீதத்தைத் தாண்டாதிருப்பின் ஒன்று திரட்டிய நிதியத்தினால் ஏற்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட செலவுகளுக்கு நிதியிடுவதற்காக இலங்கை அரசுக்கு நேரடியான அதேநேர முற்பணங்களை வழங்குவதற்கு மத்திய வங்கியினால் முடியுமாயுள்ளது. வங்கியினால் அவ்வாறு வழங்கப்பட்ட முற்பணங்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளில் காட்டப்பட்டுள்ளது.

### 8 (அ) ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்

| | 2010<br>ரூபா 000 | 2009<br>ரூபா 000 |
|---|---|---|
| வெளிநின்ற மூலதனம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **1,758,574** | 45,919 |
| - ஏனையவர்கள் | **1,937,222** | 2,104,829 |
| | **3,695,796** | 2,150,748 |
| சுசகன சுனாமி கடன் திட்டத்தின் கீழ் பெறத்தக்கவை | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **513,788** | 604,632 |
| - ஏனையவர்கள் | **214,058** | 512,558 |
| பெறத்தக்க வட்டி | **4,217,766** | 4,217,766 |
| **கழிக்குக:** | | |
| இடைநிறுத்தப்பட்ட வட்டி | **(4,217,766)** | (4,217,766) |
| பெறத்தக்க ஐயக்கடன் ஏற்பாடு | **(1,963,796)** | (2,131,342) |
| **தேறிய பெறத்தக்கவை** | **2,459,846** | 1,136,596 |

ஐயக்கடன் ஏற்பாட்டிலுள்ள அசைவு பின்வருமாறு:

| | 2010<br>ரூபா 000 | 2009<br>ரூபா 000 |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் | **2,131,342** | 2,178,492 |
| ஐயக்கடன் ஏற்பாட்டிலுள்ள அசைவு | **(167,546)** | (47,150) |
| **2010 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **1,963,796** | 2,131,342 |

2010 திசெம்பர் 31இல் வட்டி சேர்க்கப்படாத செயலிழந்த கடன்களின் கூட்டுத்தொகை ரூ.1,936.495 மில்லியனாகும் (2009இல் ரூ.2,150.748 மில்லியன்). 2010 திசெம்பர் 31இல் இக் கடன்களுடன் தொடர்புடைய இனங்காணப்படாத வட்டி ரூ.4,217.766 மில்லியனாகும் (2009இல் ரூ.4,217.766 மில்லியன்).

### 8 (ஆ) மற்றைய உள்ளூரில் பெறத்தக்கவை

| | 2010<br>ரூபா 000 | 2009<br>ரூபா 000 |
|---|---|---|
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தக்கவை | **2,377,257** | 63,194 |
| ஏனைய பெறத்தக்கவை | **897,635** | 532,250 |
| | **3,274,892** | 595,444 |

இலங்கை அரசின் சார்பில் வங்கி மேற்கொண்ட செலவுகளை திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தக்கவை பிரதிபலிக்கிறது.

### 9.(அ) (i) நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களில் முதலீடுகள்

திருத்தப்பட்டவாறான, இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாண விதிச் சட்டம், இலங்கை மத்திய வங்கி வர்த்தகத்தில் ஈடுபடுவதையோ அல்லது ஏதாவது வர்த்தக, கைத்தொழில் அல்லது ஏனைய நிறுவனங்களில் நேரடியான உரிமைகளைக் கொண்டிருப்பதையோ அல்லது அதன் வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது ஏனைய வங்கித்தொழில் நிறுவனங்களின் பங்குகளைக் கொள்வனவு செய்வதையோ குறிப்பாகத் தடை செய்கிறது. எனினும், நாணயச் சபையின் கருத்துப்படி வங்கித்தொழில் மற்றும் நிதித் துறையில் மனிதவள மூலவளங்களையும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளுக்கிடையே கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை வசதிப்படுத்துவதற்குமாக ஏதாவது கம்பனி நிறுவப்படுமிடத்து அக் கம்பனிகளிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கு இச் சட்டம் அங்கீகாரமளிக்கிறது.

(ii) மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையில் வங்கியின் நிதி நிலைமை பற்றிய கூற்றுத் தொடர்பாக திகதியன்று உள்ளவாறான முதலீடுகள்

| முதலீட்டாளர்கள் | வர்த்தக நடவடிக்கை | கொண்டிருக்கும் உடமை % 2010 | கொண்டிருக்கும் உடமை % 2009 |
|---|---|---|---|
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் | தன்னியக்கத் தீர்ப்பனவு | **19.66** | 19.66 |
| பிட்ச் ரேட்டிங் லங்கா லிமிடெட் | கொடுகடன் தரமிடல் | **10.00** | 10.00 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | நிதிய மாற்றல் | **7.50** | 7.50 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் | **19.76** | 19.90 |
| **விற்பனைக்கான வைத்திருத்தல்** வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் | - | 8.51 |

(iii) தொடர்பான நிறுவனத்தினதும் முதலீடுகளின் எடுத்துச் செல்லப்படும் பெறுமதி பின்வருமாறு:

| | 2010<br>ரூபா 000 | 2009<br>ரூபா 000 |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட கொடுகடன் தகவல் பணியகம் | **5,986** | 8,605 |
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் | **29,500** | 29,500 |
| பிட்ச் றேட்டிங் லங்கா லிமிடெட் | **3,500** | 3,500 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | **2,250** | 2,250 |
| **நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களிலான மொத்த முதலீடுகள்** | **41,236** | 43,855 |

### 9(ஆ) ஏனைய சொத்துக்கள்

| | 2010<br>ரூபா 000 | 2009<br>ரூபா 000 |
|---|---|---|
| உள்நாட்டுச் சொத்துக்கள் | **1,272,621** | 1,497,973 |
| | **1,272,621** | 1,497,973 |

இவ்வாண்டில் வங்கி தன்னிச்சையான வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் முதலீடான ரூ.331.653 மில்லியன் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. இது 2010 செத்தெம்பர் 28ஆம் திகதி 1673/11ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் உருவாக்கப்பட்டது.

### 10. இருப்புக்கள்

| | 2010<br>ரூபா 000 | 2009<br>ரூபா 000 |
|---|---|---|
| சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள் | **1,476,072** | 1,687,046 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகள் | **513,981** | 391,615 |
| இடையிலுள்ள நாணயத் தாள்கள் | **668,170** | - |
| இடையிலுள்ள நாணயக் குத்திகள் | **144,914** | 68,587 |
| | **2,803,137** | 2,147,248 |
| **கழிக்குக:** மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு | **(25,000)** | (25,000) |
| | **2,778,137** | 2,122,248 |
| எழுதுகருவிகளும் நானாவிதப் பொருட்களும் | **36,647** | 34,952 |
| **மொத்த இருப்புக்கள், குறைந்த கிரயச் செலவு மற்றும் பெறத்தக்க தேறிய பெறுமதிகளில்** | **2,814,784** | 2,157,200 |

### 11. ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள்

| | **காணியும் கட்டடமும்** | **இயந்திரங்கள் இயந்திரப் பொறிகள்** | **தளபாடங்களும் பொருத்துகளும்** | **உந்து ஊர்திகள்** | **கணனி** | **ஏனையவை: வாசிப்புப் பொருட்கள்** | **ஏனையவை: நடைபெற்று வரும் கட்டுமானம்** | **2010 மொத்தம்** | **2009 மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** |
| **கிரயம்** | | | | | | | | | |
| **சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு** | 8,367,062 | 1,061,420 | 604,440 | 214,713 | 662,793 | 38,248 | 244,763 | **11,193,439** | 10,817,079 |
| மேலதிக சேர்ப்பனவுகள் | 171,327 | 7,256 | 42,998 | 64,914 | 33,604 | 548 | 125,904 | **446,551** | 381,722 |
| மீள்வகைப்படுத்தல் | | (750) | 25,176 | | (25,176) | 750 | | **-** | |
| நீக்கப்பட்டவை/ மாற்றல்கள் | (3,546) | | (3,927) | - | (911) | - | (171,327) | **(179,711)** | (5,362) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 8,534,843 | 1,067,926 | 668,687 | 279,627 | 670,310 | 39,546 | 199,340 | **11,460,279** | 11,193,439 |

| | **காணியும் கட்டடமும்** | **இயந்திரங்கள் இயந்திரப் பொறிகள்** | **தளபாடங்களும் பொருத்துகளும்** | **உந்து ஊர்திகள்** | **கணனி வன் பொருட்கள்** | **நடைபெற்று வரும் கட்டுமானம்** | **ஏனை யவை** | **2010 மொத்தம்** | **2009 மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** |
| **தேய்மானம்** | | | | | | | | | |
| **சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு** | 253,847 | 373,512 | 435,156 | 169,231 | 592,379 | 26,367 | | **1,850,492** | 1,575,031 |
| ஆண்டிற்கான தேய்மானம் | 123,279 | 53,048 | 41,251 | 26,589 | 24,111 | 1,221 | | **269,499** | 279,455 |
| மீள்வகைப்படுத்தல் | | | 4,196 | | (4,196) | | | **-** | |
| நீக்கல்கள் | | | (3,141) | | (911) | | | **(4,052)** | (3,994) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 377,126 | 426,560 | 477,462 | 195,820 | 611,383 | 27,588 | - | **2,115,939** | 1,850,492 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | 8,157,717 | 641,366 | 191,225 | 83,807 | 58,927 | 11,958 | 199,340 | **9,344,340** | 9,342,947 |

காணிகள் கட்டடங்களுக்கான ஏட்டுப் பெறுமதி நியாயமான பெறுமதிக்கேற்ப குறிப்பிடப்படுகின்றது. மிக அண்மைக்கால சுயாதீனமான மதிப்பீடு திரு. பி.பீ. கலுகலகெதர (பட்டயம் பெற்ற மதிப்பீட்டாளர்) அவர்களால் 2007 திசெம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டதோடு, அது 2007 திசெம்பர் 31இல் உள்ளவாறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

காணி, கட்டடங்களின் உள்ளடக்கம் பின்வருமாறு:

| | எடுத்துச் செல்லும் பெறுமதி 2010 ரூபா 000 | எடுத்துச் செல்லும் பெறுமதி 2009 ரூபா 000 |
|---|---|---|
| சொந்த உரிமைக் காணி | **2,939,202** | 2,942,747 |
| சொந்த உரிமைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | **5,138,725** | 5,078,799 |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | **79,791** | 91,668 |
| | **8,157,718** | 8,113,214 |

மீளப் பெறுமதியிடப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்களின் தேய்மானங்கள் கழிக்கப்பட்ட கிரயச் செலவு எடுத்துச் செல்லல் பெறுமதியாக நிதிக் கூற்றுக்களால் புகுத்தப்பட்டிருப்பின் இது ரூ.6,944.193 மில்லியனாகும் (2009 ரூ.6,944.193 மில்லியன்).

வங்கியின் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயம் 2010 திசெம்பர் 31இல் ரூ.1,475.265 மில். (2009 - ரூ.1,429.305 மில்.) ஆகவும் வங்கி காசிற்கு கொள்வனவு செய்த ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்கள் ரூ.280.027 மில். (2009 - ரூ.387.795 மில்.) ஆகவும் காணப்படுகிறது.

## 12. அருவச் சொத்துக்கள்

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| **கணனி மென்பொருட்கள்:** | | |
| **கிரயச் செலவு:** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **580,794** | 574,082 |
| மேலதிக சேர்ப்பனவு | **9,303** | 6,712 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **590,097** | 580,794 |
| **கடன்தீர் நிதி மற்றும் முடக்கம்** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **564,411** | 558,365 |
| ஆண்டுக்கான கடன்தீர் நிதிக் கட்டணம் | **7,933** | 6,046 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **572,344** | 564,411 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **16,383** | 15,717 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **17,753** | 16,383 |

## 13. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய தொகை

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| வெளிநாட்டு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | **2,598,637** | 17,709,419 |
| ஏனைய வெளிநாட்டு நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியவை | **528,499** | 359,422 |
| | **3,127,136** | 18,068,841 |

## 14. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்துக்குச் செலுத்த வேண்டிய தொகை

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| ஆண்டு இறுதியில் செலுத்தப்பட்ட வேண்டிய தொகை | **65,044,407** | 29,836,531 |
| | **65,044,407** | 29,836,531 |

ஆசிய தீர்ப்பனவு சங்கமானது, 1974ஆம் ஆண்டில் பங்குபற்றும் நாடுகளின் மத்திய வங்கிகளுக்கிடையே கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்கின்ற நிறுவனமாக, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் சமூக அலுவல்கள் ஆணைக் குழுவின் அனுசரணையின் கீழ் நிறுவப்பட்டது. இலங்கை ஒரு பங்குபற்றும் நாடாகும். பங்களாதேஸ், ஈரான், நேபாளம், பாக்கிஸ்தான், இந்தியா, பூட்டான், மியன்மார் ஆகியன ஏனைய பங்குபற்றும் நாடுகளாகும். இது பங்குபற்றும் நாடுகளுக்கிடையே நடைமுறைப் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களைப் பல்தரப்பு அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கான தீர்ப்பனவு வசதியொன்றாகும். ஒவ்வொரு மாத இறுதியிலுமுள்ள தேறிய நிலையை இரண்டு மாத கடன் கால கட்டத்தின் பின்னர் தீர்த்து வைத்தல் அல்லது பெற்றுக்கொள்ளல் நடைபெறுகிறது. தேறிய கடன்படுநர்களால் 0.18 சதவீதத்திற்கும் 0.14 சதவீதத்திற்குமிடையிலான வட்டி அமெரிக்க டொலரிலும், (2009இல் 0.18 சதவீதம் மற்றும் 0.14 சதவீதம்) 0.28 சதவீதத்திற்கும் 0.44 சதவீதத்திற்குமிடையிலான வட்டி யூரோவிலும் இவ் வசதிக்காகச் செலுத்தப்படுவதுடன் இது, தீர்த்து வைக்கும் நாட்களுக்கிடையே தேறிய கடன்படுநர்களின் நாளாந்த மொத்த மீதிகளுக்கு மாற்றப்படுகிறது. மேற்படி மீதிகளின் மூலம் குறிப்பிட்ட நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்கு ஆசிய தீர்ப்பனவுக் சங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை காட்டப்படுகிறது.

## 15. பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்புடைய பொறுப்புக்கள்

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறையற்ற | **144,098,362** | 78,899,615 |
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறை | **1,311,686** | 3,301,811 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | **67,559,235** | 70,655,689 |
| ப.நா. நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகை | **38,802,123** | 41,627,642 |
| அனுமதிப் பங்குப் பொறுப்பு | **23,649,431** | 23,686,264 |
| | **131,322,475** | 139,271,406 |
| **ப.நா.நி. தொடர்பான மொத்தப் பொறுப்புகள்** | **275,420,837** | 218,171,021 |

வட்டியுடனான கடன்களில் ப.நா. நிதியத்துடனான வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதிகளும் நீடிக்கப்பட்ட நிதிய வசதிகளும் அதேபோன்று அவசரகால உதவி வசதிகளும் உள்ளடங்குகின்றன.

**வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி வசதிகள் (வ.கு.வ.வசதி)**

வ.கு.வ. வசதியானது, குறைந்த வருமானம் பெறுகின்ற அங்கத்தவர்களுக்கு ப.நா. நிதியினால் வழங்கப்படுகின்ற நீண்ட கால நிதியாக்கல் வசதியாகும். இத் திட்டமானது, மேம்படுத்தப்பட்ட உள்ளமைப்பு ரீதியிலான சீர்செய்தல் வசதிகள் என முன்னர் குறிப்பிடப்பட்டது. வறுமையைக் குறைத்து நீண்டு நிலைத்திருக்கக்கூடிய அடிப்படையில் அதிக வளர்ச்சியொன்றை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் உயர் வாழ்க்கை நிலையை அடைந்து கொள்ளல் இவ் வேலைத் திட்டத்தின் இலக்காகும். வ.கு.வ.வ. கடனுக்காக அறவிடப்படுகின்ற வட்டி வீதம் ஆண்டிற்கு 0.5 சதவீதமாகும். இக் கடனுக்கு ப.நா. நிதியத்தால் வழங்கப்படுகின்ற மீளச் செலுத்துவதற்கான ஆகக் கூடுதலான காலகட்டம் 10 ஆண்டுகளாகும்.

**நீடிக்கப்பட்ட நிதிய வசதிகள் (நீ.நிவசதி)**

நீ.நி. வசதியானது பேரண்டப் பொருளாதார சமமின்மை மற்றும் உள்ளமைப்பு ரீதியிலான பிரச்சனைகளின் மூலம் எழுகின்ற சென்மதி நிலுவை வசதியீனங்களை அடக்கியாளும் பொருட்டு நடுத்தர கால வேலைத் திட்டங்களுக்கு உதவி வழங்கும் நிதி வசதியாகும். இது முன்னேற்றப்பட்ட உள்ளமைப்பு ரீதியலான சீர்செய்தல் வசதிகளின் விஸ்தரிப்பாகும். இதன் கீழ் கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி வீதம் ஆண்டுக்கு 0.5 சதவீதமாகும். ப.நா. நிதியத்தினால் இதன் கீழ் பெறப்பட்ட கடன்களைச் செலுத்துவதற்கு 4½ ஆண்டு கால அனுசரணைக் கால கட்டத்துடன் சேர்த்து 10 ஆண்டு காலம் வழங்கப்பட்டுள்ளது.

**அவசரகால உதவி வசதிகள் (அ.உ.வ.)**

பன்னாட்டு நாணய நிதியமானது இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புக்குள்ளாகின்ற தனது அங்கத்துவ நாடுகளின் சென்மதி நிலுவை நிதித் தேவைகளுக்கும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் உதவி செய்யும் வகையில் அவசரகால உதவிகளை வழங்குகின்றது. ப.நா. நிதியத்தின் நிறைவேற்றுக் குழு இலங்கைக்கு சி.எ.உ. 103.350 மில்லியனை அவசரகால உதவியாக அங்கீகரித்துள்ளது. அவசரகால உதவியானது பணம் கொடுக்கப்பட்ட தினத்திலிருந்து 3 1/4 தொடக்கம் 5 ஆண்டு காலத்தினுள் சம பங்குகளாக எட்டுத் தவணைகளில் மீளச் செலுத்தப்படும்.

**துணைநில் ஒழுங்குகள்**

இது ப.நா. நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த கடன் வசதியாகும். ப.நா. நிதியத்தின் நிறைவேற்றுச் சபை சென்மதி நிலுவை உதவியாக இலங்கைக்கு 2009 யூலை 24ஆம் நாளன்று சிஎஉ 1.65 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 2.6 பில்லியன்) சமமான தொகையினை 20 மாத துணைநில் ஒழுங்கிற்காக ஒப்புதலளித்தது. 2009 யூலை 28ஆம் நாளன்றும் 2009 நவெம்பர் 10ஆம் நாளன்றும் சிஎஉ 413.4 மில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 644.4 மில்லியன்) சமமான இரண்டு தொகுதிக் கடன்களை இலங்கை பெற்றுக் கொண்டது. 2010 யூன் 30 மற்றும் 2010 செத்தெம்பர் 28ஆம் நாளன்றும் சிஎஉ 275.6 மில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 407.78 மில்லியன்) சமமான மேலும் இரண்டு தொகுதிக் கடன்கள் 3ஆவது மற்றும் 4 ஆவது தொகுதிக் கடன்களாக இலங்கையினால் பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2010 செத்தெம்பர் 28ஆம் நாளன்று சிஎஉ 137.8 மில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 212.47 மில்லியன்) சமனான ஐந்தாவது தொகுதிக் கடன்களை இலங்கை பெற்றுக் கொண்டது.

எஞ்சிய தொகை, நாட்டின் பொருளாதார செயற்பாடுகள் மீதான காலாண்டு மீளாய்விற்குட்பட்டு ஆறு தொகுதிகளாகக் கட்டம் கட்டமாக வழங்கப்படும். ப.நா. நிதியத்தினால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்வசதி இலங்கைக்கான அனுமதிப் பங்கின் 400 சதவீதத்திற்குச் சமமானதாகும்.

20 மாத துணைநில் ஒழுங்குவசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறுதித்தொகுதி 2012 மாச்சில் பகிர்ந்தளிக்கப்படும். இக் கடன் 2013 ஏப்பிறலில் தொடங்கி 4 ஆண்டுகளுக்குள் மீளச் செலுத்தப்பட வேண்டியதாகும். துணைநில் ஒழுங்குவசதியின் வட்டி வீதம் இரண்டு கூறுகளை உள்ளடக்கியதாகும். பணிக் கட்டணம் மற்றையது நிர்ணயிக்கப்பட்ட இலாபம். பணிகள் கட்டணம் சிஎஉ விகிதத்தினை அடிப்படையாகக் கொண்டு வாராந்தம் கணிக்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட இலாபம் அனுமதிப்பங்கில் 300 சதம் வரையிலான வெளிநின்ற கடன் தொகையில் ஆண்டிற்கு 1 சதவீதமாக இருக்கும். வெளிநின்ற கடன் தொகை சதவீதத்தினை விஞ்சும் பொழுது ஆண்டிற்கு 2 சதவீதமான மேலதிகக் கட்டணம் விதிக்கப்படும்.

**துணைநில் ஒழுங்குகளின் முக்கிய குறிக்கோள்கள் வருமாறு:**

- நாட்டின் பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதரவளித்தல்.
- நாட்டின் இறை நிலைமையினை வலுப்படுத்துகின்ற வேளையில் மோதல்களுக்குப் பின்னான மீள்கட்டுமானம்

மற்றும் நிவாரண முயற்சிகளுக்கு மிகத் தேவைப்படும் மூலவளங்களை கிடைக்கச் செய்வதேயாகும்.

- பன்னாட்டு ஒதுக்குகளை மீளக்கட்டியெழுப்பி இலங்கையின் உள்நாட்டு நிதியியல் முறைமையினை வலுப்படுத்தும் நோக்கம்.
- மோதல்களுக்குப் பின்னான மீள்நிருமாணத்திற்கான நிதியியல் உதவிக்காக பரந்தளவில் பன்னாட்டு சமூகத்தினை நாடுகின்ற அதிகாரிகளுக்கு உதவக்கூடிய விதத்தில் பலமான பேரண்டப் பொருளாதார அடித்தளத்தினை இடுவதற்கு.
- நடைமுறையிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேம்படுத்துவதன் மூலமும் வங்கி மேற்பார்வையினை உயர்த்துவதன் மூலமும் வங்கித்தொழில் முறையினை வலுப்படுத்தல்.

12 மாத காலத்தினுள் மற்றும் அதன் பின்னர் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வட்டியுடன் கூடிய கடன் தொகைகள் பின்வருமாறு:

| | செல்லுபடியாகும் வட்டி வீதம் % | முதிர்ச்சி | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|---|---|
| **நடைமுறை** | | | | |
| நீ.நி.வ. | | | - | 307,754 |
| அ.உ.வ. | 0.5 | | - | 685,903 |
| வ.கு.வ.வ.2 | | | **1,311,686** | 2,308,154 |
| | | | **1,311,686** | 3,301,811 |
| **நடைமுறையற்ற** | | | | |
| து.ஒ.வ. | | 2015 | **141,248,032** | 73,860,937 |
| வ.கு.வ.வ.2 | 0.50 | 2013 | **1,967,530** | 4,115,416 |
| நீ.நி.வ. | 1.32 | 2013 | **882,800** | 923,262 |
| | | | **144,098,362** | 78,899,615 |
| **மொத்த வட்டியுடன் கூடிய கடன்கள்** | | | **145,410,048** | 82,201,426 |

### சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீடுகள்

சிஎஉ என்பது கைவசமுள்ள ஒதுக்கச் சொத்துக்களுக்கு குறைநிரப்பாக நீண்டகால உலகத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ப.நா. நிதியத்தால் நிறுவப்பட்டுள்ள ஒதுக்குச் சொத்தாகும். அங்கத்துவ நாடுகளுக்கு அவற்றின் ப.நா.நி. அனுமதிப் பங்கின் பிரகாரம் சிஎஉ ஒதுக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தின் சிஎஉ திணைக்களத்தில் (ப.நா. நிதியத்தினுள் அமைந்துள்ள கணக்குப் பிரிவு) பங்குபற்றுகின்ற நாடுகளுக்கு மாத்திரம் சிஎஉ ஒதுக்கலாம். ப.நா. நிதியத்திற்கு உரித்தாயுள்ள தங்கம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஒதுக்குகளின் நிலைமைகளுக்குக் குறைநிரப்பாக ப.நா. நிதியத்தால் சிஎஉ உருவாக்கப்பட்டது. வங்கியினால் இலங்கை அரச சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில நிபந்தனைகளின் பிரகாரம் ப.நா. நிதியத்தால் அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய அனுமதிப் பங்குத் தொகைக்கேற்ப சிஎஉ ஒதுக்கப்படலாம். ப.நா. நிதியத்தால் சிஎஉ ஒதுக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கிரயச் செலவற்ற சொத்தொன்று உருவாவதுடன், அதற்காக வட்டி உழைக்கப்படுவதோ அல்லது செலுத்தப்படுவதோ கிடையாது. சிஎஉவை இரத்துச் செய்வதற்கக் கூட உடன்படிக்கையின் நிபந்தனைகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை இவ்வேற்பாடுகள் செயற்படுத்தப்படவில்லை. சிஎஉ ஒதுக்குதல்கள் அதிகரிக்கப்படுவதன் மூலம் 6 ஆவது குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு சிஎஉ வைத்திருத்தல் அதிகரிக்கிறது. அதன் தேறிய ஒதுக்குதலுக்குச் சமமான தொகையையும் அது சிஎஉ திணைக்களத்தின் தொழிற்பாடுகளில் பங்குபற்றியதன் காரணமாக ப.நா. நிதியம் சிஎஉ திணைக்களத்தை முடிவுறுத்துகின்ற அல்லது ஒழிக்கின்ற போது செலுத்த வேண்டியதாயுள்ள ஏனைய ஏதேனும் தொகைகள் இருப்பின் அவற்றையும் ப.நா. நிதியத்திற்குச் செலுத்துவதற்கு அங்கத்தவர்கள் கடப்பாடுடையவர்களாயிருப்பர்.

### ப.நா. நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகைகள்

தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகக் கொடுக்கல்வாங்கல்கள் சார்பாக வங்கியானது ப.நா. நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகைகள் இதன் மூலம் காட்டப்படுகிறது.

### அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள்

6ஆம் இலக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளவாறான ப.நா. நிதிய அனுமதிப் பங்கிற்காகச் செலுத்தப்பட்ட தொகை அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

## 16. வெளிநாட்டுக்குச் செலுத்த வேண்டிய ஏனையவை

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | **2,240,366** | 2,148,425 |
| சீன அபிவிருத்தி வங்கிக் கடன் | **2,773,825** | 2,859,610 |
| | **5,014,191** | 5,008,035 |

### சீன அபிவிருத்தி வங்கிக் கடன் (சீஅவ)

இமவ சீன அபிவிருத்தி வங்கியுடன் (சீஅவ) இரண்டு நிறுவனங்களுக்கிடையிலும் நிதி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்தும் பொருட்டு 2009 யூலை மாதம் 25ஆம் திகதி உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டது. இவ் உடன்படிக்கையின் கீழ் சீஅவ அமெரிக்க டொலர் 25 மில்லியன் கடப்பாட்டினைக் கொண்ட திரண்டதொரு தொகைக்கான கடன் வசதியை வழங்கும் என்பதோடு, இமவ சந்தையின் திரவத்தன்மையை மேம்படுத்துதல், மற்றும் இலங்கையின் கமத்தொழில் அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மூலம் நாட்டின் நிதியியல் உறுதிப்பாட்டின் நோக்கத்திற்காக வசதியினைப் பயன்படுத்தும்.

6 மாத ஐ.அ.டொலர் இலண்டன் வங்கிகளுக்கிடையிலான விற்பனை வீதத்துடன் 4 சதவீத எல்லையினைப் பயன்படுத்தி வட்டி கணிப்பிடப்படும்.

இம் வங்கி பயன்பாட்டிற்குப் பின்னர் (14.08.2009) முப்பத்தாறு மாதங்களில் வருகின்ற இறுதி முதிர்ச்சித் திகதியன்று மேற்படி வசதியினை முழுமையாக மீளச்செலுத்த வேண்டியுள்ளது.

**17. வங்கி மற்றும் நிதி நிறுவனங்களால் வைப்பிலிடப்பட்டவை**

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு பொறிமுறையின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் உட்பட பங்குபற்றுபவர்களால் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்குத் தேவையான நிதியங்களை வட்டியற்ற, பூரணமான மேலதிகப் பிணையுடன் கூடியதாக நாளினுள் திரவத்தன்மை வசதியின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாயுள்ளது. அவ்வாறான நாளினுள் திரவத்தன்மை வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு, பங்குபற்றுபவர்கள் வர்த்தகம் செய்யக்கூடிய அரச பிணையங்களை அடகு வைத்தல் வேண்டும். நாளினுள் திரவத்தன்மை வசதியின் கீழ் முற்பணங்களின் மூலம், வர்த்தகம் செய்யக்கூடிய அரச பிணையங்கள் மீது வழங்கப்பட்ட முற்பணங்கள் காட்டப்பட்டுள்ளன. இரண்டு ஆண்டு இறுதிகளிலும் இவை பூச்சியப் பெறுமதியைக் கொண்டுள்ளன.

| | 2010<br>ரூபா 000 | 2009<br>ரூபா 000 |
|---|---|---|
| **வங்கிகளின் வைப்புக்கள்** | | |
| - தொடர்புடைய தரப்பினர் | **55,282,083** | 36,556,496 |
| - ஏனையோர் | **49,563,846** | 49,525,894 |
| | **104,845,929** | 86,082,390 |
| **நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்** | | |
| - தொடர்புடைய தரப்பினர் | **368** | 132 |
| - ஏனையோர் | **7,148** | 3,344 |
| | **7,516** | 3,476 |
| **வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் மொத்த வைப்புக்கள்** | **104,853,445** | 86,085,866 |

**18. அரச மற்றும் அரச நிறுவனங்களுடனான நிலுவைகள்**

**(அ) அரச மற்றும் அரச நிறுவனங்களுடனான மொத்த நிலுவைகள்**

| | 2010<br>ரூபா 000 | 2009<br>ரூபா 000 |
|---|---|---|
| அரச வைப்புக்கள் | **2,252,713** | 1,414,039 |
| அரச முகவராண்மைகளும் நிதியங்களும் | **835,946** | 933,670 |
| | **3,088,659** | 2,347,709 |

**(ஆ) மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்**

| | 2010<br>ரூபா 000 | 2009<br>ரூபா 000 |
|---|---|---|
| அரச பிணையங்கள் | **18,400,000** | 6,000,000 |
| இ.ம.வ. பிணையங்கள் | **95,054,891** | 78,022,645 |
| **அரச மற்றும் அரச நிறுவனங்களுடனான மொத்த நிலுவைகள்** | **113,454,891** | 84,022,645 |

**19 (அ) ஊழியர் நன்மைத் திட்டங்களிலுள்ள நிலுவைகள்**

வங்கியானது பொதுவான அலுவல்களின் ஒரு பகுதியாக அதன் ஊழியர் நன்மைத் திட்டங்களின் வங்கியாளர் என்ற ரீதியில் செயற்படுகின்றது. வங்கியின் தனியாக நிருவகிக்கப்படுகின்ற ஊழியர் நன்மைத் திட்டங்களில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகைகள் பின்வருமாறு:

| | 2010<br>ரூபா 000 | 2009<br>ரூபா 000 |
|---|---|---|
| ஊழியர் சேம நிதியம் | **1,190** | 1,083 |
| ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | **(479,902)** | (481,359) |
| விதவைகள்/ விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | **698,177** | 667,955 |
| பணிக் கொடைகளின் கீழ் செலுத்தப்பட வேண்டியவை | **15,761** | 19,162 |
| மருத்துவ நலத் திட்டங்களின் கீழ் செலுத்தப்பட வேண்டியவை | **741,928** | 843,414 |
| **ஏனைய மொத்த வைப்புக்கள்** | **977,154** | 1,050,255 |

**19 (ஆ) ஏனைய கொடுபடத்தக்கவை**

ஏனைய கொடுபடத்தக்கவை ரூ.1,175.758 மில்லியன்களை (2009இல் எதுவுமில்லை) உள்ளடக்குகிறது. கொடுபடத்தக்கவை 2009ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் காணல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் தொடர்பான சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பானவையாக இருந்தன. கைவிடப்பட்ட சொத்துக்கள் மீது ஏதேனும் மேலதிக கோரல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் வங்கிகள் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வைப்புக்களை வட்டியுடன் செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாகும். எனவே, சேகரிக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் நிறையேற்றப்பட்ட சராசரி திறைசேரி உண்டியல் வீதங்களில் கணிக்கப்பட்ட வட்டி வீதங்களுடன் சேர்த்து வங்கிகளின் பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**20. சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

இலங்கையின் நாணயத்தை வெளியிடும் தனி அதிகாரம் வாய்ந்த நிறுவனமென்ற ரீதியில் மத்திய வங்கியானது தொடர்ச்சியாக சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் நாணயத்தை வெளியிடுகின்றது. குறிப்பிட்ட நிதி நிலைமைகள் பற்றிய கூற்றுத் திகதியன்று சுற்றோட்டத்தில் உள்ளவாறான நாணயத் தொகைகள் பின்வருமாறு:

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| **இனக் குத்திகள்** | | |
| சதம் 1 | **3,631** | 3,631 |
| சதம் 2 | **5,702** | 5,702 |
| சதம் 5 | **23,245** | 23,249 |
| சதம் 10 | **39,212** | 39,220 |
| சதம் 25 | **121,120** | 120,754 |
| சதம் 50 | **185,633** | 184,190 |
| ரூபா 1 | **613,826** | 574,058 |
| ரூபா 2 | **863,079** | 811,255 |
| ரூபா 5 | **2,624,778** | 2,501,296 |
| ரூபா 10 | **645,699** | 447,287 |
| ஏனைய நினைவு தினக் குத்திகள் | **549,496** | 546,535 |
| | **5,675,421** | 5,257,177 |

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| **தாள்கள்** | | |
| ரூபா 1 | **4,981** | 4,981 |
| ரூபா 2 | **26,699** | 26,699 |
| ரூபா 5 | **37,206** | 37,208 |
| ரூபா 10 | **1,856,521** | 1,806,776 |
| ரூபா 20 | **2,603,008** | 2,068,244 |
| ரூபா 50 | **3,568,411** | 3,052,438 |
| ரூபா 100 | **13,333,012** | 12,254,788 |
| ரூபா 200 | **210,389** | 176,231 |
| ரூபா 500 | **19,683,291** | 18,171,292 |
| ரூபா 1000 | **109,381,997** | 101,922,111 |
| ரூபா 2000 | **99,271,281** | 72,651,890 |
| | **249,976,796** | 212,172,658 |
| சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயங்கள் | **255,652,217** | 217,429,835 |

## 21. பிற்போடப்பட்ட கொடைகள்

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறு | **567** | - |
| பெறப்பட்ட கொடை | **4,500** | 639 |
| இவ்வாண்டின் கடன் தீர்ப்பனவு | **(462)** | (72) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **4,605** | 567 |

இவ்வாண்டுப் பகுதியில் வங்கி நிதி அமைச்சிடமிருந்து எவ்வித விளைவுமின்றி ஊர்திகளைப் பெற்றுக்கொண்டது. பிற்போடப்பட்ட வருமானமாக தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட கொடுகடனுடன் சந்தைப் பெறுமானத்தில் நிதியியல் கூற்றுக்களின் சொத்துக்கள் அங்கீகரிக்கப்பட்டன. பிற்போடப்பட்ட வருமானம் அத்தகைய சொத்துக்களின் தேய்மானத்துடன் பொருந்தத்தக்க விதத்தில் இக் காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

## 22. மூலதனப் பங்கு

**மூலதனப் பங்கு விடயத்தின் இயல்பு**

**மூலதன நிதியம்**

**பங்களிப்பு மூலதனம் -** நாணய விதிச் சட்டத்தின் 6ஆவது வாசகத்தின் பிரகாரம் மூலதனக் கணக்கிலுள்ள வங்கியின் மூலதனம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**மூலதனமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒதுக்குகள்**

நாணயச் சபையின் தீர்மானம் MB/F/22/12/2008 இன் பிரகாரம் 2008ஆம் ஆண்டில் பொது ஒதுக்கங்களிலிருந்து ரூ.24,985 மில்லியன் மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கு உருவாக்கப்பட்டுள்ளது.

**வைத்திருக்கப்படுகின்ற ஈட்டப்பட்ட வைகளுக்கு மேலதிகமாக, ஒதுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:**

**பொது ஒதுக்கம்** - பின்வரும் ஒதுக்கங்களுக்காக நாணயச் சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகள் பொது ஒதுக்கங்களில் உள்ளடங்குகின்றன. அவை மூலதனப் பங்களிப்பு, நீண்ட கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்கள், கட்டுப்பாட்டுக் கணக்கு ஒதுக்கங்களாகும். நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களில் முதலீடு செய்யப் பயன்படுகின்ற நிதியத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு மூலதனப் பங்களிப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் -** மீள் மதிப்பீடு செய்யப்பட்டதன் மூலம் உருவாகிய பன்னாட்டு ஒதுக்கம் என்பது, நாணய விதிச் சட்டத்தின் 41ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளதொரு ஒதுக்கமாகும். இதன் பிரகாரம், தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களின் மூலம் மத்திய வங்கியின் தேறிய சொத்துக்களும் பொறுப்புக்களும் மீளக் கணிப்பிடப்படுவதன் ஊடாக உருவாகின்ற உண்மையிலேயே ஈட்டப்படாத இலாபம் அல்லது நட்டம் வங்கியின் தேறிய இலாபத்தைக் கணிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படலாகாதென்பதுடன், அதற்குப் பதிலாக இவ்விலாபம் அல்லது நட்டம் மீளக் கணிப்பிடப்படுகின்ற பன்னாட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

**விற்பனைக்குள்ள பிணையங்களின் தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) -** விற்பனைக்குள்ளதாகப் பெயரிடப்பட்டுள்ள பிணையங்கள் மீள மதிப்பிடப்பட்டதன் மூலம் 2010 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் உருவாகிய விற்றுப் பெறப்படாத இலாபம் அல்லது நட்டம் இவ்வொதுக்கத்திற்கு மாற்றப்பட்டது.

**அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை கடன்கரைப்பு நிதியம்** - அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையைப் பயன்படுத்துவதில் பங்குபற்றுகின்றவர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற கட்டணங்களைக் கொண்டு இந் நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. இந் நிதியமானது திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் முதலீடு செய்வதற்கு மாத்திரம் மட்டுப்பட்டதாயிருக்கும்.

**ஓய்வூதிய நிதிய ஒதுக்கம்** - வெளியக இடர்நேர்வுகளின் காரணமாக வங்கியின் வருமானம் ஈட்டும் ஆற்றலில் ஏற்படும் வடுக்களால் ஓய்வூதிய நிதியத்தில் ஏதேனும்

குறைபாடுகள் உருவாகுமாயின் அதனை ஈடுசெய்யும் பொருட்டு 2007ஆம் ஆண்டின் வருமானத்திலிருந்து மேலதிகமாக ரூ. 3 பில்லியன் மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

**தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம்** - குறிப்பாக தொழில்நுட்ப மேம்பாட்டுத் தேவைப்பாடுகள், நவீனமயமாக்கல் அல்லது இ.ம.வங்கியினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொதுப்பேரேடு, அ.நே.மொ. தீர்ப்பனவு முறை, திறைசேரி வணிக அறை முகாமைத்துவ முறைமை அல்லது பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை ஆகிய தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தரமுயர்த்துதல் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு இவ்வொதுக்கம் 2007 ஆம் ஆண்டின் வருமானத்திலிருந்து உருவாக்கப்பட்டது.

**மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம்** - 2010ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கி இலாபத்திலிருந்து உருவாக்கிய நிதியத்தின் மூலம் அபிவிருத்தி நோக்கங்களுக்காக மாகாணங்களுக்கு ரூ.2.9 பில்லியன் கொண்ட நடுத்தர கால மற்றும் நீண்ட கால மீள்நிதியிடல் இலங்கை வங்கியூடாகவும் மக்கள் வங்கியூடாகவும் வழங்கப்பட்டன.

**வைப்புக் காப்புறுதி நிதியம்** - வங்கியினால் நிருவகிக்கப்படுகின்ற சுயவிருப்பு வைப்புத் திட்டத்திற்காக உருவாக்கப்படட் நிதியத்தின் பிரதிபலிக்கின்ற முதலீடுகள், பின்னர் 2010 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட 1673/11இலக்கம் கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தல்களுக்கிணங்க நிறுவப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டத்திற்கு செலுத்தப்படடன. (குறிப்பு 40) அவ்வாறு மாற்றல் செய்யப்பட்ட நிதியத்தின் தொகை ரூ.331.653 மில்லியனாக விளங்கியது.

ஏனைய ஒதுக்கங்களிலான அசைவுகள் பின்வருமாறு:

| | நடுத்தர கால, நீண்ட கால ஒதுக்கம் ரூ.000 | சந்தை மதிப்பீட்டு மற்றும் ஏனைய ஒதுக்கம் ரூ.000 | இமவ குறித் துரைக் கப்பட்ட ஒதுக்கம் ரூ.000 | அ.நே. மொ. தீ. ஆழ் நிதியம் ரூ.000 | வட்டி வீத இடர்நேர்வு ஒதுக்கம் ரூ.000 | விற்பனைக்குள்ள பிணையங்களின் சந்தைப் பெறுமதி/ (நட்டம்) ரூ.000 | ஓய்வூதிய நிதிய ஒதுக்கம் ரூ.000 | தொழில் நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம் ரூ.000 | மாகாண அபி விருத்திக் கொடு கடன் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2010 சனவரி 01இல் உள்ளவாறான** | 9,425,000 | 16,568,574 | 742,992 | 297,907 | 47,453,545 | (1,065,235) | 3,000,000 | 1,000,000 | - | 77,422,784 |
| அ.மொ.தீ. முறை வருமானத்தை அ.மொ.தீ. நிதியத்திற்கு மாற்றுதல் | - | - | - | 107,559 | - | - | - | - | - | 107,559 |
| இ.ம.வ. குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கங்களுக்கு மாற்றுதல் | - | - | 206,998 | - | - | - | - | - | - | 206,998 |
| இலாபத்தினை பொது ஒதுக்கிற்கு மாற்றுதல் | - | 700,975 | - | - | - | - | - | - | - | 700,975 |
| இலாபத்தை சந்தை மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றுதல் | - | (4,177,107) | - | - | - | - | - | - | - | (4,177,107) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பிடல் | - | - | - | - | (8,659,222) | - | - | - | - | (8,659,222) |
| விற்பனைக்குள்ள பிணையங்கள் மற்றும் தங்கத்தின் மீதான தேறிய சந்தைப் பெறுமதி நட்டம் | - | - | - | - | - | (5,889,977) | - | - | - | (5,889,977) |
| மாகாண கொடுகடன் திட்டத்திற்கான மாற்றல் | (2,900,000) | - | - | - | - | - | - | - | 2,900,000 | - |
| மாகாண கொடுகடன் திட்டத்திற்காக செய்யப்பட்ட மாற்றல்களுக்கான ந.நீ. கடன் நிரம்பல் | 2,900,000 | - | - | - | - | - | - | - | - | 2,900,000 |
| இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கான அபிவிருத்தி வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்ட நிதிகளின் மாற்றல் | - | - | (331,653) | - | - | - | - | - | - | (331,653) |
| **2010 திசெம்பர் 31இல் உள்ளவாறான** | **9,425,000** | **13,092,442** | **618,337** | **405,466** | **38,794,323** | **(6,955,212)** | **3,000,000** | **1,000,000** | **2,900,000** | **62,280,356** |

## 23. தேறிய இலாபத்தை மாற்றுதல்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) 39 (இ) வாசகத்தின் பிரகாரம், இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள இலாபத்தை, நாணய விதிச் சட்டத்தின் 38ஆம் வாசகத்தின் பிரகாரம் தேவைக்கேற்ப ஒதுக்கங்களுக்கு ஒதுக்கீடு செய்ததன் பின்னர் அரசுக்குச் செலுத்தியது. ஆண்டினுள், 2009ஆம் ஆண்டிற்காக இலாபத்தில் ரூ.5 பில்லியன் கொண்ட தொகையும் 2010 தொடர்பாக ரூ.10 பில்லியன் கொண்ட இலாபமும் அரசிற்கு மாற்றப்பட்டது.

## 24. நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | **1,827,313** | 1,397,611 |
| நிதிச் சொத்துக்கள் | **9,001,207** | 3,181,686 |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான சொத்துக்கள் | **13,360** | 16,559 |
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **10,841,880** | 4,595,856 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| முதலீட்டுச் சொத்துப்பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள் | **5,517,540** | 27,706,386 |
| ஏனைய கடன்களும் முற்பணங்களும் | **386,897** | 404,951 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான மொத்த தேறிய வட்டி வருமானம்** | **5,904,437** | 28,111,337 |
| **நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **16,746,317** | 32,707,193 |

## 25. நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை | **49,318** | 24,560 |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் | **1,700,366** | 826,617 |
| சுவப் செலவு | **1,971,544** | 903,652 |
| ஏனைய வெளிநாட்டு செலுத்த வேண்டியன | **159,931** | 77,607 |
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்** | **3,881,159** | 1,832,436 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் - திறைசேரி உண்டியல்கள் | **2,069,217** | 1,053,305 |
| - திறைசேரி முறிகள் | **1,369,727** | - |
| முறிக் கடன்பாடுகள் மீது செலுத்தப்பட்ட கட்டணம் | **58,735** | - |
| இமவ பிணையங்கள் | **6,625,983** | 1,481,515 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **10,123,663** | 2,534,820 |
| **நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **14,004,822** | 4,367,256 |

சுவப் செலவு - 2009 பெப்புருவரியிலிருந்து வங்கி வெளிநாட்டு மத்திய வங்கிகளோடு அமெரிக்க டொலர் 200 மில்லியன் வசதிகளுடன் சுவப்பிற்கள் நுழைந்தது. மொத்தமாக ரூ.794.486 மில்லியன் (2009இல் 754.824 மில்லியன்) கொண்ட தொகை சுவப் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 26. ஏனைய வருமானம்

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| பங்கிலாப வருமானம் - தொடர்புடையோர் | **-** | 25,163 |
| - ஏனையோர் | **7,582** | 863 |
| ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனையின் மீதான இலாபம் | **3,402** | (741) |
| நிதி, ஏனைய நிறுவனங்களின் முதலீடுகளை விற்பதன் மீதான இலாபம் | **39,304** | 103,143 |
| பிற்போடப்பட்ட கொடைகளின் கடன் தீர்ப்பனவு | **462** | 72 |
| பல்வகை வருமானம் | **774,931** | 415,717 |
| **மொத்த ஏனைய வருமானம்** | **825,681** | 544,217 |

## 27. ஆளணிச் செலவுகள்

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| தொழில்தருநரினால் செலுத்தப்பட்ட உழைப்பின் போது செலுத்தும் வரி உட்பட கூலிகளும் சம்பளங்களும் | **2,224,931** | 2,128,264 |
| குறித்துரைக்கப்பட்ட உதவுதொகைத் திட்டச் செலவுகள் | **305,487** | 276,101 |
| தொழில் நிலைக்குப் பிந்திய குறித்துரைக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் செலவு | **(262,190)** | - |
| **மொத்த ஆளணிச் செலவுகள்** | **2,268,228** | 2,404,365 |

## 28. நிர்வாகச் செலவுகள்

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| திருத்தங்களும் பேணல்களும் | **480,926** | 472,315 |
| தகவல் | **90,284** | 61,687 |
| தொழிற்பாட்டுப் பயணம் | **63,071** | 39,210 |
| வாடகைச் செலவுகள் | **919** | 717 |
| அச்சிடல் | **23,703** | 28,492 |
| கணக்காய்வுக் கட்டணம் - நடப்பு வருடம் | **10,071** | 7,700 |
| - முன்னைய வருடத்திற்கான குறை ஏற்பாடு | **4,206** | - |
| நாணயச் சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | **501** | 509 |
| பல்வகை | **481,495** | 302,677 |
| மொத்த ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | **1,155,182** | 913,307 |

## 29. வருமான வரி

2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் (திருத்தப்பட்ட) ஏற்பாடுகளின் பிரகாரம் பங்கிலாபம் அல்லது வட்டி செலுத்தப்படுகின்ற போது அல்லது வரவு வைக்கப்படுகின்ற போது 10 சதவீதம் தடுத்து வைத்தல் வரிக்கு உட்பட்டதாயிருக்கும். அரச பிணையங்களின் வட்டி வருமானத்தின் மீது தடுத்து வைத்தல் வரியானது, அண்மிய முதனிலை ஏலத்தின் எடையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் முதிர்ச்சித் திகதிக்குச் சீர்செய்யப்பட்ட அடிப்படையில் தீர்க்கப்படுகிறது.

இக் காலப்பகுதியில் ரூ.7,478.116 மில்லியன் கொண்ட வட்டி வருமானம் (2009 - ரூ.19,013.069 மில்லியன்) மற்றும் ரூ.7.582 மில்லியன் கொண்ட பங்கிலாப வருமானம் (2009 - ரூ.26.026 மில்லியன்) என்பனவற்றின் மீது செலுத்தப்பட வேண்டிய அத்தகைய பிடித்துவைத்தல் வரி தொடர்பான செலவு ரூ.795.779 மில்லியன் (2009 - ரூ.1,516.373 மில்லியன்) ஆகக் காணப்பட்டது. மேலும், வங்கி 2010இல் பொருளாதாரம் பணிக் கட்டணமாக ரூ.95.489 மில்லியனை (2009 - ரூ.120 மில்லியன்) செலுத்தியது.

## 30. தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு காசுப்பாய்ச்சலுடன் மீளிணைக்கப்படுதல்

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிவிக்கப்பட்ட தேறிய இலாபம்** | **11,743,953** | 33,638,649 |
| **கூட்டுக (கழிக்குக) காசல்லா விடயங்கள்** | | |
| தேய்மானம் | **278,453** | 295,759 |
| பெறப்பட்ட வட்டி - உள்ளூர் நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | **(5,517,540)** | (27,706,386) |
| மீள் பதியப்பட்ட அறவிடமுடியாக் கடன் | **(167,545)** | (44,945) |
| பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன்கள் | **1,108,000** | - |
| மொத்த பெறப்படாத வெளிநாட்டுச் செலாவணி (இலாபம்)/ நட்டம் | **6,508,504** | (8,168,560) |
| ஏனைய ஒதுக்குகள் | **323,525** | 23,042,373 |
| தள்ளி வைக்கப்பட்ட கொடைகள் | **(462)** | (72) |
| மீள் பதிவழிக்கப்பட்ட மெதுவாக அசையும் இருப்பிற்கான ஒதுக்கம் | - | (30,300) |
| **கூட்டுக (கழிக்குக) ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவு** | | |
| இருப்புக்களின் (அதிகரிப்பு)/ குறைப்பு | **(657,585)** | (165,213) |
| பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு) /குறைப்பு | **(2,394,579)** | (927,698) |
| பல்வகைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு/ (குறைப்பு) | **14,120** | (686,675) |
| அட்டுறு வட்டியில் அதிகரிப்பு/ (குறைப்பு) | **(172,344)** | 247,220 |
| ஏனைய பெறத்தக்கவற்றின் அதிகரிப்பு/ (குறைப்பு) | **(2,402,277)** | 67,373 |
| **கூட்டுக (கழிக்குக) முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| முதலீட்டிலிருந்தான வருமானம் | **11,695** | - |
| தேறிய பெறப்படாத சந்தைப் பெறமதி மாற்றங்கள் | **3,484,968** | 4,177,107 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | **12,160,887** | 23,738,632 |

### 31. அரச கொடுக்கல் வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணத்தின் வெளியீடு/ (புறக்கீடு)

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| முதலீட்டுச் சொத்துப்பட்டியலுக்காக இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு | **(21,279,060)** | (114,576,051) |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | **(7,191,222)** | (29,451,452) |
| இலங்கை அரசுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் அதிகரிப்பு/(குறைப்பு) | **3,998,323** | (2,427,200) |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் (அதிகரிப்பு)/ குறைப்பு | **(738,598)** | (1,102,085) |
| | **(25,210,557)** | (147,556,788) |

### 32. வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்/(புறக்கீடு செய்தல்)

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான ஊடான வைப்புக்கள் (அதிகரிப்பு)/ குறைப்பு | **(18,866,241)** | (4,149,819) |
| | **(18,866,241)** | (4,149,819) |

### 33. முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்** | | |
| ஏனைய வெளிநாட்டு வங்கிகளுடனான காசு நிலுவைகள் | **189,664,726** | 147,871,157 |
| **முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | **189,664,726** | 147,871,157 |

## 34. நிதியிடலின் திரட்சி

ஆண்டின் இறுதியில் வங்கியின் நிதியிடலின் திரட்சியானது பின்வருமாறு:

| 2010 திசெம்பர் 31இல் உள்ளவாறான | 2010 மொத்தம் ரூ.000 | இலங்கை அரசு ரூ.000 | இலங்கை பொதுமக்கள் ரூ.000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ.000 | பல்தேசிய நிதி நிறுவனங்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய தொகை | 3,127,136 | - | - | - | 387,905 | 2,739,231 |
| ஆசிய தீர்ப்பனவு நிறுவனத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை | 65,044,407 | - | - | - | 65,044,407 | - |
| ப.நா.நி.தொடர்புடைய பொறுப்புக்கள் | 275,420,837 | - | - | - | 275,420,837 | - |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 5,014,191 | - | - | 1,883,191 | 3,131,000 | - |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | **348,606,571** | **-** | **-** | **1,883,191** | **343,984,149** | **2,739,231** |
| **உள்நாட்டு நாணய நிதியப் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் வைப்புக்கள் | 104,853,445 | - | - | 104,853,445 | - | - |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் | 3,088,658 | 2,252,713 | 835,946 | - | - | - |
| இம வங்கியினால் வழங்கப்பட்ட உள்நாட்டுப் பிணையங்கள் | 95,054,891 | - | - | 95,054,891 | - | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 18,400,000 | - | - | 18,400,000 | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களுடனான நிலுவைகள் | 977,154 | | - | - | - | 977,154 |
| ஏனைய நிலுவைக் கொடுப்பனவுகள் | 27,779,723 | 8,148 | 1,175,758 | 182,000 | - | 26,413,816 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | **250,153,872** | **2,260,861** | **2,011,704** | **313,618,651** | **-** | **27,390,970** |
| **மொத்த நிதிப் பொறுப்புக்கள்** | **598,760,443** | **2,260,861** | **2,011,704** | **315,501,842** | **343,984,149** | **30,130,202** |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 255,652,217 | - | 255,652,218 | - | - | - |
| தள்ளி வைக்கப்பட்ட அளிப்புக்கள் | 4,605 | - | - | - | - | 4,605 |
| ஓய்வூதியம் மற்றும் தொழிலுக்குப் பின்னரான ஊழியர் நன்மைத் திட்டங்கள் | - | - | - | - | - | - |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் திரட்சிகள் | 74,381 | 8,943 | - | - | - | 65,439 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | **255,731,203** | **8,943** | **255,652,217** | **-** | **-** | **70,044** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **854,491,646** | **2,269,803** | **257,663,921** | **315,501,842** | **343,984,149** | **30,200,245** |

## 34. நிதியிடலின் திரட்சி (தொடர்ச்சி ....)

2009 திசெம்பர் 31இல் உள்ளவாறான ஒப்பீட்டுத் தொகைகள் பின்வருமாறு

| 2009 திசெம்பர் 31இல் உள்ளவாறான | மொத்தம் ரூ.000 | இலங்கை அரசு ரூ.000 | இலங்கை பொதுமக்கள் ரூ.000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ.000 | பல்தேசிய நிதி நிறுவனங்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய தொகை | 18,068,840 | - | - | - | 202,565 | 17,866,275 |
| ஆசிய தீர்ப்பனவு நிறுவனத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை | 29,836,531 | - | - | - | 29,836,531 | - |
| ப.நா.நி.தொடர்புடைய பொறுப்புக்கள் | 218,171,021 | - | - | - | 218,171,021 | - |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 5,008,036 | - | - | 1,842,775 | 3,165,261 | - |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | **271,084,428** | **-** | **-** | **1,842,775** | **251,375,378** | **17,866,275** |
| **உள்நாட்டு நாணய நிதியப் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதி நிறவனங்களின் வைப்புக்கள் | 86,085,866 | - | - | 86,082,390 | - | 3,476 |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் | 2,347,709 | 2,347,107 | 602 | - | - | - |
| இம வங்கியினால் வழங்கப்பட்ட உள்நாட்டுப் பிணையங்கள் | 78,022,645 | - | - | 78,022,645 | - | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 6,000,000 | - | - | 6,000,000 | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களுடனான நிலுவைகள் | 1,050,255 | - | - | - | - | 1,050,255 |
| ஏனைய நிலுவைக் கொடுப்பனவுகள் | 25,981,654 | 68,967 | - | 182,000 | - | 25,730,687 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | **199,488,129** | **2,416,074** | **602** | **170,287,035** | **-** | **26,784,418** |
| **மொத்த நிதிப் பொறுப்புக்கள்** | **470,572,557** | **2,416,074** | **602** | **172,129,810** | **251,375,378** | **44,650,693** |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 217,429,835 | - | 217,429,835 | - | - | - |
| தள்ளி வைக்கப்பட்ட அளிப்புக்கள் | 567 | - | - | - | - | 567 |
| ஓய்வூதியம் மற்றும் தொழிலுக்குப் பின்னரான ஊழியர் நன்மைத் திட்டங்கள் | - | - | - | - | - | - |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் திரட்சிகள் | 66,895 | 17,552 | - | - | - | 49,343 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | **217,497,297** | **17,552** | **217,429,835** | **-** | **-** | **49,910** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **688,069,854** | **2,433,626** | **217,430,437** | **172,129,810** | **251,375,378** | **44,700,603** |

## 35. இடர்நேர்வு முகாமைத்துவம்

நாட்டின் நாணய அதிகாரசபை என்ற வகையில், மத்திய வங்கியின் செயற்பாடுகள் கொள்கை சார்ந்தவையாகும். அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் போது, நிதி இடர்களையும் தொழிற்பாடு இடர்களையும் அவ்வாறே நற்பெயர் சார்ந்த இடர்களையும் வங்கி எதிர்நோக்குகின்றது. வங்கியின் முகாமைத்துவமானது இடர்நேர்வு படுநிலையை மதிப்பிட்டு, கண்காணித்து, முகாமைத்துவம் செய்வதற்காக உறுதியானதும் பயனுறுதியானதுமான இடர்முகாமைத்துவமும் கட்டுப்பாட்டு முறைகளும் இருப்பதை உறுதிப்படுத்துகிறது.

இறுதியில் இடர்களை அடையாளம் கண்டு கட்டுப்படுத்துவதில் நாணயச் சபை பொறுப்பு வாய்ந்ததாகும். பயனுறுதியான முகாமைத்துவமும் இடர் கட்டுப்பாடும் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக இந்தப் பணியை பல குழுக்களுக்கும் அலகுகளுக்கும்/ திணைக்களங்களுக்கும் சபை அளித்துள்ளது.

ஆளுநரின் தலைமையிலான, உயர்மட்ட இடர் முகாமைத்துவக் குழு அனைத்துப் பிரதி ஆளுநர்களையும் உதவி ஆளுநர்களையும் இடர் முகாமைத்துவத் தொழிற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட பிரதான திணைக்களங்களின் தலைவர்களையும் கொண்டுள்ளது. இடர் உபாயத்திட்டத்தை வகுத்தல் மற்றும் கோட்பாடுகள், சட்டகங்கள், கொள்கைகள் மற்றும் எல்லைகளை நடைமுறைப்படுத்தும் ஒட்டுமொத்தப் பொறுப்பை குழு கொண்டுள்ளது. ஏற்படக்கூடிய இடர்களை அடையாளம் கண்டு அத்தகைய இடர்களைக் குறைப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நுட்பங்கள் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அது பொறுப்பாகவுள்ளது. எல்லா அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளும் இருப்பதுடன் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, பத்திரமற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை, பொதுப் பேரேட்டு முறைமை மற்றும் திறைசேரி நடவடிக்கை அறை முகாமைத்துவ முறைமை போன்ற வங்கியினால் பயன்படுத்தப்படும் தன்னியக்க முறைமைகள் தொடர்பான இடர்கள் கட்டுப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் குழு நாடுகின்றது.

மத்திய வங்கி உள்ளாகக் கூடிய முக்கிய இடர்நேர்வுகளாக பிரதான நிதி இடர்கள் கடன் இடர்நேர்வு, வெளிநாட்டு நாணயமாற்று இடர்நேர்வு மற்றும் வட்டி வீத இடர்நேர்வு ஆகியவை விளங்குகின்றன. இந்த இடர்களின் கணிசமான ஒரு விகிதம் வங்கியின் வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவத்திலிருந்து எழுபவையாகும். வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலை முகாமைத்துவம் செய்கின்றது. பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் நடுநிலை அலுவலர் வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலுடன் தொடர்புடைய நிதி இடர்நேர்வின் கண்காணிப்புக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாவார்.

நாணயச் சபையினால் நியமிக்கப்படும் வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவக் குழு வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவத் தொழிற்பாடு பயனுறுதியாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்குரிய பொறுப்புமிக்கதாகும். இடர் முகாமைத்துவம் தொடர்பானவை அடங்கலாக எல்லாக் கொள்கை நடவடிக்கைகளும் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு பின்பற்றுவதற்காக நாணயச் சபைக்கு விதந்துரைக்கப்படுகின்றன. இடர் குறைப்புக் கொள்கைகளை உள்ளடக்கிய விரிவான வழிகாட்டல்களின் தொகுதி ஒதுக்க முகாமைத்துவத் தொழிற்பாட்டில் ஈடுபட்டுள்ள வணிகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

முதலீடுகளினதும் எதிர்த்தரப்புகளினதும் கடன் வீதங்களை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் கடன் இடர் முகாமைத்துவம் செய்வதற்கு எதிர்தரப்பு கடன் இடர் முகாமைத்துவ முறைமையொன்று பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்றது. வட்டி வீதத்தின் அசைவுகளுக்கு வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் படுநிலை பற்றிய வட்டி வீத இடர், பட்டியலின் காலப்பகுதியின் பொருத்தமான சீர்செய்தல்கள் ஊடாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. வெளிநாட்டுச் செலாவணி இடர் அல்லது செலாவணி வீதத்தில் தளம்பல்களின் விளைவாக உருவாகின்ற மூலதன இழப்புகள் பிரதானமாக முதலீட்டு நாணயங்களின் பல்வகைத் தன்மையூடாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. பயனுறுதியான வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டின் ஆற்றலைப் பேணுவதற்காக திரவத்தன்மை இடரைக் குறைக்கும் வெளிநாட்டு ஒதுக்கங்களை முகாமைத்துவம் செய்தல் பிரதான அக்கறையாகும். கடன்கள், வட்டி வீதம், வெளிநாட்டு நாணயம், திரவத்தன்மை இடர்கள் முறையே பிரிவுகள் 35.1 35.2, 35.3 மற்றும் 35.4 ஆகிய பிரிவுகளில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் வருடாந்தம் வங்கியின் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்படுகின்றன. நடவடிக்கை முறைகளின் போதுமானளவு, நடவடிக்கை முறைகளுக்கு வங்கிகள் இணங்கியொழுகுதல் ஆகியவற்றை இது பரிசீலிக்கின்றது. எல்லாத் திணைக்களங்களும் காலத்திற்குக் காலம் உள்ளகக் கணக்காய்வு மீளாய்வுக்கு உள்ளாகின்றன. முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் நேரடியாக ஆளுநருக்கு அறிக்கை செய்வதுடன் அதன் கண்டுபிடிப்புகளையும் விதப்புரைகளையும் கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கை செய்கின்றது.

நாணயச் சபை அங்கத்தவரின் தலைமையிலான கணக்காய்வுக் குழு, முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் கணக்காய்வு முன்னேற்பாடுகளையும் அதேபோன்று உள்ளகக் கணக்காய்வாளர்களையும் மேற்பார்வை செய்கின்றது. குழு உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளை மீளாய்வு செய்வதோடு வெளிவாரிக் கணக்காய்வுக்கான நேரடிப் பிரவேசத்தையும் கொண்டுள்ளது. பொதுமக்களுக்கு துல்லியமானதும் பொருத்தமானதும் நேரம் தவறாததுமான தகவல்களை வழங்கும் பொருட்டு பன்னாட்டு ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிதி அறிக்கையிடல் முறைமைக்கேற்ப முகாமை செய்யும் பொருட்டு நாணயச் சபைக்கு அறிவுரை வழங்குதலும் உதவுதலும் கணக்காய்வுக் குழுவின் முதன்மையான தொழிற்பாடாகவுள்ளது. குழு அதன் செயற்பாடுகளை ஒழுங்குமுறை அடிப்படையில் நாணயச் சபைக்கு அறிக்கையிடும்.

வங்கியானது நாணய விதிச் சட்டத்தின் 42 மற்றும் 43ஆம் பிரிவின்படி கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் நாயகம் நிதியறிக்கைகள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியுள்ளமையை உறுதி செய்வதற்கு பட்டயக் கணக்காளர் நிறுவனமான ஏர்னஸ்ட் அன்ட் யங் இன் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டது.

### 35.1 கடன் இடர்நேர்வு

(அ) வங்கியின் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான குறிப்பிடத்தக்க கடன் இடர்நேர்வுளின் திரட்சி புவியியல் பிரதேசங்களுக்கேற்ப (நாணயக் கூறுக்குரிய நாட்டை அடிப்படையாகக் கொண்டு) பின்வருமாறு:

**புவியியல் பிரதேசங்களுக்கேற்ப கடன் இடர்நேர்வுகளின் திரட்சி**

| | 2010<br>ரூபா 000 | 2009<br>ரூபா 000 |
|---|---|---|
| இலங்கை | **105,425,234** | 120,604,925 |
| ஐக்கிய அமெரிக்கா | **199,079,811** | 170,269,297 |
| யப்பான் | **36,511,236** | 15,189,710 |
| பிரித்தானியா | **116,077,064** | 70,101,508 |
| ஐரோப்பா | **129,946,840** | 102,520,720 |
| பல்தேசிய நிதி நிறுவனங்கள் | **138,080,144** | 170,433,627 |
| ஏனையவை | **180,369,145** | 69,913,170 |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | **905,489,474** | 719,032,957 |

(ஆ) **கடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் திரட்சி**

வங்கியின் ஆண்டு இறுதியில் குறிப்பிடத்தக்க கடன் இடர்நேர்வுகளின் திரட்சி நிறுவனங்களுக்கேற்ப பின்வருமாறு:

| | 2010 ரூபா 000 | 2009 ரூபா 000 |
|---|---|---|
| அரசு | **523,876,520** | 422,398,857 |
| பல்தேசிய நிதி நிறுவனங்கள் | **138,080,144** | 170,433,627 |
| வெளிநாட்டு வங்கிகளும் நிதி நிறுவனங்களும் | **238,824,368** | 124,737,773 |
| ஏனையவை | **4,708,442** | 1,462,700 |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | **905,489,474** | 719,032,957 |

**(இ) கடன்களைத் தரமிடுவதன் மூலம் கடன் இடர்நேர்வை அளவிடுதல்**

ஸ்டான்டர்ட் அன்ட் பூவர்ஸ், பிச் றேட்டிங் மற்றும் மூடிஸ் கடன் தரமிடல்களின் அடிப்படைக்கேற்ப குறிப்பிட்ட நிதிச் சொத்துக்களின் அல்லது வெளியீடுகளின் கடன் தரமிடல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. ஸ்டான்டர்ட் அன்ட் பூவர்ஸ் தரமிடல்களுக்கும் பிச் றேட்டிங் தரமிடல்களுக்கும் ஏற்ப AAA குறியீடுகள் அதியுயர் கடன் தரத்தினைக் கொண்ட தரமிடுதல்களையும் மிகக் குறைந்த கடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினையும் காட்டுகின்றது. நிதிக் கடப்பாடுகளை உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்யக்கூடிய சிறப்பான பலம் பொருந்திய நிலை உள்ளதென்பதை இது காட்டுகிறது. AA குறியீட்டின் மூலம் உயர் தரமிடுதல் காட்டப்படுவதோடு மிகக் குறைந்த கடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகின்றது. A குறியீட்டின் மூலம் உயர் மத்திய தரம் காட்டப்படுவதோடு குறைந்த கடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகிறது. BBB குறியீட்டின் மூலம் கீழ்மட்ட முதலீட்டுத் தரமிடுதலும் கடன் இடர்நேர்வு தொடர்பில் நடைமுறையில் குறைந்த எதிர்பார்ப்பு உள்ளதென்பதும் காட்டப்படுவதோடு, பாதுகாப்பு அளவீடுகளின் தேவையை வலியுறுத்துகிறது. AAA குறியீட்டுக்குக் குறைவான தரங்களை பிரதானமான வகைகளுக்கு இடையிலுள்ள நிலைகளைக் காட்டும் பொருட்டு + அல்லது - அடையாளத்தின் மூலம் வகைப்படுத்திக் காட்டலாம். NR குறியீட்டின் மூலம் நிறுவனம், ஸ்டான்டர்ட் அன்ட் பூவர்ஸ், பிச் றேட்டிங் மற்றும் மூடிஸ் தரமிடலுக்கு உள்ளாக்கப்படவில்லையென்பது காட்டப்பட்டுள்ளது.

**கடன் தரமிடல் மூலமாக கடன் இடர்நேர்வுகளுக்குள்ளான தன்மை**

| **காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | கடன் தரமிடல்கள் | 2010 ரூபா 000 | % | 2009 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ரிசர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி | | **54,443,540** | **6%** | 80,272,413 | 11% |
| | AAA | **28,293,015** | **3%** | 44,286,854 | 6% |
| | AA+ | **8,558,590** | **1%** | - | 0% |
| | AA | **39,473,242** | **4%** | 8,075,290 | 1% |
| | AA- | **51,998,269** | **6%** | 11,210,371 | 2% |
| | A-1+ | **5,870,267** | **1%** | 520,105 | 0% |
| | A-1 | **617,323** | **0%** | - | 0% |
| | NR | **410,480** | **0%** | 3,506,124 | 0% |
| | | **189,664,726** | **21%** | 147,871,157 | 21% |
| **வெளிநாட்டு நாணய விற்பனை/ விற்பனைக்குள்ள முதலீடுகள்** | | | | | |
| பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ ரிசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ யப்பான் வங்கி | | | **0%** | 8,477,892 | 1% |
| | AAA | **332,931,959** | **37%** | 95,928,452 | 13% |
| | AA+ | **2,759,132** | **0%** | 12,237,966 | 2% |
| | AA | **6,211,982** | **1%** | 7,182,081 | 1% |
| | AA- | **10,075,211** | **1%** | - | 0% |
| | A+ | **3,106,073** | **0%** | 2,288,878 | 0% |
| | A | **-** | **0%** | 1,806,969 | 0% |
| | A- | **8,243,605** | **1%** | 3,846,837 | 1% |
| | B- | **-** | **0%** | 1,676,346 | 0% |
| | NR | **167,337,454** | **18%** | 238,172,353 | 33% |
| | | **530,665,416** | **59%** | 371,617,774 | 52% |
| ப.நா.நி. தொடர்புடைய சொத்துக்கள் | AAA | **71,199,269** | **8%** | 76,509,781 | 11% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை** | | **8,450** | **0%** | 11,278 | 0% |
| பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ ரிசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ யப்பான் வங்கி | AAA | **3,038,586** | **0%** | 515,010 | 0% |
| | AA+ | **257** | | - | 0% |
| | AA | **8,835** | **0%** | 1,254 | 0% |
| | AA- | **3,938** | **0%** | 5,725 | 0% |
| | NR | **5,474,762** | **1%** | 1,896,053 | 0% |
| | | **8,534,828** | **1%** | 2,429,320 | 0% |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | **800,064,240** | | 592,458,032 | |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | B+ | **20,497,816** | **2%** | 43,450,557 | 7% |
| அரசுக்கான கடன்கள் | B+ | **77,878,823** | **9%** | 73,880,500 | 10% |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | NR | **2,459,846** | **0%** | 1,136,596 | 0% |
| ஏனைய உள்நாட்டு பெறத்தக்கவை | B+ | **464,971** | **0%** | 595,444 | 0% |
| | NR | **2,809,921** | **0%** | 43,855 | 0% |
| நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள் | NR | **41,236** | **0%** | 1,497,973 | 0% |
| ஏனைய சொத்துக்கள் | B+ | **1,272,621** | **0%** | - | 0% |
| | | **105,425,234** | **12%** | 120,604,925 | 17% |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | **905,489,474** | **100%** | 719,032,957 | 100% |

**(ஈ) பிரதானமான கடன் வகைகளின் சாராம்சம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசேர்வ் வங்கி, பன்னாட்டு தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி | | **54,451,990** | **6%** | 88,731,583 | 12% |
| ப.நா. நிதியம் தொடர்பான சொத்துக்கள் | | **71,199,269** | **8%** | 76,509,781 | 11% |
| | AAA | **364,263,560** | **40%** | 140,730,317 | 20% |
| | AA+/- | **119,089,455** | **13%** | 38,712,686 | 5% |
| | A+/- | **11,349,678** | **1%** | 8,462,789 | 1% |
| | A-/+/- | **6,487,590** | **1%** | - | 0% |
| | B- | **-** | **0%** | 1,676,346 | 0% |
| | NR | **173,222,698** | **19%** | 243,604,530 | 34% |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | **800,064,240** | **88%** | 598,428,032 | 100% |
| உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் | | | | | |
| | B+/- | **100,114,231** | **11%** | 119,079,030 | 17% |
| | NR | **5,311,003** | **1%** | 1,525,895 | 0% |
| மொத்த உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் | | **105,425,234** | **12%** | 120,604,925 | 17% |
| | | **905,489,474** | **100%** | 719,032,957 | 100% |
| மொத்த நிதிச் சொத்துக்கள் | | | | | |

## 35.2 வட்டி வீத இடர்நேர்வு

### (அ) வெளிநாட்டு நாணய வட்டி வீதக் கூருணர்திறன்

வட்டி வீத இடர்நேர்வு என்பது வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழுகின்ற இழப்புக்களின் இடர்நேர்வாகும்.

நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வட்டி வீத கூருணர் திறனானது, வட்டி வீதம் 10 அடிப்படைப்புள்ளிகளினால் அதிகரிப்பதன் காரணமாக உருவாகக் கூடிய இழப்புக்களின் அடிப்படையில் அளவிடப்படுவதோடு, கீழே தரப்பட்டுள்ள நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியல் கூறுகளைப் பயன்படுத்தி வங்கியானது இடர்நேர்வுக் கூருணர்திறனை அளவிடுகின்றது.

| பட்டியல் பிரிவு | நிகழக்கூடிய இழப்பு (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2010 | 2009 |
| பணச் சந்தை | **10.41** | 2.59 |
| விற்பனைக்குள்ளவை | **13.59** | 6.24 |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | **24.00** | 8.83 |

பின்வரும் உபாய முறைகளைப் பயன்படுத்தி பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம் மத்திய அலுவலகம் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வினை முகாமை செய்கின்றது:

(i) வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வட்டி வீத மாற்றங்களின் தாக்கத்தினை வட்டி வீத கூருணர்திறன் அளவிடுகின்ற அதேவேளை, வட்டி வீதத்தினையும் அதேநேரம் முதலீட்டுக் காலவரையறையையும் கவனத்திலெடுக்கின்றதான மாற்றப்பட்ட காலவரையறையை வட்டி வீத இடர்நேர்வினை அளவிடுவதற்காக இ.ம.வ. பயன்படுத்துகின்றது. வழங்கப்பட்டுள்ள வட்டி வீதத்திலான மாற்றத்தினை (விளைவினை) அளவிடும் பொருட்டு மாற்றப்பட்ட காலவரையறையானது பிணையங்களின் விலையிலான மாற்றத்தை அளவிடுகின்றது. உயர்ந்தளவு மாற்றப்பட்ட காலவரையறையானது உயர்ந்தளவு இடர்நேர்வினைக் குறிக்கின்றது. ஆதலால் வங்கியானது நிதிச் சந்தையிலான அபிவிருத்தி, பட்டியலின் பண்புகள் மற்றும் வங்கியின் இடர்நேர்வு விருப்பினைக் கவனத்திற் கொண்டு காலத்திற்குக் காலம் பொருத்தமான மாற்றப்பட்ட காலவரையறையை விதிக்கின்றது. பொதுவான நடைமுறையாக, மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கத்தின் உயர்ந்தபட்ச எல்லையை ஏறத்தாழ 2.5 (ஒட்டுமொத்தம்) ஆக குறித்துரைக்கின்றது. அதேநேரம் இது சந்தை நிலைமை மற்றும் மத்திய வங்கியின் இடர்நேர்வு விருப்பின் அடிப்படையில் கீழ் நோக்கியதாக மாற்றமடையலாம். வங்கியினால் விதிக்கப்படுகின்ற உயர்ந்தபட்ச எல்லையினுள் மாற்றப்பட்ட காலவரையறையைப் பேணி வருகின்ற அதேவேளை வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வும், காலவரையறை இடர்நேர்வும் கட்டுப்படுத்தப்படுகின்றன. உயர்ந்தபட்ச எல்லையுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்ற வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் மாற்றப்பட்ட காலவரையறை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| முதலீட்டுப் பிரிவு | மாற்றப்பட்ட காலவரையறை | |
|---|---|---|
| | 2010 31/12/2010 இல் உள்ளவாறு | 2009 31/12/2009 இல் உள்ளவாறு |
| பணச் சந்தை (நிலையான மற்றும் அழைப்பு வைப்புக்கள்) | **0.01** | 0.03 |
| மூலதனச் சந்தை (நிலையான வருமானப் பிணையங்கள்) | **4.96** | 2.87 |
| **ஒட்டுமொத்தம்** | **3.72** | 1.84 |

(ii) மாற்றப்பட்ட காலவரையானது விலையிலான அதிகளவு மாற்றத்தினைக் கணிப்பிடாததால், வெளிநாட்டு ஒதுக்குப் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வு அளவீடாக புறங்குவிவான அளவீடொன்று இடர்நேர்வு முகாமைத்துவதின் பொருட்டு பயன்படுத்தப்படுகின்றது. கால வரையறையை குறிக்கின் நேர்கோட்டிலிருந்து முறி விலை விளைவு வளையின் வேறுபாட்டினை புறக்குவிவு அளவிடுகின்றது. முறி வலையின் மாற்றத்திற்கான சராசரிக் காலவரையறையின் மேம்பாட்டினை இது அனுமதிக்கின்றது.

**கூறாக்கப்பட்ட நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் புறக்குவிவு**

| பட்டியல் கூறு | நிகழக்கூடிய இழப்பு (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2010 | 2009 |
| வர்த்தகம் | **0.51** | 0.5 |
| விற்பனைக்குள்ளவை | **0.31** | 0.11 |
| **மொத்தம்** | **0.38** | 0.17 |

**(ஆ) உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன்**

உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படும் கடன்களைக் குறிப்பதால் அவை இ.ம. வங்கியின் நிதி நிலைமை பற்றிய கூற்றில் கடன்தீர் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. வட்டி வருமானமொன்றை ஈட்டும் நோக்கத்துடன் வங்கி திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யாததால் இந்தப் பட்டியல் ஒரு முதலீட்டுப்பட்டியல் அல்ல. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் என்னும் அதன் மையக் கருப்பொருட்கள் தொடர்பாக நாணயத் தொழிற்பாட்டுக் கொள்கைகளை மேற்கொள்கையில் திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையில் ஏற்படுத்துவதற்காக அல்லது திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையிலிருந்து உள்ளீர்ப்பதற்காக வங்கி திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்கின்றது. அல்லது விற்பனை செய்கின்றது. ஆதலால், வங்கியின் பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்கள் அதன் நாணயச் கொள்கைத் தொழிற்பாடுகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன. அத்துடன், பணச் சந்தையில் வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் ஆகியவை வங்கியின்

நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது அதனால் நிர்ணயிக்கப்படும் கொள்கை வீதங்களாகும். மேலும், சந்தையிலிருந்து ரூபாய் திரவத்தன்மையை ஏற்படுத்துவதில் அல்லது திரவத்தன்மையை உள்ளீர்ப்பதில் வங்கியின் நடவடிக்கைகள் பொதுவான ரூபாய் சந்தை வட்டி வீதங்களில் கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளன. இதன்படி, வங்கியின் திறைசேரி உண்டியல்களின் பட்டியலில் இருந்தும் அவ்வாறே வட்டி வீதங்களின் மாற்றங்களிலிருந்தும் எழுகின்ற திறைசேரி உண்டியல் பட்டியலிலிருந்து ஈட்டப்படும் வட்டி வருமானத்தின் மாற்றங்கள் வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் விளைவாக உருவாவதேயன்றி முதலீட்டுத் தீர்மானங்கள் காரணமாக அல்ல. எனவே, வங்கியானது உள்நாட்டு நாணயச் சொத்துக்களிலிருந்து உருவாகின்ற வட்டி வீதக் கூருணர்திறனைக் கவனத்திற் கொள்வதில்லை.

**(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள் விலையிடப்படும்**

| வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் வீச்சிடை | நிறையேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2010 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 தொடக்கம் 12 மாதங்கள் ரூ.000 | 1 தொடக்கம் 2 ஆண்டுகள் ரூ.000 | 2 தொடக்கம் 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டி உணர் வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 0.25 | 189,664,726 | 189,664,726 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 2.86 | 530,665,416 | 21,235,923 | 39,281,454 | 56,457,478 | 127,798,550 | 285,892,011 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.32 | 273,070 | 273,070 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர் வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 720,603,212 | 211,173,720 | 39,281,454 | 56,457,478 | 127,798,550 | 285,892,011 |
| **வட்டி உணரப்படாத வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 70,926,199 | - | - | - | - | 70,926,199 |
| பெறத்தக்கவை | | 8,534,829 | 8,534,828 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணரப்படாத வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 79,461,028 | 8,534,828 | - | - | - | 70,926,199 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 800,064,240 | 219,708,548 | 39,281,454 | 56,457,478 | 127,798,550 | 356,818,210 |
| **வட்டி உணர் வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான பொறுப்புக்கள் | 0.02 | 145,410,048 | 655,843 | 655,843 | 6,314,221 | 137,784,141 | - |
| ஆசிய தீர்ப்பனவு நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டியவை | 0.21 | 65,044,407 | 65,044,407 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர் வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 210,454,455 | 65,700,250 | 655,843 | 6,314,221 | 137,784,141 | - |
| **வட்டி உணரப்படாத வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்புடைய பொறுப்புக்கள் | | 130,384,184 | 373,395 | - | - | - | 130,010,789 |
| வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தக வங்கி மூலதனம் | | 1,883,191 | - | - | - | - | 1,883,191 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 5,884,741 | 5,884,741 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணரப்படாத வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 138,152,116 | 6,258,136 | - | - | - | 131,893,980 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 348,606,571 | 71,958,386 | 655,843 | 6,314,221 | 137,784,141 | 131,893,980 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் வீச்சிடை** | | 510,148,758 | 145,473,470 | 38,625,610 | 50,143,257 | (9,985,590) | 285,892,011 |

**35.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)**

| உள்நாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் வீச்சிடை | நிறையேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2010 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 தொடக்கம் 12 மாதங்கள் ரூ.000 | 1 தொடக்கம் 2 ஆண்டுகள் ரூ.000 | 2 தொடக்கம் 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டி உணர் உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| முதலீட்டுப்பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள் | 7.28 | 20,497,816 | 7,113,152 | 13,384,664 | - | - | - |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | 6.49 | 2,459,846 | 280,955 | 168,590 | 255,725 | 1,754,576 | - |
| ஏனைய சொத்துக்கள் | 7.59 | 1,272,621 | 340,938 | 716,936 | 83,666 | 131,081 | - |
| **மொத்த வட்டி உணர் உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 24,230,283 | 7,735,044 | 14,270,189 | 339,392 | 1,885,657 | - |
| **வட்டி உணரப்படாத உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான கடன்கள் | | 77,878,823 | 77,878,823 | - | - | - | |
| பெறத்தக்கவை | | 3,274,892 | 2,809,921 | - | - | - | 464,971 |
| **விற்பனைக்குள்ள முதலீட்டுப் பங்குப் பிணைங்கள்** | | 41,236 | - | - | - | - | 41,236 |
| **மொத்த வட்டி உணரப்படாத உள்நாட்டு நாணய சொத்துக்கள்** | | 81,194,952 | 80,688,744 | - | - | - | 506,207 |
| **மொத்த உள்நாட்டு நாணயச் சொத்துக்கள்** | | 105,425,234 | 88,423,788 | 14,270,189 | 339,392 | 1,885,657 | 506,207 |
| வட்டி உணர் உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் | | | | | | | |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் மீது விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 7.25 | 18,400,000 | 18,400,000 | - | - | - | - |
| **மத்திய வங்கியால் வழங்கப்படட உள்நாட்டுப் பிணையங்கள்** | 7.25 | 95,054,891 | 95,054,891 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர் உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 113,454,891 | 113,454,891 | - | - | - | - |
| வட்டி உணரப்படாத உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள் | | | | | | | |
| வங்கிகள், நிதி நிறுவனங்களுடனான நிலுவைகள் | | 104,853,445 | 104,853,445 | - | - | - | - |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் | | 3,088,658 | 3,088,658 | - | - | - | - |
| **ஊழியர் நலத் திட்டங்களுடனான நிலுவைகள்** | | 977,154 | 107,454 | - | 869,700 | - | - |
| **ஏனைய செலுத்த வேண்டியவை** | | 27,779,723 | 27,779,723 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணரப்படாத உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | 136,698,980 | 135,829,280 | - | 869,700 | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 250,153,871 | 249,284,171 | - | 869,700 | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் வீச்சிடை** | | (89,224,608) | (105,719,846) | 14,270,189 | 339,392 | 1,885,657 | - |

## 35.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)

2009 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

| வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் வீச்சிடை | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2010 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 தொடக்கம் 12 மாதங்கள் ரூ.000 | 1 தொடக்கம் 2 ஆண்டுகள் ரூ.000 | 2 தொடக்கம் 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டி உணர் வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 1.07 | 147,871,157 | 147,871,157 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 2.24 | 371,617,775 | 28,448,309 | 19,141,034 | 111,328,788 | 149,534,851 | 63,182,854 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.24 | 10,836,493 | 10,836,493 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர் வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 530,325,425 | 187,155,959 | 19,141,034 | 111,328,788 | 149,534,851 | 63,182,854 |
| **வட்டி உணரப்படாத வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 65,673,289 | - | - | - | - | 65,673,289 |
| பெறத்தக்கவை | | 2,429,319 | 2,429,319 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணரப்படாத வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 68,102,608 | 2,429,319 | - | - | - | 65,673,289 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 598,428,033 | 189,585,278 | 19,141,034 | 111,328,788 | 149,534,851 | 128,856,143 |
| **வட்டி உணர் வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான பொறுப்புக்கள் | 0.08 | 82,201,426 | 3,301,811 | 685,903 | 1,371,805 | 76,841,907 | - |
| ஆசிய தீர்ப்பனவு நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டியவை | 0.14 | 29,836,531 | 29,836,531 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர் வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 112,037,957 | 33,138,342 | 685,903 | 1,371,805 | 76,841,907 | - |
| **வட்டி உணரப்படாத வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்புடைய பொறுப்புக்கள் | | 136,168,229 | 198,634 | - | - | - | 135,969,595 |
| வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தக வங்கி மூலதனம் | | 1,842,775 | - | - | - | - | 1,842,775 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 21,035,468 | 21,035,468 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணரப்படாத வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 159,046,472 | 21,234,102 | - | - | - | 137,812,370 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 271,084,429 | 54,372,444 | 685,903 | 1,371,805 | 76,841,907 | 137,812,370 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் வீச்சிடை** | | 418,287,468 | 154,017,617 | 18,455,131 | 109,956,983 | 72,692,944 | 63,182,854 |

**(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள் விலையிடப்படும் 2009 திசெம்பர் 31இல் உள்ளவாறான ஒப்பிடத்தக்க எண்தொகைகள் பின்வருமாறு:**

| **வட்டி வீத உணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2010 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 தொடக்கம் 12 மாதங்கள் ரூ.000 | 1 தொடக்கம் 2 ஆண்டுகள் ரூ.000 | 2 தொடக்கம் 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| முதலீட்டுப்பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள் | 11.24 | 43,450,557 | 32,626,178 | 10,824,379 | - | - | - |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | 3 | 1,136,596 | 197,541 | 194,393 | 292,541 | 452,121 | - |
| ஏனைய சொத்துக்கள் | 14.56 | 1,490,476 | 318,153 | 904,015 | 258,866 | 9,442 | - |
| **மொத்த வட்டி உணர் உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | 46,077,629 | 33,141,872 | 11,922,787 | 551,407 | 461,563 | - |
| **வட்டி உணரப்படாத உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான கடன்கள் | | 73,880,500 | 73,880,500 | - | - | - | - |
| பெறத்தக்கவை | | 595,444 | 345,444 | - | - | - | 250000 |
| விற்பனைக்குள்ள முதலீட்டுப் பங்குப் பிணையங்கள் | | 43,855 | 732 | - | - | - | 43,123 |
| **ஏனைய சொத்துக்கள்** | | 7,497 | 7,497 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணரப்படாத உள்நாட்டு நாணய சொத்துக்கள்** | | 74,527,296 | 74,234,173 | - | - | - | 293,123 |
| **மொத்த உள்நாட்டு நாணயச் சொத்துக்கள்** | | 120,604,925 | 107,376,045 | 11,922,787 | 551,407 | 461,563 | 293,123 |
| **வட்டி உணர் உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் மீது விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 8.65 | 6,000,000 | 6,000,000 | - | - | - | - |
| மத்திய வங்கியால் வழங்கப்பட்ட உள்நாட்டுப் பிணையங்கள் | 8.59 | 78,022,645 | 78,022,645 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணர் உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | 84,022,645 | 84,022,645 | - | - | - | - |
| **வட்டி உணரப்படாத உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதி நிறுவனங்களுடனான நிலுவைகள் | | 86,085,866 | 86,085,866 | - | - | - | - |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் | | 2,347,709 | 2,347,709 | - | - | - | - |
| **ஊழியர் நலத் திட்டங்களுடனான நிலுவைகள்** | | 1,050,255 | 1,050,255 | - | - | - | - |
| **ஏனைய வைப்புக்களும் செலுத்தப்பட வேண்டியவையும் மற்றும் ஏனைய பொறுப்புக்கள்** | | 25,981,654 | 25,981,654 | - | - | - | - |
| **மொத்த வட்டி உணரப்படாத உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | 115,465,484 | 115,465,484 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 199,488,129 | 199,488,129 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத உணர்திறன் வீச்சிடை** | | (37,945,016) | (50,880,773) | 11,922,787 | 551,407 | 461,563 | 293,123 |

## 35.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு

செலாவணி வீத மாற்றங்களிலிருந்து எழும் இழப்புக்களிலிருந்தான இடர்நேர்வு வெளிநாட்டு நாணய இடர்நேர்வாகும். வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் வைத்திருக்கப்படுகின்ற வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மூலமாக வெளிநாட்டு நாணய இடர்நேர்வுகள் உருவாகின்றன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மாற்றங்கள் உருவாகக்கூடிய போக்கின் காரணமாக வங்கியானது செலாவணி இடர்நேர்வுக்கு உள்ளாவதற்கான வாய்ப்பு உள்ளது. நாணயச் சபையினாலும் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவினாலும் வங்கியின் பன்னாட்டு ஒதுக்கங்களில் பல்வேறு நாணய வகைகளும் வைத்திருக்கப்பட வேண்டிய வீதத் தொகைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

நாணயங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது அரச கடன்களை மீளச் செலுத்துவதன் தேவைப்பாடு தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கிணங்க வங்கியானது பிரதானமான நாணய வகைகள் பலவற்றை, அதாவது ஐக்கிய அமெரிக்கா டொலர், ஸ்டேர்லிங் பவுண், அவுஸ்திரேலிய டொலர், யப்பான் யென், யூரோ ஆகியவற்றை வைத்திருக்கின்றது. வெளிநாட்டு நாணயங்களின் நிலைமைகள் வரையறுக்கப்பட்ட எல்லைகளை அடைகின்ற போது கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது.

**வெளிநாட்டு நணயங்களுக்கான தேறிய வெளிப்படுத்துகை**

2010 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய வெளிப்படுத்துகைகள் பின்வருமாறு

**நாணய இன வகைகள்**

| 2010 திசெம்பர் 31இல் உள்ளவாறு | ஐ. அமெரிக்க டொலர் ரூ.000 | யூரோ ரூ.000 | யப்பானிய யென் ரூ.000 | பிரித்தானிய பவுண் ரூ.000 | சிஎஉ ரூ.000 | அவுஸ்திரேலிய டொலர் ரூ.000 | ஏனைய நாணயங்கள் ரூ.000 | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 110,943,443 | 18,181,304 | 27,168,738 | 31,237,633 | - | 1,283,105 | 850,504 | 189,664,726 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 227,595,072 | 84,105,234 | 8,223,203 | 116,674,396 | - | 92,352,204 | 1,715,307 | 530,665,416 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 71,199,269 | - | - | 71,199,269 |
| ஏனைய வெளிநாட்டுப் பெறத்தக்கவை | 14,962 | 6,831,798 | 1,643,522 | 952 | 2,119 | 41,474 | - | 8,534,828 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | 338,553,477 | 109,118,335 | 37,035,463 | 147,912,981 | 71,201,388 | 93,676,783 | 2,565,811 | 800,064,240 |
| விகிதம் | 42% | 14% | 5% | 18% | 9% | 12% | 0% | 100% |
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | | |
| வங்கிகளுக்கும் நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டிய தொகைகள் | 153,115 | 1,504,401 | 1,094,297 | 340 | 373,395 | 1,588 | - | 3,127,136 |
| ஆசிய தீர்ப்பனவு நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய தொகை | 66,151,121 | (1,106,714) | - | - | - | - | - | 65,044,407 |
| ப.நா.நி. தொடர்புடைய பொறுப்புக்கள் | - | - | - | - | 275,420,837 | - | - | 275,420,837 |
| ஏனைய வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் | 5,014,191 | - | - | - | - | - | - | 5,014,191 |
| **மொத்த வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | 71,318,427 | 397,687 | 1,094,297 | 340 | 275,794,232 | 1,588 | - | 348,606,570 |
| விகிதம் | 20% | 0% | 0% | 0% | 79% | 0% | 0% | 100% |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வு** | 267,235,050 | 108,720,649 | 35,941,166 | 147,912,641 | (204,592,843) | 93,675,195 | 2,565,811 | 451,457,670 |

## 35.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு (தொடர்ச்சி)

திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய வெளிப்படுத்துகைகள் பின்வருமாறு

**நாணய இன வகைகள்**

| 2010 திசெம்பர் 31இல் உள்ளவாறு | ஐ. அமெரிக்க டொலர் ரூ.000 | யூரோ ரூ.000 | யப்பானிய யென் ரூ.000 | பிரித்தானிய பவுண் ரூ.000 | சிஎஉ ரூ.000 | அவுஸ்தி ரேலிய டொலர் ரூ.000 | ஏனைய நாணயங்கள் ரூ.000 | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 38,674,007 | 40,395,988 | 10,595,236 | 18,494,893 | - | 47,649,480 | (7,938,448) | 147,871,157 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 195,445,909 | 44,145,531 | 9,203,770 | 73,788,798 | | 49,033,768 | - | 371,617,776 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 76,509,781 | - | - | 76,509,781 |
| ஏனைய வெளிநாட்டுப் பெறத்தக்கவை | 169 | 4,607 | - | 1,898,236 | 1,840 | 500,536 | 23,932 | 2,429,320 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | 234,120,085 | 84,546,126 | 19,799,006 | 94,181,927 | 76,511,621 | 97,183,784 | (7,914,516) | 598,428,034 |
| விகிதம் | 39% | 14% | 3% | 16% | 13% | 16% | -1% | 100% |
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | | |
| வங்கிகளுக்கும் நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டிய தொகைகள் | 3,325,965 | 83 | 1,245,353 | 3,691,032 | 198,634 | 12,773,034 | - | 21,234,101 |
| ஆசிய தீர்ப்பனவு நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய தொகை | 29,705,557 | 130,975 | - | - | - | - | - | 29,836,532 |
| ப.நா.நி. தொடர்புடைய பொறுப்புக்கள் | - | - | - | - | 218,171,021 | - | - | 218,171,021 |
| ஏனைய வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் | 1,842,775 | - | - | - | - | - | - | 1,842,775 |
| **மொத்த வெளிநாட்டு நாணப் பொறுப்புக்கள்** | 34,874,297 | 131,058 | 1,245,353 | 3,691,032 | 218,369,655 | 12,773,034 | - | 271,084,429 |
| விகிதம் | 13% | 0% | 0% | 1% | 81% | 5% | 0% | 100% |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வு** | 199,245,788 | 84,415,068 | 18,553,653 | 90,490,895 | (141,858,034) | 84,410,750 | (7,914,516) | 327,343,605 |

## 35.4 திரவத்தன்மை இடர்றேர்வு

நிதிக் கருவிகளுக்கான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியங்களைக் குறுகிய கால அறிவித்தலின் மீது பெற்றுக் கொள்கின்ற போது நிறுவனமொன்று முகம் கொடுக்கின்ற நிலைமை திரவத்தன்மை இடர்நேர்வாகும். நிறுவனம் தனது நிதிச் சொத்துக்களை விரைவாக, நியாயமான பெறுமதியை விடக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டி நேரிடுவதும் திரவத்தன்மை இடர்நேர்வொன்றாகும்.

(அ) வங்கியின் வெளிநாட்டு நாணய உள்ளமைப்பைத் தீர்மானிக்கின்ற போது முக்கியமாக திரவத்தன்மை தொடர்பாகவே கவனம் செலுத்தப்படுகிறது. தேவையான சந்தர்ப்பங்களில் தலையீடு செய்கின்ற போது மற்றும் அரச கடன்கள் மற்றும் ப.நா.நி. கடன்களை மீளச் செலுத்துதல் போன்ற கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக வெளிநாட்டு ஒதுக்கங்களை ஒழிக்கின்ற போது இது ஒரு உள்ளார்ந்த தேவைப்பாடாகும். நிதியங்களை விரைவாக அடைவதை உறுதி செய்து கொள்ளும்

நோக்கத்துடன் வங்கியானது பின்வரும் அளவீடுகளை மேற்கொள்கிறது.

- தடுத்து வைக்கப்பட்டுள்ள பிணையங்களின் திரவத்தன்மை இயல்புகளை அடிப்படையாகக் கொண்ட திரவத்தன்மைச் சொத்து வீதங்கள்.
- ஒவ்வொரு நாணய வகையிலும் தடுத்து வைத்திருக்கக்கூடிய ஒதுக்கங்களின் உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச விதிதாசார எல்லைகள்.

**சந்தைப் பெறுமதியும் எடுத்துச் செல்லப்படும் தொகையும்**

| | எடுத்துச் செல்லப்படும் தொகை | | சந்தைப் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | 2010 | 2009 | 2010 | 2009 |
| **சந்தைப் பெறுமதி** | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 189,664,726 | 147,871,157 | 189,664,726 | 147,871,157 |
| வெளிநாட்டு நாணய வர்த்தகம்/ விற்பனைக்கான பிணையங்கள் | 530,665,416 | 371,617,775 | 530,665,416 | 371,617,775 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 71,199,269 | 76,509,781 | 71,199,269 | 76,509,781 |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | 8,534,829 | 2,429,319 | 8,534,829 | 2,429,319 |
| | 800,064,240 | 598,428,032 | 800,064,240 | 598,428,032 |
| இலங்கை அரச பிணையங்கள் | 20,497,816 | 43,450,557 | 20,497,816 | 43,450,557 |
| அரசுக்கான கடன்கள் | 77,878,823 | 73,880,500 | 77,878,823 | 73,880,500 |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | 2,459,846 | 1,136,596 | 2,459,846 | 1,136,596 |
| உள்நாட்டில் பெறத்தக்க மற்றையவை | 3,274,892 | 595,444 | 3,274,892 | 595,444 |
| நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள் | 41,236 | 43,855 | 41,236 | 43,855 |
| ஏனைய சொத்துக்கள் | 1,272,621 | 1,497,973 | 1,272,621 | 1,497,973 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | 905,489,474 | 719,032,957 | 905,489,474 | 719,032,957 |
| **தங்கத்தினாலான முதலீடுகள்** | | | | |
| **தங்கத்தினாலான முதலீடுகள்** | 54,007,207 | 84,834,269 | 54,007,207 | 84,834,269 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | 54,007,207 | 84,834,269 | 54,007,207 | 84,834,269 |
| **நிதிப் பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குச்செலுத்தப்பட வேண்டிய தொகைகள் | 3,127,136 | 18,068,841 | 3,127,136 | 18,068,841 |
| ப.நா.நி. தொடர்பான பொறுப்புக்கள் | 275,420,837 | 218,171,021 | 275,420,837 | 218,171,021 |
| **ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தினால் செலுத்தப்பட வேண்டிய தொகை** | 65,044,407 | 29,836,531 | 65,044,407 | 29,836,531 |
| **ஏனைய வெளிநாட்டு செலுத்தத்தக்கவை** | 5,014,191 | 5,008,035 | 5,014,191 | 5,008,035 |
| | 348,606,571 | 271,084,428 | 348,606,571 | 271,084,428 |
| வர்த்தக வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் | 104,853,445 | 86,085,866 | 104,853,445 | 86,085,866 |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகள் | 3,088,659 | 2,347,709 | 3,088,659 | 2,347,709 |
| **மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்** | 113,454,891 | 84,022,645 | 113,454,891 | 84,022,645 |
| **ஊழியர் நலத் திட்டங்களுடனான நிலுவைகள்** | 977,154 | 1,060,438 | 977,154 | 1,060,438 |
| **ஏனைய செலுத்தத்தக்கவை** | 27,779,723 | 25,981,654 | 27,779,723 | 25,981,654 |
| **மொத்த நிதிப் பெறுப்புக்கள்** | 598,760,443 | 470,582,740 | 598,760,443 | 470,582,740 |

(ஆ) உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் போது, குறிப்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் போது உருவாகின்ற திரவத்தன்மை இடர்நேர்வு மட்டத்தைக் குறிக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற சந்தைப்படுத்தக்கூடிய அதிக திரவத்தன்மையுடனான கருவிகளை மேலதிகப் பிணையங்களாகப் பயன்படுத்துகிறது. வங்கியானது, முறைமையினுள் மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு, மத்திய வங்கிப் பிணையங்கள் மற்றும் ஐ.அ./ ரூபாப் பிணையங்கள் போன்ற நிதிக் கருவிகளைப் பயன்படுத்தி நிதியங்களை உட்செலுத்துவதன் மூலம் அல்லது அதிலிருந்து மீளப் பெறுவதன் மூலம் வங்கி முறைமையின் நாளாந்த திரவத்தன்மை நிலையைக் கட்டுப்படுத்துகிறது.

**36. ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நலவுரிமைத் திட்டங்களும்**

அனைத்து ஊழியர்களும் உள்ளடங்கக் கூடியவாறான திட்டவட்டமான ஐந்து நலவுரிமைத் திட்டங்கள் வங்கியினால் தொழிற்படுத்தப்படுகின்றது. ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு முன்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். ஊழியர் ஓய்வூதியத் திட்டமாக உள்ளதுடன் இதன் நன்மைக் கிரயச் செலவுகளை முழுமையாகவே வங்கி ஏற்கின்றது. ஆண் ஊழியர்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் பெண் ஊழியர்களுக்கான விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் 1998 சனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் சேவைக்குச் சேர்ந்த ஊழியர்களுக்குத் திறந்ததாயுள்ளது. இத் திட்டத்திற்குத் தகுதி பெற்ற 1994.08.01இற்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத் தொகையொன்றைப் பங்களிப்புச் செய்வதுடன் 1994.08.01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தினை பங்களிப்புச் செலுத்துவர்.

வங்கியில் ஐந்து ஆண்டு கால சேவையைப் பூர்த்தி செய்தவர்களான, ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறத் தகுதி பெறாத ஊழியர்களுக்காக பணிக் கொடை நன்மைகள் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இப் பொறுப்புக்கான ஏற்பாடுகளாக, ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட, அதற்குச் சமமானதொரு தொகை நிதி நிலைமைகள் பற்றிய கூற்றில் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

ஊழியர் நிலைக்குப் பிந்திய மருத்துவ நலத் திட்டத்தின் கீழ், ஓய்வு பெற்ற ஊழியர்களால் அவர்கள் பெயரில் அல்லது அவர்களது துணைவர் பெயரில் மற்றும் ஊழியர்களது விதவைகள்/ விதுரர்களாலும் ஏற்கப்படுகின்ற ஒரு சில மருத்துவச் செலவுகள் மீளளிக்கப்படுகின்றன.

ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் பணிக் கொடைகள் திட்டத்தின் மற்றும் மருத்துவ நலத் திட்டத்தின் திட்டவட்டமான நன்மைகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நடைமுறைச் சேவை கிரயச் செலவுகள் தொடர்பான ஆயுட்கால மதிப்பீட்டைச் செய்வதற்காக சுயாதீனமான ஆயுட்கால மதிப்பீட்டாளரான திரு. கே.ஏ.பன்டிற், ஆலோசகர் மற்றும் ஆயுட்கால மதிப்பீட்டாளர் (மும்பாய்) ஆண்டினுள் சேவையின் பொருட்டு வங்கியினால் அமர்த்தப்பட்டார்.

ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் நிதியத்தில், விதவைகள் விதுரர்கள் ஓய்வூதியத்திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் என்பன தனித்தனியாக முகாமைப்படுத்தப்படுவதுடன் தனித்தனியாக ஏடுகளும் பேணப்படுகின்றன. எனினும், வெகுமதிக்கொடுப்பனவுத் திட்டமும் மருத்துவ நன்மைகள் திட்டமும் வங்கியின் கணக்கேடுகளிலிருந்து வேறாக்கப்படவில்லை. மேலும் முதலீடுகளும் முதலீட்டு வருமானமும் வங்கி ஏடுகளில் இந்நிதியத்திற்காக தனித்தனியாக பதிவு செய்யப்படுகின்றதுடன், முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் பங்கிடப்படாமல் மீள முதலிடப்படுகின்றன.

உரிய திட்டங்களுக்கான ஆயுட்கால மதிப்பீடாக நடைமுறைச் சேவைச் செலவு, வட்டிச் செலவு, திட்டச் சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட தேறிய வருமானம், உண்மையான இலாபம்/ (நட்டங்கள்) மற்றும் இடைக்காலத் திருத்தங்களும் வரையறுக்கப்பட்ட நன்மைகள் கடப்பாடுகளும் தொடர்பாக வங்கியினால் வருமானக் கூற்றில் காட்டப்பட்ட தேறிய நன்மைகள் செலவுத் தொகையின் ஆக்கக் கூறுகளைப் பின்வரும் அட்டவணை சுருக்கமாகத் தருகின்றது.

அறிக்கையிடல் காலகட்டத்தின் இறுதியிலுள்ளவாறான, அனைத்து நலவுரிமைக் கடப்பாடுகளினதும் நடைமுறைப் பெறுமதியான ரூ.23,795.334 மில்லியனை (2009 - ரூ.22,484.718 மில்லியன்) விட திட்டச் செலவுகளின் நியாயப் பெறுமதியான ரூ.26,012.196 மில்லியன் (2009 - ரூ.23,331.568 மில்லியனானது ரூ.2,216.862 மில்லியனால் (2009 - ரூ.846.850 மில்லியன்) அதிகரித்துள்ளது.

| **2010 நலவுரிமைப் பொறுப்புக்கள்/ (சொத்துக்கள்)** | **ஊழியர் ஓய்வூதியத் திட்டம்**<br>**ரூ.000** | **விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்**<br>**ரூ.000** | **விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்**<br>**ரூ.000** | **பணிக் கொடைத் திட்டம்**<br>**ரூ.000** | **மருத்துவ நலன்கள்**<br>**ரூ.000** | **மொத்தம் 2010**<br>**ரூ.000** |
|---|---|---|---|---|---|---|
| நலவுரிமைக் கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதி | 19,536,003 | 2,665,510 | 500,571 | 61,781 | 1,031,469 | 23,795,334 |
| திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | (18,501,515) | (4,793,392) | (1,444,366) | (51,325) | (1,221,598) | (26,012,196) |
| இனங்காணப்படாத தேறிய ஆயுட் தொகை இலாபம்/ (நட்டம்) | (551,240) | 1,222,558 | 601,330 | 8,569 | 65,945 | 1,347,162 |
| **நடைமுறையற்ற நலவுரிமைப் பொறுப்புக்கள்/ (சொத்துக்கள்)** | 483,248 | (905,324) | (342,465) | 19,025 | (124,184) | (869,700) |

**36. ஓய்வூதியமும் தொழில் நிலைக்குப் பின்னரான ஏனைய நலவுரிமைத் திட்டங்களும் (தொடர்ச்சி)**

| நலவுரிமை பொறுப்புக்கள்/ (சொத்துக்களின்) அசைவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் ரூ.000 | மொத்தம் 2010 ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| 2010 சனவரி 01இல் உள்ளவாறு | 482,363 | (512,892) | (154,316) | 6,618 | (115,250) | (293,477) |
| நலவுரிமைகளுக்கான செலவு | 324,168 | (372,329) | (179,327) | 12,407 | (8,934) | (224,015) |
| செலுத்தப்படட பங்களிப்பு | (323,283) | (20,103) | (8,822) | - | - | (352,208) |
| **2010 திசெம்பர் 31இல் உள்ளவாறான நடைமுறையல்லாத** | 483,248 | (905,324) | (342,465) | 19,025 | (124,184) | (869,700) |
| **நலவுரிமைகளுக்கான செலவுகள்** | | | | | | |
| நலவுரிமைக் கடப்பாடுகளின் மீது வட்டிச் செலவினம் | 1,851,102 | 252,315 | 47,391 | 4,851 | 92,814 | 2,248,473 |
| திட்டச் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் வருவாய் | (1,658,096) | (427,438) | (127,246) | (4,567) | (115,810) | (2,333,157) |
| ஆண்டினுள் இனங்காணப்பட்ட தேறிய பதிவு தொகை (இலாபம்)/ நட்டம் | - | (197,206) | (99,472) | - | (2,738) | (299,416) |
| நிலைமாறுகால சீர்செய்தல்கள் | - | - | - | - | - | - |
| தேறிய நடைமுறைச் சேவைச் செலவினங்கள் | 131,162 | - | - | 12,123 | 16,800 | 160,085 |
| கடந்த காலப் பணிச் செலவுகள் | - | - | - | - | - | |
| **தேறிய நலவுரிமைகளுக்கான செலவுகள்** | 324,168 | (372,329) | (179,327) | 12,407 | (8,934) | (224,015) |
| **திட்டமிடப்பட்ட சொத்தின் உண்மையான வருவாய்** | 2,492,358 | 667,371 | 175,787 | 9,112 | 164,987 | 3,509,615 |
| **திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள்** | | | | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | 16,580,964 | 4,274,380 | 1,272,456 | 45,669 | 1,158,099 | 23,331,568 |
| திட்டச் சொத்துக்களின் உண்மை வருவாய் | 2,492,358 | 667,371 | 175,787 | 9,112 | 164,987 | 3,509,615 |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | 323,283 | 20,103 | 8,822 | - | - | 352,208 |
| செலுத்தப்பட்ட நலவரிமைகள் | (895,090) | (168,462) | (12,699) | (3,456) | (101,488) | (1,181,195) |
| ஆண்டின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | 18,501,515 | 4,793,392 | 1,444,366 | 51,325 | 1,221,598 | 26,012,196 |
| **நலவுரிமைப் பொறுப்புக்கள்** | | | | | | |
| நலவுரிமைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி | 18,511,015 | 2,523,147 | 473,914 | 48,507 | 928,135 | 22,484,718 |
| திட்டச் சொத்துக்களின் சந்தைப்பெறுமதி | (16,580,964) | (4,274,381) | (1,272,455) | (45,669) | (1,158,099) | (23,331,568) |
| இனங்காணப்படாத தேறிய பதிவு தொகை இலாபம்/ (இழப்பு) | (1,447,688) | 1,238,342 | 644,226 | 3,781 | 114,714 | 553,374 |
| இனங்காணப்படாத நிலைமாறுகால பொறுப்புக்கள் | - | - | - | - | - | - |
| **நலவுரிமைப் பொறுப்புக்கள்/ (சொத்துக்கள்) நடைமுறையல்லாத** | 482,363 | (512,892) | 154,316) | 6,618 | (115,250) | (293,476) |
| **நலவுரிமைப் பெறுப்புக்களின் அசைவு** | | | | | | |
| 2009 சனவரி 01இல் உள்ளவாறான | 1,380,171 | (207,397) | (55,998) | (4,051) | (86,028) | 1,026,697 |
| நலவுரிமைகளுக்கான செலவு | 316,319 | 39,368 | 23,848 | 10,669 | (29,222) | 360,983 |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (1,214,127) | (344,863) | (122,165) | - | - | (1,681,156) |
| **2009 திசெம்பர் 31இல் உள்ளவாறான நடைமுறையல்லாத** | 482,363 | (512,892) | (154,316) | 6,618 | (115,250) | (293,476) |

## 36. ஓய்வூதியமும் தொழில் நிலைக்குப் பின்னரான ஏனைய நலவுரிமைத் திட்டங்களும் (தொடர்ச்சி)

| நலவுரிமைகளுக்கான செலவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் ரூ.000 | மொத்தம் 2010 ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| நலவுரிமைக் கடப்பாடுகளின் மீது வட்டிச் செலவினம் | 1,584,768 | 364,307 | 111,064 | 4,319 | 86,616 | 2,151,074 |
| திட்டச் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் வருவாய் | (1,392,879) | (340,724) | (98,679) | (5,055) | (110,615) | (1,947,952) |
| ஆண்டினுள் இனங்காணப்பட்ட தேறிய பதிவு தொகை (இலாபம்)/ நட்டம் | - | 15,785 | 11,463 | - | (8,418) | 18,830 |
| நிலைமாறுகால சீர்செய்தல்கள் | - | - | - | - | - | - |
| தேறிய நடைமுறைச் சேவைச் செலவினங்கள் | 124,430 | - | - | 11,405 | 3,195 | 139,030 |
| கடந்தகால சேவைச் செலவினங்கள் | - | - | - | - | - | - |
| **தேறிய நலவுரிமைகளுக்கான செலவுகள்** | 316,319 | 39,368 | 23,848 | 10,669 | (29,222) | 360,983 |
| **திட்டச் செலவுகள் மீதான உண்மையான வருவாய்** | 2,339,910 | 674,626 | 174,043 | 4,655 | 133,656 | 3,326,889 |
| **திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள்** | | | | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | 13,928,786 | 3,407,239 | 986,792 | 50,552 | 1,106,147 | 19,479,516 |
| திட்டச் சொத்துக்களின் உண்மை வருவாய் | 2,339,910 | 674,626 | 174,043 | 4,655 | 133,656 | 3,326,889 |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | 1,214,127 | 344,863 | 122,165 | - | - | 1,681,156 |
| செலுத்தப்பட்ட நலவுரிமைகள் | (901,859) | (152,348) | (10,544) | (9,538) | (81,704) | (1,155,993) |
| **ஆண்டின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி** | 16,580,964 | 4,274,381 | 1,272,455 | 45,669 | 1,158,099 | 23,331,568 |

அனைத்துத் திட்டங்களுக்குமான ஊழியர் நலவுரிமைகளின் கடப்பாடுகளைத் தீர்மானிக்கின்ற போது பயன்படுத்தப்பட்ட முக்கியமான எடுகோள்கள் பின்வருமாறு

| | 2010 | 2009 |
|---|---|---|
| கழிவு வீதம் | **10.00%** | 10.00% |
| சொத்துக்களின் மீதான எதிர்பார்க்கப்பட்ட விளைவு வீதம் | **10.00%** | 10.00% |
| எதிர்காலச் சம்பள அதிகரிப்பு | **8.50%** | 8.50% |
| எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு | **7.50%** | 7.50% |
| எஞ்சியுள்ள சராசரி சேவை ஆண்டுகள் | | |
| இ.ம. வங்கி ஓய்வூதியம் | **2 ஆண்டுகள்** | 2 ஆண்டுகள் |
| விதவை அனாதை ஓய்வூதியத் திட்டம் | **4 ஆண்டுகள்** | 5 ஆண்டுகள் |
| விதுரர் அநாதை ஓய்வூதியத் திட்டம் | **5 ஆண்டுகள்** | 6 ஆண்டுகள் |
| பணிக் கொடைத் திட்டம் | **14 ஆண்டுகள்** | 15 ஆண்டுகள் |
| இ.ம. வங்கி மருத்துவ நலத் திட்டம் | **8 ஆண்டுகள்** | 8 ஆண்டுகள் |
| ஓய்வுபெறும் வயது | **60 ஆண்டுகள்** | 60 ஆண்டுகள் |

## 37. நிதிக் கருவிகள்

### நிதிக் கருவிகளின் சந்தைப் பெறுமதி

நிதிக் கருவிகளின் சந்தைப் பெறுமதி என்பது புரிந்துணர்வும் விருப்பமுமுள்ள தரப்பினர்களிடையே நடைபெறுகின்ற நெருங்கிய கொடுக்கல்வாங்கலின் போது, சொத்தொன்றைப் பரிமாறிக் கொள்வதற்கு அல்லது பொறுப்பொன்றைத் தீர்த்து வைப்பதற்கு ஏற்புடைத்தான பணத் தொகைகளாகும். நிதிக் கருவியொன்றை விற்பனை செய்பவருக்கு எதிராக விலை அசைவொன்று ஏற்படாத விதத்தில் குறிப்பிடத்தக்கதொரு கொடுக்கல்வாங்கலை உள்ளீர்த்துக் கொள்ள முடியுமானவாறு ஒழுங்கமையப் பெற்றதும் திரவத் தன்மையுடன் கூடியதுமான சந்தையில் நிதிக் கருவியை விற்பனை செய்கின்ற போது அதன் குறிப்பிடப்பட்டுள்ள சந்தைப் பெறுமதி நியாயப் பெறுமதியாகும்.

### நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

ஏனைய அனைத்து நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் வங்கியின் கணக்கீட்டுக் கொள்கைகளில் விளக்கப்பட்டுள்ளவாறு, கீழே விளக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர, குறிக்கப்பட்டுள்ள சந்தை விலை அல்லது சந்தை விளைவு வளையியின்படி மதிப்பிடுகின்றன.

### மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்

உடன்படிக்கைகளின் குறுகிய கால இயல்பின் காரணமாக அண்மிய நியாயப் பெறுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் அறிக்கையிடப்பட்ட பெறுமதி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. 2010 திசெம்பர் 31இல் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் எடுத்துச் செல்லப்பட்ட பெறுமதி ரூ.18,400 மில்லியன் (2009 - ரூ.6,000 மில்லியன்) மற்றும் இ.ம. வங்கிப் பிணையங்கள் ரூ.95,054.891 மில்லியனாக (2009 - ரூ.78,002.645 மில்லியன்) இருந்தது.

### சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் பெறுமதியானது, நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு அவற்றின் முகப்புப் பெறுமதியாகக் கருதப்படுகிறது.

**வைப்புக்கள்**

கோரப்படுகின்ற போது செலுத்தப்பட வேண்டுமாதலால் வைப்புக்களின் எடுத்துச் செல்லப்படும் பெறுமதியானது சந்தைப் பெறுமதியாகக் கருதப்படுகிறது.

### 38. தொடர்புடைய தரப்பினர்கள்

### 38.1 அரச மற்றும் அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

வங்கி பொதுவான தொழிற்பாட்டுக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற போது தொடர்புடைய தரப்பினர்களோடு கொடுக்கல் வாங்கலில் பிரவேசிக்கின்றது. இலங்கை அரசாங்கமும் (அரசு: வங்கியின் உரிமையாளர் என்ற ரீதியில்), பல்வேறு அரச திணைக்களங்கள், அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்புடைய தரப்பினர்களில் உள்ளடங்குகின்றன. அரச மற்றும் அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏற்பாடுகள் பற்றிய விபரங்கள் வருமாறு:

| **கொடுக்கல்வாங்கலின் இயல்பு** | **2010 ரூ.000** | **2009 ரூ.000** |
|---|---|---|
| திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற இலங்கை அரச பிணையங்களின் முதலீட்டுப்பட்டியல் (அ) | **20,497,816** | 43,450,557 |
| அரச பிணையங்களின் முழுமையான விற்பனை | **3,450,000** | 26,804,878 |
| மீள்கொள்வனவு/ விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு/ விற்பனை செய்யப்பட்ட இ.ம.வ. மற்றும் அரச பிணையங்கள் | **6,175,811,262** | 1,751,900,559 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான செலவினம் (ஈ) | **692,036** | 972,801 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான இ.ம. வங்கியினால் வழங்கப்பட்ட பிணைகள் (குறிப்பு 39) | **1,795,450** | 1,148,253 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் திரட்டப்பட்ட நிதியங்கள் (உ) | **8,943** | 17,552 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில், பண்டங்கள் சேவைகள் வரி (ஊ) | **599,684** | 847,278 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில், அரசுக்குச் செலுத்தப்பட்ட இலாப முற்பணம் (குறிப்பு 23) | **15,000,000** | 20,000,000 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான அரசுக்கான முற்பணங்கள் (குறிப்பு 7) | **77,878,823** | 73,880,500 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் | **1,272,621** | 1,497,973 |
| ஆண்டினுள் மொத்த வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் (ஏ) | | |
| - விற்பனை | **135,934,558** | 94,689,937 |
| - கொள்வனவு | **30,697,765** | 89,021,263 |
| - சுவப் - ஐ.அ.டொலர் மற்றும் ரூபாப் பிணையங்கள் - கொள்வனவு | **115,551,442** | 21,876,817 |
| மீள்நிதியிடல் (ஓ) | **3,425,470** | 781,958 |
| அ.நே.மொ.தீ. நிலுவைகள் | **58,100,434** | 44,057,928 |
| நிதி திட்டமிடல் அமைச்சிலிருந்தான பரிசீலனை எதுவுமில்லாமல் பெறப்பட்ட சொத்துக்கள் | **4,500** | - |
| சுசகன 1 மற்றும் 2 இன் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் | **2,272,362** | 847,065 |
| தேசிய சமவாய காப்புறுதிக் கட்டடத்தினை கொள்வனவு செய்வதற்காக கூ.மொ.வி. நிலையத்திற்கு வழங்கப்பட்ட முற்பணக் கொடுப்பனவு | **175,000** | 175,000 |
| தென் மாகாண சபை அலுவலத்திற்கு அரசினால் கையேற்கப்பட்ட நிலத்தின் மீதான இழப்பீடு மற்றும் வட்டி | **7,640** | - |
| ஊ.சே. நிதிய முறிக் கடன்பாடுகளின் முகப்புப் பெறுமதியும் தரகுக் கொடுப்பனவும் | **108,502,077** | - |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிடமிருந்து பெறத்தக்கவை | **2,377,257** | 63,194 |

அ) உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களமானது வங்கியின் நிதிக் கொள்கையை அமுல்படுத்தும் நேரடித் தொழிற்பாட்டை, பிரதானமாக 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் 90 - 92ஆம் பிரிவின் படியாக, திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக செயற்படுத்துவதுடன் நாணய விதிச் சட்டத்தின் 93 - 98 பிரிவுகளின் படியான நிதி ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் அமுல்படுத்துவதுடன், அரசாங்கம் பங்குடமைகளைக் கொண்டுள்ள வணிக நிறுவனங்களினதும் வேறும் சில நிதி நிறுவனங்களினதும், அரச நிறுவனங்களினதும் வங்கியாகவும் தொழிற்படுகிறது. 2010 திசெம்பர் 31ஆம் திகதியன்று இந்தத் தொழிற்பாட்டின் நிமித்தமாக எழும் திரண்ட நிலுவைகள், குறிப்பு 17 மற்றும் 18இல் தரப்பட்டுள்ளன. முதலீட்டுப் பட்டியலிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி குறிப்பு 24 இல் தரப்பட்டுள்ளது.

ஆ) நாணய விதிச் சட்டத்தின் 28 - 33 பிரிவுகளினால் அதிகாரம் அளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் மீதான மேற்பார்வைத் தொழிற்பாட்டினையும் ஒழுங்குபடுத்தலையும் மேற்கொண்டு வருகிறது. அறிக்கையிடும் கால கட்டத்தினுள் இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட அல்லது

குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்ட 2 உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் 13 சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் இந்தத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் வந்தன.

இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் திணைக்களமானது வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் ஒழுங்குபடுத்துகையையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்க, அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது நிதியிடப்பட்ட வங்கிகள் வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழுள்ளன.

இ) நாணய விதிச் சட்டத்தின் 113ஆம் பிரிவின் பிரகாரம் நிதிச் சபையும் இலங்கை மத்திய வங்கியும் பொதுப்படுகடன் முகாமைத்துவ தொழிற்பாட்டினை ஆற்ற அதிகாரம் பெற்றுள்ளன. இதற்கிணங்க, அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் பொதுப்படுகடன் திணைக்களமானது, வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக உள்நாட்டுச் சந்தைக்குப் பிணையங்களை வழங்குவதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பணிகளையும் மேற்கொள்கின்றது. பொதுப்படுகடன் திணைக்களமானது பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் கடன் சந்தை அபிவிருத்தி என்பவற்றைக் கையாளுகின்றது. அரசாங்கத்தினுடைய நிதித் தேவைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் அதனுடைய பணம் செலுத்துதல் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும் அரசாங்கக் கடனை இது முகாமைத்துவம் செய்கிறது.

ஈ) நாணய விதிச் சட்டத்தின் 49ஆம் பிரிவின்படி இலங்கையில் நாணய விநியோகத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தையும் ஏக உரிமையையும் வங்கி கொண்டுள்ளது. இதற்கிணங்க இ.ம. வங்கியின் நாணயத் திணைக்களம் இலங்கையிலே சட்ட ரீதியான நாணயத்தை விநியோகிக்கும் ஒரே அதிகாரத்துவம் உடையதாகத் தொழிற்படுகின்றது. நாணயத் தாள்களை அச்சிடுதலானது, 40 சதவீதப் பங்குகளை அரசாங்கம் சொந்தமாகக் கொண்டுள்ள டிலாரோ லங்கா கரண்சி அன்ட் செக்குரிட்டி (பிறைவேட்) லிமிடெட் எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

உ) நாட்டுக்கு உள்வரும், வெளிச்செல்லும் வெளிநாட்டுச் செலாவணியின் பெறுகைகள் கொடுப்பனவுகளை ஒழுங்குபடுத்தி, முகாமைத்துவம் செய்யும் முக்கிய தொழிற்பாடு, செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு உரியதாகும். இத் தொழிற்பாட்டை ஆற்றும் போது விதிக்கப்படும் அபராதங்கள், நிதி அமைச்சு சார்பாக சேகரிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியில் வரவு வைக்கப்படுகிறது. 2010ஆம் ஆண்டு இறுதியில் கொடுபடத்தக்க செலாவணிக் கட்டுப்பாட்டுத் தண்டங்களின் வெளிநின்ற நிலுவை ரூ.8.943 மில்லியனாகக் காணப்பட்டது (2009 - ரூ.17.552 மில்லியன்)

ஊ) வங்கியின் சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வங்கியானது அரச நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு அல்லது கட்டுப்பாடுள்ள நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட பண்டங்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகிறது.

எ) மத்திய வங்கியானது, குறிப்பு 40இல் விளக்கப்பட்டுள்ளவாறு, பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பிற காப்பாளர் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பெறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன் வருகின்றது.

ஏ) வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியையும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவுக்குள்ளா தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலையினையும் கண்காணிக்கின்றது. உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைச் செலாவணி அபிவிருத்தியைக் கண்காணிக்கின்ற போது வங்கியானது சந்தையின் இரு புறத்திலுமிருந்து இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் மிகை மாற்றமுறும் தன்மையினை மிதமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. அத்தகைய கண்காணிப்பு நடவடிக்கையின் பெறுபேறுகளாக வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனைத் தொகைகள் விளங்குகின்றன.

ஐ) வங்கியானது எவ்விதக் கட்டணங்களையும் அறவிடாது, அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கியொன்றின் காப்பாளர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

ஒ) வங்கியானது 39.2இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கடன் பிணையங்கள் வழங்கப்பட்டுள்ள இ.ம. வங்கியினால் நிதியிடப்பட்ட கருத்திட்டங்களுக்கு ரூ.3,425.470 மில்லியன் (2009இல் ரூ.781.958 மில்லியன்) தொகை மற்றும் அரசினால் நிதியிடப்பட்ட கருத்திட்டங்களுக்கு ரூ.2,751.978 மில்லியன் (2009இல் ரூ.2,970.030 மில்லியன்) தொகை என்றவாறு மீள்நிதியிடல் கடன்களை வழங்குகின்றது.

ஓ) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி, வேளாண்மைக்கான 10 சதவீதமான குறைந்தபட்ச முற்பண வரையறையினைப் பேணாத வங்கிகள், வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள் நிதியிடல் நிதியத்திற்கு அப்பற்றாக்குறையாகவுள்ள தொகையினை செலுத்துதல் வேண்டும். இதன்படி இவ்வாண்டில், எச்டிஎவ்சி வங்கி ரூ. 389 மில்லியனை அனுப்பி வைத்தது. இதில் ரூ.72 மில்லியன் தொடர்பான வங்கிக்கு மாற்றல் செய்யப்பட்டது.

### 38.2 வங்கி குறிப்பிடத்தக்க முதலீடுகளைக் கொண்டுள்ள ஏனைய நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

9ஆம் இலக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளவாறு, ஆண்னுள் வங்கியானது, பங்காண்மையைக் கொண்டுள்ள

நிறுவனங்களின் முதலீடுகளின் மூலம் ரூ.6.944 மில்லியன் (2009இல் ரூ.25.163 மில்லியன்) பங்கிலாபமாகப் பெற்றது.

### 38.3 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள்

ஆளுநர், துணை ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள் மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுப் பணிப்பாளர் (அவ்வாறான அங்கத்தவர்கள் ஏதேனுமொரு வங்கி நிறுவனத்தில் பணிப்பாளராக, அலுவலராக, ஊழியராக அல்லது பங்குரிமையாளராயிருத்தலை நாணய விதிச் சட்டம் வரையறுக்கின்றது) உள்ளடங்கலாக நாணயச் சபையின் அங்கத்தவர்கள் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராவர். பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

நாணயச் சபை அங்கத்தவர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு:

| | 2010 ரூ.000 | 2009 ரூ.000 |
|---|---|---|
| குறுகிய கால ஊழியர் நலன்கள் | **73,833** | 57,641 |

மேற்படி பணிக் கொடைகளுக்கு மேலதிகமாக பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கு அவர்களுடான தொழில் ஒப்பந்தங்களுக்கமைய கம்பனியினால் காசல்லாத நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

### 38.4 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்

| | 2010 ரூ.000 | 2009 ரூ.000 |
|---|---|---|
| பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான கடன்கள் | **27,123** | 13,536 |

அனைத்துக் கடன்களும் கடன் வகை மற்றும் மாதாந்த மீளச் செலுத்துகையைப் பொறுத்து 2 சதவீதம் தொடக்கம் 19 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சிடையுடன் கூடிய போதியளவு பாதுகாப்பினைக் கொண்டுள்ளது.

### 38.5 தொழில் நிலைக்குப் பிந்திய நலவுரிமைத் திட்டங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

| | 2010 ரூ.000 | 2009 ரூ.000 |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள் | **26,949** | 20,605 |

குறிப்பு 36இல் தரப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியத் திட்டத்திற்கும் பின்னரான திட்டங்களுக்கு வங்கி பல்வேறு தொகைகளையும் ஊழியர் சேம நிதியத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது. 2010ஆம் ஆண்டில் ஊழியர் சேம நிதியம் மிகை வருவாயைக் கொண்டிருந்தால் வட்டி உதவுதொகை வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை. வழமையான வியாபார காலப்பகுதியில் வங்கியானது அதன் தொழில்நிலைக்குப் பின்னய திட்டங்களுக்கு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகளை வழங்கியது.

## 39. எதிர்பாராப் பொறுப்புக்களும் மூலதனக் கடப்பாடுகளும்

### 39.1 நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள்

வங்கியானது அரசாங்கத்தின் அல்லது அதன் முகவராண்மைகளினதும் நிறுவனங்களினதும் முகவராகச் செயற்பட்டு, பொதுத் திறைசேரியினால் இ.ம. வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பதில் உத்தரவாதங்களைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்களுக்கும் உத்தரவாதங்களை வழங்குகின்றது. 2010 திசெம்பர் 31இல் உள்ளவாறு அத்தகைய தீர்க்கப்படாத பிணைகள் எதுவும் இருக்கவில்லை.

### 39.2 கொடுகடன் உத்தரவாதங்கள்

பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற வெளிவாரியான கடன் தொகைகளின் மூலம் சிறிய மற்றும் மத்தியதர தொழில் முயற்சிகளுக்கு நிதியிடல், இத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படுகின்ற கடன்களுக்கான உத்தரவாதப் பத்திரங்களை வெளியிடல், உத்தரவாதப் பத்திர தவணைப் பணங்களைச் சேகரித்தல், கடன் உத்தரவாதப் பத்திர நிதியத்தின் நிர்வாகம் மற்றும் செலுத்தத் தவறுதல்கள் நடைபெறாதென்பதை உறுதி செய்தல், கடன் நிதியம் உரிய விதத்தில் பயன்படுத்தப்படுகின்றதென்பதை உறுதி செய்வதற்காக கடன் வழங்கியதன் பின்னர் கடன் விசாரணைகளை நடத்துதல் ஆகிய மூலம் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது மீள்நிதியிடல் கடன் வசதித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்றது. ஆண்டினுள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொடர்ந்து மீள்நிதியிடல் கடன் வசதிகள் வழங்கப்பட்டனவென்பதோடு, இத் திட்டத்தின் கீழ் கடன் வழங்குகின்ற பங்கேற்புக் கடன் நிறுவனங்களில் உருவாகின்ற நட்டங்கள் தொடர்பாக வங்கியானது கடன் உத்தரவாதப் பத்திரங்களை ஏற்பாடு செய்தது. இது கடன்பெறுநர்களின் செலுத்தத் தவறுதல்களுக்கான ஒரு உத்தரவாதப்பத்திரமல்லவென்பதோடு நட்டங்களுக்காக மட்டுமேயாகும். அதாவது, பங்கேற்புக் கடன் நிறுவனங்களின் மூலம் கடன்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் உருவாகின்ற நட்டங்களுக்காக மாத்திரம் உரிமைகள் கோரப்படுதல் வேண்டும். இவ் ஏற்பாடுகளின் கீழ் எழக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களுக்கான தொகைகள் பின்வருமாறு:

உள்நாட்டு வர்த்தக வங்கிகள் - கடன் உத்தரவாதங்கள் தொடர்பாக

| | உத்தரவாத மளிக்கப் பட்ட நாணயம் | வெளிநின்ற உத்தரவாதங்களின் தொகை 2010 ரூ.000 | 2009 ரூ.000 |
|---|---|---|---|
| **தொடர்புடைய தரப்பினர்கள்** | ரூபா | | |
| - இ.ம. வங்கி நிதியிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் | | **717,273** | 213,659 |
| - இலங்கை அரசாங்கம் நிதியிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் | | **1,078,177** | 934,594 |
| **ஏனையோர்** | ரூபா | | |
| - இ.ம. வங்கி நிதியிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் | | **557,552** | 1,387,591 |
| - இலங்கை அரசாங்கம் நிதியிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் | | **287,211** | 326,457 |
| **மொத்தக் கடன் உத்தரவாதங்கள்** | | **2,640,213** | 2,862,301 |

எவ்வாறாயினும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் பராமரிக்கப்படுகின்ற கடன் பிணை நிதியத்திலிருந்து மொத்த கடன் பிணைப் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட்டன.

### 39.3 பொறுப்பாளரின் செயற்பாடுகள்

நாணய விதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் வங்கியானது பொறுப்பாளரின் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இவ் வகையான இயலுமையில் செயற்படுவதானது பல்வேறு தரப்பினரது சார்பாக நிதியங்களை வைத்திருக்க அல்லது இடம்பெறச் செய்கின்றது. ஆனாலும் அச் செயற்பாடுகளின் நிமித்தமாக எழும் எந்தப் பொறுப்பையும் வங்கி எதிர்பார்க்கவில்லை.

### 39.4 சட்ட ரீதியான உரிமைக் கோரல்கள்

சட்ட உரிமையுடன் ரூ.46.194 மில்லியன் கோரல் சம்பந்தப்பட்ட பங்கீடுபாடுடையோரின் நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்ட 07 வழக்ககளில் வங்கி ஒரு எதிர் தரப்பாக உள்ளது. வங்கியினால் இவ் வழக்குகள் எதிர்த்து வாதாடப்படுவதுடன் நிதிக் கூற்றுக்களில் எவ்வித ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும் 2010 திசெம்பர் 31இல் வங்கிக்கெதிரான பல சட்ட நடவடிக்கைகள் எஞ்சியிருந்தன. குறிப்பிடத்தக்க ஏதேனும் நட்டங்கள் ஏற்படுவது சாத்தியமற்றதென்ற அபிப்பிராயத்தை வங்கி கொண்டுள்ளதால், எவ்வித ஒதுக்குகளும் மேள்கொள்ளப்படவில்லை.

### 39.5 கடப்பாடுகள்

(அ) 2010 திசெம்பர் 31ஆம் திகதியுள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ரூ.54.154 மில்லியன் (2009இல் ரூ.51.230 மில்லியன்) மூலதனக் கடப்பாடொன்றினை வங்கி கொண்டிருந்தது.

(ஆ) 2010 திசெம்பர் 31ஆம் நாளன்று வெளிநின்ற முன்னோக்கிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் எதுவும் காணப்படாததுடன் 2009 இல் வங்கி ஐ.அ.டொலர் 245 மில்லியன் மற்றும் ஜப்பான் யென் 0.5 மில்லியன் கொண்ட முன்னோக்கிய ஒப்பந்தங்களை மேற்கொண்டிருந்தது.

### 39.6 வாக்குறுதி வழங்கப்பட்ட சொத்துக்கள்

பிணையங்களின் தீர்ப்பனவு செயற்பாடுகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு அவுத்திரேலிய டொலர் 39 மில்லியன் மற்றும் பிரித்தானிய ஸ்டேர்லிங் பவுண் 10 மில்லியன் (கொண்டிருக்கும் பெறுமதி அவுத்திரேலிய டொலர் 21.096 மில்லியன் மற்றும் பிரித்தானிய ஸ்டேர்லிங் பவுண் 10.031 மில்லியன்) பெறுமதி கொண்ட பிணையங்கள் (2009 அவுத்திரேலிய டொலர் 39 மில்லியன் மற்றும் பிரித்தானிய டொலர் பவுண் 10 மில்லியன் - கொண்டிருக்கும் பெறுமதி - அவுத்திரேலிய டொலர் 36.953 மில்லியன் மற்றும் பிரித்தானிய ஸ்டேர்லிங் பவுண் 10.223 மில்லியன்) தொடர்பாக வங்கியினால் யூரோ கிளியர் வங்கிக்கு வாக்குறுதி வழங்கப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 35 மில்லியன் கொண்ட (2009 ஐ.அ.டொலர் 35 மில்லியன்) கொடுகடன் வசதி பெறப்பட்டது. வாக்குறுதி வழங்கப்பட்ட பிணையங்கள் யூரோ கிளியரில் தனியான கணக்கொன்றில் வைக்கப்பட்டுள்ளன.

### 39.7 இறைமை வதிவிடங்களுக்கு எதிரான எதிர்பாராப் பொறுப்புக்கள்

இறைமை வதிவிடங்களைத் தொழிற்படுத்துதல் தொடர்பிலான இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கும் எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்கா ஞாபகார்த்த நிதியத்திற்குமிடையிலான குத்தகை உடன்படிக்கையைத் தொடர்ந்து இரண்டு தரப்பினராலும் இணங்கப்பட்ட நிலைமையிடங்களுக்கு குத்தகை பெற்றவர் முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். உடன்படிக்கையை முடிவுறுத்துகின்ற போது குத்தகைக்கு விடுபவர் என்ற வகையில் இ.ம. வங்கி, தொழிற்படு ஆண்டில் முதலீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் இணங்கப்பட்டதொரு வீதாசாரத்தினை செலுத்த வேண்டியிருந்தது. 2010அம் ஆண்டின் இறுதியில் குத்தகைக்கு விடுபவரான, இலங்கை மத்திய வங்கியின் எதிர்பாராப் பொறுப்புகளாக, முதலாவது தொழிற்படு ஆண்டின் இறுதியில் மதிப்பிடப்பட்டிருந்த முதலீட்டுப் பெறுமதியில் 50 சதவீதமான ரூ.21.932 மில்லியன் (2009 - ரூ.26.319 மில்லியன்) கருதப்பட்டது.

## 40. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

மத்திய வங்கி பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பிறகாப்பாளர் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது. வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

அ) வங்கியானது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டு நிதி உதவியின் கீழான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கடன் முறைகளின் கீழ் கிடைக்கும்

பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் பகிர்வையும் மீள்செலுத்துதலையும் கையாள்கின்றது. மேலும், பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் இணைக்கிணை நிதியத்தினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பெற்று அத்தகைய நிதிகளை வழங்கும் முகவராண்மைகளது வேண்டுகோளின்படி திறைசேரி உண்டியல்களில் முதலிடுகின்றது.

ஆ) வங்கியே ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பாளர் ஆகும். இச் சட்டத்தின்படி பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை சேகரித்தல், முதலீடுகளிலிருந்து வருமானமீட்டல், ஊழியர் சேம நியதித்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது முறையான கணக்குகளைப் பேணி வருதல், மிகையான நிதிகளை முதலீடு செய்தல் அங்கத்தவர்களுக்கு நலக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் நாணயச் சபையின் செயற்பாடுகளில் அடங்கும்.

இ) மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கியில் நிறுவனங்களிற்கும், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்படையதான தன்னார்வ வைப்புக் காப்புறுதித் திட்டமாக விளங்கும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கியே நிருவகிப்பதுடன் 2010 ஒத்தோபர் 01ஆம் நாள் தொடக்கம் நிதிகள், 2010 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட 1673/11 இலக்க அரச வர்த்தமானியின்படி உருவாக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

ஈ) நாணயச் சபையினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் விடயத்தில் வங்கியானது ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புடைய விடயங்களைக் மேற்கொள்கின்றது. இத் தொழிற்பாடுகளை நிறைவேற்றும் அதேவேளையில் தவறும் நிதிக் கம்பனிகள் சார்பாக வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதுடன் கடன் தீராற்றலற்ற முறிவு நிலைக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களினுடைய சொத்துக்களை கையாளப்படுத்தல் உட்பட பிணையத்தின் ஒரு வடிவமாக நாணயச் சபையைக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

உ) 2010 செத்தெம்பர் 28ம் நாளிடப்பட்ட 1673/11 இலக்க அரச வர்த்தமானியின்படி வங்கி 2010 ஒத்தோபர் 01 ஆம் நாள் தொடக்கம் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் என்ற பெயரில் கட்டாய வைப்புக் காப்புறுதித்திட்டமொன்றினை ஏற்படுத்தியது. அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் என்பன இத்திட்டத்தின் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும். காப்புறுதி செய்யப்படவுள்ள வைப்புக்கள் மேலே சொல்லப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தல் 5.2 இன்படி விசேட விலக்கல்களுடன் காப்புறுதி செய்யப்பட்ட அனைத்துக் கடன்பாட்டுக்கருவிகளும் நீங்கலான அங்கத்துவ நிறுவனங்களின் கேள்வி, தவணை மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களை உள்ளடக்கும். வைப்புக்காப்புறுதி நிதியமானது, சுய விருப்பு வைப்புக்காப்புறுதித்திட்டத்தின் முதலீடான ரூ.331.653 மில்லியன் மாற்றல் மற்றும் கைவிடப்பட்ட சொத்தாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்டவற்றிலிருந்து செய்யப்பட்ட ரூ.282.337 மில்லியன் மாற்றல்களின் மூலமும் உருவாக்கப்பட்டது. வைப்பாளருக்கு செலுத்தப்படவுள்ள இழப்பீட்டுத் தொகை ரூ.0.2 மில்லியனை விஞ்சுமிடத்து ரூ.0.2 மில்லியனிற்கு அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்களாக இருக்குமிடத்து அதற்குச் சமனான தொகைக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கு நாணயச்சபையோ அல்லது இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்க மாட்டாது என்பதுடன் ஏதேனும் அனுமதிக்கப்பட்ட கடன்பாடுகள் மற்றும் பெறப்பட்ட உதவுதொகைகள் உட்பட வைப்புக் காப்புறுதி நிதியத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியம் அல்லது ஒதுக்கப்பட்ட நிதியத்திற்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்படும்.

வங்கி மேற்பார்வைத்திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள பிரிவு இத்திட்டத்தின் தொழிற்பாடுகளுக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருப்பதுடன் வங்கியின் நிதியம் கூற்றுக்களிலிருந்தும் வேறாக தனித்தனியாக ஏடுகளையும், கணக்குகளையும் பேணல் வேண்டும். அத்துடன் கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வாளராக இருத்தல் வேண்டும்.

ஊ) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான குறைந்தபட்ச முற்பணமான 10 சதவீதம் வரையறையினைப் பேணாத வங்கிகள், மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் நிதியத்திற்கு அப்பாற்றாக்குறையினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியூடாக திரட்டப்பட்ட அத்தகைய தொகைகள் விஸ்கம் மீள்நிதியிடலாக வழங்கியது. 2010 திசெம்பர் இறுதியில் வெளிநின்ற மொத்தச் சேகரிப்பு ரூ.732 மில்லியனாக விளங்கியது. ஆண்டின் இறுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மீள் நிதியிடல் திட்டத்தின் கீழ் எந்தவொரு கடனையும் வழங்காததுடன் அரச பிணையங்களில் ரூ.780.268 மில்லியன் கொண்ட முதலீடுகளையும் கொண்டிருந்தது. மேலும் ரூ.48.942 மில்லியன் கொண்ட வருவாய் முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்டது.

எ) வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நாணயச்சபையின் சார்பில் பின்வரும் வெளிநாட்டு நிதியிடல் செயற்றிட்டங்கள் தொடர்பாக பிரத்தியேக முகவராகத் தொழிற்பட்டதுடன் இது தொடர்பாக நாணயச் சபை இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கைகள் மேற்கொள்வதனை தேவைப்படுத்தியதுடன் வங்கியின் உரிமைகளையும் கடமைகளையும் தெளிவாக எடுத்துக்காட்டியது.

நாட்டின் அனைத்துத் துறைகளுக்குமாக முடிவடைந்த செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப் பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனை | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் 24.50 | தேயிலை சிறு உடமையாளர் வருமானத்தினை அதிகரித்தல் மற்றும் செயற்றிட்டப் பிரதேசங்களில் இயற்கைச் சூழலை மேம்படுத்துதல் | 2550.90 | அட்டவணை யிடப்பட்ட நாளன்று பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிலிருந்து மீள் நிதியிடலை சேகரித்தல் மற்றும் முடிவில் திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்தல் | உத்தரவாதம் மற்றும் காப்பீடு இல்லை | இறுதிக் கணக்குகள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப் படுகின்றது | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ 11.56 | நீண்ட கால பயிர் துறையினை வர்த்தகப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்றுமேடை அபிவிருத்தி, அறுவடைக்குப் பின்னரான கையாளல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் | 1453.11 | | | | |
| பெருந்தோட்டத்துறை சீர்திருத்த செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் 40.00 | உற்பத்தியாக் கத்தினையும் இலாபத் தன்மையினையும் அதிகரிப்பதற்காக மரப் பயிர் துணைத் துறையில் கொள்கை மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்கு உதவியளித்தல் மற்றும் இலங்கையின் மரப் பயிர் தொழில் துறையில் போட்டி அநுகூலங்களைப் பேணுதல் | 5200.00 | | | | |
| சுசகன கடன் திட்டம் | ரூ.30,000.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குதல் | 2750.00 | பங்கேற்கும் நிதி நிறுவனங் களிடமிருந்து அறிவிடல் பெறப்பட்டதும் நிலையான வைப்பிற்பு மாற்றப்பட வேண்டும் | | | |
| சுசகன நிதி மற்றும் குத்தகைக் கம்பனி | ரூ.352.69 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குதல் | 351.06 | | | | |
| சிறிய வியாபாரங்களை மீள எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | ரூ.2,656.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குதல் | 2663.40 | | | | |

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனை | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|
| சிறிய வியாபாரங்களை மீள் எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்ட சுழலும் நிதியம் | ரூ.150.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குதல் | 122.72 | | உத்தர வாதமோ காப்பீடோ இல்லை | இறுதிக் கணக்குகள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப் படுகின்றது | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டம் | ரூ.94.31 | உயர்தர தொழிற்படையை உருவாக்குவதற்காக தொடர்பான தேர்ச்சி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 94.59 | | | | |
| நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் 4.00 | நகரத்திலும் நகர்ப் புறங்களிலும் வசிக்கும் மக்களின் சூழல் வசதிகள், நலம் மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துதல் | 369.15 | | | | |
| வீடமைப்பு உத்தரவாதம் குறைந்த வருமான வீடமைப்பு புகலிடச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் 25.00 | நாட்டிலுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளைக் கட்ட, புதுப்பிக்க, வாழிடங்களை விரிவாக்க உதவுதல் | 1362.00 | | | | |
| நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம் | சிஎஉ 15.10 | வீடமைப்பினை முன்னேற்றுவதற்காக குறைந்த வருமான குடியிருப்பாளர்களுக்கு மூலதனத்தினை வழங்குவதற்கு | 1915.76 | | | | |
| வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் 1.80 | செயற்றிட்டப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பொருளாதார, சமூக, ஊட்டச்சத்து நன்மைகளை மேம்படுத்துதல் | 102.76 | | | | |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் | சிஎஉ 2.00 | சிறிய தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தினை நிரந்தரமாக உயர்த்துதல் மற்றும் வலுப்படுத்தல் | 249.06 | | | | |
| மத்திய மலைநாட்டு நீண்ட கால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ 11.56 | மத்திய மலைநாட்டுப் பகுதியில் நீண்ட காலப் பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல் | 642.00 | | | | |
| வேளாண்மை புத்தாக்க செயற்றிட்டம் | சிஎஉ 17.05 | வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் ஐந்து எல்லை மாவட்டங்களிலுமுள்ள சிவில் குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்கும் நாடுகளின் புனரமைப்பிற்கும் உதவுதல் | 843.00 | | | | |

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனை | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை சிறுஉடமையாளர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் 12.60 | தேயிலை சிறு உடமையாளர் துறையினை அபிவிருத்தி செய்யவும் தேயிலைக்கான வசதிகளை புனரமைக்கவும் | 645.93 | | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் | யென் 1368.00 | வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக வழமையான கொடுகடன் வழிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக காத்திரமான கொடுகடன் வழங்கல் பொறிமுறை யொன்றினை ஏற்படுத்துதல் | 1402.45 | | உத்தர வாதமோ காப்பீடோ இல்லை | இறுதிக் கணக்குகள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப் படுகின்றது | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் 17.40 | குறைந்த வருமானம் மற்றும் மக்களிடையே தொழில் உருவாக்கத்தினையும் சேமிப்புப் பழக்கத்தினையும் மேம்படுத்தவும் செலவுச் சிக்கனமானதும் உறுதியானதுமான நுண்பாக கொடுகடன் நிறுவுதல் | 408.24 | | | | |
| சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிடடச் சுழலும் நிதியம் | ரூ.310.17 | குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் சேமிப்புப் பழக்கங்களை முன்னேற்றுவதற்குமாக செலவுச் சிக்கனமான உறுதியான நுண்பாக கொடுகடன் வழங்கல் | | | | | |
| கேகாலை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ 1.50 | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் செய்றிட்டப் பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழக்கை நிலைமைகளைத் தரமுயர்த்துதல் | 148.00 | | | | |
| தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ 27.90 | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழக்கைத் தரத்தினை மேம்படுத்துதல் | 564.00 | | | | |

நடைபெற்று வரும் செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனை | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|
| விஸ்கம் கடன் திட்டம் | ரூ.732.00 | வர்த்தக வேளாண்மை வியாபார நடவடிக்கைகளை பன்முகப்படுத்தி மேம்படுத்துவதற்கான முதலீட்டிற்கான கொடுகடனின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதற்கு (வர்த்தக வேளாண்மை வியாபார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல்) | 0 | செயற்றிட்டம் முடிவடைந்த பின்னர் நிதியமானது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் அறிவுறுத்தலின் படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு மாற்றல் செய்தல் வேண்டும் | | | |
| சுனாமிக்குப் பின்னைய கரையோர புத்தாக்க மூலவள முகாமைத்துவச் செயற்றிட்டம் | சிஎஉ 1.02 | சுனாமியினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கு உதவியளித்தல் | 0 | அட்டவணை யிடப்பட்ட நாளன்று பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிலிருந்து மீள் நிதியிடலை சேகரித்தல் மற்றும் முடிவில் திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்தல் | உத்தர வாதமோ காப்பீடோ இல்லை | இறுதிக் கணக்குகள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப் படுகின்றது | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| கிருஷி நவோதய | ரூ.3000.00 | வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட வருமான உருவாக்க வழிவகைகளை மேம்படுத்துவதற்கான ஒதுக்கங்களும் மூலதனமும் | 2334.85 | உதவுதொகைத் திட்டம் (உதவுதொகை இலங்கை அரசினால் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்குச் செலுத்தப் படுகிறது | | | |
| அபிருதி கடன் திட்டம் | ரூ.5000.00 | பண்ணை வேளாண்மை, பால் பதனிடல், கைத்தொழில்கள், வேளாண்மையாளர், பதனிடல் கைத்தொழில்கள், குளிரூட்டல் அறை ஐஸ்கட்டி தயாரிப்புப் பொறி மற்றும் கோழி வளர்ப்புத் துறையினை அபிவிருத்தி செய்தல் | 1163.86 | உதவுதொகைத் திட்டம் (உதவுதொகை இலங்கை அரசினால் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்குச் செலுத்தப் படுகிறது | | | |

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப் பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனை | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|
| சௌபாக்கிய கடன் திட்டம் | ஆரம்பத்தில் ரூ.500.00 மாற்றல் செய்யப் பட்டது | நுண்பாக சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளை தொடங்குதல் அல்லது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்க | 463.10 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து மீள் நிதியச் சேகரித்தல் மற்றும் செயற்றிட்டம் முடிவடை கையில் பிரதேச அபிவிருத்தித் திணைக் களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் | உத்தர வாதமோ காப்பீடோ இல்லை | இறுதிக் கணக்குகள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப் படுகின்றது | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சிக் கடன் திட்டம் | ரூ.44.50 | அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனத்தில் சத்தியடைந்து பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு உதவியளிப்பதற்கு | 10.20 | | | | |
| சிறு பெருந்தோட்ட தொழில் முயற்சியாண்மை அபிவிருத்திக் கடன் | சிஎஉ 1.75 | நுவரெலியா, கண்டி, கேகாலை ஆகிய இலங்கையிலுள்ள குறைந்த வருமானம் பெறும் சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 2.82 | | | | |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி | ரூ.70.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமான உருவாக்க நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காக | 35.11 | | | | |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி ii | ரூ.70.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் வருமான உருவாக்க நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு | 77.75 | | | | |

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப் பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனை | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|
| மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்ற செயற்றிட்டச் சுழலும் நிதியம் | ரூ.77.00 | மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு நிதியினை வழங்குவதன் மூலம் கிராமிய மற்றும் வேளாண்மைக் குடும்பங்களின் வருமானத்தை உயர்த்துதல் | 65.42 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து மீள்நிதியை சேகரித்தல் மற்றும் செயற்றிட்டம் முடிவடை கையில் திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்தலும் | உத்தர வாதமோ காப்பீடோ இல்லை | இறுதிக் கணக்குகள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப் படுகின்றது | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதி | ரூ.1100.00 | நாட்டின் தேயிலைத் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு | 718.95 | | | | |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதி | ரூ.1000.00 | நாட்டில் நீண்ட காலப் பயிர் துறைக்கு கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கு | 913.83 | | | | |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் ஒப்பந்தம் பீ கடன் திட்டம் | யூரோ 10.00 | சுனாமியினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவற்றிற்கு | 1476.76 | | | | |
| கட்டுமானத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | யூரோ 9.00 | சுனாமிக்குப் பின்னரான கட்டுமானம் மற்றும் பொது வேலைகளில் காத்திரமான முறையில் பங்கேற்பதற்கு தனியார் வியாபாரங்களுக்கு நிதியியல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் | 1339.73 | | | | |
| சுசகன II | ரூ.500.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 105.54 | நிதி நிலையான வைப்பிற்கு மாற்றல் செய்யப்பட வேண்டும் | | | |

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப் பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனை | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|
| வட மாகாணத்தின் எழுச்சி | ரூ.2000.00 | வட மாகாணத்தில் அமைந்துள்ள நுண்பாக சிறிய, தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்தல் | 1278.00 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து மீள்நிதியை சேகரித்தல் மற்றும் செயற்றிட்டம் முடிவடை கையில் திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்தலும் | உத்தர வாதமோ காப்பீடோ இல்லை | இறுதிக் கணக்குகள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப் படுகின்றது | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி | ரூ.1000.00 | வட மாகாணத்தில் அமைந்துள்ள நுண்பாக சிறிய, தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்தல் | 743.40 | | | | |
| மாகாண அபிவிருத்தி | ரூ.2900.00 | நாட்டில் சிறிய நடுத்தர தொழில் முயற்சியின் துறையில் நடுத்தர மற்றும் நீண்ட கால செயற்றிட்டங்களுக்கு மூலதனங்களை ஒதுக்குதல் | 1184.50 | நிதிகள் நிதித் திணைக் களத்திற்கு மாற்றல் செய்யப்படல் வேண்டும் | | | |

## 41. நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களைச் சீர்செய்தல் அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதாயுள்ள திடமான நிகழ்வுகள் எதுவும் நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்குப் பின்னர் நடைபெறவில்லை.

## 2. வங்கி மேற்பார்வை

நாணயச் சபையால் உரிமம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் காலாந்தரப் பரீட்சிப்பை மேற்கொள்வதற்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நாணயச் சட்ட விதியின் 28(1)ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்டது. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேற்பார்வைப் பொறுப்புக்கள் முன்மதியுடைய ஒழுங்கு விதிகளை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல், வங்கிகளின் உண்மையான நிலைகளை அறிவதற்கு தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் காலாந்தர நியதிப் பரீட்சிப்புக்களை நடத்துதல், ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டத்தை நிருவகித்தல் என்பவற்றை உள்ளடக்கும் விதத்தில் படிப்படியாக உருவாக்கப்பட்டது. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் வங்கித் தொழில் முறைமையின் பாதுகாப்பையும் ஆற்றலையும் உறுதிப்படுத்துவதிலும் வங்கியின் வைப்பாளர்கள் மற்றும் ஏனைய கடன் வழங்குனர்களின் நலன்களைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தின. 2010 இறுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் 31 வங்கிகள் தொழிற்பாட்டிலிருந்தன. இவை 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 9 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை உள்ளடக்குகின்றன. இவ் வங்கிகளின் பெயர்கள் இணைப்பு II-1இல் தரப்பட்டுள்ளன. 2010இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தால் செயலாற்றப்பட்ட பிரதான செயற்பாடுகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

### 2.1 இடர்நேர்வு முகாமைத்துவத்தைப் பலப்படுத்துவதற்கான முன்மதியுடைய ஒழுங்கு விதிகள்

உரிமம் பெற்ற வங்கிகளுக்கு முன்மதியுடைய புதிய ஒழுங்கு விதிகள் மற்றும் தற்போதுள்ள ஒழுங்கு விதிகளுக்கான பல திருத்தங்கள் நாணயச் சபையின் ஒப்புதலுடன் 2010இல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இவ் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன. முன்மதியுடைய பிரதான ஒழுங்கு விதிகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

**(அ) குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டை அதிகரித்தல்:** உள்ளக மற்றும் வெளியக அதிர்வுகளுக்கு தற்போதைய வலுவான வங்கிகள் தாக்குப் பிடிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு புதிய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனம் 2014 அளவில் முறையே 5 பில்லியனுக்கும் 3 பில்லியனுக்கும் அதிகரிக்கப்பட்டது. தற்போதைய வங்கிகள் இவ் விலக்குகளை 2015 திசெம்பர் 31 அளவில் அடையுமாறு கேட்கப்பட்டன.

**(ஆ) கொழும்பு பங்குச் சந்தையில் வங்கிகளைப் பட்டியலிடல்:** கூடியளவு வெளிப்படையான விதத்தில் மூலதனத்தை உயர்த்துவதற்கும் வங்கிகளின் ஆற்றலை அதிகரிக்கும் பொருட்டும் சந்தை ஒழுங்கு நெறியூடாக ஆளுகையை மேம்படுத்துவதற்கும் பட்டியலிடப்படாத உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட தனியார் வங்கிகள் 2011 திசெம்பர் 31 அளவில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடலைப் பெறுமாறு கேட்கப்பட்டன.

**(இ) வட்டி வீதங்களைக் குறைத்தல்:** 2010 ஒத்தோபர் இறுதி அளவில் வீடமைப்புக் கடன்கள் மீதான வட்டி வீதங்களை ஆண்டொன்றுக்கு 14%க்குக் குறைப்பதற்கும், கடன் அட்டை முற்பணங்கள் மீதான வட்டி வீதங்களை ஆண்டொன்றுக்கு 24%க்குக் குறைப்பதற்கும், ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் வட்டிவீதங்களை ஆண்டொன்றுக்கு 1% -2%ஆல் குறைப்பதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து வங்கிகளும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

**(ஈ) பொது ஏற்பாடுகளிலான குறைப்பு:** வங்கித்துறையிலான முன்னேற்றமடைந்த நிலைமைகளைப் பரிசீலனையிற் கொண்டு, பொது ஏற்பாட்டுத் தேவை 2010 திசெம்பர் 31இல் முடிவடையும் காலாண்டின் ஆரம்பத்திலிருந்து 2011 திசெம்பர் 31இல் முடிவடையும் காலாண்டு ஒன்றுக்கு 0.1 %. என்ற வீதத்தில் படிப்படியான அடிப்படையில் 1% லிருந்து 0.5% இற்கு குறைக்கப்பட்டது.

**(உ) கடன்கள் வகைப்படுத்தல், வருமானத்தை அடையாளம் காணல் மற்றும் ஏற்பாட்டுத் தேவைகளைத் தளர்த்தல்:** வியாபாரத்தைப் புத்துயிர் பெறச் செய்தல் மற்றும் புதிய ஆற்றல் வாய்ந்த செயற்றிட்டங்களை வசதிப்படுத்தும் பொருட்டு சில நிபந்தனைகளுக்குட்பட்டு செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்படவிருக்கும் புதிய வசதியைக் கேட்காது செயற்படாக் கடன்கள் மற்றும் வியாபார நோக்கங்களுக்கான மீள் கொடுப்பனவுகளுக்காக கடன்பாட்டாளர்களுக்கு கொடுகடன் வசதிகளை வங்கிகள் வழங்குவதை அனுமதிப்பதற்கான பணிப்புரை 2011 யூன் வரை தற்காலிகமாக தளர்த்தப்பட்டது.

**(ஊ) இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் அறிமுகம்:** நிதியியல் பாதுகாப்பு வலையமைப்பை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக விருப்பத்துக்குரிய வைப்புக் காப்புறுதித் திட்டத்துக்குப் பதிலாக "இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்" 2010 ஒத்தோபர் 1இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நாணயச் சட்ட விதியின் ஏற்பாடுகளின் கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் பிரதான பண்புகள் பின்வருமாறு:

- திட்டத்தின் உறுப்பினர்கள் - அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்
- தகைமைபெறும் வைப்புக்கள் - உறுப்பினர் நிறுவனங்கள், இலங்கை அரசாங்கம், முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் ஏனைய தொடர்பான தரப்பினர் என்பவற்றின் வைப்புக்கள், வழங்கப்பட்ட எந்தவொரு வசதிக்கெதிராக பிணையாக வைத்துள்ள வைப்புக்கள், வங்கித் தொழில் சட்டத்தின் நியதிகளில் கைவிடப்பட்ட சொத்து என்ற கருத்தினுள் வரும் வைப்புக்கள் மற்றும் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் நியதிகளிலான செயற்படாக் கணக்குகள் தவிர்ந்த உறுப்பினர் நிலுவைகளின் அனைத்துக் கேள்வி, தவணை மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்கள்.

- தகைமைபெறும் வைப்புக்கள் மீதான காப்புறுதிக் கட்டுப்பணம் - ஆண்டொன்றுக்கு 0.10 %க்கும் 0.15 %க்கும் இடையேயான வீச்சில் மத்திய வங்கியால் பேணப்படும் வைப்புக் காப்புறுதி நிதியத்துக்கு மாதாந்த/காலாண்டு அடிப்படையில் உறுப்பினர் நிறுவனங்களால் செலுத்தப்பட வேண்டும். 2010 திசெம்பர் 31இல் வைப்புக் காப்புறுதி நிதியத்தின் நிலுவை ரூ.1.48 பில்லியனாக விளங்கியது. இது, ரூ.32.3 மில்லியன் கொண்ட உறுப்பினர் நிறுவனங்களின் கட்டுப்பணங்கள், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட சொத்திலிருந்து மாற்றல் செய்யப்பட்ட ரூ.1.1 பில்லியன், விருப்பத்துக்குரிய வைப்புக் காப்புறுதித் திட்டத்திலிருந்து மாற்றல் செய்யப்பட்ட ரூ.350.2 மில்லியனை உள்ளடக்குகின்றன.
- முதலீடுகள் - வைப்புக் காப்புறுதி நிதியத்திலுள்ள நிதியங்கள் அரச பிணையங்களிலும் நாணயச்சபை தீர்மானிக்கக் கூடிய உறுப்பினர் நிறுவனங்களுக்கான கடன்களிலும் முதலீடு செய்யப்பட வேண்டும். 2010 திசெம்பர் 31இல் உள்ளவாறு அத்தகைய அரச பிணையங்களில் மொத்தமாக ரூ.1.39 பில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.
- நட்டஈடு - உறுப்பினர் நிறுவனத்தின் உரிமம் அல்லது பதிவு நாணயச் சபையால் இடைநிறுத்தப்பட்டால் அல்லது இரத்துச் செய்யப்பட்டால் 2012 சனவரி 1இலிருந்து வைப்பாளர் ஒருவருக்கு ஆகக் கூடியது ரூ.200,000 வரை நட்ட ஈடாக செலுத்தப்படும்.

**(எ) வியாபார நடவடிக்கைகளை வெளி நபருக்குக் கொடுத்தல்:** நடவடிக்கைகளை வெளிநபருக்கு கொடுக்கும் வங்கிகளின் செயல் முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான பணிப்புரைகள் வங்கிகளுக்கு வழங்கப்பட்டன. வைப்புக்களை ஏற்றல், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை முகாமை செய்தல், இணக்கப்பாடு, வாடிக்கையாளரைப் பற்றிய நம்பகத்தன்மை, வாடிக்கையாளரைப் பற்றி அறிதல், திறைசேரி செயற்பாடுகள், இடர் முகாமைத்துவம், முன்னைய அனுமதிப் பிரமாணத்தின் அடிப்படையிலான (சபையின் அனுமதி) வசதிகள் தவிர்ந்த கடன் வழங்கலுக்கு ஒப்புதலளித்தல் போன்றவற்றை வெளி நபருக்குக் கொடுக்கும் செயற்பாடுகள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**(ஏ) அலுவலர்களின் பொருத்தப்பாட்டையும் தகைமை யையும் அறிமுகம் செய்தல்**: வங்கிச் சட்டத்தின் 44ஏ பிரிவின்படி உரிமம் பெற்ற வங்கிகளின் நிறைவேற்று செயற்பாடுகளை செயற்படுத்தும் நிறைவேற்று அலுவலர்களின் பொருத்தப்பாட்டையும் தகைமையையும் மதிப்பீடு செய்யும் தேவைக்காக இத் தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது.

**(ஐ) வருடாந்த உரிமக் கட்டணத்தை அதிகரித்தல்**: கரைகடந்த வங்கிச் சேவை மற்றும் செலாவணிப் பரிமாற்றம் உள்ளடங்கலாக உள்நாட்டு வங்கித் தொழில் வியாபாரங்களில் ஈடுபடும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு 1 மில்லியன் ரூபாவாகவும், கரைகடந்த வங்கித் தொழில் வியாபாரத்தை மாத்திரம் செயற்படுத்தும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு 600,000 ரூபாவாகவும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு 300,000 ரூபாவாகவும் இருந்த வருடாந்த உரிமக் கட்டணத் தொகை கீழேயுள்ள அட்டவணையில் காட்டியதுபோல முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளபடியான மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் விதிக்கப்படும் வகையில் அதிகரிக்கப்பட்டது. இதற்கிணங்க அண்ணளவாக 168 மில்லியன் ரூபா 2011 ஆண்டுக்கான மொத்த உரிமக் கட்டணங்களாக எதிர்பார்க்கப்படுகின்றது.

| **முன்னைய ஆண்டின் இறுதியில் இருந்தபடியா மொத்தச் சொத்துக்கள்** | **ஆண்டு உரிமக்கட்டணம் (மில்லியன் ரூபா)** |
|---|---|
| 75 பில்லியன் ரூபாவிற்கு மேல் | 10 |
| 25 பில்லியன் ரூபாவிலிருந்து | |
| 75 பில்லியன் ரூபாவரை | 5 |
| 25 பில்லியன் ரூபாவிற்குக் கீழ் | 2 |

### 2.2. வங்கிகள், கிளைகள் மற்றும் வங்கி சார்ந்த அலுவலகங்களுக்கான ஒப்புதல்கள்

(அ) இவ்வாண்டில் 61 புதிய கிளைகள், 95 வங்கிசார் அலுவலகங்களான விரிவாக்க அலுவலகங்கள், மற்றும் மாணவர் சேமிப்பு பிரிவுகள், 10 விரிவாக்க அலுவலகங்களின் மீள் இடமாற்றம், 7 விரிவாக்க அலுவலகங்களை முழுமைப்படுத்தப்பட்ட கிளைகளாக புதுப்பித்தல் மற்றும் 5 வெளித்தள தன்னியக்க கூற்றுப் பொறிகளை நிறுவுவதற்கு உரிமம் வழங்கப்பட்டன. இவற்றில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 61 கிளைகள் திறக்கப்படுவதற்கான ஒப்புதல்களும் உள்ளடங்குகின்றன. இதற்கேற்ப 2010ஆம் ஆண்டின் முடிவில் 1,930 கிளைகள், 3,941 ஏனைய வங்கித் தொழில் பிரிவுகள் மற்றும் 2,006 தன்னியக்க கூற்றுப் பொறிகள் செயற்பாட்டில் இருந்தன.

(ஆ) 2010 யூலை மாதத்தில் "பிரதேச அபிவிருத்தி வங்கி" என்னும் அரச வங்கிக்கு, வியாபார உரிமையளிக்கப்பட்ட 6 பிராந்திய அபிவிருத்தி வங்கிகளின் கீழ் வரும் வியாபாரத்தை ஒப்படைப்பதற்கான சிறப்பியல்பு வாய்ந்த வங்கித் தொழில் உரிமம் வழங்கப்பட்டது. இலங்கையில் கிளையொன்றை நிறுவுவதற்கு மும்பாய், இந்தியாவிலுள்ள அக்ஸிஸ் பாங்க் லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட தற்காலிக ஒப்புதல் கடிதத்தின் செல்லுபடியாகும் காலப்பகுதி 2011 யூன் 30 வரை நீடிக்கப்பட்டது.

### 2.3 வங்கிகளுக்கான தொடர்ச்சியான மேற்பார்வை

மேலதிக பரீட்சிப்பு மற்றும் திருத்த நடவடிக்கைகள் தேவைப்படும் வங்கிகளின் பாதகமான நிலைகளை அடையாளம் காண்பதற்கு முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் முறைமையாகப் பணிபுரியும் தனிப்பட்ட வங்கிகள் விடயங்கள் தொடர்பான பொறிமுறையைத் தொடர்ந்து கண்காணித்தல் தொடர்ச்சியான மேற்பார்வை எனப்படும். சிறிய வங்கிகளின் முதல் 20 கம்பனி

வாடிக்கையாளர்களுக்கான பாதிப்புக்குள்ளாகும் தன்மை, துணைக் கம்பனிகள், கிளைக் கம்பனிகள், ஏனைய முதலீடு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் முதல் 20 குழுக்கள் மற்றும் வாடிக்கையாளர்களினால் வங்கி பாதிப்புக்குள்ளாகும் தன்மை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வங்கிகளால் மேற்கொள்ளப்பட்ட கடன் வழங்கல்கள் போன்ற சிறப்புப் பிரச்சனைகள் தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தல மற்றும் முக்கிய மேற்பார்வை கரிசனைகள் தொடர்பான தேவைப்பாடுகள் மற்றும் திருத்த நடவடிக்கையுடன் இணங்கியொழுகாமையைப் பின்தொடர்தல் என்பன பொறுப்பேற்கப்பட்டன. நாளாந்த ரீதியாக எந்தவொரு மாறுபாடுகளை அல்லது கவனத்துக்குரிய துறைகளை அடையாளம் காண்பதற்கு முக்கிய விடயங்களின் பட்டியலுடன் முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் முறைமை விருத்தி செய்யப்பட்டது.

### 2.4 வங்கிகளின் பரீட்சிப்பு

வங்கி மேற்பார்வை திணைக்களம் இடர்நேர்வை அடிப்படை யாகக் கொண்ட அணுகு முறைமையைப் பின்பற்றி இனங் காணல், இடர்நேர்வின் முகாமைத்துவம் மற்றும் இடர் நேர்வை மட்டுப்படுத்துவதற்கான வளங்களின் மதிப்பீடு என்பவற்றில் கவனம் செலுத்தி காலாந்தர மதிப்பீடு பரீட்சிப்புக்களை மேற்கொண்டது. வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 18 வங்கிகளின் பரீட்சிப்புக்களை கடந்த ஆண்டுகளிலிருந்து தொடர்ந்ததுடன் 16 வங்கிகளின் பரீட்சிப்புக்களை 2010இல் தொடங்கியது. இதற்கமைய, 16 வங்கிகளின் பரீட்சிப்புக்கள் வங்கிகளின் முகாமைத்துவத்துடனான முறையான கலந்துரையாடல்கள் மூலமாகவும், நாணயச் சபைக்கு அறிக்கைகள் சமர்ப்பித்தல் மூலமாகவும் 2010இல் நிறைவேற்றப்பட்டதோடு 18 பரீட்சிப்புக்கள் நிறைவேற்றும் செயற்பாட்டில் இருந்தன. இதற்கு மேலாக பல பரீட்சிப்புக்கள் வரையறுக்கப்பட்ட நோக்கத்துடன், காலரீதியான விடயங்களான விதிமுறை ஒழுக்கயீனங்கள் போன்றவை சார்பாக வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டன.

### 2.5 வங்கி முதன்மை மேல் நிலை அதிகாரிகளின் கூட்டங்கள்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம், ஆளுநரின் முதன்மை மேல் நிலை அதிகாரிகளுடனான மாதாந்த கூட்டங்களுக்கு செயலகமாக இயங்குகின்றது. இது வங்கித்துறை சார்ந்த விதி முறைகள், கொள்கைகள், தற்போதைய அபிவிருத்திகள் மற்றும் வேறு நிலைமைகள் பற்றி கருத்து பரிமாற்றம் செய்வதற்கு ஒரு தளமாக அமைகின்றது. இந்தக் கூட்டங்களில் முதன்மை மேல்நிலை அதிகாரிகளுக்கு வங்கித்துறையின் செயற்பாடு மற்றும் பொருளியல் மற்றும் நாணயக் கொள்கை அபிவிருத்திகள் பற்றி தெரிவிக்கப்பட்டது. இதன் மூலம் அவர்களின் தீர்மானமெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் நடத்தப்பட்டது. இங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்களில் கணக்கீட்டு நியமங்கள் 44 மற்றும் 45 ஐ பின்பற்றல், நிர்வாக ஆளுகை சம்பந்தமாக வங்கிகளின் வெளியீடுகளிலும் உள்ளக கட்டுப்பாட்டு நடவடிக்கைகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள், சிறிய, நடுத்தர கைத்தொழிலாளர் துறைக்கு அதிக கடன் வழங்கல் சம்பந்தமான கோரிக்கை, உயர்பதவி வகிக்கும் அதிகாரிகளின் தகுதி மற்றும் பொருத்தம் சம்பந்தமான மதிப்பீடு, கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்ட அமுல்படுத்தல், வங்கி செயற்பாடுகளை ஒழுக்க நெறிமுறைப்படி செய்வதன் அவசியம், தனியார் துறைக்கு கடன் வழங்கலை மேம்படுத்துவதன் அவசியம், வட்டி வீதங்களைக் குறைத்தல் என்பவை உள்ளடங்குகின்றன.

### 2.6 ஏனைய செயற்பாடுகள்

#### (அ) இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் 44- 45 ஐப் பின்பற்றல்

2010இல், மத்திய வங்கி பன்னாட்டுக் கணக்கீட்டு நியமங்கள் 32 மற்றும் 39 உடன் ஒத்திருக்கும் வகையில் இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் 44 மற்றும் 45 என்பவற்றை வங்கிகள் பின்பற்றுவதற்கு தொடர்ந்து வசதியளித்தது. இதன்படி, இலங்கை வங்கியாளர் சங்கம், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் வங்கிக் கணக்காய்வாளர்கள் புதிய கணக்கீட்டு நியமங்களுக்கு மாறுவது தொடர்பான பிரச்சனைகளை ஆராய்வதற்கு தொடர்ந்து சந்தித்தன. உலக வங்கியிடமிருந்து மத்திய வங்கியின் வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் 44 மற்றும் 45 என்பவற்றைப் பின்பற்றும்போது ஏனைய நாடுகளின் நடைமுறை அனுபவங்கள் மற்றும் வரிச்சிக்கல்கள் தொடர்பாக தொழில்நுட்ப வசதி வழங்கப்பட்டது. மாறுவது தொடர்பான ஏற்பாடுகளின் மதிப்பீட்டுத் தாக்கத்தை வங்கிகள் நடைமுறைப்படுத்தின. இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் 44 மற்றும் 45 என்பவற்றைப் பின்பற்றுவதற்கான வசதிப்படுத்துநரான மத்திய வங்கி கொள்கைகள்,முறைமைகள் மற்றும் நடைமுறைகள் நியதிகளிலான இடைவெளியைத் தீர்ப்பதற்கும் நிதியியல்களை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றுச் செலவை மாற்றுவதற்கும் செயலமர்வொன்றை நடத்தியது. மேலும், வங்கிகளின் புதிய நியமங்கள் பின்பற்றப்படுவதை வசதிப்படுத்துவதற்காக கணக்காய் வாளர் குழுவொன்றுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

#### (ஆ) வேளாண்மைத்துறைக்கான கட்டாயக் கடன் வழங்கலைக் கண்காணித்தல்

வேளாண்மைத்துறைக்கான கட்டாய கடன் வழங்கல் தேவைப்பாட்டின் குறைந்த பட்சம் 10% வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தால் காலாண்டு அடிப்படையில் கண்காணிக்கப்பட்டது. 2009 இறுதியிலிருந்து இத் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகாத வங்கிகள் ஏனைய வங்கிகளூடாக வேளாண்மைத்துறைக்கான கடன்வழங்கலுக்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் தொழிற்படுத்தப்படும் “வேளாண்மைத்துறை அபிவிருத்திக்கான சிறப்புக் கடன் திட்டம்” நிதியத்தை மீள் நிதியிடுவதற்குத் தேவையான எந்தவொரு பற்றாக்குறைக்கும் பங்களிப்புச் செய்வதற்கு நாணயச்சபையால் கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் காலாண்டு ரீதியாக வேளாண்மைத் துறைக்கான கடன் வழங்கல் தொடர்பாக அவற்றின் நிலையை மதிப்பிடுமாறும் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலிருந்து 15 நாட்களினுள் நிதியத்தை மீள் நிதியிடுவதற்கான தேவைப்பாடு மீதான எந்தவொரு பற்றாக்குறைக்குச்சமனான நிதியங்களை வரவு வைக்குமாறு அனைத்து வங்கிகளையும் கேட்டுள்ளது.

**(இ) வங்கித் தொழில் சட்டத்துக்கான உத்தேச திருத்தங்கள்:**

சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் உரிமம் பெற்ற வங்கிகளின் மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப்பை மேலும் பலப்படுத்தும் நோக்கில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கித் தொழில் சட்டத்துக்கான திருத்தங்களை முன்னெடுத்தது. உத்தேசத் திருத்தங்கள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தில் ஏற்பாடுகளுடன் வங்கித் தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கான மாற்றங்களை இன்றியமையாததாக்குவதுடன் வங்கிகளைக் கூட்டிணைத்தல் மற்றும் ஒன்று சேர்த்தல், வங்கிகளின் தீர்மான நடைமுறைகளைப் பலப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைந்த அடிப்படையில் வங்கியால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட நிதியியல் குழுக்களை மேற்பார்வை செய்வதற்கு மத்திய வங்கியின் இயலளவைப் பலப்படுத்தி வங்கித்தொழில் துறையில் அபிவிருத்திகளை வசதிப்படுத்துகிறது. வங்கித் தொழில்துறையுடன் கலந்தாலோசிக்கப்பட்ட உத்தேச திருத்தங்கள் விரைவாக இறுதிப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஈ) உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் சபை**

வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் சபையின் உறுப்பினராக தொடர்ந்திருந்ததுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் உள்ளக ஒழுங்கு முறைப்படுத்தல் நிறுவனங்களின் சபையின் செயலாளராக 2010ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். நிதித்துறையின் ஒழுங்கான அபிவிருத்திக்குப் பொருத்தமான கொள்கை வழி காட்டல்களை உருவாக்குதலை உறுதிப்படுத்தல், அனைத்து ஒழுங்குறுத்து முகாமையகங்களும் பரந்த நிதி அமைப்பின் திடத் தன்மையை நோக்காகக் கொண்டு ஒருங்கிணைத்தல், தகவல் பரிமாறலை உறுதிப்படுத்தல் என்பன உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் சபையின் பிரதான பொறுப்புக்களாகும். இந்த மன்றத்தில் கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்களுள் நிதித்துறை ஒழுங்குறுத்துனர்களிடையே தகவல் பரிமாறலுக்கான ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்தல், வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 12 (1சி) இற்கு திருத்தங்கள், மூலதன சந்தை அபிவிருத்தி பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் என்பனவும் உள்ளடங்கின.

**(உ) தடை செய்யப்பட்ட திட்டங்கள் மீதான நடவடிக்கைகளும், வழக்காடலும்**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம், வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 83 சி இன் நியதிகளில், தடை செய்யப்பட்ட திட்டங்களின் தொழிற்பாடுகள் மீதான அதன் புலனாய்வுகளை தொடர்ந்து மேற்கொண்டது. இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கிணங்க தடை செய்யப்பட்ட திட்டங்களை அடையாளம் காணல், உறுதி செய்தல், சட்ட நடவடிக்கை எடுத்தல் போன்ற தேவைகளுக்காக செயல்முறை கையேடு ஒன்று உருவாக்கப்பட்டது. குறிப்பிடப்பட்ட கையேடு, வங்கித் தொழில் ஏற்பாடுகள் என்பவற்றிற்கிணங்க வங்கி மேற்பார்வைத் திணைக்களம் ஐயத்திற்குரிய 3 கம்பனிகளின் வணிக நடவடிக்கைமீது விசாரணை களை நடத்தியதில் வரையறுக்கப்பட்ட தனியார் தியன்ஸ் லங்கா கெல்த் கெயர் பிறைவேட் லிமிடெட் தடைசெய்யப்பட்ட திட்டத்தைச் செயற் படுத்தி வந்ததாக உறுதி செய்யப்பட்டது. வங்கி மேற்பார்வைத் திணைக்களம், அனுராதபுரம், பல்பிட்டிய, மாகோ, பன்வில, குருநாகல், அத்தனகல மற்றும் மினுவாங்கொட குற்றவியல் நீதிமன்றங்களில், சட்ட அமுலாக்க ஆணைக் குழுக்களோடு கூட்டாக, 9 குற்ற வழக்குகளை விசாரித்தது. வங்கி மேற்பார்வைத் திணைக்களம் உச்ச நீதி மன்றம், மேன்

இணைப்பு II.I

**உரிமம் பெற்ற வங்கிகளின் பட்டியல்**

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்**

1. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
2. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
3. இந்தியன் பாங்க்
4. இலங்கை வங்கி
5. எம்சிபி பாங்க் லிமிடெட்
6. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
7. கபீப் பாங்க் லிமிடெட்
8. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
9. சம்பத் பாங்க் பிஎல்சி
10. சிற்றி பாங்க் என்.ஏ
11. செலான் பாங்க் பிஎல்சி
12. டீஎவ்சீசீ வர்தன பாங்க் லிமிடெட்
13. டொயிஷ் பாங்க் ஏஜி
14. நெசனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
15. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
16. த கொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட்
17. பப்ளிக் பாங்க் பெர்காட்
18. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
19. மக்கள் வங்கி
20. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு லிமிடெட்
21. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
22. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சனச அபிவிருத்தி வங்கி லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சன்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி

முறையீட்டு நீதி மன்றம், மாவட்ட நீதி மன்றம், தொழில் நியாய சபையில் 27 வழக்கு விசாரணைகளைக் கையாண்டது. இந்த ஒரு வருடத்தில் 4 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டதோடு, 3 வழக்குகள் மனுதாரர்களால் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டன. 2010ஆம் ஆண்டின் முடிவில் 20 வழக்குகளின் விசாரணை முடிவடையாத நிலையிலிருந்தன

**(ஊ) விழிப்புணர்வு நிகழ்ச்சி நிரல்கள்**

வங்கிப் பணிப்பாளர்களின் பொறுப்புக்களைப் பற்றி அவர்களின் விழிப்புணர்வை அதிகரித்தல், வங்கித்துறை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலின் புதிய முன்னேற்றங்கள் தொடர்பாக அறிவை மேம்படுத்தல் ஆகிய நோக்குகளுடன் 2010ஆம் ஆண்டு திசெம்பரில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் “உயர் வளர்ச்சிப் பாதையை நோக்கி வங்கித் தொழிலை மீள்நிலைப்படுத்தல்” எனும் தொனிப் பொருளில் மூன்றாவது மாநாடு நடத்தப்பட்டது. நிதியியல் நிறுவனங்களுடன் பொது மக்களின் கொடுக்கல் வாங்கல்களின் பாதுகாப்புப்பற்றி அவர்களுக்கு அறிவு புகட்ட பொது மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன. அதற்கிணங்க, வைப்புக்களை ஏற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியல், சட்ட விரோத தடை செய்யப்பட்ட பிரமிட்டின் தன்மைகள் பற்றிய விளம்பரங்கள் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் ரூ.21.5 மில்லியன் செலவில் வெளியிடப்பட்டன.

## 3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம்

இலங்கை மத்திய வங்கியின் வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் தெற்காசியப் பிராந்தியத்தில் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான முன்னணி நிலையமாக தொடர்ந்து நிலை நாட்டி வருவதை 2010ஆம் ஆண்டு கண்டு கொண்டது. 2010 ஆம் ஆண்டில் இந் நிலையத்தால் பரந்து செயற்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் செயலமர்வுகள், கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்ளும் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள் நிதியியல்துறை மற்றும் உண்மைத் துறை நிறுவனங்களாலும் அதைத் தொடர்ந்து மூன்றாந்தரக் கல்வியைப் பின்பற்றுவோர் மற்றும் பொது மக்களிலிருந்தான மாறுபட்ட வகையான பங்கேற்பாளர்களாலும் ஆதரவளிக்கப்பட்டன.

2010ஆம் ஆண்டில் 61 அட்டவணையிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், 34 சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் (பல்வேறு நிறுவனங்களால் கேள்வியின் நிமித்தம் வழங்கப்பட்டவற்றின் அடிப்படையில்) மற்றும் 8 பன்னாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக மொத்தம் 103 நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆளணியினர் இரு பகுதியினரையும் உள்ளடக்கி மொத்தம் 2,962 பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர். 2010ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க உண்மை யாதெனில் நிதியியல் துறைகளின் வரம்புகளுக்கு அப்பால் அடைவதற்கு வடிவமைக்கப்பட்ட புதிய நிகழ்ச்சித் திட்டங்களின் உறுதியான வெற்றியாகும். முன்பு நிதியியல்துறையில் உள்ளவர்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டங்கள் பல்வேறு வகையான நிறுவனங்களிலிருந்தான பங்கேற்பாளர்களுக்கு வங்கித் தொழில் கற்கைகளுக்காக நிலையத்தின் கதவுகளைத் திறந்தன.

அதன் சமூக பொறுப்புக் குறிக்கோளுடன் இணைந்து செல்லும் விதத்தில் வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் 2010ஆம் ஆண்டில் அதன் பகிரங்க விரிவுரை நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக தொடர்ந்து நடத்தியது. இலங்கை அதுபோல் வெளிநாடுகளிலிருந்து பிரபல்யமான வளப் பேச்சாளர்களை வரவழைத்ததன் மூலம் பொது மக்களுக்கான 11 பகிரங்க விரிவுரைகள் மற்றும் 6 மாலை நேர விளக்கச் சொற்பொழிவுகளின் தொடர்கள் நடத்தப்பட்டன. இத்துடன், பல்கலைக்கழகக் கல்விமான்கள்/மாணவர்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக 25 சிறப்புக் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டங்களின் முக்கிய குறிக்கோள்கள் யாதெனில் இலங்கை மத்திய வங்கி ஆர்வலர்களின் அறிவை அதிகரிப்பதாகும்.

2010ஆம் ஆண்டில் வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்துக்கான இன்னுமொரு சிறப்பு நிகழ்ச்சி யாதெனில் “The CBS Journal of Multidisciplinary Studies”என்ற அதன் முதலாவது ஆராய்ச்சி சஞ்சிகையின் வெளியீடாகும். இவ் ஆராய்ச்சி சஞ்சிகை ஒழுங்கு முறைகளின் பல்வேறு துறைகள் தொடர்பான ஆராய்ச்சி ஆய்வுகளைக் கொண்டிருக்கும். இச்சஞ்சிகை 2010இன் பிற்பகுதியில் பொது மக்களுக்கு வெளியிடப்பட்டது. இப் பிராந்தியத்தில் அறிவை உருவாக்குவதிலும் பகிர்ந்து கொள்வதிலும் சிறந்து விளங்கும் நிலையமாக அதன் பயணத்தைத் தொடர்வதில் வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் கடப்பாட்டை மேலும் குறித்துக் காட்டும் வகையில் இச் சஞ்சிகை வருடாந்த அடிப்படையில் வெளியிடப்படும்.

வழங்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முன்னேற்றங்கள் மற்றும் கடந்த ஒரு வருடத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தமை வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையத்தில் சிறந்த கற்கைச் சூழலை ஏற்படுத்துவதற்குப் பெருமளவில் பங்களிப்புச் செய்தன. கடந்த ஆண்டுகளில் நிதியியல்துறையிலான மனித மூலதன அபிவிருத்தியில் இந் நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட தலைமைப் பண்பு முன்னெடுப்புக்கள் அதன் ஆர்வலர்களால் அடையாளங் காணப்பட்டு பாராட்டப்பட்டன. சிங்கப்பூரிலுள்ள முதன்மைச் சந்தைப்படுத்தும் அலுவலர் ஆசிய சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசியாவின் சிறந்த வியாபாரப் பாடசாலை விருதுகளில் வங்கித் தொழில் மற்றும் நிதிப் பயிற்சி நிறுவன வகையில் ஆசியாவின் “சிறந்த பாடசாலை தலைமைப் பண்பு விருது” வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்திற்கு கிடைத்துள்ளது.

## 4. தொடர்பூட்டல்

2010ஆம் ஆண்டு தொடர்பூட்டல் திணைக்களத்திற்கு வியக்கத்தக்கதொரு ஆண்டாகும். இது 60ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டங்கள் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதில் முக்கிய பங்கை வகித்தது. திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் ஆர்வலர்களிடையே அதன்

நற்பெயரைப் பலப்படுத்துவதற்கு இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டது. "இலங்கை மத்திய வங்கி - 1950-2010 என்ற பெயருடைய ஓய்வு நேரப் புத்தகத்தின் வெளியீடு ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சி நிரலிலுள்ள விடயங்களில் கூடுதலாகக் கதைக்கப்படும் ஒன்றாகும். இப் புத்தகம் 1950இலிருந்து செய்தித் தாள்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட உருவங்களுடனான செய்திக் கட்டுரைகளின் கலைகளைக் கொண்டுள்ளதுடன் நாட்டின் சமூகப் பொருளாதாரப் பின்னணியில் இலங்கை மத்திய வங்கியின் பரிணாமத்தை ஓவியம் மூலம் சித்தரிக்கிறது. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்ட "Econ Icon" என்ற பாடசாலைகளுக்கிடையேயான வினாடி வினா நிகழ்ச்சித் திட்டம் தொடர்பூட்டல் திணைக்களத்தால் கையாளப்பட்ட ஏனைய முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். இக் கவர்ச்சிகரமான தொலைக்காட்சி நிகழ்ச்சி பொருளாதாரம் மற்றும் மத்திய வங்கித் தொழில் பற்றி மாணவ சமூகத்தின் பொது அறிவை வெளிப்படுத்த உதவியது. நாடு முழுவதும் நடத்தப்பட்ட எழுத்து மூலமான பரீட்சைகளூடாக தொலைக் காட்சிச் சுற்றுகளுக்காகப் போட்டியிடும் சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகள் தெரிந்தெடுக்கப்பட்டன. திணைக்களம் வங்கியிலுள்ள அனைத்துத் திணைக்களங்களால் நீடிக்கப்பட்ட இணைந்த உதவிமூலம் இவ்விரு பாரிய செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நடத்தக் கூடியதாக இருந்தது.

### 4.1 வெளியக தொடர்பூட்டல்

முன்னைய ஆண்டுகளைப் போலவே, உறுதியான நிதியியல் முறைமை, விலை மட்டங்களிலான உறுதிப்பாடு மற்றும் உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்காக இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் உபாயங்கள் பற்றி அதன் அனைத்து ஆர்வலர்களுக்கு தொடர்பூட்டல் திணைக்களம் அதே நேரத்திலான தகவலை வழங்கியது.

இலங்கை மத்திய வங்கி ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழில் பேணப்படும் அதன் மூன்று மொழிகளிலான வெப்தளத்தை வெளியகத் தொடர்பூட்டலுக்காக கூடியளவில் பயன்படுத்தியது. இலங்கை மத்திய வங்கியின் வெப்தளம் அதே நேரத்திலான வலையோடை (RSS) வசதி மற்றும் ஒளிப்பதிவு நறுக்குப் பக்கத்தை கட்டம் கட்டமாகச் சேர்த்ததன் மூலம் புதுப்பிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 2009இன் 53.7 மில்லியனிலிருந்து 2010இல் 58.1 மில்லியனுக்கு 8 சதவீதத்தால் அதிகரித்தது. வெப் தளத்தினூடாக கிரமமான தகவலை வழங்குவதற்கு மேலதிகமாக ஞாபகார்த்த நாணயக் குத்திகள் மற்றும் இலங்கை மத்திய வங்கி வெளியீடுகளின் அதே நேரத்திலான விற்பனைகள் ஆண்டு முழுவதும் தொடர்ந்து இடம்பெற்றன.

கடந்த காலத்தைப் போன்றே, திணைக்களம் நாளாந்த செலாவணி வீதங்கள், வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதாரக் குறிகாட்டிகள், இலங்கை வங்கிகளுக்கிடையேயான வழங்கல் வீதங்கள், எண்ணெய் விலைகள், நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் மற்றும் திறைசேரி முறிகள் ஏலங்கள் போன்ற அரச பிணையங்கள் மீதான தகவலையும் தொடர்ந்து வெளியிட்டது. இவ்வாண்டில் தொடர்பூட்டல் திணைக்களம் 1,722 பத்திரிகை வெளியீடுகளையும், 490 செய்தித் தாள் விளம்பரங்களையும் 15 வர்த்தமானி அறிவித்தல்களையும் வெளியிட்டது. கிரமமான பத்திரிகை வெளியீடுகள் மற்றும் அறிவித்தல்களுக்கு மேலதிகமாக திணைக்களம் பலதரப்பட்ட பொருளாதார மற்றும் நிதியியல் பிரச்சனைகள் பற்றி பொதுமக்கள் விழிப்பூட்டலை அதிகரிப்பதற்காக 62 ஊடக மாநாடுகளையும் பல எண்ணிக்கையான தனியான ஊடக நேர்காணல்களையும் இலங்கை மத்திய வங்கியின் மூத்த அலுவலர்கள் மூலம் ஏற்பாடு செய்தது. திணைக்களத்தின் ஊடகப் பிரிவு ஆளுநரின் சகல அலுவல்சார் பயணங்களையும் சேகரித்தது.

### 4.2 உள்ளகத் தொடர்பூட்டல்

அலுவலர்களின் உள்ளகத் தொடர்பூட்டல் தேவைப்பாடுகளை அதிகரிக்கும் நோக்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செய்திகள், வங்கித் தொழில் மற்றும் நிதி, முக்கியமான பொருளாதார குறிகாட்டிகள், வெளிப்படுத்துகைகள், அறிவிப்புக்கள் மற்றும் அறிவித்தல் தொடர்பான தற்போதைய தகவலை வங்கி அலுவலர்களுக்கு வழங்கும் "CBSL daily" என்ற வெப் நுழைவாயிலை தொடர்ந்து தரமுயர்த்தியது. ஊழியர்கள் இலங்கை மத்திய வங்கியுடன் தொழிற்படும் கழகங்கள் மற்றும் அமைப்புக்கள் பலதரப்பட்ட தலையங்கங்களில் அவர்களது கருத்துக்களையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவதற்காக உள்ளக சஞ்சிகையான "கவுலுவ" இற்கு புதிய பண்புகள் சேர்க்கப்பட்டன.

குறிப்பாக வங்கித் தொழில் அல்லாத நிதியியல் துறை பற்றி பொதுமக்கள் உணர்வு நிலையை அதிகரிப்பதற்கு உதவிக் கருமபீடத்தின் பணிகள் இவ்வாண்டிலும் தொடர்ந்து இடம்பெற்றது. இதற்கு மேலதிகமாக கருமபீடம் உள்நாடு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட 516 மின் அஞ்சல்களுக்கும் 6,500 இற்கும் மேற்பட்ட தொலைபேசி விசாரணைகளுக்கும் பதிலிறுத்தது.

தேசிய செய்தித் தாள்களில் வெளியான பொருளாதாரம் தொடர்பான செய்திகள், கட்டுரைகள் மற்றும் பொது மக்களின் அபிப்பிரயங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டவற்றின் சேகரிப்பு நாளாந்தம் செயலக முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்டது. பலதரப்பட்ட பொருளாதார நிதியியல் மற்றும் சமூகப் பிரச்சனைகள் தொடர்பான 1,714 அத்தகைய செய்தி விடயங்கள் முகாமைத்துவத்துக்கு வழங்கப்பட்டன.

### 4.3 பொது மக்கள் விழிப்பூட்டல்

பொய்யான நாணயத் தாள்கள், மோசடியான மற்றும் சட்டரீதியற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பொது மக்கள் விழிப்பூட்டலை அதிகரிப்பதற்காக பொய்யான நாணயத் தாள்களை அடையாளம் காண்பது பற்றிய ஆவணமொன்றும் பிரமிட் திட்டங்கள் தொடர்பான இரண்டு வர்த்தக விளம்பரங்களும் தயாரிக்கப்பட்டன. தூய நாணயத்தாள்களை அடையாளம் காண்பது பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டத்துக்கான சிற்றேடுகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. மத்திய வங்கித் தொழில் பிரச்சனைகள் பற்றி பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்காக பொருளாதாரம், வங்கித் தொழில் மற்றும் நிதி தொடர்பான 38 பொது மக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடசாலைக்

கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், இராணுவப் பணிகளிலுள்ள பயிற்றுவிப்போர்கள் மற்றும் வியாபார சமூகத்துக்கு இலங்கை மத்திய வங்கிக்கான வருகைகளையும் திணைக்களம் ஒழுங்கு செய்தது. பொதுமக்கள் விழிப்பூட்டலை அதிகரிப்பதற்கு தேசிய மற்றும் பிராந்திய மட்டத்திலான பொருட்காட்சிகள் மற்றும் பொருளாதாரம் மற்றும் நிதி மற்றும் இலங்கை மத்திய வங்கியின் கொள்கைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஏனைய பொது நிகழ்ச்சிகளிலும் திணைக்களம் பங்கேற்றது. கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி மற்றும் தயற்ற கிருல பொருட்காட்சிகள் குறிப்பிடத்தக்க பொதுமக்கள் பங்கேற்பைப் பதிவு செய்தன. இப் பொருட்காட்சிகளில் பங்கேற்றமை இலங்கை மத்திய வங்கியின் கரிசனைகள் பற்றி பொதுமக்களை தெளிவடையச் செய்வதற்கும் இலங்கை மத்திய வங்கியின் சொந்த வெளியீடுகள் பலவற்றை விற்பதற்கும் மத்திய வங்கிக்கு சந்தர்ப்பத்தை வழங்கின. இலங்கை மத்திய வங்கி வெளியீடுகளின் விற்பனைகள் மற்றும் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்தன. இதே காலப்பகுதியில் வெளியீடுகளின் விற்பனைப் பெறுமதி ரூ.6 மில்லியனுக்கு 36 சதவீதத்தால் அதிகரித்தது. இலங்கை மத்திய வங்கி வெளியீடுகள் அரச நிறுவனங்கள், தேசிய நூலகங்கள், வெளிநாட்டுத் தூதரகங்கள், பாடசாலைகள் மற்றும் ஏனைய கல்விசார் நிறுவனங்களுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டன. இலவசப் பகிர்ந்தளிப்புக்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்தான புதிய கேள்வியின் முக்கிய காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10 சதவீதத்தால் அதிகரித்தன.

### 4.4 மொழி பெயர்ப்புப் பணிகள்

தமிழ் மொழி பெயர்ப்புப் பிரிவு இவ்வாண்டும் 284 தமிழ் மொழிபெயர்ப்பு ஒப்படைகளைப் பாரமேற்று இலங்கை மத்திய வங்கியின் மொழி பெயர்ப்புத் தேவைகளை தொடர்ந்து நிறைவேற்றியது. அதற்கு மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தின் தமிழ் வடிவமும் பேணப்பட்டது. ஆண்டறிக்கை, பத்திரிகை வெளியீடுகள், பாராளுமன்ற விடைகள், சட்டங்களுக்கான திருத்தங்கள், சுற்றறிக்கைகள், வர்த்தமானி அறிவித்தல்கள், கணக்காய்வாளர் நாணயத்தின் அறிக்கை, நிதியியல் கூற்றுக்கள், வெப் பக்கங்கள் போன்ற இலங்கை மத்திய வங்கியின் வெளியீடுகளில் அநேகமானவை சிங்களம் மற்றும் ஆங்கில வடிவத்திற்கு மேலதிகமாக தமிழ் வடிவிலும் வழங்கப்பட்டன.

### 4.5 அச்சகம்

திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் அனைத்து வெளியீட்டுத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்வதற்கு வடிவமைப்பு, தட்டச்சு அமைப்பு மற்றும் அச்சிடல் பணிகளை வழங்கியது. இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கி அச்சகம் பல்வேறு திணைக்களங்களிலிருந்து பெறப்பட்ட கறுப்பு மற்றும் வெள்ளை வர்ணத்திலிருந்து 5 வர்ணம் வரையான 252 அச்சிடல் ஒப்படைகளைப் பூர்த்தி செய்தது. இலங்கையில் வியாபாரம் செய்வதற்கான படிப்படியான வழிகாட்டல்கள், இலங்கைச் சமூகப் பொருளாதார தரவு, இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகப் புள்ளிவிபரவியல், செய்தி அளவீடு, சற்றகன, கவுலுவ, அலுவலர் ஆய்வுகள், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு, வழிகாட்டல் உபாயத்திட்டம், பொதுப்படுகடன் திரட்டு, ஆராய்ச்சி வெளியீடுகள் இலங்கை மத்திய வங்கி அச்சகத்தால் அச்சிடப்பட்ட முக்கிய வெளியீடுகளில் சிலவாகும். வருகையாளர் முகவரிச்சீட்டு, வாழ்த்து மடல்கள், குறிப்புப் புத்தகங்கள், கோவை அட்டைகள், இலங்கை மத்திய வங்கியின் நாளாந்தச் சுவரொட்டிகள், சிற்றேடுகள், துண்டுப் பிரசுரங்கள், செய்தித் திரட்டுக்கள், சிறு பிரசுரங்கள் மற்றும் தனியான வெளியீடுகள் என்பனவும் அச்சகத்தால் பொறுப்பேற்கப்பட்ட ஏனைய அச்சிடல் ஒப்படைகளாகும்.

### 4.6 வங்கியின் முக்கிய சம்பவங்கள் சேகரிப்பு

தொடர்பூட்டல் திணைக்களத்தின் புகைப்படப் பிரிவு இலங்கை மத்திய வங்கியால் நடத்தப்பட்ட அனைத்து பிரதான நிகழ்வுகளையும் புகைப்படமெடுத்தது. இதன்படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகள் உள்ளிட்ட 278 புகைப்படமெடுக்கும் நிகழ்வுகளை திணைக்களம் மேற்கொண்டது.

### 4.7 நூலகமும் தகவல் நிலையமும்

நூலகமும் தகவல் நிலையமும் வங்கி அலுவலர்களுக்கும் வேண்டுதலின் பேரில் மற்றையவர்களுக்கும் நூலகப் பணிகளை தொடர்ந்து வழங்கியது. நூலகம் அதன் புத்தகச் சேகரிப்புக்களை 23,476 இலிருந்து 24,313இற்கும், அறிக்கைகளை 15,229 இலிருந்து 17,243இற்கும், டிஜிற்றல் வடிவிலான புத்தகங்களை 1,430இலிருந்து 1,603இற்கும் அதிகரித்துக் கொண்டது. இவ்வாண்டில், ஒன்று திரட்டப்பட்டுக் கட்டப்பட்ட 300 தொகுதிகளும் சேர்க்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையமும் அதன் நூல் சேகரிப்புக்களை 5,683 இலிருந்து 5,777இற்கு அதிகரித்தது.

மீளாய்விற்குரிய காலப்பகுதியில் பொருளாதாரம், அளவுப் பொருளாதாரம் மற்றும் நிதி தொடர்பான 100 இற்கும் மேற்பட்ட சஞ்சிகைகளை அதே நேரத்தில் அணுகத்தக்க விதத்தில் “விஞ்ஞான வழி காட்டல்” தரவுத் தளத்தின் பயன்பாடு அதிகரிக்கப்பட்டது. நூலகம் மற்றும் தகவல் நிலையத்தால் சந்தா செலுத்தப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சஞ்சிகைகளின் எண்ணிக்கை முறையே 118ஆகவும், 51ஆகவும் விளங்கியது. இது அண்மைய சேர்க்கைகள் (அதாவது புதிய நூல்கள்) தற்போதைய உள்ளடக்கங்கள், நியூஸ் அலேட் போன்ற இலத்திரனியல் வெளியீடுகளைத் திரட்டி உள்ளார்ந்த இணையத் தளத்தினூடாக அலுவலர்கட்கு அவற்றைப் பரப்பியது. தெரிந்தெடுக்கப்பட்ட தகவற் பரம்பல் பணி இவ்வாண்டிலும் பேணப்பட்டது.

வங்கி அலுவலர்கள் அதேநேர நூலக வசதிகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு 7 திணைக்களங்களை உள்ளடக்கும் 7 பயன்பாட்டார் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. ஊழியர்களின் நன்மைகருதி பலதரப்பட்ட முக்கியமான விடயங்கள் மற்றும் தலைப்புக்களில் இரண்டு விவரணப் படங்கள் நூலகத்தின் மண்டபத்தில் மதிய போசன இடைவேளையின்போது காண்பிக்கப்பட்டன. பொருளாதார மற்றும் வங்கித் தொழில் நூலக வலையமைப்பு பேணப்பட்டதுடன்

அதன் 23 உறுப்பினர் நூலகங்கள் மின்னஞ்சல் மூலமாக தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில் பெரும் நன்மையடைந்தன. “இலங்கை மத்திய வங்கி: 1950 - 2010 ஐப் பின்னோக்கி” என்ற இலங்கை மத்தியின் 60ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வெளியீட்டைக் குறிப்பாக இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட நாடு தொடர்பான வரலாற்று ரீதியிலான முக்கிய சம்பவங்கள் பற்றிய தகவலை செய்தித் தாள்களிலிருந்து சேகரித்து தொகுப்பதில் நூலக தகவல் பிரிவு பயனுறும் வகையில் பங்களிப்புச் செய்தது. புத்தக ஆய்வுரைப் போட்டி மற்றும் மின்னஞ்சல் மூலமான கேள்வி பதில் நிகழ்ச்சித் திட்டம் ஒத்தோபரிலான தேசிய வாசிப்பு மாதத்தைக் குறிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட பிரபல்யமான நிகழ்ச்சிகளாக விளங்கின.

நூலகமும் தகவல் நிலையத்தின் உசாத்துணைப் பிரிவில் அமைந்துள்ள சுய அணுகல் மொழி ஆய்வு கூடமானது இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் பயன்பாட்டிற்கு கிடைக்கக் கூடியதாக உள்ளது. 2008இல் நூலகமும் தகவல் நிலையத்திற்கு வழங்கப்பட்ட ஐஎஸ்ஓ 9001:2000 சான்றிதழுடன் இணங்கிச் செல்லும் வகையில் நூலகப் பணிகள் பேணப்பட்டன.

## 5. நாணயம்

### 5.1. நாணய வெளியீடு மற்றும் முகாமைத்துவம்

சுற்றோட்டத்திற்கு நாணயத் தாள்களையும் நாணயக் குத்திகளையும் வழங்குவதன் மூலம் நிதியியல் முறைமையில் போதிய அளவிலான நாணய வழங்கலை உறுதிப்படுத்துவதற்கு, நாணய வெளியீடு மற்றும் முகாமைத்துவத்தின் முக்கிய பொறுப்பு தொடர்பான தொழிற்பாடுகளை நாணயத் திணைக்களம் இவ்வாண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தியது. 2010 இறுதியில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்கள் மற்றும் நாணயக் குத்திகளின் பெறுமதி ரூ.255 பில்லியனாக விளங்கியதுடன் 2009இன் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் இது 17.5 சதவீத அதிகரிப்பாகும். இதே வேளை ஆண்டில் நாணயத் திணைக்களத்தினால் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட புதிய மற்றும் பயன்படுத்தத்தக்க நாணயத் தாள்களின் பெறுமதி முறையே ரூ.88 பில்லியனாகவும், ரூ.171 பில்லியனாகவும் காணப்பட்டன. வர்த்தக வங்கிகளினால் மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட நாணயத் தாள்களின் பெறுமதி ரூ.222 பில்லியனாகக் காணப்பட்டது. இதன்படி, 2010 இறுதியில் சுற்றோட்டத்திற்கு விடப்பட்ட நாணயத் தாள்களினதும் குத்திகளினதும் தேறிய வெளியீடு முறையே ரூ.37 பில்லியனாகவும் ரூ.416 மில்லியனாகவும் காணப்பட்டது.

சுற்றோட்டத்திலிருக்கும் நாணயத் தாள்களின் தரங்களைப் பேணும் பொருட்டு, நாணயத் திணைக்களம் பயன்படுத்த முடியாத நாணயத்தாள்களை தொடர்ந்து மீளப்பெற்றது. தூய தாள் கொள்கையை கூடிய வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்தும் பொருட்டு வர்த்தக வங்கிகள் பயன்படுத்த முடியாத தாள்களை இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்யுமாறு ஊக்குவிக்கப்பட்டனர். இவ்வாண்டில் அண்ணளவாக 128,000 பயன்படுத்த முடியாத நாணயத் தாள் கட்டுக்கள் (கட்டு ஒன்றில் 1000 தாள்கள்) அழிக்கப்பட்டன. வர்த்தக வங்கிகளிலிருந்து பயன்படுத்தப்பட்ட தாள்களின் வைப்புக்களை செயல்முறைப்படுத்துவதற்கான பணிக்கட்டணமாக ரூ.28 மில்லியன் கொண்ட தொகை சேகரிக்கப்பட்டது.

### 5.2 நாணயம் தொடர்பான பொதுமக்களின் நம்பிக்கையினைப் பாதுகாத்தல்

போலி நாணயத் தாள்கள் புழக்கத்திற்கு வருவதைத் குறைப்பதற்கும் பொது மக்களின் நம்பிக்கையினைப் பேணுவதற்கும், நாணயத் திணைக்களம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயத்தாள் பணியகத்தின் நெருங்கிய ஒத்துழைப்புடன் தொடர்ந்தும் பணியாற்றியது. இதேபோன்று, நாணயத் திணைக்களம் இவ்வாண்டில் போலி நாணயத் தாள்கள் தொடர்பான 27 வழக்குகளில் கலந்து கொண்டது. 2010இல் கண்டுபிடிக்கப்பட்டு சான்றுபடுத்தலுக்காக வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட நாணயத் தாள்கள் சுற்றோட்டத்திலுள்ள மில்லியன் தாள்களுக்கு ஐந்து தாள்களாக விளங்கி ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்டத்தில் போலி நாணயம் சம்பவிப்பதை எடுத்துக் காட்டியது. நடைமுறைக்கிடும் அலுவலர்கள், அரசாங்க அலுவலர்கள், காசினைக் கையாள்வோர் மற்றும் பொது மக்களின் அறிவினை உயர்த்துவதற்காக உண்மையான தாள்களின் பாதுகாப்புப் பண்புகள் தொடர்பாக பொது மக்களுக்கு நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நாணயத் தாள்களை எவ்வாறு வினைத்திறனுடன் பயன்படுத்துவது தொடர்பான அவர்களின் அறிவை அதிகரிக்கச் செய்தது. நாணயத் திணைக்களம், போலி நாணயங்களைத் தயாரிக்கும் முயற்சியினை மேலும் குறைக்கும் விதத்தில் புதிய நாணயத் தாள் தொடர்களுக்கு முன்னேற்றங்கண்ட பாதுகாப்புப் பண்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இவை ஒப்பீட்டு ரீதியில் குறைந்த எண்ணிக்கையான போலி நாணயத் தாள்களை சுற்றோட்டத்தில் பேணுவதற்கு உதவின.

### 5.3 தூய நாணயத்தாள் கொள்கையினை ஊக்குவித்தல்

தாள்களை கையாள்வதில் நல்ல பழக்கங்களை பின்பற்றுவது தாள்களின் வாழ்நாள் காலத்தினை விரிவாக்குவதுடன் புதிய நாணயத் தாள்களை அச்சிடும் செலவினையும் குறைக்கின்றது. மேலும் தூய நாணயத் தாள்கள், உண்மையான நாணயத் தாள்களுக்கும் போலி நாணயத் தாள்களுக்குமிடையிலான வேறுபாட்டினைக் கண்டறிய உதவுவதுடன் நாட்டின் கௌரவத்தினைப் பாதுகாக்கவும் உதவுகின்றது. தூய நாணயத் தாள் கொள்கையினை ஊக்குவிப்பதன் ஒரு பகுதியாக நாணயத் திணைக்களம் சுற்றோட்டத்திற்கு புதிய நாணயத் தாள்களைத் தொடர்ந்தும் வழங்கியதுடன் பயன்படுத்த முடியாத நாணயத் தாள்களை அகற்றிவிடுகின்றது. இவ்வாண்டுப் பகுதியில் நாணயத் தாள்களையும் குத்திகளையும் கையாள்வதில் சிறந்த பழக்க வழக்கங்களை பின்பற்றுவது தொடர்பாக அநேக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. நாணயத் தாள்களைத் தரம் பிரிப்பது தொடர்பாக வர்த்தக வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு நாணயத் திணைக்களம் வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்படும் பணக் கட்டுக்களின் இருப்பிலிருந்து எழு மாதிரியான விதத்தில் நாணயத் தாள்களின் மாதிரிகளைத் தொடர்ந்தும் பரிசோதித்தது. மேலும், நாணயத் தாள்களை வேண்டுமென்றே உருச்சிதைப்பதனை ஊக்கமிழக்கச் செய்வதற்காகவும் தூய நாணயத்தாள்களைப் பயன்படுத்துவதனை பொது மக்களிடையே ஊக்குவிப்பதற்காகவும் அச்சு ஊடகங்களூடாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 5.4 புதிய செயற்றிட்டங்கள்

“அபிவிருத்தி, சுபீட்சம் மற்றும் இலங்கையின் நடனக் கலைஞர்கள்” என்ற தொனிப் பொருளில் நாணயத் தாள்களின் (11வது தொடர்) புதிய தொடர்களை அச்சிடும் வேலைகள் 2010இல் பூர்த்தி செய்யப்பட்டன. புதிய நாணயத் தாள்களின் 11ஆவது தொடர் அட்டவணையிடப்பட்டவாறு 04.02.2011 நாளன்று அதிமேதகு சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு புதிய தொடரின் நாணயத் தொகுதியை ஆளுநரால் வைபவரீதியாக கையளித்ததன் மூலம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ் ஆரம்ப வைபவத்துடன் சிற்றேடுகள், துண்டுப் பிரசுரம் மற்றும் சுவரொட்டிகளை வழங்குதல் உள்ளிட்ட அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகத்தினூடாக ஒருங்கிணைந்த பொது மக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடக்கி வைக்கப்பட்டன. வங்கிக் கூற்றாளர்கள், காசு கையாளுபவர்கள் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு அறிவூட்டுவதற்கு சிறப்பு வாய்ந்த தகவல்கள் தயாரிக்கப்பட்டன. இத்துடன், நாணயச் சேகரிப்பாளர்கள் மற்றும் ஆர்வமுள்ள ஏனைய தரப்பினருக்கு நாணயத் தாள் காட்சிப்படுத்தல் மடிப்புக்கள், வெட்டப்படாத நாணயத் தாள்களைக் கொண்ட விரிப்பு போன்ற சிறப்பு வாய்ந்த சேகரிப்பாளர்களின் பொருட்களைத் தயாரிப்பதற்கான ஒழுங்கு முறைகளையும் திணைக்களம் மேற்கொண்டது.

இலங்கை மத்திய வங்கியின் மூன்றாவது நாணய அரும்பொருட் காட்சிச் சாலை மாத்தறை மாகாண அலுவலகத்தில் 06.05.2010அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. குறிக்கோள் யாதெனில் பள்ளிக்கூடப் பிள்ளைகள் உட்பட பொது மக்கள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயவியலாளர்கள் ஆகியோர் தகவல்களைச் சேகரித்துக் கொள்வதற்கும் இலங்கையிலும் ஏனைய தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகளிலுமுள்ள நாணயங்கள் தொடர்பான ஈடுபாடுகளை விருத்தி செய்து கொள்வதற்கும் வசதியளிப்பதேயாகும்.

நாணய திணைக்களத்தின் ஆராய்ச்சிச் செயற்பாடுகள் நாணயத் தாள்களின் பல்வேறு பெறுமதிகளின் பயன்பாட்டுக் காலத்தை மேம்படுத்துவதிலும் நாணயத் தாள் கேள்வியை மதிப்பிடுவதிலும் கவனம் செலுத்தியது. இவ் ஆராய்ச்சியின் வெளிப்பாடு நாணய முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு உதவியாக அமைந்தது.

### 5.5 நாணயம் தொடர்பான விழிப்புணர்வினை மேம்படுத்துதல்

போலி நாணயத் தாள்களை அடையாளம் காணுதல், தூய நாணயத் தாள் கொள்கை, நாணயக் குத்திகளை மீள சுற்றோட்டத்திற்கு விடுதல் என்பன மீது வங்கி ஊழியர்கள், பொலிசு அலுவலர்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு பொது விரிவுரைகள், ஆய்வரங்குகள், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுடாக நாணயத் திணைக்களம் 40 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது.

நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அவற்றின் வரலாற்று ரீதியான அபிவிருத்தி என்பனவற்றிலிருந்து மக்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்குடன் நாணயத் திணைக்களம் 40 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது.

நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அவற்றின் வரலாற்று ரீதியான அபிவிருத்தி என்பனவற்றில் பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்குடன் நாணயத் திணைக்களம் பின்வரும் 7 கண்காட்சிகளிலும் பங்கேற்றுக் கொண்டது.

(1) 2010 பெப்புருவரி 04 -10 நாள்வரை பள்ளேகல கண்டியில் இடம்பெற்ற “தயற்ற கிருல” தேசிய அபிவிருத்தி கண்காட்சி - 2010

(2) 2010 மாச்சு 16ஆம் நாளிலிருந்து 19வரை வெலி கல்ஓயா, சப்பிரகமுவா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற “பிறிகிம்பினிதியவற”

(3) 2010 யூன் 21 இலிருந்து 24 வரை கிரிபத்கொட விகாரமகா தேவி பாலிகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற “சிசு நிபுணத”

(4) 2010 செத்தெம்பர் 27 இலிருந்து நவெம்பர் 03 வரை கொரண தக்ஷில கல்லூரியில் இடம்பெற்ற கண்காட்சி

(5) 2010 நவெம்பர் 19 இலிருந்து 22 வரை மாத்தறையில் இடம் பெற்ற சவிமத் றட்டக் - இசுறுவற கெட்டக்

(6) 2010 நவெம்பர் 26 இலிருந்து 29வரை கேகாலையில் புனிதஜோசப் மகளிர் பாடசாலையில் இடம்பெற்ற கண்காட்சி

(7) 2010 திசெம்பர் 23 இலிருந்து 27வரை மொரட்டுவ பிறின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரியில் இடம் பெற்ற “மொரட்டு உதானய”

### 5.6 ஞாபகார்த்த நாணயக் குத்திகள் மற்றும் தாள்களின் விற்பனை

ஞாபகார்த்த நாணயக் குத்தி மற்றும் நாணயத் தாள்களை வெளியிடுவது தொடர்பாக நாணயத் திணைக்களம் கொள்கையொன்றை உருவாக்கியதுடன் இதைப் பின்பற்றுவதற்காக நாணயச் சபையின் ஒப்புதலையும் பெற்றுள்ளது. இலங்கை மத்திய வங்கி அதன் 60ஆவது ஆண்டு நினைவினைக் குறிக்கும் விதத்தில் முதற்றடவையாக, பல்வர்ணங்களைக் கொண்ட வெள்ளியிலான ரூ.5,000 இன நாணயக் குத்தியொன்றினை வெளியிட்டது. நாணயத் திணைக்களம் அதன் பீடங்கள் மேல்குறிப்பிட்ட அரும்பொருட் காட்சிச்சாலை மற்றும் கண்காட்சிகளிலூடாக நாணயவியலாளர்களுக்கும், நாணய சேகரிப்பாளர் களுக்கும் ஞாபகார்த்த குத்திகளையும், நாணயப் பொதிகளையும் ஞாபகார்த்த தாள்களையும் தொடர்ந்தும் விற்பனை செய்து வருகின்றது.

## 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதன் முக்கிய தொழிற்பாடுகளாக முக்கியமாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதன் மூலம் மத்திய வங்கியின் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல், நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளை நடைமுறைக்கிடல் மற்றும் அரசாங்கத்திற்கும் வர்த்தக வங்கிகளுக்கும் வங்கியாளராகத் தொழிற்படுதல் ஆகியவற்றினைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

வினைத்திறன் மிக்கதும், காத்திரமானதும் சுமூகமானதுமான உள்நாட்டு இ - கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை பேணுவதற்காக வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை

வணிகர்களுக்கும் ஒரு நாளைக்குள்ளேயான திரவத் தன்மை வசதியை வழங்குவதன் மூலம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழ் தீர்ப்பனவுக்கான நிதியங்களின் கிடைப்பனவை உறுதிப்படுத்தும் துணைப் பணியினையும் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது.


### 6.1 நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்

தொடர்ச்சியாகவும் ஒப்பீட்டு ரீதியில் உயர்வாகவும் காணப்படும் உயர்ந்த ரூபா திரவத்தன்மை 2010ஆம் ஆண்டு முழுவதும் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் அளப்பரிய சவால்களைத் தோற்றுவித்தது. உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் காணப்படும் மெதுவான மீட்சிக்குரிய அடையாளங்கள் மற்றும் 30 ஆண்டு உள்நாட்டு மோதல்களுக்குப் பின்னர் இலங்கை அனுபவிக்கும் விரைந்த வேகமான வளர்ச்சி என்பன ஆண்டின் முதற் காலாண்டுப் பகுதியில் மூலதன உட்பாய்ச்சல்களைத் தூண்டியதுடன் இவை தொடர்ந்தும் ஏற்பட வழிவகுத்தது. இலங்கை ரூபாவின் உறுதியான செலாவணி வீதங்களும் மேம்பட்ட நாட்டிற்கான முறி வீதமும் முதலீட்டிற்குரிய நாடொன்றாக இலங்கை மீது முதலீட்டாளர்களை நம்பிக்கை கொள்ளச் செய்தன. மேம்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகள், தனியார் பணவனுப்பல்கள் மற்றும் உயர் விளைவுகளைக் கொண்ட அரச பிணையங்களில் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் வளர்ந்துவரும் பங்குச் சந்தை என்பன நாட்டில் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மேலும் ஏற்பட வசதியளித்தன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியின் தலையீடு மற்றும் தொடர்ச்சியான உட்பாய்ச்சலின் காரணமாக ரூபா கடுமையாக உயர்வடைவதைத் தடைசெய்தது. எனினும், நாட்டிற்குள் ஏற்பட்ட தேறிய வெளிநாட்டு நாணயப் பாய்ச்சல்கள் ஈர்க்கப்பட்டமையானது, உள்நாட்டுச் சந்தையில் ரூபாவின் திரவத் தன்மை விரைவாக வளர்ச்சியடைய பங்களித்தது.

உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையின் மீட்சிக்கு ஆதரவளிப்பதற்காக குறைந்த பணவீக்கம் மற்றும் பணவீக்கத் தோற்றப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இவ்வாண்டுப் பகுதியில் கொள்கை வீதங்களை இரண்டு தடவைகள் கீழ்நோக்கி குறைத்ததன் மூலம் இலங்கை மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலையினை மேலும் தளர்த்தியது. 2010 யூலையில் மீள் கொள்வனவு வீதமும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.25 சதவீதத்திற்கும் 9.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. 2010 ஓகத்தில் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் 50 அடிப்படைப் புள்ளிகளினால் 9.00 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்பட்டதன் மூலம் கொள்கை வட்டிவீத வீச்சு 225 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 175 அடிப்படைப் புள்ளிகளுக்குக் குறுக்கமடைந்தது. இலங்கை மத்திய வங்கி அதன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டமையானது நாணய இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் வீச்சுக்களின் அளவுகளுக்கிடையில் வங்கிகளுக்கிடையேயான ஓரிரவு சந்தை வீதங்களைப் பேணிக் கொள்ளவும் வசதியளித்தது. (வரைபடம் II.1) வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்கு தேவைப்பாடு ஆண்டு முழுவதும் 7.00 சதவீதத்தில் பேணப்பட்டது.

**வரைபடம் II - 1**

**நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்பு வீதத்தின் நடத்தை - 2010**





உள்நாட்டு வங்கித் தொழில் முறைமையில் திரவத்தன்மை ஆண்டு முழுவதும் மிகையாகக் காணப்பட்டதுடன் அதன் உச்ச மட்டத்தினை ஒத்தோபர் முதல் கிழமையில் பதிவு செய்தது. (வரைபடம் II.2) மிகையான சந்தைத் திரவத் தன்மையில் பெரும் பங்கு மீள் கொள்வனவு ஏலங்களூடாகவும் ஓரிரவு அடிப்படையிலான துணைநில் வசதிகளூடாகவும் தற்காலிகமாக ஈர்த்துக் கொள்ளப்பட்டன. மேலும் ஈர்ப்புக்கள், மத்திய வங்கியின் பிணையங்களின் வழங்கல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்ற ஏலங்கள் என்பனவற்றி னூடாக ஒப்பீட்டு ரீதியில் நீண்டகால அடிப்படையில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை மத்திய வங்கி வசமிருந்த அரச பிணையங்கள் போதுமானதாக இருக்காமையின் காரணமாக உடனடி அடிப்படையில் அத்தகைய பிணையங்களின் விற்பனை ஊடான நிரந்தர ஈர்ப்பு மிகக் குறைவானதாக இருந்தது. 2010 ஒத்தோபரில் இலங்கை ஐ.அ.டொலர் ஒரு மில்லியன் பெறுமதியான (ரூ.112 பில்லியன்) அதன் நாட்டிற்கான மூன்றாவது முறியினை பன்னாட்டு மூலதனச் சந்தையில் வழங்கியது. இந் நிதியத்தின் ஒரு பகுதி வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளில் இருந்த அரச பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்யும் அரசாங்கத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதிக் கடப்பாடுகளின் கொடுப்பனவிற்கும் பயன்படுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின், ஐ.அ.டொலர் 878 மில்லியன் கொண்ட எஞ்சிய தொகையின் கொடுப்பனவு வங்கித் தொழில் முறைக்கு ரூ.98 பில்லியனைக் கொண்ட மேலதிகத் திரவத்தன்மையினை உள்ளீடு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகரித்துச் செல்லும் ரூபாத் திரவத் தன்மை நிலைமையினைக் கையாளும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி ரூ.55 பில்லியன் பெறுமதியான அரச பிணையங்களின் அதன் சொந்த இருப்பினை இளைப்பாறச் செய்ததன் மூலம் சந்தைத் திரவத் தன்மையின் தேறிய அதிகரிப்பு ரூ.43 பில்லியனிற்கு மட்டுப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக திரவத்தன்மை மிகை ஒத்தோபர் முதற் கிழமையில் ரூ.173 பில்லியன் கொண்ட மிக உயர்ந்த மட்டத்தினைப் பதிவு செய்தது.

உள்நாட்டுப் பணச்சந்தையானது இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சியினையும் பிரதிபலிக்காது அதன் குறுங்கால வட்டிவீதங்களில் தொடர்ந்தும் ஒழுங்கற்ற தன்மைகளை கொண்டிருந்தது. வங்கித் தொழில் முறைமையில், குறுங்கால திறைசேரி விளைவுகள், விடாப்பிடியான மிகையான குறுங்கால நிதியங்களின் மீதான ஓரிரவு மீள் கொள்வனவு வீதங்களிலும் பார்க்க தொடர்ந்தும் குறைவாக வர்த்தகப்படுத்தப்பட்டமையானது

முதலீட்டிற்கான மாற்று ஏற்பாடொன்றாக குறுங்கால அரச பிணையங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டமையினை எடுத்துக் காட்டியது. இதன் விளைவாக இலங்கை மத்திய வங்கி ஓரிரவு மீள் கொள்வனவு ஏலங்களை நடத்துவதிலிருந்தும் விலகி 2010 ஒத்தோபர் 20ஆம் நாளிலிருந்து திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் தற்காலிகமான ஏலங்களூடாக கால அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்கியமையானது குறுங்கால சந்தை வட்டிவீதங்களில் சீராக்கங்களை ஏற்படுத்தி வட்டி வீதங்களில் பெருமளவிற்கு ஒப்பீட்டுத் தன்மையொன்றிற்கு வசதியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வுபாயம் குறுங்கால வட்டி வீதங்களில் காணப்பட்ட முரண்பாடுகளை விரைந்து சீராக்கம் செய்வதற்கு பெருமளவிற்கு வசதியளித்தது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் அவர்களின் மிகையான நிதியங்களை துணைநில் வசதியின் கீழ் ஓரிரவு அடிப்படையில் ஆண்டொன்றிற்கு 7.25 சதவீதம் கொண்ட மீள் கொள்வனவு வீதத்தில் மத்திய வங்கியில் வைப்புச் செய்ய அவை தொடர்ந்தும் அனுமதிக்கப்பட்டன. எனினும் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல் ஏலங்கள் எவ்வித கட்டுப்பாடுமின்றி தொடர்ந்து நடத்தப்பட்டன.

**வரைபடம் II - 2**

**முதலீடுகளின் வகைகளின்படி வெளிநின்ற மொத்த சந்தைத திரவத் தன்மை - 2010 (மாதாந்த சராசரி)**




மத்திய வங்கி வசமிருந்த அரச பிணையங்கள் கடுமையாகக் குறைவடைந்த நிலைமையில் மத்திய வங்கிப் பிணையங்களை வழங்கியமையின் மூலம் திரவத் தன்மையினை ஈர்க்கும் செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

எனினும், குறுங்கால முதலீடுகளுக்கான வங்கிகளுக்கிடையேயான சந்தையில், பங்கேற்கும் நிறுவனங்களினால் எதிர் நோக்கப்பட்ட பிரச்சனைகள் உள்ளிட்ட அமைப்பியல் பிரச்சினைகள் திரவத் தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கு மத்திய வங்கிப் பிணையங்களை தொடர்ந்தும் பயன்படுத்துவதனை மட்டுப்படுத்தின. மேலும், இலங்கை மத்திய வங்கியின் ஐந்தொகையில் காணப்படும் உயர்ந்த செலவுகள் திரவத் தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கு மாற்று வழிமுறைகளை நாடுவதற்கு இலங்கை மத்திய வங்கியைத் தூண்டின. இதன் விளைவாக, ஆண்டின் நான்காம் காலாண்டுப் பகுதியில் "அரச பிணையங்கள் கடன்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்" என்ற பெயரிலான புதிய திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ், மத்திய வங்கி, பெரும்பாலும் பாரிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களை (பெரிய முறியை) கடனாக வாங்கி திறந்த சந்தை தொழிற்பாடுகளின் கீழ் அவற்றை மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கான பிணையாகப் பயன்படுத்தியது. கடன்பட்ட கருவிகளை மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பயன்படுத்துவது மத்திய வங்கிப் பிணையங்களுடன் ஒப்பிடுகையில், கடன்பாட்டுச் செலவினை உள்ளடக்கிய பின்னரும்கூட மிகக் குறைந்த செலவினையே ஏற்படுத்துவதாக இருந்தது. எனவே புதிய ஒழுங்கானது மத்திய வங்கியின் ஐந்தொகையின் மீதான உயர்ந்து காணப்படும் செலவுத் தாக்கத்தினை குறைப்பதற்கு பயன்மிக்கதொன்றாக இருந்தது. மேலும், குறிப்பிட்ட பிணையம் அரச பிணையங்களாக இருப்பதனால் சந்தைப் பங்கேற்பாளர்களினால் காட்டப்படும் திரவத் தன்மையின் மீது எவ்வித வேறுபாடும் இருக்கவில்லை. மேலும் இந் நிகழ்ச்சித்திட்டம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முதிர்ச்சிக் காலம் வரை எவ்வித பயனுமின்றி வெறுமனே வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் தற்பொழுது அவற்றின் உடமையாளர்களுக்கு மேலதிக வருவாயினை வழங்கவும் அனுமதிக்கிறது. இப்புதிய வழங்கலானது உள்நாட்டு முறி கடன் வழங்கல் சந்தைக்கான பூர்வாங்க வேலைகளை விருத்தி செய்வதற்கான வாய்ப்பினை உருவாக்குமென இலங்கை மத்திய வங்கி எதிர்பார்க்கிறது. புதிய திட்டத்தினூடாக மத்திய வங்கியின் ஐந்தொகை 2010இல் ஏறத்தாள ரூ.114 மில்லியன்களைச் சேமிக்கக் கூடியதாக இருந்தது.

### 6.1.1 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

#### (அ) ஓரிரவு மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்


வங்கித் தொழில் முறைமையில் காணப்பட்ட மிகையான திரவத் தன்மை முக்கியமாக திறைசேரி உண்டியல்களை விற்பதற்கான ஏலங்களை நடத்துவதன் மூலம் ஈர்க்கப்பட்டது. இதனை மத்திய வங்கி ஒத்தோபர் 19ஆந் திகதிவரை மீள் கொள்வனவு அடிப்படையில் நடத்தியது. நாளொன்றிற்கு சராசரியாக ஏறத்தாள ரூ.25 பில்லியன் ஏலங்களில் வழங்கப்பட்டதுடன், இது ஏறக்குறைய உண்மையான நாளாந்த திரவத் தன்மையில் 90சதவீதமாக இருந்தது. ஓரிரவு மீள் கொள்வனவு ஏலத்தின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் ஆண்டின் தொடக்கத்தில் 8.24 சதவீதத்திலிருந்து மூன்றாம் காலாண்டில் 7.68 சதவீதத்திற்கு படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. நிறையேற்றப்பட்ட சராசரி மீள் கொள்வனவு வீதம் வீச்சின் அளவிற்குள் நகர்ந்தமையானது உறுதியான சந்தை நிலைமைகளை தெளிவாகக் காட்டுவதாகவுள்ளது.

பிரிவு 6.1இன் கீழ் விளக்கப்பட்டவாறு, புதிதாக அறிமுகப்படுத்தப் பட்ட பிணையங்கள் கடன்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ஊழியர் சேம நிதியத்திலிருந்து கடன் பெற்ற அரச முறிகளைப் பிணையாகப் பயன்படுத்தி (மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில்) அரச பிணையங்களை மத்திய வங்கி தொடர்ந்து வழங்கியது.

**வரைபடம் II - 3**

**திறந்த சந்தை நடவடிக்கை மீள் கொள்வனவு ஏலம்**

**(மாதாந்த சராசரி மற்றும் நிறையேற்றப்பட்ட சராசரி மீள் கொள்வனவு வீதங்கள்) 2010**



### (ஆ) உடனடிக் கொடுக்கல் வாங்கல்கள்

நிரந்தர அடிப்படையில் அளவுக்கதிகமான திரவத் தன்மையினை ஈர்க்கும் பொருட்டு மத்திய வங்கி அதன் சொத்துப் பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்களை விற்பதற்கு மத்திய வங்கி உடனடி ஏலவிற்பனைகளை நடத்தியது. உடனடி ஏல விற்பனை களூடாக விற்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதி 2010இல் ரூ.13 பில்லியனாக விளங்கியது. விற்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் காலம் 8 நாட்களிலிருந்து 57 நாட்கள் வரையிலான வீச்சினுள் காணப்பட்டிருக்கையில் விளைவு வீதங்கள் 7.8 சதவீதத்திலிருந்து 8.5 சதவீதம் கொண்ட வீச்சினுள் காணப்பட்டன.

### 6.1.2. இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் வழங்கல்

மிகையான சந்தைத் திரவத் தன்மையினை ஈாப்பதற்கு அரச பிணையங்கள் அதன் பட்டியலில் போதுமானதாக இல்லாமையினால் திரவத் தன்மையினை அகற்றுவதற்கு ஓரிரவு மற்றும் கால அடிப்படை இரண்டிலும் இலங்கை மத்திய வங்கி பிணையங்களை வழங்கியது. ஒத்தோபர் 19ஆம் திகதிவரை ஓரிரவு ஏலங்களில் சராசரியாக ரூ. 39 பில்லியன் பெறுமதியான மத்திய வங்கிப் பிணையங்கள் வழங்கப்பட்டதுடன் ரூ.35 பில்லியன் ஏற்கப்பட்டன. நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் (வரி நீங்கலாக) 7.8 சதவீதத்திற்கும் 8.3 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டன. சில சந்தர்ப்பங்களில் முறிகளின் கடன்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்துவதற்கு முன்னர், மத்திய வங்கிப் பிணையங்கள் துணைநில் வசதியின்கீழ் மீள் கொள்வனவு வீதத்தில் வழங்கப்பட்டன.

மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக கால அடிப்படையில் இலங்கை மத்திய வங்கி பிணையங்களும் வழங்கப்பட்டன. தவணை ஏலங்களின் காலப்பகுதி 2010இல் 11 நாட்களிலிருந்து 32 நாட்கள் வரையில் வேறுபட்டன. நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 7.8 சதவீதத்திலிருந்து 8.9 சதவீதம் (வரி நீங்கலாக) வரையில் வேறுபட்டது.

### 6.1.3 வெளிநாட்டு செலாவணி பரிமாற்றல்கள் கொடுக்கல் வாங்கல்கள்

மிகையான திரவத் தன்மையை ஈர்க்கும் ஒரு கருவியாக 2009 இறுதியளவில் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல் ஏலங்கள் (வாங்கல் விற்றல்) 2010ஆம் ஆண்டில் சந்தைப் பங்கேற்பாளர்களிடையே மிகப் பிரபல்யம்பெற்ற ஒன்றாக மாற்றமடைந்தது. இவ்வாண்டுப் பகுதியில் இந் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட பரிமாற்றல்களின் மொத்தப் பெறுமதி ரூ.243 பில்லியன்களாக (ஐ.அ.டொலர் 2,147 மில்லியன்) காணப்பட்டது.

### 6.1.4 துணைநில் வசதிகள்

ஆண்டு முழுவதும் நாளாந்த ஏலங்களில் தமது கிடைக்கத்தக்க நிதிகளை முதலீடு செய்ய இயலாத பங்கேற்கும் நிறுவனங்கள் ஓரிரவு அடிப்படையில் மீள் கொள்வனவு வீதத்தில் துணை நில் வசதிகளைப் பயன்படுத்தி அவற்றின் மொத்த மிகையான திரவத்தன்மையினை வைப்புச் செய்தன. இதன் விளைவாக, ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதியிலும் துணைநில் வசதியின் கீழான சராசரி முதலீடு நாளொன்றிற்கு ரூ.2 பில்லியனாக விளங்கியது. இது 2010இன் இறுதிக் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ.94 பில்லியன் கொண்ட சராசரி வைப்புக்களைவிட பெரிதும் சிறிதாக இருந்தது. முற்றுமுழுதாக வேறுபட்டதொன்றாகும். இதன் பெறுபேறாக, 2010ஆம் ஆண்டிற்கான துணைநில் வசதியின் கீழான மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் நாளொன்றிற்கு ஏறத்தாள ரூ.26 பில்லியன்கள் என பதிவு செய்யப்பட்டன. துணைநில் வசதியின் கீழான மீள் கொள்வனவுகள் ஆண்டின் பிற்பகுதியில் திரவத்தன்மையினை ஈர்க்கின்ற முக்கிய கருவியொன்றாக மாற்றமடைந்தவேளையில் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்கள் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு பங்களித்தன.

### 6.1.5 நியதி ஒதுக்குத் தேவைப்பாடு

நியதி ஒதுக்குத் தேவைப்பாடு என்பது, ஒவ்வொரு வர்த்தக வங்கியும் அத்தகைய வங்கி ஒவ்வொன்றினதும் வைப்புப் பொறுப்புக்களின் அடிப்படையில் விகிதத்திற்கேற்ப இலங்கை மத்திய வங்கியுடன் பேணப்படும் ஒதுக்குகள் கணக்கில் மத்திய வங்கியின் ஒழுங்குகளின் நியதிகளில் கட்டாயமாக வைத்திருக்க வேண்டிய குறைந்தபட்ச ஒதுக்கொன்றாகும். உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 2010 ஆண்டு முழுவதும் ரூபா வைப்புப் பொறுப்புக்களின் 7.0 சதவீதத்தில் நிலைத்திருந்த நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டைப் பேணுவதற்குப் பொறுப்பாகவுள்ளது.

### 6.1.6 வங்கி வீதம்

நாணய விதிச் சட்டத்தின் 87ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதமானது (வங்கிவீதம்) 15 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. எனினும் இவ்வாண்டில், மத்திய வங்கியின் வங்கி வீதத்தில் கடன் பெறுவதற்குரிய தேவை எந்த வங்கிக்கும் எழாதபடியால், இந்த வீதம் கருத்தாக மட்டுமே இருந்தது. வங்கியியல் முறைமையானது மிகையான திரவத் தன்மையுடன் காணப்பட்டதுடன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதங்கள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

## 6.2 வர்த்தக வங்கிகளுக்கும் அரசிற்கும் வங்கியாளராகத் தொழிற்படுகின்றமை

### 6.2.1 நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை தொழிற்படுவதை வசதிப்படுத்தும் விதத்தில் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்குமான நடைமுறைக் கணக்கு வசதிகளை திணைக்களம் வழங்கியதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் பங்குகளில் ஒன்றான வர்த்தக வங்கிகளின் வங்கியாகத் தொழிற்பட்டது. 2010இன் இறுதியில் உள்ளவாறு, இலங்கை மத்திய வங்கி 22 வர்த்தக வங்கிகள், 8 முதனிலை வணிகர்களுக்கான கணக்குகளைப் பேணியது. இக் கணக்குகள் வங்கியின் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப்பேரேட்டு முறைமைக் கமைவாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு அடிப்படையில் தொழிற்படுத்தப்பட்டன.

### 6.2.2. அரச கணக்குகள்

அரசுக்கான வங்கியாளராகத் தொழிற்படுகின்ற உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அரச திணைக்களங்கள், அரச

முகவர்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளையும் பேணி தேவையான வங்கித் தொழில் வசதிகளையும் வழங்கியது. திறக்கப்பட்ட மூன்று புதிய கணக்குகள் உட்பட 2010 இறுதியில் மத்திய வங்கியால் பேணப்பட்ட கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 57ஆக விளங்கியது. நாணயச் சட்ட விதியின் பிரிவு 89இன் நியதிகளில் மத்திய வங்கி அரசுக்கு முற்பணங்களை வட்டியில்லாமல் வழங்குகின்றது. அத்தகைய முற்பணங்கள் மீதான வரையறை மதிப்பிடப்பட்ட அரச அரசிறையின் 10 சதவீதமாக இருக்கிறது. 2010இல் மதிப்பிடப்பட்ட குறைந்த அரசிறையின் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010இல் வழங்கப்பட்ட தற்காலிகமான முற்பணங்கள் முன்னைய ஆண்டிலிருந்து ரூ.84 பில்லியனுக்கு ரூ.3 பில்லியனால் குறைவடைந்தன.


### 6.3 ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி ஏற்பாடு

வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாட்டை வழங்குவதன் மூலம் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமுகமானதும் வினைத்திறன் மிக்கதுமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்தியது. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளைப் பிணையாகக் கொண்டு கட்டணமெதுவுமின்றி வழங்கப்படுவதுடன் இவை அதே நாளில் விலைகளில் ஏற்படக் கூடிய மாற்றங்களை உள்ளடக்குவதற்குப் போதுமான இலாபம் ஒன்றிற்கேற்ப இப்பிணையங்கள் அவற்றின் நடைமுறைச் சந்தை விலைகளில் மதிப்பிடப்படுகின்றன. 2010ஆம் ஆண்டின் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி யாதெனில் ஒரு நாளுக்குள்ளேயான நிதிகள் தேவையான வேளைகளில் பெற்று திரும்பி வழங்குவதற்கு பங்கேற்கும் நிறுவனங்களை இயலச் செய்த "பங்கேற்பாளர் முகாமைத்துவ ஒரு நாளுக்குள்ளேயான திரவ நிதி முறைமை" நடைமுறைப்படுத்தப்பட்டமையாகும்.

இவ்வாண்டில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மொத்தப் பெறுமதியும், சராசரிப் பெறுமதியும் முறையே ரூ.2,747 பில்லியனாகவும் ரூ.11 பில்லியனாகவும் விளங்கியது. இது முன்னைய ஆண்டின் ரூ.2,725 பில்லியனுடனும் ரூ.12 பில்லியனுடனும் ஒப்பிடுகையில் சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியது. வங்கிகளுக்கிடையேயான வீதமான வங்கி வீதத்திலும் மேலதிகமான தண்டவீதம் மற்றும் திரும்பத் திரும்ப செலுத்தத் தவறுவதற்காக வசதியை இடைநிறுத்துவது போன்ற கடுமையான

**வரைபடம் II - 4**

**ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி எடுப்பனவு 2010**




வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியமை லங்கா செற்றிலின் வியாபாரத்தை மூடுவதற்கு முன்பு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாடு உரிய முறையில் எதிர்மாற்றமடைந்ததை உறுதிப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, 2010இல் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகள் செலுத்தத் தவறிய நிகழ்வுகள் எதுவும் காணப்படவில்லை.

## 7. பொருளாதார ஆராய்ச்சி

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி அதன் மையக் குறிக்கோளான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை அடையும் கொள்கைத் தீர்மானத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் அதன் நியதிச் சட்டப் பொறுப்புக்களை தொடர்ந்து நிறைவேற்றியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பான அனைத்தையுமுள்ளடக்கிய பகுப்பாய்வினைத் தொடர்ந்தும் வழங்கியதுடன் முகாமைத்துவத்திற்கும் நாணயச் சபைக்கும் கொள்கைகளை விதந்துரைத்த வேளையில் அரசாங்கத்திற்கான பொருளாதார மதியுரையாளர் என்ற மத்திய வங்கியின் பொறுப்புக்களை ஆற்றுவதில் முகாமைத்துவத்திற்கு உதவிகளை வழங்கியது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாட்டின் பொருளாதார மற்றும் நிதியியல் அபிவிருத்திகள் மீதான தகவல்களை நியதிச்சட்ட மற்றும் ஏனைய வெளியீடுகள், பத்திரிகை வெளியீடுகள் மற்றும் மத்திய வங்கியின் வெப்தளத்தினை நாளதுவரை பூரணப்படுத்தல் என்பவற்றினூடாக பொது மக்களுக்கான தகவல்களைத் தொடர்ந்தும் பரப்பியது. இப் பொறுப்புக்களை மேற்கொள்கையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் கொள்கை சார்ந்த பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொண்ட வேளையில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு மூலங்களிலிருந்தான பேரண்டப் பொருளாதார தரவுகளைச் சேகரித்து திரட்டியதுடன் பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான அனைத்தையுமுள்ளடக்கிய பகுப்பாய்வுகளையும் மேற்கொண்டது. இவ்வாண்டில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு கொள்கை மதியுரைக் குழுக்களின் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தவேளையில் வங்கியிலுள்ள பல்வேறு திணைக்களங்களுக்கும் பொருளாதார மதியுரைகளை வழங்கியதுடன் அவற்றினால் அனுப்பி வைக்கப்பட்ட பல்வேறு பிரச்சனைகளிலும் அதன் அவதானிப்புக்களை செலுத்தியிருக்கிறது.

### 7.1 நாணயக் கொள்கை வடிவமைப்பிற்கு உதவுவதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்

பொருளாதார அபிவிருத்தி, அதேபோன்று தொழில்நுட்பவியல் முன்னேற்றம் மற்றும் நிதியியல் முறைமைகளில் ஏற்பட்டுவரும் புத்தம் புதிய விடயங்கள் என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஏற்கனவேயுள்ள நாணயக் கொள்கையினை வலுப்படுத்தும் பொருட்டு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தற்போதுள்ள நாணயக் கொள்கைக் கட்டமைப்பிற்கு முன்னேற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பான சாத்தியங்களை ஆராய்ந்தது. இது, நிதியியல் பாய்ச்சல்களிலும் பணத்திற்கான கேள்வியினதும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் பொருளாதாரத்தில் ஏற்பட்டு

வருகின்ற பாரிய அமைப்பியல் மாற்றங்களை நோக்கும் பொழுது குறிப்பிடத்தக்களவிற்கு அவசியமானதொன்றாகவே காணப்படுகின்றது. ஆய்வினைத் தொடர்ந்து, நாணய இலக்கிடல் கட்டமைப்பிற்குள் நாணயக் கொள்கையை வடிவமைப்பதில், பொருளாதாரத்தின் மீது குறுகிய காலத்திலிருந்து நடுத்தரகாலம் வரை தாக்கங்களை கொண்டிருக்கக் கூடிய பொருளாதார மற்றும் நாணய அபிவிருத்திகளின் பகுப்பாய்வுகளின்மீது (இரட்டைப் பகுப்பாய்வு) பெருமளவு வலியுறுத்தல்களை மேற்கொள்வதென வங்கி தீர்மானித்தது.

நாணயச் சபையின் பரிசீலனைக்காக நாணயக் கொள்கையினை விதந்துரைக்கின்ற நாணயக் கொள்கைக் குழுவின் தீர்க்கமான சிந்தனைகளுக்கும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வசதியளித்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பொருளாதாரம் மற்றும் நாணய பகுப்பாய்வுகள் தொடர்பான அனைத்தையும் உள்ளடக்கிய அறிக்கைகளை நாணயக் கொள்கை குழுவிற்காகவும் நாணயச் சபைக்காகவும் கிரமமான அடிப்படையில் தயாரித்தது.

பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட துறைகளுக்குமான கொடுகடன் பாய்ச்சலை அடையாளம் காணும் நோக்குடன் தனியார்துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனை மீளவும் வகைப்படுத்துவதற்காக 2010இல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தனியார் துறைக்கான வர்த்தக வங்கிகளின் முற்பணங்கள் மீதான அளவீட்டினை மேம்படுத்தியது. நாணயக் கொள்கை தீர்மானத்தினை மேற்கொள்ளும் செயற்பாட்டில் இது பயன்மிக்கதொன்றாக இருக்கமுடியும்.

மேலும் 2010இல் பிராந்திய மத்திய வங்கிகளிடையேயும் கொள்கை வகுப்போரிடையும் அண்மைய ஆராய்ச்சியில் கண்டறிந்தவற்றை கலந்துரையாடுவதற்காகவும் அவர்களின் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்குமான சந்தர்ப்பமொன்றினை வழங்குவதற்காக மூன்றாவது பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடொன்றினை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஒழுங்கு செய்தது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திலுள்ள அலுவலர்கள் தென் கிழக்காசிய மத்திய வங்கிகள் போன்ற பன்னாட்டு அமைப்புக்களுடன் கூட்டு ஆராய்ச்சிகளை நடத்துவதிலும் ஈடுபட்டிருந்தனர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தில் அறிவினைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்தல் என்பனவற்றின் பொருட்டு திணைக்களத்திலுள்ள அலுவலர்களினால் வாராந்த ஆய்வரங்குகள் நடத்தப்பட்டதுடன், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திலுள்ள அலுவலர்களின் அறிவாற்றலை உயர்த்துவதற்காக குறிப்பிட்ட நேரத்தில் முக்கியத்துவம் பெற்ற விடயங்களின் மீதான ஆராய்ச்சிகளை பேணி வளர்க்கும் பொருட்டு 2010இல் பின்வரும் ஆய்வுப் பத்திரங்கள் நிறைவு செய்யப்பட்டதுடன் அவை மத்திய வங்கியின் உயர் அலுவலர் ஆய்வுகளில் வெளியிடப்படவுள்ளன.

(அ) “நிதி - வளர்ச்சி தொடர்பு - இலங்கைளிலிருந்தான சான்றுகள்” - திரு. எச். அமரதுங்க

(ஆ) “இலங்கையின் பங்குச் சந்தையில் வருவாயின் தளம்பல்களும் சமச்சீரற்ற செய்திகளின் தாக்கமும்” திருமதி. சுஜீதா ஜெகஜீவன்

2010இல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மாதாந்த காலாண்டு, மற்றும் வருடாந்த கைத்தொழில் உற்பத்தி அளவீடுகளை தொடர்ந்தும் நடத்தியதுடன் கைத்தொழில் துறைச் செயலாற்றத்தினை மதிப்பிடுவதற்காக கைத்தொழில் உற்பத்தி அளவுச் சுட்டெண்ணினையும் திரட்டியது. 2010ஆம் ஆண்டில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு பல கள விஜயங்களை மேற்கொள்வதற்கு அதன் அலுவலர்களை ஒழுங்கு செய்ததுடன் தனியார்துறை கைத்தொழில் உற்பத்தி அளவீட்டினை எவ்வாறு மேலும் மேம்படுத்துவது என்பது பற்றியும் கலந்துரையாடியது. மேலும் கைத்தொழில் துறையின் செயலாற்றம் மற்றும் பிரச்சனைகள் பற்றி சிறந்த விளக்கங்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு கூட்டு ஆடைகள் சங்க அரங்கம் போன்ற பல்வேறு கைத்தொழில் துறைகளிலிருந்தான பிரதிகளுடன் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் சந்திப்புக்களை மேற்கொண்டனர். வீடமைப்பு ஒப்புதல் சுட்டெண்ணினை தயாரிக்கும் பொருட்டு கொழும்புப் பெரும்பாகத்தில் வீடமைப்பு ஒப்புதல்கள் மீதான அளவீடொன்று நடத்தப்பட்டது.

தனியார் துறையின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம் நாணயக் கொள்கை தீர்மானங்களை மேற்கொள்ளும் செயல்முறைகளை வலுப்படுத்துவதற்காக நிறுவப்பட்ட நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவுடனான கூட்டங்களை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஒருங்கிணைத்தது. 2010இல் நாணயக் கொள்கை ஆலோசனைக் குழு பேராசிரியர் ஏ.டி.வி.த இந்திரரத்ன (தலைவர்) திரு.சோலி கப்டன், திரு.யோகான் பெரேரா, திரு. மகேன் தயானந்த, திரு. ஆர்.எம்.பீ. சேனநாயக்க, திரு.எம். பி. ஜயவர்த்தன, திரு. குப்பி விஜேதுங்க மற்றும் திரு. அமல் கப்ரால் ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. நாணயக் கொள்கை ஆலோசனைக் குழு பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை மீளாய்வு செய்து விதந்துரைப்புக்களை மேற்கொள்வதற்காக மாதாந்த அடிப்படையில் கூடியதுடன் இதன்மூலம் நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

## 7.2 நியதிச் சட்ட அறிக்கைகளையும் ஏனைய அறிக்கை களையும் தயாரித்தலும் வெளியிடுதலும்

முன்னைய ஆண்டுகளைப் போன்றே மற்றைய திணைக்களங்களின் உதவியுடன் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2009ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கை அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் - 2010 இன் முக்கிய பண்புகளும் 2011இற்கான வாய்ப்புக்களும், மற்றும் மாதாந்த செய்தித் திரட்டு என்பனவற்றை தயாரித்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வரவு செலவுத் திட்டத்தினை அரசாங்கம் தயாரிப்பதனை வசதிப்படுத்துவதற்காக நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 116 (1) இன் கீழ் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படவுள்ள இரகசிய அறிக்கையான செத்தெம்பர் 15ஆம் நாள் அறிக்கையினையும் தயாரித்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் முக்கியமான பொறுப்புக்களில் ஒன்று பல்வேறுபட்ட பொருளாதார துறைகள் மீதான முக்கியமான பொருளாதார தரவுகளையும் தகவல்களையும் பொது மக்களுக்குப் பரப்புவதாகும். இத் தேவைப்பாட்டினை நிறைவு செய்யும் விதத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாணயக்

கொள்கை, சென்மதி நிலுவை, மற்றும் பன்னாட்டு வர்த்தகம் என்பன தொடர்பான பத்திரிகை வெளியீடுகள், கிரமமாக வெளியிடப்பட்டதுடன் முக்கியமான பொருளாதார தகவல்களைப் பொது மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டிய தேவை ஏற்படும் வேளைகளிலெல்லாம் சிறப்புப் பத்திரிகை வெளியீடுகளும் விடுக்கப்பட்டன.

தொடர்ந்து நான்காவது ஆண்டாக, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் "வழிகாட்டல்: 2010 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல்துறைக் கொள்கைகள்" என்ற மத்திய வங்கியின் கொள்கை அறிக்கையைத் தயாரித்தது. இது 2010 சனவரி 4ஆம் நாளன்று பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டது. எதிர்வரும் காலத்தில் ஆர்வலர்கள் தமது சொந்தத் திட்டங்களையும் உபாயங்களையும் வடிவமைப்பதற்கும் சிறந்த முறையில் வரையறுப்பதற்கும் அவர்களுக்கு உதவக்கூடிய கொள்கை ஊகங்களையும் வெளிப்படையான தன்மைகளையும் உயர்த்துவதே வழிகாட்டலின் நோக்கமாகும். இதேபோன்றதொரு கொள்கை அறிக்கை 2011 இற்காகவும் தயாரிக்கப்பட்டு 2011 சனவரி 04ஆம் நாளன்று அறிவிக்கப்பட்டது.

திணைக்களம் முக்கியமான பொருளாதார மற்றும் நாணய தாக்கங்களைக் கொண்ட அமைச்சரவைப் பத்திரங்களின்மீது அதன் சுதந்திரமான கருத்தினை தொடர்ந்தும் வழங்கியது. இது அரசாங்கத்தினால் பெறப்பட்ட அனைத்து வெளிநாட்டுக் கடன்களின் நாணயத் தாக்கங்களையும் தொடர்ந்து மதிப்பீடு செய்து நாணயச்சபைக்கு அதன் விதந்துரைப்புக்களை மேற்கொண்டது.

### 7.3 அறிவாற்றலை வளர்த்துக் கொள்வதற்கும் நிபுணத்துவத்தினை பகிர்ந்து கொள்வதற்குமான பங்களிப்பு

மத்திய வங்கிக்குள்ளும் அதற்கு வெளியிலும் பொருளாதாரத்தின் மீதான அறிவாற்றலை மேம்படுத்துவதற்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் அலுவலர்களது நிபுணத்துவத்தினை தொடர்ந்தும் பகிர்ந்து கொண்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்திலும் பல்கலைக்கழகங்கள், பள்ளிக்கூடங்கள், மற்றும் பல்வேறு ஏனைய அரச தனியார்துறை நிறுவனங்களிலும் மூலவள ஆட்களாகப் பணியாற்றியுள்ளனர். மேலும் அலுவலர்கள் வங்கிக்கு வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தூதுக் குழுக்களுக்கு மத்திய வங்கித் தொழில் மற்றும் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளிலும் விளக்கமான உரைகளை வழங்கினர். மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் மத்திய வங்கியின் பட்டப் பின்படிப்பினை படிக்க விழைகின்றவர்களுக்கு ஆராய்ச்சி முன்மொழிவுகளையும் ஆராய்ச்சிப் பத்திரங்களையும் தயாரிப்பதற்கும் உதவியது.

திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் வங்கியிலுள்ள பல்வேறு குழுக்களிலும் அதேபோன்று வெளியேயுள்ள நிறுவனங்களின் சபைகளிலும் பணியாற்றினர். அவர்கள் பிரதிநிதித்துவம் வகித்த குழுக்கள் தேசிய உயர்கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை மீதான குழுக்கள், உயர் கல்வி அமைச்சின் முகாமைத்துவக் குழு, எம் 7 வகுப்பு தொடர் புகைவண்டிகளை புதுப்பிப்பதன் மீதான குழு, புதுப்பிக்கத்தக்க வலு மீதான சனாதிபதி செயலணிக்குழு, பிரதேசங்களுக்குள்ளேயான ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பதற்கான மாகாண ரீதியிலான வளர்ச்சியை மேம்படுத்துவதன் மீதான நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல் குழு, தேசிய தொழில் முயற்சிகள் அதிகார சபையிலுள்ள கொள்கை பரிந்துரை மீதான தொழிற்பாட்டுக்குழு, சமூக பொருளாதாரம் மீதான தேசிய குழு வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கொள்கைக்கான இலங்கைச் சபையில் சமூக பொருளாதார மற்றும் கொள்கைப் பகுப்பாய்வின் மீதான தேசிய குழு, இலங்கையின் தொழிலாளர் மற்றும் சமூக போக்குகளைப் பகுப்பாய்வு செய்வதன் மீதான பன்னாட்டு தொழிலாளர் அமைப்புக்குழு - 2010, மக்கள் வங்கியின் பொருளாதார மீளாய்வு மதியுரைக்குழு, நலக் கவனிப்பு நிதியிடல் மீதான வழிகாட்டல்குழு, மற்றும் திறைசேரியிலுள்ள நிதியியல்துறைகள் சார்புக் குழு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள், வர்த்தக ரீதியில் ஆற்றலற்ற அரச நிறுவனங்களை பரீட்சித்து அறிக்கை அளிப்பதற்காக அரச மூலவளங்கள் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சினால் நியமிக்கப்பட்ட அலுவல்சார் குழுக்களிலும் அங்கத்தவர்களாக பணியாற்றினர். 2010 நவெம்பர் 4 - 5 ஆம் திகதிகளில் ஜெனிவா சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற இலங்கைக்கான வர்த்தக கொள்கை மீளாய்விற்கான இலங்கைத் தூதுக் குழுவில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களும் இணைந்திருந்தனர். மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் நிதி திட்டமிடல் அமைச்சு உற்பட பல்வேறு அமைச்சுக்களினால் நடாத்தப்படும் கூட்டங்களில் வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

### 7.4 பன்னாட்டு உறவுகள்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மத்திய வங்கி மற்றும் அரசாங்கத்தின் சார்பில் ப.நா.நிதியம், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, தென்கிழக்காசிய மத்திய வங்கிகள், தென்கிழக்காசிய, நியூசிலாந்து, அவுத்திரேலியா போன்ற பன்னாட்டு பல்புடை நிதியியல் அமைப்புக்களுடன் தொடர்ந்தும் இணைப்புக்களை மேற்கொண்டிருந்தது. இவ்வாண்டுப் பகுதியில் ப.நா.நிதியம் - துணைநில் ஒழுங்கு வசதியினை மீளாய்வு செய்வதற்காக இலங்கைக்கு வருகை தந்த நான்கு ப.நா.நிதிய அலுவலர் தூதுக் குழுக்களுடன் நெருங்கிப் பணியாற்றியதுடன் ப.நா.நிதியம் துணை ஒழுங்கு வசதியின்கீழ் கிரமமாக தரவு அறிக்கையிடும் பொறுப்புக்களையும் மேற்கொண்டது. இத்துடன், பொர்ருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாட:டுக்கான வெளிநாட்டு தரமிடல் முகவர்களான மூன்று நிறுவனங்களான பிட்ச் றேற்றிங், எஸ்.பி. றேற்றிங் மற்றும் மோடிஸ் றேற்றிங் என்பவற்றுடன் நெருங்கிப் பணியாற்றியது. மேலும், பேரண்டப் பொருளாதார மற்றும் நாணயக் கொள்கை முகாமைத்துவம் மற்றும் நுண்பாக நிதி நிறுவனங்களின் ஒழுங்கு விதிகள் மற்றும் மேற்பார்வை என்பன தொடர்பான இரண்டு தென்கிழக்காசிய மத்திய வங்கிப்பாட நெறிகள் வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையத்தின் ஒத்துழைப்புடன் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டன.

## 8. ஊழியர் சேம நிதியம்

ஊழியர் சேம நிதியம் 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதியத்தின் ஏற்பாடுகளிலுள்ள நியதிகளில் 2010இல் அதன் கடமைகளைத் தொடர்ந்து செயலாற்றி தொழிற்பாடுகளை நிறைவேற்றியது. இவை உறுப்பினர் உதவுதொகைகளையும் மேலதிகக் கட்டணங்களையும் சேகரித்தல், உறுப்பினர் கணக்குகளைப் பேணுதல், மிகையான நிதியங்களை முதலீடு செய்தல், ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் கீழ் நாணயச் சபை மற்றும் தொழில் ஆணையாளர் தமது கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை மேற்கொள்வதில் ஏற்படும் செலவினை நிதியத்தின் வருமானத்திற்கு விதித்தல், நிதியத்தின் பயனாளிகளுக்கு நன்மைகளைக் கொடுப்பனவு செய்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இத் தொழிற்பாடுகளை நிறைவேற்றும் போது ஊழியர் சேம நிதியத் திணைக்களம் தொழில் ஆணையாளருடன் நெருக்கமாகப் பணியாற்றியது.

### 8.1 உறுப்புரிமை, உறுப்பினர் நிலுவைகள் மற்றும் மீளளிப்புக்கள்

உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2009 இறுதியில் பதிவு செய்யப்பட்ட 12.8 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010 இறுதியில் 13.3 மில்லியனுக்கு 3.9 சதவீதத்தால் அதிகரித்தது. உதவுதொகை செலுத்துகின்ற உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2009 இறுதியிலான 2.1 மில்லியனிலிருந்து 2010 இறுதியில் 2.3 மில்லியனுக்கு அதிகரித்ததுடன் உதவுதொகை செலுத்தாத உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை 2009 இறுதியிலான 10.7 மில்லியனிலிருந்து 2010 இறுதியில் 11 மில்லியனுக்கு அதிகரித்தது. இதேவேளை, உதவுதொகை செலுத்தும் தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2009 இறுதியிலான 61,396 இலிருந்து 2010 இறுதியில் 62,000 இற்கு அதிகரித்தது. இவ் அதிகரிப்புக்கள் பெரும்பாலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள தொழில்நிலைகளின் புதிய பதிவால் பங்களிப்புச் செய்யப்பட்டன.

நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2009 இறுதியிலான ரூ.770 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010 இறுதியில் ரூ.900 பில்லியனாக விளங்கி 16.9 சதவீதம் கொண்ட கூர்மையான அதிகரிப்பைப் பதிவு செய்தது. உறுப்பினர்கள் சார்பாக மேற்கொள்ளப்பட்ட உதவுதொகையிலான வளர்ச்சி மற்றும் நிதியத்தின் முன்மதியுடைய முகாமைத்துவத்தினூடாக உருவாக்கப்பட்ட வருமானம் நிதியத்தின் அளவை 2010இல் அதிகரிப்பதற்கு இயலச் செய்தது. 2010 இறுதியில் உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு 2009 இறுதியிலான ரூ.752.5 பில்லியனிலிருந்து ரூ.869.2 பில்லியனுக்கான 15.5 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது (அட்டவணை II-1). இது 2009 இறுதியிலும் 2010இலும் உறுப்பினர் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்ட வட்டி வருமானத்தை உள்ளடக்குகிறது. தேறிய உதவுதொகையும் (நன்மைகளின் மீளளிப்புக்களைக் கழித்த மொத்த உதவுதொகை) முன்னைய ஆண்டின் ரூ.17 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.20 பில்லியனுக்கு அதிகரித்தது. உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்குமான மீளளிப்புக்களின் மொத்தத் தொகை 2010இல் ரூ.34.9 பில்லியனாக விளங்கியது. இது 2009இன் ரூ.31.9 பில்லியன் மீளளிப்புகளுடன் ஒப்பிடுகையில் 9.4 சதவீத அதிகரிப்பாகும். மீளளிப்புக்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை II - 1**
**நிதியத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய தகவல்கள்**

| விடயம் | 2009 | 2010(அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 12.8 | 13.3 | 3.9 |
| உதவுதொகைசெலுத்தும் உறுப்பினர் கணக்குகள் (மில்) | 2.1 | 2.3 | 9.5 |
| உதவுதொகை செலுத்தாத உறுப்பினர் கணக்குகள் (மில்) | 10.7 | 11.0 | 2.8 |
| உதவுதொகை செலுத்தும் தொழில்தருநர் | 61,396 | 62,000 | 1.0 |
| மொத்த உதவுதொகைகள் (ரூ.மில்.) | 48,712 | 54,796 | 12.5 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.மில்.) | 31,901 | 34,896 | 9.4 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 108,066 | 104,528 | (3.3) |
| உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்.) | 752.5 | 869.2 | 15.5 |
| நிதியின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்.) | 769.7 | 899.7 | 16.9 |

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

### 8.2 நிதியங்களின் முதலீடும் வருமானமும்

**(i) முதலீட்டுச் சொத்துப்பட்டியல்:** 2010 இறுதியில் நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் (ஏட்டுப் பெறுமதி) 2009இன் ரூ.738.1 பில்லியனிலிருந்து ரூ.867.1 பில்லியனுக்கு 17.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது (அட்டவணை II-2). நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையானது நிதியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் உறுப்பினர்களுக்கான நீண்டகால நேர்க்கணிய உண்மை வருமானத்தினை உழைப்பது தொடர்பாக தொடர்ந்து கவனஞ் செலுத்தியதுடன் மீளளிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக போதியளவு திரவத்தன்மையும் பேணப்பட்டது. இதன்படி, நிதியத்தின் 94.1 சதவீதம் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கையில் 5 சதவீதம் பங்குகளிலும் 0.7 சதவீதம் கம்பனித் தொகுதிக் கடன்களிலும் முதலிடப்பட்டன. மீதியான 0.2 சதவீதம் திரவத்தன்மையினைப் பேணுவதற்காக அரச பிணையங்கள் மீதான நேர்மாற்று மீள்கொள்வனவு போன்ற உயர் திரவத்தன்மை கொண்ட சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டன.

**அட்டவணை II - 2**
**முதலீட்டுச் சொத்துப்பட்டியல்**

| முதலீட்டின் வகை | 2009 | | 2010 | |
|---|---|---|---|---|
| | ரூ. பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) |
| திறைசேரி முறிகள், உண்டியல்கள் | 659.9 | 89.4 | 774.8 | 89.4 |
| அரசிற்கான ரூபாக் கடன்கள் | 56.6 | 7.7 | 40.9 | 4.7 |
| கம்பனி தொகுதிக் கடன்கள் | 8.3 | 1.1 | 6.3 | 0.7 |
| பங்கு மூலதனம் | 9.8 | 1.3 | 43.7 | 5.0 |
| நேர்மாற்று மீள்கொள்வனவுகள் | 3.5 | 0.5 | 1.4 | 0.2 |
| **மொத்தம்** | **738.1** | **100.0** | **867.1** | **100.0** |

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**(ii) முதலீட்டு வருமானம்:** 2010இல் நிதியத்தின் மொத்த வருமானம. 2009இன் ரூ.109.6 பில்லியனிலிருந்து ரூ.121.3 பில்லியனுக்கு அதிகரித்து 10.6 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது (அட்டவணை II-3). கடந்த காலங்களைப் போன்றே, கடன் தீர்ப்பனவு இலாபம் உள்ளிட்ட வட்டி வருமானம் நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக (வருமானத்தின் 97.5 சதவீதம்) விளங்கியது. இவ்விரு மூலங்களிலிருந்தான வருமானம் 2009இன் ரூ.107.1 பில்லியனிலிருந்து 2010இல் ரூ.118.2 பில்லியனுக்கு ரூ.11.1 பில்லியனால் வளர்ச்சியடைந்தது. நிதியத்தால் வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி வருமான வீதம் 13.4 சதவீதமாகவும் அப் பிணையங்களின் விளைவுகள் 10.6 சதவீதத்திற்கும் 14.5 சதவீதத்திற்குமிடையே வேறுபட்டன. பங்குச் சொத்துப்பட்டியலிலிருந்து அடையப்பட்ட மூலதன இலாபங்களும் பங்கு இலாபங்களும் பெரும்பாலும் பங்குச் சந்தையில் ஏற்பட்ட முன்னேற்றத்தினூடாக பயன்படுத்தப்பட்ட நன்மைகள் காரணமாக 2009இன் ரூ.348 மில்லியனிலிருந்து 2010ஆம் ஆண்டில் ரூ.1,664 மில்லியனுக்கு நான்கு மடங்காகியது (அட்டவணை II-3). ஒட்டுமொத்தமாக, மொத்த சொத்துப்பட்டியல் மீதான இலாப வீதம் முக்கியமாக 2010இல் அரச பிணையங்கள் சந்தையிலான வட்டி வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக 2009இன் 16 சதவீதத்திலிருந்து 2010இல் 15 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை II - 3**
**முதலீடு மீதான வருமானம்**

| வருமானத்தின் மூலம் | 2009 | | 2010 | |
|---|---|---|---|---|
| | ரூ. மில் | பங்கு (%) | ரூ. மில் | பங்கு (%) |
| வட்டி | 79,810 | 72.9 | 89,165 | 73.5 |
| கடன் தீர்ப்பனவு இலாபம் | 27,337 | 24.9 | 29,061 | 24.0 |
| அரச பிணையங்களிலிருந்தான மூலதன இலாபம் | 594 | 0.5 | 874 | 0.7 |
| பங்குகளிலிருந்தான மூலதன இலாபம் | 215 | 0.2 | 1,054 | 0.9 |
| பங்கு இலாபங்கள் | 133 | 0.1 | 610 | 0.5 |
| சந்தைக்குச்சந்தை இலாப/நட். | 1,346 | 1.2 | 106 | 0.1 |
| ஏனையவை | 182 | 0.2 | 386 | 0.3 |
| **மொத்தம்** | **109,617** | **100.0** | **121,256** | **100.0** |

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை II - 4**
**அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றம் - 2010 இறுதி**

| முதிர்ச்சி | தொகை ரூ. மில் | பங்கு (%) | நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு (%) |
|---|---|---|---|
| 1 ஆண்டிலும் குறைந்தது | 193,810 | 22.5 | 14.5 |
| 1 - 2 ஆண்டுகள் | 374,991 | 43.5 | 14.4 |
| 3 - 4 ஆண்டுகள் | 197,615 | 22.9 | 0.6 |
| 4 ஆண்டுகளுக்கும் கூடியது | 94,925 | 11.1 | 12.2 |
| **மொத்தம்** | **861,341** | **100.0** | **13.4** |

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**(iii) செலவுகள்:** நிதியத்தின் மொத்த செயற்பாட்டுச் செலவினம் 2009இன் ரூ.763.1 மில்லியனிலிருந்து 2010இல் ரூ.824.0 மில்லியனுக்கு 8.0 சதவீதத்தால் அதிகரித்தது (அட்டவணை II-5). நிதியமானது அதன் மொத்த தொழிற்பாட்டுச் செலவினத்தினை 2010இன் மொத்த வருமானத்தின் 0.68 சதவீதத்தில் பேணக்கூடியதாக இருந்தது. தொழிற்பாட்டுச் செலவினத்தினை மொத்த வருமானத்தின் 1 சத வீதத்திற்கும் குறைவாகப் பேணுவதென்பது கடந்த ஆண்டுகளில் நிதியத்தின் முக்கிய பண்பாக இருந்து வருகின்றது.

**அட்டவணை II - 5**
**தொழிற்பாட்டுச் செலவினங்கள்**

| விடயம் | 2009 | 2010 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| | ரூ. மில் | ரூ.மில் | |
| ஆளணிச் செலவினங்கள் | 370.2 | 414.3 | 11.9 |
| நிர்வாகச் செலவினங்கள் | 357.0 | 368.1 | 3.1 |
| ஏனைய செலவினங்கள் | 35.9 | 41.6 | 15.9 |
| **மொத்தம்** | **763.1** | **824.0** | **8.0** |
| **மொத்த வருமானத்தின் % ஆக மொத்தச் செலவினங்கள்** | **0.70** | **0.68** | **(0.02)** |

மூலம்: ஊசேநி திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## 8.3 உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக் கொடுப்பனவு

2010இல் நிதியத்தின் உறுப்பினர்களுக்கு வட்டியினைப் பகிர்ந்தளிப்பதற்கு ரூ.96,562 மில்லியன் கொண்ட தொகை கிடைக்கத்தக்கதாக இருந்தது (அட்டவணை II-6). இதன்படி, நிதியம் உறுப்பினர் நிலுவைகளுக்கு 12.5 சதவீதம் கொண்ட வீதத்தில் வட்டியைச் செலுத்தக்கூடியதாக இருந்தது. இது பொருளாதாரத்தில் தற்போதைய வட்டி வீத அமைப்பைக் கவனத்திற் கொள்கையில் குறிப்பிடத்தக்க உயர் வருவாய் வீதமாகும்.

**அட்டவணை II - 6**
**உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவு**

| விடயம் | 2009 | 2010 | மாற்றம் % |
|---|---|---|---|
| | ரூ.மில் | ரூ.மில் | % |
| மொத்த வருமானம் | 109,617 | 121,256 | 10.6 |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள் | 763 | 824 | 8.0 |
| வருமான வரி | 7,604 | 8,987 | 18.2 |
| பங்கீட்டுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் | 101,690 | 111,463 | 9.6 |
| நடைமுறை மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி | 1,656 | 1,901 | 14.8 |
| பகிர்ந்தளிப்புக்காக கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் (நடைமுறை மீளளிப்புக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுக்குப் பின்) | 100,034 | 109,562 | 9.5 |
| ஒதுக்குகளில் இருந்து/(இற்கு) மாற்றல்கள் | (9,325) | (13,000) | 39.4 |
| ஒதுக்குகளிலிருந்து(இற்கு)மாற்றல்களுக்குப் பின் பகிர்ந்தளிப்புக்காகக் கிடைக்கத்தக்க தாகவுள்ள தேறிய வருமானம் | 90,709 | 96,562 | 6.5 |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி | 90,691 | 96,268 | 6.1 |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 18 | 294 | 1,533.3 |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி % | 13.75 | 12.5 | (1.25) |

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

பவவீ[1] = (உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி)/[(ஆண்டின் ஆரம்பத்தில் உறுப்பினர் நிலுவைகள் +ஆண்டின் இறுதியில் உறுப்பினர் நிலுவைகள்)/2]

**அட்டவணை II - 7**
**உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம்**

| ஆண்டு | வழங்கப்பட்ட வட்டிவீதம் (%) | பயனுறு வட்டிவீதம் (%) |
|---|---|---|
| 2000 | 11.50 | 11.69 |
| 2001 | 11.50 | 11.69 |
| 2002 | 12.10 | 12.26 |
| 2003 | 12.00 | 12.07 |
| 2004 | 9.50 | 9.59 |
| 2005 | 9.00 | 9.13 |
| 2006 | 10.10 | 10.30 |
| 2007 | 11.20 | 11.40 |
| 2008 | 13.20 | 13.44 |
| 2009 | 13.75 | 13.92 |
| 2010(அ) | 12.50 | 12.65 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊசேநி திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

### 8.4 உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள்

2010இன் முதலரைப் பகுதிக்கான உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் 2010 திசெம்பரில் அவர்களின் தொழில்தருநர்கள் ஊடாக வழங்கப்பட்டன. 2010இன் இரண்டாம் அரைப்பகுதிக்கான கணக்குக் கூற்றுக்களை 2011 யூன் இறுதியளவில் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### 8.5 வீடமைப்புக் கடன் வசதி

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி, கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய ஆறு பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெறுவதற்கு உறுப்பினர்களுக்கு வசதியளிக்கும் குறிக்கோளுடன் 1998இல் அறிமுகப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டம் 2010இலும் தொடர்ந்தது. இத் திட்டத்தின் கீழ் ஊ.சே. நிதியம் அவர்களது ஊ.சே. நிதிய நிலுவைகளுக்கெதிராக உத்தரவாத சான்றிதழ் களைத் தொடர்ந்தும் வழங்கியது. இவ்வாண்டில், ரூ.4,512 மில்லியன் பெறுமதியான வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காக பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு 13,848 உறுப்பினர் நிலுவைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (அட்டவணை II-8). மேலும் தொடர்பான உறுப்பினர் கணக்குகளிலிருந்து கிட்டத்தட்ட ரூ.2,093 மில்லியன் கழிக்கப்பட்டு 2010இல் நிலுவையிலுள்ள கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

**அட்டவணை II - 8**
**வீடமைப்புக் கடன் வசதி**

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்ணிக்கை) | ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் (ரூ.மில்) | கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு செலுத்திய தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|
| 2000 | 12,938 | 1,648 | 262 |
| 2001 | 16,066 | 2,091 | 381 |
| 2002 | 19,502 | 2,673 | 541 |
| 2003 | 18,689 | 2,792 | 670 |
| 2004 | 14,307 | 2,452 | 735 |
| 2005 | 14,600 | 2,766 | 900 |
| 2006 | 15,136 | 3,049 | 1,078 |
| 2007 | 12,969 | 2,872 | 1,240 |
| 2008 | 12,519 | 3,008 | 1,192 |
| 2009 | 10,383 | 2,680 | 1,552 |
| 2010 (அ) | 13,848 | 4,512 | 2,093 |
| **மொத்தம்** | **160,957** | **30,543** | **10,644** |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊசேநி திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

### 8.6 பொதுமக்கள் விழிப்புணர்வு

ஊசே நிதியத் திணைக்களம் தொழில் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து யாழ் மாவட்டத்தில் இரண்டு நடமாடும் சேவைகளையும் மஸ்கெலியா, மட்டக்களப்பு மற்றும் வவுனியாவில் ஒவ்வொரு நடமாடும் சேவையையும் தொடர்பான பிரதேசங்களில் வதியும் நிதியத்தின் உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக நடத்தியது. ஊசே நிதியத் திணைக்களம் 2010இல் "தயற்றகிருள" மற்றும் "மனிதவளப் பணி வழங்குவோரின் பொருட்காட்சி" ஆகிய பொதுமக்களுக்கான இரண்டு பொருட்காட்சிகளில் பங்குபற்றியது. அலுவலகப் பணியாளர் முகாமைத்துவ நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பன்னாட்டு ரீதியான மனிதவள மாநாடு மற்றும் மனிதவள பணி வழங்குவோர் பொருட்காட்சியில் ஊசே நிதியத் திணைக்களம் 2010இல் சிறந்த காட்சிக்கூடத்துக்கான விருதை வென்றது. மேலும், திணைக்களம் வரலாற்றில் முதற் தடவையாக அனைத்து மாவட்ட மட்டத்திலான தொழில் அலுவல்கள் மற்றும் மத்திய வங்கியின் தொடர்பான அலுவல்களுக்காக முழுநாள் செயலமர்வை 2010இல் நடத்தியதுடன் இதில் நாடு முழுவதிலுமுள்ள அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 150இற்கும் கூடுதலான அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 8.7 முறைமையின் அபிவிருத்தி

ஊசே நிதிய உறுப்பினர்கள் மற்றும் தொழில்தருநர்களுக்கான பணிகளின் வினைத்திறனையும் பயனுறுதியையும் அதிகரிப் பதற்கு நடுத்தர காலத்தில் தற்போதைய முறைமையை தன்னியக்கமான வங்கித்தொழில் மாதிரிக்கு மாற்றும் குறிக்கோளுடன் ஊசே நிதியத் திணைக்களம் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் 2010இல் அதன் தகவல் தொழில்நுட்ப முறைமைகளைச் சோதித்துப் பார்ப்பதற்கான பல முன்னெடுப்புக்களை மேற்கொண்டது. ஆரம்பத்தில், 2010 நடுப்பகுதியில் புதிய பேரேட்டு முறைமை அறிமுகப்படுத்தியதுடன் நேரடித் தொழிற்பாடுகள் 2011 சனவரி 01 இலிருந்து ஆரம்பமாகின. அதேவேளை, மத்திய வங்கியின் ஊசே நிதிய முறைமையிலான செயல்முறைக்கு கூடிய ஒருங்கிணைப்பை வசதிப்படுத்தும் அதேவேளை புதிய பேரேட்டு முறைமை அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் மத்தியில் பதிவு செய்து குறைவான மனித தலையீடுகள் காரணமாக தரவின் தொழிற்பாட்டு வினைத்திறன்களுக்கும் கூடியளவு துல்லியத்துக்கும் இட்டுச் செல்கிறது. இத்துடன், புதிய முறைமை தேசிய அடையாள அட்டை (தேஅஅ) இலக்கத்தின்படி உறுப்பினர்களை அடையாளம் காண்பதற்கும் உதவுகிறது.

### 8.8 உறுப்பினர்களின் மீள்பதிவு

புதிதாக விருத்தி செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறைமையின் சுமுகமான தொழிற்பாட்டை முழு இயலளவில் வசதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்து வமான அடையாள இலக்கத்தை ஒதுக்கிக் கொடுக்கும் உறுப்பினர்களின் மத்திய தரவுத் தளத்தை விருத்தி செய்வது அத்தியாவசியமாக விளங்கியது. ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களின் தே.அ. அட்டைகளில் உள்ளவாறும் தே.அ.அ. இலக்கத்தை தனித்துவமான முறைமை அடையாள இலக்கமாகவும் ஊழியர் சேமநிதிய உறுப்பினர் ஒருவரை அடையாளம் காணக்கூடிய முறைமையாகவும், அவர்களை மீள்பதிவு செய்வதற்காக, ஊசேநி உறுப்பினர்களின் மீள்பதிவு என்பது ஊசேநி திணைக்களத்தாலும் தொழில் திணைக்களத்தாலும் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட முக்கிய செயற்றிட்டங்களில் ஒன்றாகும். இத் தரவுத் தளத்தின் விருத்தியின் தனிச் சிறப்பு வாய்ந்த பண்பு யாதெனில் ஊ.சே. நிதிய உறுப்பினர் கணக்குகளைப் பேணுவதற்கான பொதுவான தரவுத் தளமாக இதைப் பயன்படுத்த இவ்விரு நிறுவனங்களையும் இயலச் செய்யும்.

இச் செயற்றிட்டத்தின் கீழ், 2010 இறுதியில் கிட்டத்தட்ட 800,000 செயற்படும் உறுப்பினர்களின் தேஅ அட்டைத் தகவல் சேகரிக்கப்பட்டதுடன் அவ் உறுப்பினர்களில் 77 சதவீதமானவர்களுக்கு தனித்துவமான அடையாள இலக்கங்கள் ஒதுக்கப்பட்டன. புதிய உறுப்பினர் பேரேடொன்று (இலங்கை மத்திய வங்கி மற்றும் தொழில் திணைக்களத்திற்கான பொதுவான தரவுத் தளம்) சேகரிக்கப்பட்ட உறுப்பினர் தகவல் மூலம் உருவாக்கப்பட்டது. இச் செயற்றிட்டத்தின் கீழ் அவர்களின் தேஅ அட்டை விபரங்களை வழங்காத செயற்படு உறுப்பினர்களுக்காக புதிய தரவு சேகரிப்பு பொறிமுறை ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதேவேளை, 2010 நவெம்பர் 01இற்குப் பின்பு இணைந்த ஊசே நிதிய உறுப்பினர்களுக்கான அதேநேர பதிவு செயல்முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்படி, அனைத்துத் தொழில்தருநர்களும் அவர்களது நிறுவனங்களுக்கு 2010 நவெம்பர் 01 இற்குப் பின் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைத்துப் புதிய ஊழியர்களின் தேஅ அட்டைத் தகவலை ஊசே நிதியத் திணைக்களத்துக்கான ஆரம்ப உறுப்பினர் பங்களிப்பு விபரங்களுடன் வழங்க வேண்டும்.

மேலும், இச் செயற்றிட்டத்தின் கீழ் தகவலை வழங்கிய செயற்படும் உறுப்பினர்களின் முன்னைய தொழில்நிலை இலக்கங்களும் தனித்துவமான அடையாள இலக்கத்தின் கீழ் அவர்களது அனைத்து பல்வேறு உறுப்பினர் கணக்குகளையும் மீளாய்வு செய்வதற்கு அவர்களை இயலச் செய்யும் குறிக்கோளுடன் அவர்களின் தேஅ அட்டை இலக்கங்களுடனும் இணைக்கப்படும். அனைத்து ஊசே நிதிய உறுப்பினர்களின் மீள்பதிவு இச் செயற்றிட்டத்தின் முடிவான பணியாகும். இச் செயற்றிட்டத்தில் தற்போது செயற்படாத உறுப்பினர்களுக்கான தரவு சேகரிப்பை 2011இல் ஆரம்பிப்பதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது.

### 8.9 இலத்திரனியல் ஊடகத்தினூடாக ஊசே நிதிய உதவுதொகைகள்

அலுவலர்களால் கையாளப்படும் கடதாசி ஆவணங்களை கைமுறையின் மூலமாக பெறுவதற்குப் பதிலாக இலத்திரனியல் ஊடகமூடாக (இ-கூற்று) உறுப்பினர் உதவுதொகையைச் (சி மற்றும் சி3 கூற்றுகள்) சேகரிப்பதற்கான சிறப்பு செயற்றிட்டத்தை ஊசேநி திணைக்களம் ஆரம்பித்தது. இ-கூற்றுகள் ஊடாக அவர்களது உறுப்பினர் விபரங்களை அனுப்ப விரும்பும் தொழில்தருநர்கள் இத்திட்டத்தில் சேருமாறு கேட்கப்பட்டனர். ஊசே நிதிய கூற்றுகளை அனுப்புவதற்கு தொழில்தருநர்களுக்கான கடதாசி எதுவுமற்ற தீர்வான இ-கூற்றுகள் மரபு முறையான கைமுறை மூலமான ஊசே நிதிய கூற்று முறைமையுடன் ஊசே நிதியத் திணைக்களம் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சனைகளை குறைவடையச் செய்யும். இத் திட்டத்தின் கீழ், தொழில்தருநர்கள் ஊசே நிதியத் திணைக்களத்தால் வழங்கப்படும் வழிகாட்டல்களுடன் இணங்கிச் செல்லும் வகையில் உருவாக்கப்பட்ட இரண்டு மாதாந்த சாதாரண உரைக் கோவைகளை மட்டும் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர். இ-கூற்றுகளை அனுப்பும் தொழில்தருநர்கள் குறித்துரைக்கப்பட்ட திகதியில் ஊசே நிதியத்திற்கு மாதாந்தம் நிதியங்களை மாற்றல் செய்யும் தொழில்தருநரின் வங்கிக் கணக்கு மீதான நிலையியற் கட்டளையூடாக மாதாந்தக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் தொழில்தருநர்களை இயலச் செய்யும் நேரடி பற்று கொடுப்பனவுத் திட்டத்திலும் இணையலாம்.

மேலும், ஊசே நிதியம் 2010இல் இ-கூற்றுகளை ஊக்குவிப் பதற்கு சிறப்பு விழிப்புணர்வுப் பிரசாரத்தை ஆரம்பித்தது. இதன்படி, தொழில்தருநர்களிடையே இ-கூற்றுகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இவ்வாண்டில் 13 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக, இ-கூற்றில் இணைந்த தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2009இன் இறுதியிலான 585 இலிருந்து 2010 இறுதியில் 888இற்கு அதிகரித்தது. இத் தொழில்தருநர்கள் 2010இல் ஊசேநி திணைக்களத்தால் பெறப்பட்ட மொத்த உதவுதொகைகளின் 18 சதவீதத்திற்கும் கூடுதலானவற்றை உள்ளடக்கியிருந்தனர். நேரடிப் பற்று முறைமையில் பங்கேற்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கையும் 2009இன் 202இலிருந்து 2010இல் 246இற்கு அதிகரித்ததுடன் 2010இல் மொத்த உறுப்பினர் உதவுதொகையின் 2.5 சதவீதத்தை உள்ளடக்கியிருந்தன.

### 8.10 பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டம்

பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டமான இலத்திரனியல் பதிவு முகாமைத்துவ முறைமையை விருத்தி செய்வதற்கான சாத்தியவள ஆய்வு 2010இல் பூர்த்தி செய்யப்பட்டது. 2011இல் ஆரம்பிக்கும் பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டம் அனைத்து உறுப்பினர் தகவலையும் இலத்திரனியல் வடிவில் பேணுவதற்கு ஊசே நிதியத் திணைக்களத்தை இயலச் செய்யும் இத் திட்டத்தின் கீழ், உறுப்பினர்களின் அனைத்து பிரதான கோவைகளும் ஸ்கான் செய்யப்பட்டு இலத்திரனியல் வடிவில் சேமிக்கப்படும். இது அச்சிடப்பட்ட தகவலைச் சேமித்தல், கையாளல் மற்றும் பாதுகாத்தல் செலவையும் கோவைகளை சேமிப்பதற்கு எடுக்கும் காலத்தையும் குறைக்கும்.

## 9. செலாவணிக் கட்டுப்பாடு

திருத்தப்பட்டவாறான 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிப்பதில் அரசாங்கத்தின் முகவரான இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டு தொழிற்பாடுகளை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாண்டுப் பகுதியில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அதன் கடமைகளை ஆற்றுகையில் 2010

வழிகாட்டலில் அறிவிக்கப்பட்ட இலக்குகளை எய்தும் விதத்தில் உபாய பொறிமுறையொன்றினை பின்பற்றியது. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், அதன் நடவடிக்கைகளை வடிவமைக்கும் பொழுது குறிப்பாக நாட்டின் தூண்டுதலளிக்கும் பொருளாதாரச் சூழலைக் கவனத்தில் கொள்கிறது.

மேம்பட்ட பேரண்டப் பொருளாதார நிலைமைகள், குறிப்பாக, பணவீக்கத்தில் ஏற்பட்ட குறைப்பு, மேம்பட்டு வரும் இறைச் செயலாற்றம், அதிகரித்து வரும் வெளிநாட்டு ஒதுக்குகள், வீழ்ச்சியடைந்து வரும் வட்டி வீதங்கள் மற்றும் அரசியல் உறுதிப்பாடு என்பன நாட்டின் செலாவணிக் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்தக்கூடிய சாதகமான சூழ்நிலையினை உருவாக்கின. இதற்கமைய, இலங்கை மத்திய வங்கி மூலதனக் கணக்கினைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேலும் மேற்கொண்டதுடன் நடைமுறைக் கணக்கின் மீது விதிக்கப்பட்டிருந்த சில தடைகளையும் 2010இல் அகற்றியது. அதேவேளை, இலங்கை மத்திய வங்கி இத் தாராளமயமாக்கல் செய்முறைகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு, சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு பல புதிய வெளிநாட்டு நாணயக் கணக்குகளை அறிமுகப்படுத்தியது. இவ் வழிமுறைகள் நாட்டில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு உதவியதுடன் பன்னாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையினையும் உயர்த்தியது.

மேலும், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் 2010இல் வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் மற்றையவர்களுக்கும் பணிப்புரைகள்/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்குதல், வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஒப்புதல் வழங்கல், பல்வேறுபட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களினைக் கண்காணித்தல் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் மீறப்படுவதனை புலனாய்வு செய்தல் என்பனவற்றை உள்ளடக்கிய நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

### 9.1 மூலதனக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களைத் தளர்த்தல்

**(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட தொகுதிக் கடன்களின் மாற்றல்களுக்கான அனுமதி (2010 ஒத்தோபர் 01 திகதியிடப்பட்ட அரச வர்த்தமானி எண் 1673/43)**

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதிகளைத் திரட்டுவதற்கு அதனை இயலச் செய்வதற்காக, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 423) 7, 10 மற்றும் 11ஆம் பிரிவுகளின் கீழ் செலாவணிக் கட்டுப்பாட்டாளர் வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள், இலங்கைக்கு வெளியே வதியும் தனிப்பட்ட வதிவோர் ஆகியோருக்கு ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட தொகுதிக் கடன்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கினார்.

**(ஆ) உள்நாட்டுக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட தொகுதிக் கடன்களில் வெளிநாட்டவர்களை முதலீடு செய்ய அனுமதித்தல் (2010 நவெம்பர் 22 திகதியிடப்பட்ட அரச வர்த்தமானி எண் 1681/11)**

மேம்பட்ட முறிச் சந்தையின் அநுகூலங்களை பரிசீலனையில் கொண்டும்,முதலீட்டாளர் தளத்தினை விரிவுபடுத்தி இரண்டாந்தரச் சந்தையின் திரவத் தன்மையினை மேம்படுத்தும் நோக்குடனும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட தொகுதிக் கடன்களில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டவர்களை அனுமதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அத்தகைய பங்கேற்பு உள்நாட்டுச் சந்தையில் வட்டி வீதங்கள் உறுதியடையவும் அவை படிப்படியாக குறைவடையவும் பங்களிக்கும் போல் தோன்றுகின்றது.

இதற்கமைய, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 423) 10, 11, 15 மற்றும் 30(5)ஆம் பிரிவுகளின் கீழ் நியதிகளில் 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுச் சட்டத்தின் நியதிகளில் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சியாக வகைப்படுத்தப்பட்டுள்ள கம்பனியொன்றிலுள்ள இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்டுள்ள மாற்றத்தக்க அல்லது மாற்றத்தகாத, மீட்கத்தக்க மீட்கத்தகாத தொகுதிக் கடன்களை வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையர் உட்பட இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனிப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்கும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**(இ) வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்படுவதற்கு கம்பனிகளுக்கு ஒப்புதல் வழங்குவதனை விரைவு படுத்தல்**

எதிர்பார்க்கப்படும் உயர் வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணுவதற்கு வெளிநாட்டு நிதிகளின் உட்பாய்ச்சலை அதிகரிக்க வேண்டிய தேவை இலங்கைக்கு காணப்படுவதன் காரணமாக, ஒப்பீட்டு ரீதியில் குறைந்த செலவில் நிறுவனங்களின் நிதியிடல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மாற்று வழிவகைகளை உருவாக்குவது இன்றியமையாததாகும். இதன்படி, வேறுபட்ட வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு, அத்தகைய வேறுபட்ட வியாபாரங்கள் வெளிநாட்டு செலாவணியினை உழைக்கின்றனவா என்பதனைக் கருத்திற் கொள்ளாது வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்படும்.

இவ் வழிமுறையானது உள்நாட்டுச் சந்தையில் நிதிகளுக்கான அழுத்தத்தினைக் குறைப்பதுடன் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள வாய்ப்புக்களையும் விரிவுபடுத்தும்.

**(ஈ) வெளிநாட்டுக் கம்பனிகள் இலங்கையில் வியாபாரத் தலங்களை திறப்பதற்கு அனுமதியளித்தல் (2010 நவெம்பர் 20 திகதியிடப்பட்ட அரச வர்த்தமானி எண் 1681/10)**

அநேக வெளிநாட்டுக் கம்பனிகள் இலங்கையில் வியாபாரத் தலங்களை நிறுவுவதில் பெரும் ஈடுபாடு காட்டி வருகின்றன. அதேநேரம், கம்பனிகள் சட்டம், வெளிநாட்டுக் கம்பனிகளினால்

இலங்கையில் வியாபாரத் தலங்கள் நிறுவப்படுவது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவானதாக இருக்க வேண்டும் என்பதனைத் தேவைப்படுத்துகின்றது. எனினும், தற்பொழுது, அக் கம்பனிகள் அத்தகைய வியாபாரத்தை நிறுவுவதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் அவசியமான நிதிகளைக் கொண்டு வருவதற்கேற்ற தெளிவானதும் வசதி யானதுமான பொறிமுறைகளும் அதேபோன்று மிகையான நிதியங்களை திருப்பி அனுப்புவதற்கும் மற்றைய வெளிமுகக் கொடுப்பனவுகளுக்கான ஒழுங்கு விதிகளும் நடைமுறையில் இல்லை.

இதற்கமைய, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 48ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 29 சி மற்றும் 30ஆம் பிரிவின் (5)ஆம் துணைப் பிரிவு ஆகியவற்றின் கீழ் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் "வெளிநாட்டுக் கம்பனி" ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கம்பனிகளுக்கு நாட்டிற்குள் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வருவதற்கு வசதியளிக்கும் விதத்தில் இலங்கையில் வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

### 9.2 நடைமுறைக் கணக்குக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தடைகளை அகற்றுதல்

#### (அ) இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கிகளில் கணக்கு களைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அனுமதி (2010 மாச்சு 11 திகதியிடப்பட்ட அரச வர்த்தமானி எண் 1644/26)

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 48ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 6அஅ மற்றும் பிரிவு 8இன் துணைப்பிரிவு (1)இன் கீழ் இலங்கையிலுள்ள அல்லது வதியும் ஆட்கள் மற்றும் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனிகள் அல்லது நிறுவனங்கள் இலங்கைக்கு வெளியேயுள்ள எந்தவொரு வங்கியிலும் வெளிநாட்டுக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் அல்லது அத்தகைய கணக்குகளை மூடிவிடுவதற்கும் பொதுவான அனுமதி வழங்கப்படுகிறது.

#### (ஆ) வெளிநாட்டு நாணயங்களில் முன்னோக்கிய ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கான விரிவாக்கப்பட்ட அனுமதி

வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வியாபாரங்களுக்கு வசதிகளை வழங்கும் பொருட்டும் செலாவணி இடர்ப்பாடுகளுக்கு அவர்கள் உள்ளாகும் தன்மை களிலிருந்து பாதுகாப்பளிக்கும் பொருட்டும் வெளிநாட்டு நாணயத்தில் முன்னோக்கிய ஒப்பந்தங்களின் மீது தற்போது காணப்பட்ட கட்டுப்பாடுகள் அகற்றப் பட்டுள்ளன.

#### (இ) சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள்

வதிவற்ற ஒருவரின் சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கிற்கும் அத்தகைய வதிவற்ற ஆளினால் இலங்கையிலுள்ள கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளுக்குமிடையில் நிதிகளை மாற்றல் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

#### (ஈ) முன்கூட்டிய கொடுப்பனவு நியதிகளின் மீது செய்யப்படும் இறக்குமதிகளுக்கான அளவுத் தேவைப்பாடுகள்

நாட்டின் ஒதுக்கு நிலைமை மேம்பட்டமையினைப்பரிசீலனையில் கொண்ட பின்னர் தெரிந்தெடுக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியின் பொருட்பட்டியல் பெறுமதியின் மீது விதிக்கப்பட்டிருந்த 100 சதவீத அளவுத் தேவைப்பாடு அகற்றப்பட்டது.

#### (உ) வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் இலங்கையர் களுக்கு வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குதல்

வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் இலங்கையர் களுக்கான பயணப்படியின் ஒரு பகுதியை வெளிநாட்டு நாணயத் தாள்களிலிருந்து வழங்கும் அளவு ஐ.அ.டொலர் 2,000 இலிருந்து ஐ.அ.டொலர் 2,500 இற்கு அல்லது அதற்குச் சமனான வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாணயத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

#### (ஊ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7, 10, 11, 15 மற்றும் 30(5)இன் நியதிகளில் அனுமதி (2010 திசெம்பர் 21 திகதியிடப்பட்ட அரச வர்த்தமானி எண் 1685/2)

2002 ஏப்பிறல் 19ஆம் திகதியிடப்பட்ட 1232/14 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் (அதிவிசேடமானது) வெளியிடப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல், விடயம் (iv) இனை உடனடுத்து "பிணைய முகாமைத்துவம், மதிப்பீடு மற்றும் தனிப்பட்டவர்கள் அல்லது தனியார் நிறுவனங்களுடனான ஆலோசனைகள் உட்பட பிணையப் பணிகளின் ஏற்பாடுகள்" என்பதனை உட்புகுத்துவதன் மூலமும் "பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு" என்பதற்குப் பதிலாக "பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு" என்ற சொற்களை உட்புகுத்துவதன் மூலமும் திருத்தப்படுகிறது.

### 9.3 புதிய கணக்குகளின் அறிமுகம்

#### (அ) பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் முதலீடுகளைத் தெரிவு செய்வதில் எதிர்நோக்கக்கூடிய குழப்பத் தன்மைகளை நீக்குவதற்காக பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு, திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு, திறைசேரி உண்டியல் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு மற்றும் திறைசேரி முறிகள்/ உண்டியல்கள் வெளிநாட்டு ரூபாக் கணக்கு தேசாபிமானி என்பனவற்றை ஒருங்கிணைக்கின்ற பிணையங்கள் முதலீட்டு கணக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

#### (ஆ) பன்னாட்டு பணிகள் வழங்குவோருக்கும் அவர்களது ஊழியர்களுக்குமான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

உள்ளூர் தொழில் முயற்சியாண்மையாளர்கள் தமது பணிகளை வெளிநாட்டுத் தரப்பினர்களுக்கு வழங்குவதனை ஊக்குவிப்பதற்கும் வரிச் சலுகைகளை அனுபவிக்கும் விதத்தில் அவர்கள் தமது உழைப்பினை வெளிநாட்டு நாணயங்களில் வைத்திருப்பதற்கு வசதியளிக்கும் பொருட்டும் பன்னாட்டுப் பணிகள் வழங்குவோரும் அவர்களது ஊழியர்களும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**(இ) உள்முக முதலீட்டுக் கணக்கு**

2010 நவெம்பர் 22ஆம் நாளிடப்பட்ட இலக்கம் 1681/10 கொண்ட அரச வர்த்தமானியின் மூலம் வியாபாரத் தலமொன்றினூடாக இலங்கையில் வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கம்பனிகள் உள்முக பண முதலீட்டுக் கணக்கொன்றினை திறக்கவும் பேணவும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**(ஈ) சுற்றுலா அல்லது வியாபாரத்தின் பொருட்டு இலங்கையிலுள்ள வெளிநாட்டவர்கள் வெளிநாட்டு நாணயத்தில் கணக்குகளை திறப்பதற்கு அனுமதியளித்தல்**

சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் சுற்றுலாத்துறை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடையுமென எதிர்பார்க்கப் படுகிறது. வியாபாரமல்லாத முறையில் இலங்கைக்கு வரும் வதிவற்ற இலங்கையரல்லாதவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரிக்கும் போல் தோற்றுகின்றது. முன்னர் ஒன்றில் தற்காலிகமாக இலங்கைக்கு வருகை தந்தவர்களுக்கு அல்லது வருகை தர எண்ணியுள்ள இலங்கையரல்லாதவர்களுக்கு வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கு வசதிகள் எதுவும் வழங்கப்பட்டிராதமையானது அவர்களுக்கு குறிப்பிடத்தக்களவு வசதியீனங்களைத் தோற்று வித்தது.

ஆகவே, இலங்கையில் வதிகின்ற அல்லது இலங்கைக்கு விஜயம் செய்ய எண்ணியுள்ள இலங்கையரல்லாதவர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதியளிப்பது பொருத்தமானது எனக் கருதப்பட்டது. இவ் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் குறிப்பிட்ட வகை வதிவற்றவர்கள் இலங்கையில் அவர்கள் இருக்கும் காலப்பகுதியில் அவர்களின் கொடுக்கல்வாங்கல்களை சுமுகமாகவும் பாதுகாப்பாகவும் மேற்கொள்வதற்கு வசதியளிப்பதுடன் நாட்டின் சுற்றுலாவும் வியாபார நடவடிக்கைகளும் விரிவடையவும் உதவும்.

இதற்கமைய, ஒன்றில் இலங்கைக்கு தற்காலிகமாக விஜயம் செய்கின்ற அல்லது இலங்கைக்கு விஜயம் செய்ய எண்ணியுள்ள வதிவற்ற இலங்கையரல்லாதவர்கள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**(உ) இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களின் இறக்குமதி யாளர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் கணக்கு களைத் திறப்பதற்கு அனுமதியளித்தல்**

இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களின் தயாரிப்பு, வர்த்தகப்படுத்தல் மற்றும் மீள நவீனப்படுத்தல் என்பனவற்றிற்கு பிரபல்யம் பெற்ற நிலையமாக விளங்கி வருகின்றது. சுற்றுலாப் பயணிகளின் வருகையில் எதிர்பார்க்கப்படுகின்ற அதிகரிப்புக்கள் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களுக்கான கேள்வி விரிவடைவதற்கு உந்துதலளிக்கும்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்களின் வெளிநாட்டுச் செலாவணித் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காகவும் இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காகவும் அவர்களுக்கு வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் 2008இல் அனுமதி வழங்கப்பட்டது. இரத்தினக்கற்களின் இறக்குமதிக்கான கொடுப்பனவுகள் முக்கியமாக வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்படுவதனால் இவ்வசதியினை இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களின் மறைமுக ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கும் வழங்குவதற்கு தற்பொழுது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்கள் இரத்தினக்கற்களை இறக்குமதி செய்து அவற்றை வெட்டுதல், பட்டை தீட்டுதல் மற்றும் ஆபரணம் செய்தல் என்பனவற்றின் மூலம் அவற்றின் பெறுமதி கூட்டலை அதிகரிக்கின்றனர். இவ் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மேலே சொல்லப்பட்ட இறக்குமதியாளர் வகையினர் தமது கொடுக்கல்வாங்கல்களை சுமூகமாக மேற்கொள்ள வசதியளிப்பதுடன் இத் தொழிலின் வளர்ச்சிக்கு பங்களிக்கவும் உதவும்.

இதற்கமைய, இரத்தினக்கற்கள் அத்துடன் அல்லது ஆபரணங்களின் ஏற்றுமதிகள்; இரத்தினக்கற்கள் அத்துடன் அல்லது ஆபரணங்களின் இறக்குமதிகள் மற்றும் முடிவுற்ற அல்லது முடிவுறாத இரத்தினக்கல் அத்துடன் அல்லது ஆபரணங்களை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்குகின்ற தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்கள், நிறுவனங்கள் மற்றும் கம்பனிகள் "இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வணிகர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்" இனைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**(ஊ) இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்கள், அவற்றின் அலுவலர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு குறிப்பிட்ட வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களை வெளிநாட்டு நாணயத்திலும் இலங்கை ரூபாவிலும் மேற்கொள்ள அனுமதியளித்தல்**

இலங்கை அந்நியோன்யமான இருபுடை மற்றும் பல்புடை உறவுகளை வெளிநாடுகளுடன் கொண்டிருப்பதுடன், அத்தகை உறவு முறைகள் தற்போதைய பொருளாதாரச் சூழலில் விரிவடைந்தும் வருகின்றன. தற்பொழுது, செலாவணிக் கட்டுப்பாட்டு நோக்கங்களுக்காக தூதரகங்கள், உயர் ஸ்தானிகராலயங்கள், துணைத் தூதரகங்கள், ஐக்கிய நாடுகள் அல்லது ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளின் நிரந்தர வெளிநாட்டு அலுவலகங்கள் உள்ளிட்ட வெளிநாட்டு இராஜதந்திரப் பணியாளர்கள் வதிவற்றோராகக் கருதப்படுவதனால் வெளிநாட்டு நாணயத்தில் வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு குறித்துரைக்கப்பட்ட ஒப்புதல்கள் தேவைப்படுகின்றன.

இதற்கமைய, இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திர தூதரகங்கள், இராஜதந்திர ஆளணியினர் மற்றும் அவர்களது

குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் இராஜதந்திரிகள் வெளிநாட்டு நாணயக் கணக்கினையும் இராஜதந்திர ரூபாக் கணக்கினையும் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

### 9.4 வெளிநாடுகளில் முதலீடு செய்வதற்கும் வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்குமான ஒப்புதல்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் வெளிநாடுகளில் முதலீடுகளைச் செய்வதற்கும் வெளிநிலைகளிலிருந்து கடன்படுவதற்குமான ஒப்புதல்களின் பொருட்டு 76 கோரிக்கைகளை பரிசீலித்ததுடன் 30 கோரிக்கைகளுக்கு ஒப்புதல்களை வழங்கியது. அவை செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளின் நியதிகளில் கீழே தெளிவாக காட்டப்பட்டுள்ளன.

(அ) முக்கியமாக வங்கித்தொழில், வர்த்தகப்படுத்தல், சரக்கு அனுப்புதல், சில்லறைத் தொழிற்பாடுகள் மற்றும் ஊழியர்களை பகிர்ந்து கொள்ளும் விருப்புக்குரிய திட்டங்கள் போன்றவற்றில் ஐ.அ.டொலர் 38.55 மில்லியன்களை வெளிநாடுகளில் முதலீடு செய்வதற்காக 18 வதியும் கம்பனிகளுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

(ஆ) வெளிநாடுகளிலிருந்து ஏறத்தாழ ஐ.அ.டொலர் 67.21 மில்லியன்களை கடன்படுவதற்காக 12 வதியும் கம்பனிகளுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

### 9.5 சரக்கு அனுப்புவோர், நாணய மாற்றுநர் மற்றும் மட்டுப்படுத்தப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை/ உரிமங்களை வழங்குதல்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் சரக்கு அனுப்புவோர் நாணய மாற்றுநர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கும் கீழே காட்டப்பட்டவாறு அனுமதிப்பத்திரங்களைத் தொடர்ந்தும் வழங்கியது.

(அ) நாற்பது புதிய கம்பனிகள் சரக்கு அனுப்புவோராகப் பதிவு செய்யப்பட்டதுடன் 2010 இறுதியில் சரக்கு அனுப்புவோர் மொத்த எண்ணிக்கை 341இனை அடைந்தது.

(ஆ) எட்டு புதிய நாணய மாற்றுநர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டதுடன் நாணய மாற்றுநர்களின் மொத்த எண்ணிக்கை 83இற்கு அதிகரித்தது. மேலும், ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 4 மில்லியனுக்கும் கூடுதலான வெளிநாட்டு நாணயத்தினை வெற்றி கரமாகக் கொள்வனவு செய்த 11 வெளிநாட்டு நாணய மாற்றுநர்கள் வெளிநாட்டு நாணயத்தினை விற்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். நாணய மாற்றுநர் அனுமதிப்பத்திரத்தினைப் புதுப்பிப்பதற்குத் தேவையான ஆகக் குறைந்த ஆண்டுப் புரள்வு ஐ.அ.டொலர் 600,000 இலிருந்து 2010 சனவரி 1 ஆம் நாளிலிருந்து ரூ. 1 மில்லியனுக்கு உயர்த்தப்பட்டது.

(இ) தீர்வையற்ற கடைகள், சுற்றுலா விடுதிகள், பயண முகவர்கள் மற்றும் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் போன்ற ஏனைய மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு நாற்பத்தியிரண்டு புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன் அத்தகைய மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் மொத்த எண்ணிக்கை 786 இற்கு அதிகரித்தது.

### 9.6 செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவது பற்றிய புலனாய்வுகள்

வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் சந்தைப் பங்கேற்பாளர்களின் ஒழுங்குமுறையான தொழிற்பாடு மற்றும் முன்னேற்றகரமான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் வினைத்திறனை உறுதிப்படுத்தும் பொருட்டு வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடும் வணிகர்கள் மற்றும் பல தரப்பட்ட ஏனையவர்களினால் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்கி ஒழுகத் தவறியமை மற்றும் மேற்கூறிய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்பட்டமை தொடர்பாக புலன்விசாரணைகள் நடத்தப்பட்டன.

இதற்கமைய, 2010ஆம் ஆண்டுப் பகுதியில் 59 காரணம் காட்டுமாறு கோரும் கடிதங்களும் 28 தண்டக் கடிதங்களும் 27 பணிப்புரைக் கடிதங்களும் 28 எச்சரிக்கைக் கடிதங்களும் விடுவிக்கப்பட்டு 114 புலனாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்ட வேளையில் குற்றமிழைத்தோரின் மீது விதிக்கப்பட்ட தண்டப் பணமாக ரூ.8,942,555.37 சேகரிக்கப்பட்டது. அத்தகைய புலனாய்வுகளில் பெரும்பாலானவை வெளிநாட்டு நாணயத்தினை அதிகாரமளிக்கப்படாது ஏற்றமை மற்றும் கொள்வனவு செய்தமை, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியில் குறிப்பிட்டுள்ள நடைமுறைக்கு முரணாக வதியாதோருக்குப் பிணையங்களை வழங்கியமை மற்றும் இலங்கையில் வதியும் நபர்களினால் வதியாதோருக்கு வெளிநாட்டு நாணயங்களை அதிகாரமின்றிக் கொடுத்தமை என்பனவற்றுடன் தொடர்பானவையாகக் காணப்பட்டன. மேலும், 2010ஆம் ஆண்டுப் பகுதியில் 675 பொதுமக்கள் விசாரணைகள் மற்றும் விடயங்களுக்கான தெளிவூட்டல்களும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

### 9.7 ஏனைய நடவடிக்கைகள்

தொழிலாளர் பணவனுப்பல்கள் வங்கித்தொழில் வழிப்படுத்தல் களூடாக மேற்கொள்ளப்படுவதனை மேம்படுத்தும் தொடர்ச்சியான முயற்சியொன்றாக இந் நோக்கத்திற்காக மிக வசதியானதும் வினைத்திறன் மிக்கதும் குறைந்த செலவினைக் கொண்டதுமான பொறிமுறையொன்றினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை பின்பற்றுவதனைத் தூண்டும் விதத்தில் வடிவமைப்பதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் மேலும் தளர்த்தப்படுவதனை அறிவிக்கும் விதத்தில் பத்திரிகை மாநாடொன்று நடத்தப்பட்டது. மேலும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்காக ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு தாராளமயமாக்கப்பட்ட வழிமுறைகள் பற்றி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டன. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்கள அலுவலர்கள் செலாவணிக் கட்டுப்பாடு தொடர்பான விடயங்களில் பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் ஆய்வரங்கு களையும் நடத்தினர்.

## 10. நிதியியல் உளவறிதல் பிரிவு

நிதியியல் உளவறிதல் பிரிவு 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளின் கீழ் நிறுவப்பட்டதுடன் அதன்

நிருவாகம் 2007இல் நாணச்சபைக்கு ஒப்படைக்கப்பட்டது. அதன் முக்கிய தொழிற்பாடுகள் நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்ட பணம் தூயதாக்கல் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் சட்ட விரோதச் செயற்பாடுகள் தொடர்பான நிதியியல் கொடுக்கல் வாங்கல் மீதான தகவலைச் சேகரித்தல், சந்தேகத்திற்கிடமான நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விசாரணை நடத்துதல், சட்டத்தை இயற்றல் / நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகளைத் தொடுப்பதற்குப் பொருத்தமான ஒழுங்கமைப்பு மற்றும் சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகார சபைகளுக்கு புலன் விசாரணைகளின் தகவல் மற்றும் விபரங்களைப் பரப்புதல், உங்களது வாடிக்கையாளர்களை அறிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் நடைமுறைகள் தொடர்பாக பணிப்புரைகள்/ ஒழுங்கு விதிகளை வழங்கல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. 2010இல் நிதியியல் உளவறிதல் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளின் பண்புகள் பின்வருமாறு.

### 10.1 தகவலைச் சேகரித்தல் மற்றும் புலனாய்வு செய்தல்

நிதியியல் உளவறிதல் பிரிவால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளின் கீழ், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள், பங்குத் தரகு நிறுவனங்கள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் ரூ.1.0 மில்லியன் மற்றும் அதற்குக் கூடுதலான காசுக் கொடுக்கல் வாங்கல் மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் (உள்வரும் அல்லது வெளிச் செல்லும்) அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களை நிறுவனங்களால் அறிக்கையிடப்படும் தகவல்/தரவைப் பெறுவதற்கும், பகுப்பாய்வு செய்வதற்குமாக வடிவமைக்கப்பட்ட "லங்காபின்" என்ற நிதியியல் உளவறிதல் பிரிவின் அதே நேரத் தரவுத்தள முகாமைத்துவ முறையினூடாக தொடர்ந்து அறிவித்து வந்தன. இதன்படி, இவ்வாண்டில் 3 மில்லியனுக்கும் கூடுதலான காசு மற்றும் நிதிய மாற்றல்களும் 246 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் அறிக்கைகளும் பெறப்பட்டன. ஆரம்பப் புலனாய்வுகளை நடத்திய பின்பு 33 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கைகள் மேலதிக புலன் விசாரணைக்காக சட்டத்தை நடைமுறைக்கிடும் முகவர்களுக்கும், ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகார சபைகளுக்கும் அறிவிக்கப்பட்டது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட புலன் விசாரணைகளின் அடிப்படையில் சட்டமா அதிபர் திணைக்களம் பணம் தூய்தாக்கல் குற்றங்களுக்கெதிராக இரண்டு குற்றப் பத்திரிகைகளையும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் குற்றங்களுக்கெதிராக மூன்று குற்றப் பத்திரிகைகளையும் 31.12.2010இல் உள்ளவாறு தாக்கல் செய்தது.

### 10.2 ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிலான மேம்பாடு

பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியிடலை ஒழித்தல் தொடர்பாக பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளில் ஏற்படும் மாற்றங்களுடன் இணங்கிச் செல்வதில் ஒழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப்பை மேலும் பலப்படுத்தும் பொருட்டு நிதியியல் உளவறிதல் பிரிவு ஏனைய ஆர்வலர்களுடன் சேர்ந்து 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதி கொடுக்கல் வாங்கல்களை அறிவிக்கும் சட்டம், 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியிடலை நிறுத்துவது தொடர்பான உடன்படிக்கைச் சட்டம் மற்றும் 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கல் தடுத்தல் சட்டம் என்பவற்றுக்கு பல திருத்தங்களை முன்மொழிந்தது. இத் திருத்தங்கள் நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு, உலகளாவிய பணம் தூய்தாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் நியம தயாரிப்பவரால் அறிவுறுத்தப்பட்ட நியமங்களுடன் இணங்கிச் செல்லும் வகையில் பணம் தூய்தாக்கலையும் பயங்கரவாதத்திற்கான நிதியிடலை கூடிய வினைத்திறனுடன் ஒழிப்பதற்கு சட்ட மற்றும் ஒழுங்கமைப்பு முறைமையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. நிதியியல் உளவறிதல் பிரிவு இத்திருத்தங்களை இறுதிப்படுத்தும் மற்றும் விதிகள்/ ஒழிப்புக்களை உருவாக்கும் செயல்முறையிலும் ஈடுபட்டுள்ளது.

### 10.3 ஏனைய செயற்பாடுகள்

**(i) புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்:**

புலன் விசாரணை செய்தல் மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களுக்கு வழக்குத் தொடர்தல் நோக்கங்களுக்கான தகவலைப் பகிர்வதை வசதிப்படுத்தும் ஒரு பொறி முறையாக நிதியியல் உளவறிதல் பிரிவு பெல்ஜியத்தின் நிதிசார் தகவல் செயல்முறைப்படுத்தும் பிரிவு, அவுத்திரேலிய கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கைகள் மற்றும் பகுப்பாய்வு நிலையம், வங்காள தேசம், இந்தியா, சொலமன் தீவின் நிதியியல் உளவறிதல் பிரிவுகள் மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களம் என்பவற்றுடன் ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 2010ஆம் ஆண்டு கைச்சாத்திட்டது. இதன்படி, கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மொத்த எண்ணிக்கை 2010 திசெம்பர் இறுதியில் 12 இற்கு அதிகரித்தது.

**(ii) நிறுவன ரீதியிலான இயலளவைக் கட்டியெழுப்புதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்:**

பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்துக்கான நிதியிடல் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை கண்டு பிடித்தல், பகுப்பாய்வு செய்தல், மற்றும் அறிவித்தல் தொடர்பாக விழிப்பூட்டலை அதிகரிக்கும் தொடர்ச்சியான முயற்சிகளாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள், பொலிஸ் திணைக்களம், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 1,100இற்கும் கூடுதலான பங்கேற்பாளர்களை உள்ளடக்கி மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் 15 விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. அத்தகைய ஐந்து நிகழ்ச்சித் திட்டங்கள் அவுத்திரேலிய நிதியியல் உளவுப் பிரிவான அவுத்திரேலிய கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கைகள் மற்றும் பகுப்பாய்வு நிலையத்தின் உதவி மூலம் நடத்தப்பட்டன. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவு இலங்கை நீதிபதிகள் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து நீதிபதிகளுக்கான சிறப்பு நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தியதுடன் 61 நீதிபதிகள் இந் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்றனர்.

### (iii) பன்னாட்டு உறவுகள்

(அ) எக்மன்ற் குழு: நிதியியல் உளவறிதற் பிரிவு 12 சந்தர்ப்பங்களில் புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்காக என்மன்ற் குழுமத்தின் (118 உறுப்பினர்களைக் கொண்ட நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் அமைப்பு) உறுப்பினர்களிடமிருந்து உதவியைப் பெற்றது. இது போலவே, இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, உறுப்பினர் நாடுகளில் தற்போது நடைபெற்றுவரும் புலன் விசாரணைகளுக்கு உதவுவதற்கு சான்றுகளைச் சேகரிப்பதில் அவற்றுக்கு வசதியளிப்பதற்காக ஒன்பது வேண்டுகோள்களையும் ஏற்றுக்கொண்டது.

(ஆ)பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக்குழு: பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் குழுவின் உறுப்பினர் நாடான இலங்கை சிங்கப்பூரில் 2010 யூலையில் நடைபெற்ற அதன் 13ஆவது வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவு இலாபமீட்டாத நிறுவனங்கள் துறை மற்றும் சட்ட விரோதமாக ஆட்களைக் கொண்டு செல்வதில் பாதிப்புக்குள்ளாகும் தன்மையை மையப்படுத்தி வங்காளதேசத்தில் நடைபெற்ற 13ஆவது வருடாந்த மரபாய்வுச் செயலமர்வில் கலந்து கொண்டது.

### (iv) தலத்திலான பரீட்சிப்பை நடத்துதல்

2010ஆம் ஆண்டில் நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் மற்றும் நிதியியல் புலனாய்வுப் பிரிவால் வழங்கப்பட்ட ஏனைய விதிகள் மற்றும் நிதியியல் பணிப்புகளுடன் இணங்கிக் காணப்படாத பணம் தூ யதாக்கல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியிடல் என்பவற்றின் இடர்நேர்வுக்கு அறிக்கையிடும் நிறுவனங்களின் இடர்காப்பின்மையை மதிப்பிடுவதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவு மூன்று தலத்திலான பரீட்சிப்புக்களை நடத்தியது. மேலும், இணங்கியொழுகுதல் விடயம் சம்பந்தமான பற்றாக்குறைகள் காணப்பட்டபோது நிதியியல் நிறுவனம் ஒன்றின்மீது தடைகள் விதிக்கப்பட்டது.

## 11. நிதியியல் முறைமை உறுதிப்பாடு

இலங்கை மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பேணுவதில் மத்திய வங்கிக்கு உதவுவதற்கு நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம் 2007இல் நிறுவப்பட்டது. இத் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகள் பேரண்ட - முன்மதியுடைய கண்காணிப்பு, வருடாந்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வைத் தயாரித்தல் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவையும் வசதிப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. 2010இல் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களத்தால் மேற் கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகளின் சுருக்கமான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

### பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு

நிதியியல் துறைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கும் அத்தகைய அச்சுறுத்தல்களுக்கு தாக்குப் பிடிக்கும் அதன் இயலளவை மதிப்பிடுவதற்கும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பை நடத்துகிறது. இது பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் சந்தை அபிவிருத்திகள், மற்றும் வங்கித் தொழில் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளையும் சம்பந்தப்படுத்துகிறது. முக்கிய நிதியியல் நிறுவனங்களின் ஆற்றலைக் கண்காணிப்பதற்கு ஒருங்கிணைந்த நிதியியல் ஆற்றல் குறிகாட்டிகளின் அனைத்தையும் உள்ளடக்கிய தொகுதி காலாந்தர அடிப்படையில் தொகுக்கப்பட்டன. உள்ளார்ந்த வளம் மிக்க கொடுகடன் இடர்நேர்வு, திரவத் தன்மை இடர்நேர்வு, மற்றும் சந்தை இடர்நேர்வு அதிர்வுகளுக்கு வங்கித் துறையில் மீள் எழுச்சியை மதிப்பிடுவதற்கு நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம் இத்துறை மீது அழுத்த பரிசோதனைகளையும் நடத்துகிறது. இத்துடன், வங்கித் தொழில் ஆற்றல் சுட்டெண்ணும் காலாண்டு அடிப்படையில் தொகுக்கப்பட்டது. நிதியியல் முறமை உறுதிப்பாட்டுத் திணைக்களம் உள்ளக நோக்கங்களுக்காக கிரமமான நிதியியல் துறை மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தது. கம்பனித் துறையின் நிதியியல் பலம் மற்றும் கொடுகடன் மீள் கொடுப்பனவு இயலளவை மதிப்பிடுவதற்கு கம்பனித்துறை கடன்பாட்டாளர்கள் தொடர்பான தரவுத் தளத்தை விருத்தி செய்வதற்கான வேலையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திணைக்களம், நிதியியல் முறைமை மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய விருத்திகளில் மத்திய வங்கி விழிப்புடன் இருப்பதற்காக முக்கிய நிதியியல் சந்தைகளை உள்ளடக்கிய முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் முறைமையின் விருத்திக்கும் பங்களிப்புச் செய்தது.

### வெளியீடுகள்

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு (நிமுஉமீ) 2009 2010 சனவரியில் வெளியிடப்பட்டது. நிமுஉ மீளாய்வு 2010, 2010இன் இறுதிக் காலாண்டில் தயாரிக்கப்பட்டதுடன் 2011 முதற் காலாண்டில் வெளியிடப்படும். நிமுஉ மீளாய்வு 2010 ஆறு அத்தியாயங்களையும் 5 கட்டமிடப்பட்ட அறிக்கைகளையும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு மற்றும் இடர்நேர்வைக் குறைக்கும் வழிமுறைகள், உலகளாவிய மற்றும் உள்நாட்டு பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உள்நாட்டு நிதியியல் சந்தைகளின் செயலாற்றம், வங்கித் தொழில்முறைச் செயலாற்றம் மற்றும் இடர்நேர்வுகள், ஏனைய நிதியியல் நிறுவனங்களின் அபிவிருத்திகளும் இடர்நேர்வுகளும், பிரதான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் மற்றும் நிதியியல் துறையை ஆளுகைப்படுத்தும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பு என்பவற்றை உள்ளடக்கும் ஐந்து சிறப்புக் குறிப்புக்களையும் உள்ளடக்குகிறது. திணைக்களம் ஆண்டறிக்கை 2009 மற்றும் அண்மைக்காலப் பொருளாதார அபிவிருத்திகள் 2010இன் நிதியியல் துறை அபிவிருத்திகள் தொடர்பான அத்தியாயத்தை தயாரிப்பதிலும் ஒருங்கிணைந்து செயற்பட்டது.

### நிதியியல் முறைமை உறுதிப்பாடு தொடர்பாக குழுக்களின் ஒருங்கிணைப்பு

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம் 2010இல் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு மற்றும் நிதியியல் முறைமை ஆலோசனைக் குழுவிற்கான செயலகமாகவும் தொடர்ந்து பணியாற்றியது.

**(அ) நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு**

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவிற்கு நிதியியல் முமைமை உறுதிப்பாட்டுக்குப் பொறுப்பான துணை ஆளுநர் தலைமை தாங்குகிறார். இக் குழு 2010இல் மீள அமைக்கப்பட்டதுடன் விலை உறுதிப்பாட்டிற்குப் பொறுப்பான துணை ஆளுநர், நிதியியல் முறைமை உறுதிப்பாடு, விலை உறுதிப்பாடு மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகளுக்கான உதவி ஆளுநர்கள், நிதியியல் முறைமை உறுதிப்பாடு, வங்கி மேற்பார்வை, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள், பொருளாதார ஆராய்ச்சி, பொதுப்படுகடன், பன்னாட்டுத் தொழிற்பாடுகள், உள்நாட்டுத் தொழிற்பாடுகள், தகவல் தொழில்நுட்பம், புள்ளிவிபரவியல், செலாவணிக் கட்டுப்பாட்டு, நிதியியல் உளவறிதல் ஆகிய திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பதினெட்டு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு என்பது நிதியியல் துறையைப் பாதிக்கும் இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கும், இடர்நேர்வுகளைத் குறைப்பதற்கான வழிமுறையைக் கலந்தாலோசிப்பதற்கும், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்குமான திணைக்களங்களுக் கிடையேயான ஒரு மன்றமாகும். இக்குழு 2010இல் ஏழு தடவைகள் சந்தித்துள்ளது.

**(ஆ) நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு**

2008இல் நாணயச் சபையால் நியமிக்கப்பட்ட நிதியியல் முறைமை ஆலோசனைக் குழு நிதியியல்துறை பிரச்சனைகள் தொடர்பாக மத்திய வங்கிக்கு கருத்துக்களையும் ஆலோசனையையும் வழங்குவதற்கு முக்கியமாக தனியார் துறையிலிருந்தான நபர்களைக் கொண்டுள்ளது. தற்போதைய நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக்குழு பத்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் இவ்வாண்டில் பதினொரு தடவைகள் சந்தித்துள்ளது. இக்குழு கடன் அட்டை வழிகாட்டல்கள், நிதிக் கம்பனிகளை ஒழுங்கு முறைப்படுத்தல், நிதியியல் சாதனங்களின் வரி அறவிடல், இணைய மோசடியை ஒழித்தல், மூத்த பிரசைகளுக்கான நிதியியல் சலுகைகள், கிராமியப் பகுதிகளில் வங்கி வைப்புக்களை மீள முதலிடல், ஆயுள் காப்புறுதி சாதனங்கள், கூறு நம்பிக்கைகள் மற்றும் பணச் சந்தை நிதியங்கள் மற்றும் பங்குச் சந்தையை அபிவிருத்தி செய்தல் தொடர்பான விதந்துரைப்புக்களை மேற்கொண்டது.

## 12. ஆளுநர் செயலகம்

ஆளுநர் செயலகத் திணைக்களம் செயலகப் பணி, உபசரணையாளர் பணிகள், ஆளுநரால் ஒப்படைக்கப்பட்ட பணிகள் மீதான செயற்பாடுகளைப் பின் தொடர்தல் என்பவற்றை கவனிப்பதன் மூலமும் முதலீட்டாளரை மேம்படுத்துதல் போன்றவற்றை வசதிப்படுத்துவதன் மூலமும் ஆளுநருக்குத் தேவையான விரிவுபடுத்தப்பட்ட தொழிற்பாட்டு வசதியைத் தொடர்ந்து வழங்கியது.

ஆளுநர் செயலகத் திணைக்களம் ஏனைய விடயங்களிடையே ஆளுநரைச் சந்திப்பதற்கான முன்அனுமதிகளையும் அதனுடன் தொடர்பான கடிதத் தொடர்புகளையும் முகாமைப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருந்தது. மீளாய்விற்குரிய ஆண்டில் ஆளுநர் மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள், வர்த்தகத் தலைவர்கள் மற்றும் ப.நா.நிதியம், உலக வங்கி போன்ற பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களிலிருந்தான தூதுக்குழுக்கள் மற்றும் ஏனைய வெளிநாட்டு தூதுக்குழுக்கள் என்பன உட்பட முக்கியமான விருந்தினர்களுடன் பெரும் எண்ணிக்கையான கூட்டங்களை நடத்தியிருக்கிறார். இக் கூட்டங்கள் தொடர்பான அத்தகைய அனைத்து முன்அனுமதிகளும் அஞ்சல் வழித் தொடர்புகளும் சிறந்த முறையில் பின் தொடர்ந்து கவனிக்கப்பட்டதுடன் ஆளுநரின் நிகழ்ச்சி நிரல்கள் சுமுகமாக இடம்பெறுவதனை உத்தரவாதப்படுத்தும் விதத்தில் தொடர்பான தரப்பினருக்கு அவை அறிவிக்கப்பட்டன.

ஆளுநர் செயலகத் திணைக்களம், ஆளுநர், ஆளுநரின் மிக முக்கியமான விருந்தினர்கள் மற்றும் வங்கிக்கு அழைக்கப்பட்ட முக்கிய விருந்தினர் ஆகியோருக்குப் பொருத்தமான உபசரணைப் பணிகளை வழங்கியது. ஆளுநரின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயண ஒழுங்குகள் அனைத்தும் ஆளுநர் செயலகத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய, ஆளுநர் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுள்ள பொருளாதார முக்கியத்துவம் பெற்ற இடங்களுக்கு பல களவிஜயங்களை மேற்கொண்டார். இத்துடன், ஆளுநர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வரும் புதிய அபிவிருத்திகளை மேற்பார்வை செய்வதற்கும் வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களைத் திறப்பதற்கும் வியாபார சமூகம் மற்றும் அரசாங்கத்தின் முக்கிய அலுவலர்களைச் சந்திப்பதற்கும் இப் பிரதேசங்களுக்கு விஜயங்களை மேற்கொண்டார். இது சம்பந்தமாக ஆளுநரின் அத்தகைய விஜயங்களுக்கான உபசரணைப் பணிகளுடன் சேர்ந்து தேவையான போக்குவரத்து ஒழுங்குமுறைகளை திணைக்களம் மேற்கொண்டது. ஆளுநர் பிரதம விருந்தினராகவோ அல்லது முதன்மைப் பேச்சாளராகவோ இலங்கையில் நடைபெற்ற பல கூட்டங்களில் கலந்து கொண்டார். ஆளுநர் பிரதம விருந்தினராகவோ அல்லது முதன்மைப் பேச்சாளராகவோ ப.நா.நிதியம் மற்றும் உலக வங்கிக் கூட்டங்கள், முதலீட்டாளர் கூட்டங்கள் மற்றும் சில ஏனைய உயர்மட்ட பன்னாட்டுக் கூட்டங்களில் கலந்து கொள்தல் உள்ளடங்கலாக பல எண்ணிக்கையான அலுவல்சார் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டார். ஆளுநரின் வெளிநாட்டுப் பயணத்துக்கான அனைத்து ஏற்பாட்டுப் பணிகளையும் வழங்கிய அதேவேளை ஆளுநர் செயலகத் திணைக்களம் அவரின் விஜயங்கள் வெற்றிகரமாக அமைவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் தேவையான தரவுகள், தகவல் மற்றும் “பவர் பொயின்ற்” வெளிப்படுத்துகைகளை வழங்குவதன் மூலம் ஆளுநருக்கு வசதியளித்தது. ஆளுநர் அலுவலகக் கடமைக்காக வெளியில் செல்லும் போது பணம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் அந்நேரத்தில் தேவைப்படும் முக்கிய

தகவல்களை கணனி முறையில் அதேநேரத்தில் வழங்குவதை ஆளுநர் செயலகத் திணைக்களம் உறுதிப்படுத்தியது. மேலும், ஆளுநரினதும் துணை ஆளுநர்களினதும் அனைத்து அலுவல்சார் விருந்துபசாரங்களையும் திணைக்களம் ஒழுங்கு செய்தது.

வங்கியின் பல எண்ணிக்கையான கூட்டங்களுக்கு ஆளுநரால் கேட்டுக் கொள்ளப்பட்ட அவசியமான உள்ளீடுகளை ஆளுநர் செயலகத் திணைக்களம் வழங்கியது. மேலும், வங்கியின் 2011 - 2015 உபாயத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் வெளிப்படுத்தலில் ஆளுநரின் பணியையும் ஆளுநர் செயலகத் திணைக்களம் வசதிப்படுத்தியது. வங்கிக்கு வெளியே ஆளுநர் பிரதிநிதித்துவம் செய்த கூட்டங்களுக்கு ஆளுநர் செயலகத் திணைக்களம் ஆளுநருக்குத் தேவையான தரவையும் தகவலையும் வழங்கியது. மேலும், இவ்வாண்டில், ஆளுநர் செயலகத் திணைக்களம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் கிரமமான செயற்பாடுகளைக் கொண்டிருந்ததுடன் இலங்கைப் பொருளாதாரம் தொடர்பான தகவலையும் தெளிவுபடுத்தல்களையும் உரிய நேரத்தில் வழங்கியது.

இவ்வாண்டில், ஆளுநர் பல எண்ணிக்கையான பத்திரிகை மாநாடுகள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுக்கான நேர்காணல்களில் கலந்து கொண்டதுடன் இதற்கு ஆளுநர் செயலகத் திணைக்களம் தேவையான ஏற்பாட்டு ஒழுங்குமுறைகளை வழங்கியதுடன் அத்தகைய நிகழச்சிகள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஆளுநர் செயலகத் திணைக்களம் ஏனைய திணைக்களங்களுக்கு ஆளுநரால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை நெருக்கமாகக் கவனித்ததுடன் அவை நடைமுறைப்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்தியது. இத்துடன் திணைக்களம் வங்கிகளின் செயற்பாடுகள் மற்றும் இலங்கைப் பொருளாதாரம் தொடர்பான பிரச்சனைகள் சம்பந்தமாக பொதுமக்களால் ஆளுநருடன் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலிறுப்பதன் மூலம் அவர்களுக்கு உதவியது. ஒட்டுமொத்தமாக, இவ்வாண்டில் ஆளுநர் செயலகத் திணைக்களம் ஆளுநருக்கு வினைத்திறன் மிக்க துணைப் பணிகளை உறுதிப்படுத்தி ஆளுநரின் பணியை சுமுகமாக தொழிற்படுத்துவதற்கு உத்தரவாதமளித்தது.

## 13. மனிதவளங்கள் முகாமைத்துவம்

மனிதவளங்கள் திணைக்களத்தின் கவனம் முன்னைய ஆண்டுகளைப் போன்றே 2010இல் புதிய தேர்ச்சிகள் மற்றும் அறிவைப் பெறல், தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப ஆற்றல் குழுவைப் பலப்படுத்துவதற்கும் ஆழமாக்குவதற்கும் தேவையான பயிற்சியை வழங்கல் மற்றும் வங்கியின் முக்கிய குறிக்கோள்களை அடைவதில் ஊழியர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதனூடாக வங்கியின் மனித மூலதனத்தை வலுவாக்குவதில் செலுத்தப்பட்டது. இது சம்பந்தமாக 2010இல் இத் திணைக்களத்தால் நிறைவேற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகள் ஆட்சேர்ப்பு, கேள்வியை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி, இயலளவைக் கட்டியெழுப்பல், உயர் உற்பத்தித்திறனை அடைவதற்கு அலுவலர்களின் மனோபாவத்தை மாற்றியமைத்தல், அலுவலர்களின் பதவியுயர்வுகள், செயலாற்ற முகாமைத்துவம், தொழில் சுழற்சி, தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் மற்றும் செயல்நோக்கம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. 2010இல் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆட்சேர்ப்புக்களைத் தொடர்ந்து வங்கியின் மொத்த அலுவலர் எண்ணிக்கை 2009இன் 1,263 உடன் ஒப்பிடுகையில் 1,497 இற்கு 19 சதவீதத்தால் அதிகரித்தது. 2010இல் ஏற்பட்ட ஓய்வுகள் மற்றும் இராஜினாமாக்கள் காரணமாக தேய்வு வீதம் 2009இன் 3.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 1.9 சதவீதமாக விளங்கியது.

### 13.1 மனிதவள அமைப்பு

2010இல் 265 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டதன் மூலம் 2010 திசெம்பர் இறுதியில் 654 உயர் வகுப்பு அலுவலர்கள், 666 உயர் வகுப்பல்லாத அலுவலர்கள், 169 சிற்றூழியர்கள் மற்றும் 08 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுமாக மொத்த அலுவலர்களின் எண்ணிக்கை 1,497 ஆக விளங்கியது. இதன்படி, ஊழியர் ஒருவரின் சராசரி வயது 2009இன் 45 ஆண்டுகளிலிருந்து 2010 திசெம்பரில் 41 ஆண்டுகளுக்குக் குறைக்கப்பட்டது. அட்டவணை II-9 இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு உயர் அலுவலர் வகையிலுள்ள ஊழியர்களில் கிட்டத்தட்ட 80 சதவீதமானோர் முதல் பல்கலைக்கழகப் பட்டத்தையோ, பட்டப்பின் படிப்புப் பட்டத்தையோ அல்லது தொழில்சார் தகைமைகளையோ கொண்டுள்ளனர். 2010இல் 9 ஊழியர்கள் இராஜினாமாச் செய்திருக்கையில் 20 ஊழியர்கள் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர்.

### 13.2 ஆட்சேர்ப்பு

வங்கியின் பொது ஆட்சேர்ப்புக் கொள்கையின் கீழ் வங்கியில் அடையாளம் காணப்பட்ட திறமைகளுக்கிடையிலான இடைவெளிகளை நிரப்புவதற்கு திணைக்களம் 2010 யூனிலும், செத்தெம்பரிலுமாக 96 முகாமைத்துவப் பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்தது. இத்துடன் 71 சிற்றூழியர்கள் மற்றும் 94 வங்கித்தொழில் உதவியாளர்களும் முறையே 2010 யூனிலும், செத்தெம்பரிலும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். வங்கியில் செயலக உதவிப் பணிகளுக்கான சிறப்பியல்பு வாய்ந்த தொழில்சார் பணிகளுக்கான தேவைப்பாட்டைக் கவனத்திற் கொண்டு வங்கியின் ஆகப் பிந்திய ஆட்சேர்ப்புக் கொள்கையின் கீழ் 2010இல் மின் பொறியியலாளர், குடிசார் பொறியியலாளர், உதவிப் பாதுகாப்புக் கட்டுப்பாட்டாளர் மற்றும் மூத்த உதவி பாதுகாப்புக் கட்டுப்பாட்டாளர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

2010இல் மருத்துவ நிலையத்தில் மருத்துவ அலுவலர் ஒருவரையும் மருத்துவ தாதி ஒருவரையும் வங்கியின் உடற்பயிற்சி நிலையத்துக்கான போதனா ஆசிரியர் ஒருவரையும் வெளிமூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதேவேளை, பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் மற்றும் வங்கியின் உணவகத்தின் சில வகையான அலுவலர்களின் பணியும் வெளிமூலங்களிலிருந்து பெறப்பட்டன.

திணைக்களம் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் கட்டுப்படுத்தப்படும் வறுமை ஒழிப்புக்கான நுண்பாக நிதி செயற்றிட்டம் II இற்கான ஊழியர்களின் ஆட்சேர்ப்பையும் வசதிப்படுத்தியது. இதன்படி, திணைக்களம் 2010இல் கொடுகடன் ஆலோசகர், சிறப்புப் பயிற்சியாளர், சிறப்புச் சந்தைப்படுத்துநர் மற்றும் சிறப்புக் கண்காணிப்பாளரை தெரிந்தெடுப்பதற்கு வசதியளித்தது.

**அட்டவணை II - 9**
**மனிதவள அமைப்பு - 2010.12.31இல் உள்ளவாறு**

| ஊழியர்களின் வகைகள் | ஊழியர்களின் எண்ணிக்கை | | | சராசரி வயது (ஆண்டு) | கல்வி/ தொழில்சார் தகைமைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | | பட்டப்பின் படிப்பு, முதற்பட்டம், தொழில்சார் தகைமைகள் | பட்டப்பின் படிப்பு, முதற் பட்டம் | பட்டப்பின் படிப்பு, தொழில்சார் தகைமைகள் | முதற்பட்டம், தொழில்சார் தகைமைகள் | முதற் பட்டம் | தொழில்சார் தகைமைகள் |
| **(1) உயர் அலுவலர் வகுப்பு** | | | | | | | | | | |
| (i) தரம் IV உம் அதற்கு மேலும் | 51 | 17 | 68 | 52 | 13 | 45 | 02 | 04 | 04 | 0 |
| (ii) தரம் III | 69 | 19 | 88 | 52 | 08 | 40 | 01 | 03 | 36 | 0 |
| (iii) தரம் II | 92 | 88 | 180 | 44 | 06 | 26 | 03 | 29 | 87 | 08 |
| (iv) தரம் I | 85 | 137 | 222 | 45 | 0 | 12 | 01 | 06 | 109 | 0 |
| (v) முகாமைத்துவ பயிலுநர்கள் | 38 | 58 | 96 | 27 | 0 | 05 | 01 | 37 | 37 | 16 |
| **(2) உயர் அலுவலர் அல்லாதோர் வகுப்பு** | | | | | | | | | | |
| (i) தரம் V | 26 | 46 | 72 | 55 | 0 | 0 | 0 | 0 | 19 | 01 |
| (ii) தரம் IV | 77 | 52 | 129 | 50 | 0 | 0 | 0 | 0 | 09 | 01 |
| (iii) தரம் III | 71 | 14 | 85 | 50 | 0 | 0 | 01 | 0 | 01 | 03 |
| (iv) தரம் II | 108 | 82 | 190 | 33 | 0 | 0 | 0 | 0 | 06 | 03 |
| (v) தரம் I | 95 | 02 | 97 | 45 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| (vi) வங்கி உதவியாளர்கள் | 40 | 53 | 93 | 23 | 0 | 0 | 0 | 0 | 11 | 02 |
| **(3) சிற்றூழியர் தரம்** | | | | | | | | | | |
| (i) தரம் I, II மற்றும் III | 155 | 14 | 169 | 31 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| **(4) ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள்** | | | | | | | | | | |
| (i) அனைத்து வகைகளும் | 04 | 04 | 08 | 45 | 01 | 01 | 01 | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | **911** | **586** | **1,497** | **41** | **28** | **129** | **10** | **79** | **319** | **34** |

மூலம்: மனிதவள அபிவிருத்தி

### 13.3 செயலாற்ற முகாமைத்துவ முறைமை

வங்கியின் செயலாற்ற முகாமைத்துவ முறைமையானது, தனிப்பட்ட அலுவலர்களின் செயலாற்றத்தை, வங்கியின் தொலைநோக்கு மற்றும் பணியை அடைவதற்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்பின் நியதிகளில் மதிப்பிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆண்டின் ஆரம்பத்தில் செயலாற்ற மதிப்பீட்டுச் செயல்முறை மேற்பார்வையாளரின் ஆலோசனையுடன் இலக்குகளுக்குப் பொருத்தமான நிறைகளுடன் ஊழியர்கள் தமது சொந்த இலக்குகளை நிர்ணயிப்பதுடன் ஆரம்பமாகிறது. இவ் இலக்குகளின் அடிப்படையில் ஒவ்வொரு இலக்கிற்கும் செயலாற்றத் தரமிடலை வழங்குவதன் மூலம் ஊழியர்கள் செயலாற்ற மதிப்பீட்டுப் படிவத்தின் சுய மதிப்பீட்டுப் பிரிவை பூர்த்தி செய்கிறார்கள். இறுதிச் செயலாற்ற மதிப்பிடலை அடையும் பொருட்டு ஊழியருக்கும் மேற்பார்வையாளருக்குமிடையே செயலாற்ற மதிப்பீடு தொடர்பாக கலந்தாலோசனை நடத்தப்படுகிறது. இத்துடன், ஊழியர் செயலாற்று மதிப்பீட்டுப் படிவத்துடன் சேர்த்து கற்கை, பயிற்சி மற்றும் தொழில்சார் விருத்தித் திட்டங்களை அவரது மதிப்பீட்டிற்காக மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்கிறார். இறுதிச் செயலாற்ற தரமிடல்கள் பதவி உயர்வுகளை வழங்குவதற்கான ஒரு பிரமாணமாகப் பயன்படுத்தப்பட்டது. இதன்படி, 2009ஆம் ஆண்டுக்கான அனைத்து ஊழியர்களின் செயலாற்ற மதிப்பீடு இலக்கிடப்பட்ட திகதிகளில் பூர்த்தி செய்யப்பட்டது. 2010ஆம் ஆண்டுக்காக நிர்ணயிக்கப்பட்ட தனிப்பட்ட மற்றும் திணைக்கள இலக்குகளும் ஆண்டின் ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணைகளின்படி ஒரே நேரத்தில் செயற்படுத்தப்பட்டன.

### 13.4 பதவியுயர்வுகள்

2010இல், மனிதவளத் திணைக்களம் வங்கியிலுள்ள அனைத்து முக்கிய பதவிகளும் திறமையான செயற்றிறன்களுடன் நிரப்பப் படுவதை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. இது, உதவி ஆளுநர் ஒருவர் பிரதி ஆளுநர் பதவிக்கும் நான்கு திணைக்களத் தலைவர்கள் உதவி ஆளுநர்களாக அலுவலர் வகுப்பு சிறப்புத் தரத்துக்கும் பதினாறு அலுவலர் வகுப்பு தரம் III அலுவலர்கள் திணைக்களத்தின் பிரதித் தலைவர்களாகவும் பதவியுயர்த்தியதன் மூலம் அனைத்து முக்கிய பதவிகளிலான வெற்றிடங்களை நிரப்புவதை வசதிப்படுத்துவதற்கு இன்றியமையாததாக்கியது. இத்துடன், திணைக்களம் 156 அலுவலர் உறுப்பினர்கள் அவர்களது தரம், வகுப்பு மற்றும் பதவியின் பதவியுயர்வுகளை பெற்றுக் கொள்வதை 2010இல் இயலச் செய்தது.

### 13.5 பயிற்சி மற்றும் அபிவிருத்தி

தேர்ச்சியை தீவிரமாகக் கொண்டிருக்கும் நிறுவனத்தில் உயர் செயலாற்றத்தை அடைவதில் பயிற்சியின் முக்கியத்தை அடையாளங்கண்ட பின்பு திணைக்களம் அதன் அலுவலர் உள்நாடு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிறுவனங்கள் இரண்டாலும் வழங்கப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் பகுதி நேரக் கற்கைகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்களை வழங்குவதனூடாக பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கு தொடர்ந்து வசதியளித்தது. திணைக்களம் 2009இல் வழங்கப்பட்ட 1,170 பயிற்சி வாய்ப்புக்களுடன் ஒப்பிடும் போது 2010இல் பொருளாதாரம், நிதியியல் முறைமை உறுதிப்பாடு, இடர்நேர்வு முகாமைத்துவம், வங்கி மேற்பார்வை, ஒதுக்கு முகாமைத்துவம் மற்றும் மனித வள முகாமைத்துவம் ஆகிய துறைகளை உள்ளடக்கும் விதத்தில் 1,641 வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி வசதிகளை வழங்கியது.

2010இல் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயிற்சிகளில் பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை முறையே 190 ஆகவும் 1,451 ஆகவும் விளங்கியது.

#### (அ) வெளிநாட்டுப் பயிற்சி

2010இல் வழங்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக் களின் எண்ணிக்கை 2009இல் வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களான 141 உடன் ஒப்பிடுகையில் 190இற்கு 35 சதவீதத்தால் அதிகரித்தது. இவ் அலுவலர்கள் வெளிநாடுகளிலுள்ள பிரபல்யமான பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்பட்ட பரந்த அளவிலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளில் பங்குபற்றினர்.

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களூடாக அடையப்பட்ட அறிவைப் பயனுறும் வகையில் பயன்படுத்து வதை உறுதிப்படுத்தும் நோக்கில் இந் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியோர் அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியதன் மூலம் பெற்ற அறிவின் அடிப்படையில் புதிய செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அல்லது ஏற்கனவேயுள்ள செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு சிறப்பு ஒப்படைகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டனர். இந் நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட பயிற்சித் துணைக்குழு 2010இல் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய அலுவலர்களுடன் 25 பயிற்சிக்கு முன்பான மற்றும் பின்னரான பயிற்சிக் கலந்துரையாடல்களை நிகழ்த்தியது. இணக்கம் காணப்பட்ட 74 ஒப்படைகளினுள் 18 ஒப்படைகள் இவ்வாண்டு இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டன.

#### (ஆ) பட்டப்பின் படிப்புக் கற்கைகள்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக அலுவலர்களை விருத்தி செய்வது தொடர்பான உபாயம் மிக்க கவனஞ் செலுத்தலுக்கு மேலதிகமாக, வங்கி அதன் அலுவலரின் அறிவாற்றல் சார்ந்த இயலளவைப் பலப்படுத்துவதை நோக்காகக் கொண்ட அதன் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டது. 2010இல், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகள், யப்பான் மற்றும் அவுத்திரேலியாவில் 15 அலுவலர்கள் முதுமாணிப் பட்டத்துக்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்திருக்கையில் இரண்டு அலுவலர்கள் முனைவர் பட்டத்துக்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தனர். 2010இல் 6 அலுவலர்கள் முதுமானிப் பட்டத்துக்கான நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்தி செய்த பின்பு கடமைகளைப் பாரமேற்றிருக்கையில் ஒரு அலுவலர் முனைவர் பட்டத்துக்கான நிகழ்ச்சித்திட்டத்தைப் பூர்த்தி செய்த பின்பு கடமையைப் பாரமேற்றார்.

#### (இ) உள்நாட்டுப் பயிற்சி

2010இல் வழங்கப்பட்ட உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 2009இல் வழங்கப்பட்ட 1,029 பயிற்சி வாய்ப்புக்களுடன் ஒப்பிடுகையில் 1,451இற்கு 41 சதவீதத்தால் அதிகரித்தது. இவ் அலுவலர்களில் அநேகமானோர் வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையத்தால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர். வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையம் மற்றும் ஏனைய அடையாளம் காணப்பட்ட உள்நாட்டு பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை முறையே 976 ஆகவும் 475 ஆகவும் விளங்கியது. உள்நாட்டுப் பயிற்சியை வழங்கும் போது தகவல் தொழில்நுட்பம், தொடர்பூட்டல், நிதியியல் மற்றும் மூலதனச் சந்தைகள், வங்கி மேற்பார்வை, பேரண்டப் பொருளாதார பகுப்பாய்வு, உள்ளகக் கணக்காய்வு, பொது முகாமைத்துவம் போன்றவற்றில் அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

மனிதவளத் திணைக்களம் அரச மொழிகள் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் வங்கி அலுவலர் தமிழ் மொழியில் அவர்களின் தகுதியை அதிகரிப்பதற்கு வசதிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தையும் ஆரம்பித்தது. கிட்டத்தட்ட 200 சிங்களப் பேசும் ஊழியர்கள் இந் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியதுடன் இந் நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தியடைந்த பின்பு 114 அலுவலர்கள் அரச மொழித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட எழுத்து மூல மற்றும் வாய் மூல பரீட்சைக்குத் தோற்றினர். மேலும் மனித வளத் திணைக்களம் திணைக்கள அலுவலர்களின் மொழித் தேர்ச்சியை விருத்தி செய்வதற்கு தமிழ் விவாதத் தொடர்களை ஏற்பாடு செய்தது.

**அட்டவணை II - 10**
**குறுகிய வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் - 2010**

| துறை | பங்கு பற்றியோரின் எண்ணிக்கை |
|---|---|
| பொருளாதாரம் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் | 47 |
| நிதியியல் ஒழுங்குபடுத்தல், முறைமை உறுதிப்பாடு | 46 |
| இடர் முகாமைத்துவம் | 34 |
| நிதி | 4 |
| தகவல் தொழில்நுட்பம் | 6 |
| அரச படுகடன் முகாமைத்துவம் | 6 |
| மத்திய வங்கித்தொழில் | 13 |
| மனித வள முகாமைத்துவம் | 25 |
| ஏனையவை | 9 |
| **மொத்தம்** | **190** |

### 13.6 தொழில் சுழற்சி

பல தேர்ச்சிகள் கொண்ட அலுவலர்களை விருத்தி செய்தல் மற்றும் வங்கியின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் என்பவற்றின் நோக்குடன் திணைக்களமொன்றில் ஐந்து ஆண்டுகளுக்கும் கூடுதலாகப் பணியாற்றிய ஊழியர்கள் ஏனைய திணைக்களங்களுக்கு மாற்றப்பட்டனர். அலுவலர்களின் போட்டித்தன்மை மட்டம் மற்றும் பல தரப்பட்ட திணைக்களங்களின் போட்டித்தன்மைத் தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு அலுவலர் சுழற்சி செய்யப்பட்டனர். இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொத்தமாக 20 அலுவலக உறுப்பினர்கள் 2010இல் தொழில் சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டனர்.

### 13.7 தொழில்தருநர் - ஊழியர் உறவுகள்

மனிதவளத் திணைக்களம் 2010ஆம் ஆண்டிலும் தொழிற் சங்கங்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் இடையே நெருங்கிய உரையாடலைப் பேணுவதற்கு தொடர்ந்து வசதிப்படுத்தியது. தேவை ஏற்படும் போது பிரச்சனைகளைக் கலந்துரையாடுவதற்கு முகாமைத்துவத்தைச் சந்திப்பதற்கு தொழிற்சங்கங்களுக்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி, 10 கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அத்தகைய உரையாடல்கள் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுகள், பயிற்சி, நலன்புரி மற்றும் வங்கியின் பொது நிருவாகம் தொடர்பான பல எண்ணிக்கையான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முகாமைத்துவத்தை வசதிப்படுத்தியது. 2010ஆம் ஆண்டில் எந்தவிதமான கைத்தொழில் பிணக்குகளும் ஏற்படவிலலை.

### ஆளுநர் பங்கு பற்றிய கூட்டங்கள்

1. பெப்புருவரியில் இலண்டனில் நடைபெற்ற சமூக பொருளாதார செயற்பாடு நிகழ்ச்சித்திட்டம்.
2. பெப்புருவரி - மாச்சு காலப்பகுதியில் கம்போடியாவில் நடைபெற்ற 45 ஆவது தெற்காசிய மத்திய வங்கி ஆளுநர்களின் மாநாடு மற்றும் தெற்காசிய மத்திய வங்கி ஆளுநர்கள் சபையின் 29ஆவது கூட்டம் மற்றும் பாங்கொக்கில் நடைபெற்ற கூட்டங்கள்
3. ஏப்பிறலில் வாஷிங்டன் டிசி இல் நடைபெற்ற 2010 ப.நா. நிதியம்/ உலக வங்கியின் குளிர்கால கூட்டத்தொடர்
4. மே மாதத்தில் நியூயோர்க் மற்றும் வாஷிங்டனில் நடைபெற்ற ஐக்கிய அமெரிக்க அரச அலுவலர்கள், வியாபாரச் சமூகம் மற்றும் ஊடகத்துடனான கூட்டங்கள் மற்றும் இலங்கையில் வியாபார வாய்ப்புக்கள் தொடர்பான கருத்தரங்குத் தொடர் மற்றும் சிங்கப்பூரில் நடைபெற்ற ஜே. பி. மோகனின் தோற்றம் பெற்று வரும் சந்தைகளின் ஆசிய மாநாடு
5. மே மாதத்தில் இந்தியாவில் நடைபெற்ற முதலீட்டாளர்களின் கூட்டங்கள்
6. மேயில் ஹெங்கொங் மற்றும் சிங்கப்பூரில் முதலீட்டாளர் மாநாடு மற்றும் கூட்டங்கள்
7. செத்தெம்பரில் நியூயோக்கில் நடைபெற்ற முதலீட்டாளர் கூடடங்கள்
8. ஆசிய அபிவிருத்தி வங்கி பிராந்திய மாநாடு: நவெம்பரில் பிலிப்பைன்சில் நடைபெற்ற “ஆசியா மீதான உலகளாவிய நெருக்கடியின் தாக்கத்தின் கற்றறிந்த பாடங்கள், கொள்கை நோக்கங்கள் மற்றும் தோற்றப்பாடுகள்
9. நவெம்பரில் சிங்கப்பூரில் நடைபெற்ற உலக வங்கி - சிங்கப்பூர் உட்கட்டமைப்பு நிதி உச்சி மாநாட்டில் நிதியியல் மற்றும் நகரத் தலைவர்களின் குழுவில் பங்கேற்றமை

### பதவி உயர்வுகள்/ நியமனங்கள்

1. திரு. என்.ஏ. உமாகில்ய நாணயச் சபையின் உறுப்பினர் ஒருவராக 2010 மே 25இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேதகு சனாதிபதியால் நியமிக்கப்பட்டார்.
2. பின்வரும் பதவி உயர்வுகள் மற்றும் நியமனங்கள் 2010 ஆண்டில் நடைமுறைக்கு வரும் வகையில் மேற்கொள்ளப்பட்டன.

   I. திரு. பி.டி.ஜே. பர்னாந்து 2005 சனவரி 5 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   II. திரு. வை.ஏ.த. சில்வா 2010 யூன் 15 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர்பதவி வகுப்பு சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   III. முனைவர். டபிள்யு.எம். ஹேமச்சந்திர 2010 யூன் 15 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர்பதவி வகுப்புச் சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   IV. திரு. எஸ். லங்காதிலக 2010 யூன் 15 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர்பதவி வகுப்புச் சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

   V. திரு. சி.ஜே.பி. சிறிவர்த்தன 2010 யூன் 15 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உயர்பதவி வகுப்புச் சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
3. சம்பளமற்ற விடுமுறையில் சென்ற மேலதிக திணைக்களப் பணிப்பாளர் திருமதி. ஆர்.தீரசிங்க 2010 பெப்புருவரி 01ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றதுடன் 2010 பெப்புருவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேலதிகப் பணிப்பாளராக பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து, 2010 யூன் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஊழியர் சேம நிதியத்தின் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் 2010 திசெம்பர் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இதே திணைக்களத்தின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
4. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளரான திரு. கே.டி. ரணசிங்க 2010 பெப்புருவரி 11 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் முதன்மைப் பொருளியலாளராகவும் நியமிக்கப்பட்டார்.
5. நிதியியல் உளவறிதல் பிரிவின் பதில் பணிப்பாளர் திரு. டி.எம். ரூபசிங்க 2010 பெப்புருவரி 11 இலிருந்து நடைமுறைக்கு வரும்

வகையில் நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

6. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திருமதி. ரி.எம்.ஜே.வை.பி. பர்னாந்து 2010 பெப்புருவரி 11 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

7. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திரு. ஆர்.ஏ.ஏ. ஜெயலத் 2010 பெப்புருவரி 11 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

8. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திரு. கே.பீ. திஸ்ஸாகருண 2010 பெப்புருவரி 11 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

9. பதில் செலாவணிக் கட்டுப்பாட்டாளர் திரு. பி.எச்.ஓ. சந்திரவன்ச 2010 பெப்புருவரி 11 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் செலாவணிக் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

10. முகாமைக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. எம்.ஐ. சுவ்வியான் 2010 யூன் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நிதித் திணைக்களத்தின் முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

11. நிதித் திணைக்களத்தின் முதன்மைக் கணக்காளர் திருமதி. கே.எம்.ஏ.என். டவுலகல 2010 யூன் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

12. வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. எஸ்.எஸ். ரத்நாயக்க 2010 யூன் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பொதுப்படுகடன் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் பதிவாளராகவும் நியமிக்கப்பட்டார்.

13. ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் கண்காணிப்பாளர் திரு. எம்.ஜே.எஸ். அபேசிங்க 2010 யூன் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

14. பணிமனைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு.யு.எச்.ஈ. சில்வா 2010 யூன் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பணிமனைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும் 2010 திசெம்பர் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இதே திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

15. மனிதவளத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு.ஏ.ஆர்.கே. விஜேசேகர 2010 யூன் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மனிதவளத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும் 2010 திசெம்பர் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இதே திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நிமிக்கப்பட்டார்.

16. முகாமைக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஏ.எம்.என். குணவர்த்தன 2010 யூன் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் முகாமைக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும் 2010 திசெம்பர் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இதே திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

17. வங்கித்தொழில் கற்கைகள் நிலையத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. கே.பி.என்.எஸ். கருணாகொட 2010 யூன் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நலன்புரித் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

18. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. எஸ்.எம்.ஏ. சிறிவர்த்தன 2010 யூன் 21 இலிருந்து மாகாண அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

19. மாகாண அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. எச். அமரதுங்க 2010 யூன் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் முகாமைக் கண்காய்வுத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

20. நாணயத் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளர் திரு. டபிள்யு.ஆர்.ஏ. தர்மரத்ன 2010 யூன் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மனிதவளத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

21. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திருமதி. எச்.பி.ரி. விஜேசூரிய 2010 யூன் 21 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நாணயத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

22. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திருமதி. ஆர்.பீ. வீரசிங்க 2010 செத்தெம்பர் 26 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும் 2010 திசெம்பர் 26 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இதே திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

**ஓய்வு பெறல்கள்**

1. துணை ஆளுநர் முனைவர் டி.எஸ். விஜேசிங்க 2010 பெப்புருவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

2. உதவி ஆளுநர் திருமதி பி. லியனகே 2010 சனவரி 28 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

3. உதவி ஆளுநர் திருமதி சி.கே. நாணயக்கார 2010 மே 25 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

4. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. கே.பீ. திஸ்ஸாகருண 2010 செத்தெம்பர் 26 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

5. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பளார் திரு. பி.ஜீ. ஜெயசூரிய 2010 திசெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

**விடுவிப்பிலுள்ள அலுவலர்கள்**

1. உதவி ஆளுநர் முனைவர் பி.என். வீரசிங்க பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக
2. திரு. எஸ்.ஆர். ஆட்டிகல உயர் பதவி அலுவலர் தரம் IV நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
3. திரு. கே.எம்.எம். சிறிவர்த்தன உயர் பதவி அலுவலர் தரம் IV நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
4. திரு. சி.என். விஜேசேகர உயர் பதவி அலுவலர் தரம் IV நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
5. திரு. பி. லொக்குரணமுக, உயர் பதவி அலுவலர் தரம் III நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
6. திரு. எச்.பி.எம். வசந்த குமார, உயர் பதவி அலுவலர் தரம் II நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
7. திரு. யு.வி. பெரேரா, உயர் பதவி அலுவலர் தரம் II நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
8. திரு. எம். மஹிந்த சாலிய, உயர் பதவி அலுவலர் தரம் II நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
9. திரு. டி.எம். வன்னிநாயக்க, உயர் பதவி அலுவலர் தரம் II பாதுகாப்பு அமைச்சுக்கு
10. திரு. டபிள்யு.எச்.எம். குமார, உயர் பதவி அலுவலர் தரம் II பாதுகாப்பு அமைச்சுக்கு
11. திருமதி. எச்.பி.ஏ. பிரியசாந்தி, உயர் பதவி அலுவலர் தரம் I நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
12. திரு. ஜே.ஏ.ஏ. பிரியான்த, உயர் பதவி அலுவலர் தரம் I (தகுதிகாண் காலம்) சனாதிபதி செயலகத்திற்கு
13. திருமதி. டி.கே. உயன்கொடகே, உயர் பதவி அலுவலர் தரம் I பன்னாட்டு நாணய நிதியத்திற்கு
14. திருமதி. எச்.எம்.என்.எஸ். குணவர்தன, சட்ட அலுவலர் (ஒப்பந்தம்), நிதி திட்டமிடல் அமைச்சுக்கு

## 14. தகவல் தொழில்நுட்பம்

மத்திய வங்கி அதன் உபாய குறிக்கோள்களை எய்துவதில் செயற்பாட்டு உன்னதத்தை மேம்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தன்னுடைய ஆற்றல் வாய்ந்த பங்கை ஒருங்கிணைந்த மற்றும் ஊடுருவக் கூடிய தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்குவதன் மூலமும் தொடர்ந்து ஆற்றி வந்துள்ளது. இவ்வாண்டில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் (அ) முக்கியமான வியாபார பிரயோகங்களின் அபிவிருத்தி மற்றும் பேணல்; (ஆ) தகவல் தொடர்பூட்டல் உட்கட்டமைப்பு அபிவிருத்தி; (இ) தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம்; (ஈ) தகவல் தொழில்நுட்ப பெறுமதிகூட்டப்பட்ட பணிகள் ஆகிய நான்கு துறைகளில் அதன் இலக்குகளை அடைவதை நிறைவேற்றியது. இதன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) முக்கியமான வியாபார பிரயோகங்களின் அபிவிருத்தி மற்றும் பேணல்

2010ஆம் ஆண்டிற்கான வங்கியின் தொனிப்பொருளுடன் இணைந்து செல்லும் விதத்தில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், திணைக்களங்களிடையே ஒருங்கிணைக் கப்பட்டதும் புத்தம் புதுமை வாய்ந்ததுமான வியாபாரத் தீர்வுகளை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்தது. வியாபாரச் செயன்முறைகளின் வினைத்திறன், தகவல் பாதுகாப்பு மற்றும் உற்பத்தியாக்கம் என்பனவற்றை உயர்த்துவதற்கு சுபீட்சத்திற்கான விரைந்த பாதையொன்று இடப்பட்ட வேளையில் வங்கியின் மையக் குறிக்கோள்களை அடையவும் செலாவணிக் கட்டுப்பாடு, ஊழியர் சேம நிதியம், பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் நிதியியல் உளவறிதல் போன்ற துறைகளின் முகவரமைப்பு தொழிற்பாடுகளை கொண்டு நடத்துவதற்குத் தேவையான உள்ளகத்தில் விருத்தி செய்யப்பட்ட மென்பொருள் பிரயோகங்களின் பேணலுக்கான தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கியது.

இவ்வாண்டில் நிறைவடைந்த முக்கியமான பிரயோகங்கள் சில பின்வருமாறு:

- வெளிநாட்டுத் துறையின் செயலாற்றத்தினைக் கண்காணிப்பதற்காகவும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தில் பகுப்பாய்வு மற்றும் வர்த்தகச் சுட்டெண்களைத் தயாரிப்பதற் காகவும் சுங்கத்திலிருந்தான இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் தரவுகளைப் பதிவு செய்வதற்காக இ-வர்த்தக தரவுத் தளமொன்று நடைமுறைக்கிடப்பட்டது.
- தகவல்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை எடுப்பதற்கு உதவும் விதத்தில் சந்தைத் தகவல்களை பகுப்பாய்வு செய்வதன் பொருட்டு வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுவதற்காக மீள வடிவமைக்கப்பட்ட 'விதேஷ விநிமய' முறைமை நடைமுறைக்கிடப்பட்டது.
- புலம் பெயர்ந்தவர்களுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனையினை அதிகளவில் கண்காணிக்கின்ற தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்கனவேயிருந்த வெளிநாட்டுச் செலாவணி வலையமைப்புப் பிரயோகம் விரிவாக்கப்பட்டதுடன் தாராளமயப்படுத்தப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டு கொள்கைகளின் கீழ் பங்கு முதலீட்டு கணக்கினை அறிக்கையிடும் முறைமைக்கும் வசதியளிக்கப்பட்டது.
- உள்நாட்டு நிதியியல் சந்தைத் தகவல்களை சேகரிக்கவும் அறிக்கையிடவும் வசதியளிக்கும் விதத்தில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் முகாமைத்துவ முறைமையொன்று அபிவிருத்தி செய்யப்பட்டது.
- அரசாங்கத்தின் தீர்மானத்தினை நிறைவேற்று வதற்காக, மூத்த பிரசைகளுக்கான மேலதிக வட்டியை ஓரிடத்தில் கணக்கிட்டு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை யினூடாக வழங்குவதற்கான மென் பொருள் பிரயோகம் நடைமுறைக்கிடப்பட்டது.
- உயர்ந்தளவு கொடுக்கல்வாங்கல்களுக்கும் நாளொன்றில் பல சுற்று தீர்ப்பனவுகளுடன் கூடிய ரி+0 தீர்ப்பனவு வசதிகளுக்கும்

இடமளிக்கும் விதத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி முன்னேற்றகரமான இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை நடைமுறைக்கிடப்பட்டது.

- கொடுப்பனவுச் செய்திகளை நேரடியாக செயன்முறைப் படுத்துவதற்கு உதவும் விதத்தில் “சுவிப்ற்” இற்கு முறைமை மாற்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.
- வங்கியின் கௌரவத்தினை அதிகரிக்கின்றதொரு வழிமுறையாக விஜயம் செய்பவர்களுக்கு கணனி வழியில் உடனடி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் விருந்தினர் அனுமதி முறையொன்று நடைமுறைக்கிடப்பட்டது.
- வங்கியின் அனைத்து கொள்வனவு செயன்முறை களையும் கூடியளவு வினைத்திறனுடன் மேற் கொள்வதற்கு வசதியளிக்கும் விதத்தில் கணனி வழியில் உடனடியாக ஒருங்கிணைக்கப்பட்ட முறைமையொன்று நடைமுறைக்கிடப்பட்டது.
- தொழிற்படையின் பலம் மற்றும் போக்கு என்பனவற்றை அடையாளம் கண்டு கொள்வதற்காக அரச துறையின் முக்கிய தொழில்நிலைப் புள்ளிவிபரங்களை பதிவு செய்து பகுப்பாய்வு செய்யும் பொருட்டு அரச துறை தொழில்நிலை அளவீடொன்றினை மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் விதத்தில் வெப் பிரயோகமொன்று நடைமுறைக்கிடப்பட்டது.
- இவ்வாண்டில் வெற்றிகரமாக நிறைவடைந்த முக்கிய மைல் கற்கள் ஊழியர் சேம நிதியத்தின் தற்போதைய வியாபாரச் செயன்முறையின் வினைத்திறனை, மீளளிப்பு செயன்முறைகளுக்கான வினைத்திறன் மிக்க பணிகளை வழங்குதல் மற்றும் நிதிய முதலீடுகளுக்கு தூண்டுதலளிக்கும் சூழலை ஏற்படுத்துதல் என்பனவற்றினை இலக்காகக் கொண்டு வேறுபட்ட துறை முறைமைகளைப் பெருமளவிற்கு ஒருங்கிணைப்பதன் மூலமாக ஊ.சே. நிதியம் மீள் பொறியியல்படுத்தப்பட்டமை. சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுக்கு இணங்கியொழுகுவதனை பேணும் விதத்தில் தன்னியக்கப்படுத்தப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி முகாமைத்துவத்திற்கு அதிகரித்தளவிலான வியாபார தொழிற்பாட்டுத் தகைமைகளை இணைப்பதற்காக லங்கா செட்டில்/ லங்கா செகுயர் பிரயோக மென்பொருள் (CAS/CSS 3.5) தரமுயர்த்தப்பட்டது.
- வங்கியில் அபிவிருத்தி செய்யப்பட்ட ஏற்கனவேயுள்ள அனைத்து தகவல் தொழில்நுட்ப முறைகளும் முழுமையாகப் பேணப்பட்டதுடன் பணிகள் தொடர்பான ஒப்பந்தங்களின் நியதிகளுக்கு இணங்கியொழுகும் விதத்தில் விற்பனையாளர்களால் வழங்கப்படும் பேணல் பணிகளை மேற்பார்வை செய்யும் விதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்பம் விரிவாக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், இவ்வாண்டுப் பகுதியில், முறையியல் சார்ந்த ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளுக்கு 99.7 சதவீதத்திற்கும் கூடுதலான முறைமையின் கிடைப்பனவை அடையக் கூடியதாக இருந்தது. அதேவேளை, தொழிற்பாட்டிலுள்ள ஏனைய தகவல் தொழில்நுட்ப முறைமைகளுக்கு திணைக்களம், 2010இல் பெரும்பாலும் 100 சதவீத தொழிற்பாட்டுத் தன்மை கிடைப்பனவைப் பேணக் கூடியதாக இருந்தது.

### (ஆ) தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்தி

பிரயோகங்கள் மற்றும் பணிகளின் பன்மையாக்கத்தின் ஏற்பாடுகளுக்கு உதவுவதற்கும், அதனை இயலச் செய்வதற்குமாக இவ்வாண்டுப் பகுதியில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை தொடர்ந்தும் விருத்தி செய்தது. மத்திய வங்கி அலுவலர்களின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான அதிகரித்த தேவைக்கு வசதியளிக்கும் விதத்தில் குத்தகைக்கு பெறப்பட்ட இணைப்பு வழி இயலளவின் அகன்ற பிரிவு 6 எம்பிபிஎஸ் இலிருந்து 10 எம்பிபிஎஸ் இற்கு விரிவுபடுத்தப்பட்ட வேளையில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெப் பிரயோகங்களை அணுகுவதற்கும் மேம்பட்ட வழிவகைகள் வழங்கப்பட்டன. உள்ளக மற்றும் வெளிப்புற பாதுகாப்பு அச்சுறுத்தல்களை குறைக்கும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் உள்ளகப் பகுதிகள் மற்றும் பரந்த துறை வலையமைப்பு மேலும் பாதுகாக்கப்பட்டது. பௌதீக பாதுகாப்பினை உயர்த்துவதற்காகவும் பாதுகாப்புகள் தகர்ந்து போவதற்கான சாத்தியங்களைக் குறைப்பதற்காகவும் பிரதான சேமிப்பு கணிப்பொறி துறையின் உட்கட்டமைப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது.

### (இ) தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம்

வங்கியின் கடுமையான வியாபார தொழிற்பாட்டுத் தேவைகளை ஈடுசெய்வதற்கு தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலின் இன்றியமையாத தன்மையினை விளங்கிக் கொண்டதன் காரணமாக இலங்கை மத்திய வங்கியின் தடங்கலற்ற வியாபாரத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு கிரமமாக நிகழ் நிலைப்படுத்தப்பட்ட வேளையில் வங்கி அலுவலர்கள், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள் மற்றும் லங்கா கிளியர் லிமிடெட் ஆகிய வெளியிலுள்ள நிதியியல் நிறுவனங்களின் பங்கேற்புடன் இவ்வாண்டில் அனர்த்த மீட்பு தலத்திலிருந்து தடங்கலற்ற வியாபாரத் திட்டங்கள் தொடர்பான இரண்டு ஒத்திகைகள் மேற்கொள்ளப்பட்டன. முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையானது அதன் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளைத் தணித்துக் கொண்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் அனர்த்த மீட்பு அமைவிடம் அமைந்துள்ள இடங்களின் தொழிற்பாட்டு இயலளவினை மீளாய்வு செய்து கொள்வதற்கான தொழில்நுட்ப நிபுணத்துவத்தினை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் வழங்கியது.

### (ஈ) பெறுமதிகூட்டப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பணிகள்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், தகவல் தொழில் நுட்பத்துடன் தொடர்பான தொழிற்பாடுகளுக்கும் இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான கொள்வனவுகளுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கும் தொடர்ந்தும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது.

வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகப்படுத்தல் மற்றும் முதலீட்டுத் தொழிற்பாடுகளுக்காக ஒரு முழுமையான வர்த்தக அமைப்பொன்றினை உருவாக்குவதற்காக முன்மொழிவுகளை கோரும் கோரிக்கைகளைத் தயாரிப்பதற்கும் விலைக்கோரல்களை மதிப்பீடு செய்வதற்கும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் உதவியது.

அலுவலர்களுக்கு தடங்கலற்ற தகவல் தொழில்நுட்ப உதவிப் பணிகளை வழங்கும் நோக்குடன் தகவல் தொழில் நுட்ப உதவிப்பீட வசதிகள் அனைத்து அலுவலக நாட்களிலும் 0700 மணியிலிருந்து 1830 மணி வரை வழங்கப்பட்டன. மற்றைய வெளியிலுள்ள அமைப்புக்களுக்கும் இணையத்தள வங்கித்தொழில், செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் மற்றும் இலத்திரனியல் கொடுப்பனவு அட்டைகளினூடாக அரச கொடுப்பனவுகளை அனுப்புதல் என்பனவற்றிற்கான தொழில்நுட்ப வழிகாட்டல்களை வரைதல் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் பின்பற்றுவதற்காக விதந்துரைக்கப்பட்ட தகவல் முறைமை வழிகாட்டல்கள் போன்ற தேசிய ஈடுபாடு மிக்க செயற்றிட்டங்களுக்காகவும் தொழில்நுட்ப நிபுணத்துவமும் மதியுரைப் பணிகளும் வழங்கப்பட்டன. தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவரமைப்பின் ஒத்துழைப்புடன் நிதியியல் துறைக்காக கணனி பாதுகாப்பு நிகழ்வுகள் அறிக்கையிடல் குழுவொன்றினை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தகவல் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்துவதற்காக இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை மத்திய வங்கியினதும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினதும் அலுவலர்களுக்கு தொழில்நுட்ப முன்னேற்றம் தொடர்பான அறிவூட்டும் பயிற்சிகளும் வாய்ப்புக்களும் தொடர்ந்து வழங்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப மூலவளங்களை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டுக் கொள்கை ஆவணம் இறுதியாக்கப்பட்டது. விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதன் மூலமும் உள்ளக மற்றும் வெளிப்புற கணக்காய்வாளர்களின் கணக்காய்வு ஊடாக தகவல் முறைகளை வசதிப்படுத்துவதன் மூலமும் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்புக்களை மேற்கொள்வதற்கு விசேட முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

## 15. பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் பன்னாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டில், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதன் பன்னாட்டு ஒதுக்குகளை காத்திரமான முறையில் முகாமைப்படுத்தியதுடன் அதன் முதலீடுகளிலிருந்து குறிப்பிடத்தக்களவிற்கு உயர்ந்த வீத வருவாயினையும் பெற்றுக் கொண்டது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை கண்காணிப்பதற்கும் பொறுப்பாக இருக்கும் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் மீளாய்விற்குரிய ஆண்டில் அதன் சுமூகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமான வழிமுறைகளை மேற்கொண்டது.

### 15.1 பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம்

அண்மைய பன்னாட்டு நிதியியல் நெருக்கடிகள், உலகளாவிய ஒதுக்கு முகாமைத்துவத்தில் அநேக சவால்களை ஏற்படுத்தியது. 2010இல் முழு உலகத்திற்கும் பரந்து கசிந்த யூரோ படுகடன் நெருக்கடி முக்கிய நாணயங்களிலும் முறிகளின் விளைவுகளிலும் குறிப்பிடத்தக்க தளம்பல்களை தோற்றுவித்தது. இச் சூழ்நிலைகளின் கீழ் மத்திய வங்கி அதன் பன்னாட்டு ஒதுக்குகளை முகாமைப்படுத்துவதில் சவால்மிக்க பணியினை முன்மதியுடன் செயற்படுத்த வேண்டியிருந்த வேளையில் வருவாய்களை மிக உயர்ந்த மட்டத்திலும் அவற்றுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகளை மிகக் குறைந்தமட்டத்திலும் பேணியது. சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் முன்மதியுடைய இடர்நேர்வு முகாமைத்துவம், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் பின்பற்றப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் என்பன இலங்கை மத்திய வங்கியின் ஒதுக்குச் சொத்துப்பட்டியலைப் பேணுவதில் உதவின. இதன்படி, தளம்பலுறும் சந்தைகளில் வைத்திருக்கப்பட்ட முதலீடுகளின் மீது மேற்கொள்ளப்பட்ட உரிய நேரத்திலான இடர்நேர்வுத் தணிப்பு நடவடிக்கைகளின் காரணமாக ஐரோப்பிய பிராந்தியத்திற்கான இலங்கை மத்திய வங்கியின் வெளிப்படுத்துகை மீது யூரோ படுகடன் சந்தையின் நெருக்கடிகள் பெரும் தாக்கமெதனையும் ஏற்படுத்தவில்லை.

நீண்ட 30 ஆண்டு காலப் போர் முடிவடைந்ததன் பின்னர் முதலீட்டாளர் நம்பிக்கை மேம்பட்டமை மற்றும் நாட்டில் நிலவிய உறுதியான பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் என்பனவற்றுடன் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் குறிப்பிடத்தக்களவு உயர் மட்டத்திற்கு திடீரென உயர்வடைந்தன. பன்னாட்டு முறிகளின் வழங்கல் மற்றும் ப.நா. நிதிய துணைநில் ஒழுங்குகளின் வசதி என்பன ஒதுக்குகளை மேம்படுத்துவதற்கு பெருமளவிற்குப் பங்களித்தன. 2010 இறுதியில் ஒதுக்குகள் இலங்கையின் வரலாற்றிலேயே மிக உயர்ந்தமட்டமான ஐ.அ.டொலர் 6.6 பில்லியன்களை அடைந்தன.

மீளாய்விற்குரிய ஆண்டுப் பகுதியில், பன்னாட்டு ஒதுக்கின் முதலீடுகள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவ வழிகாட்டல்களுக்கிணங்கவும் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுவின் மேற்பார்வையின் கீழும் மேற்கொள்ளப்பட்டன. ஐ.அ.டொலர்கள், யூரோ, ஸ்டேர்லிங் பவுண், அவுத்திரேலிய டொலர் போன்ற குறித்துரைக்கப்பட்ட நாணயங்களிலும் தங்கத்தினையும் உள்ளடக்கிய பன்னாட்டு ஒதுக்குகள் நிலையான வருமானமுள்ள பிணையங்கள் மற்றும் பணச் சந்தைக் கருவிகள் ஆகிய இரு சொத்து வகைகளில் முதலீடு செய்யப்பட்டன. வங்கியின் நிலையான வருமானப் பிணையங்கள் சொத்துப்பட்டியல் உயர் வீதங்களைக் கொண்ட அரச பிணையங்கள், அரச உத்தரவாதப் பிணையங்கள் அரச முகவரமைப்புக்களின் பிணையங்கள், மற்றும் ஓய்வூதிய நிதிய நிறுவனங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. நிலையான வருமானப் பிணையங்கள் மற்றும் பணச் சந்தை ஆகிய இரண்டின் மீதுமான முதலீடுகள் அத்தகைய சொத்துக்கள் தொடர்பான பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருவாய் என்பனவற்றிற்கு உரியகவனம் செலுத்தி, முகாமைத்துவத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட

வரையறைகள் அமைப்பிலுள்ள உயர்ந்த தரமிடப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட இணைக்கிணை தரப்பினரூடாக மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. வங்கிகளின் திரவத்தன்மை தேவைப்பாடுகள், படுகடன் பணி மீள்கொடுப்பனவுகள், இடர்நேர்வு முகாமைத்துவத்தின் வரையறுக்கப்பட்ட பண்புகள், வருமானத்தினை உருவாக்கும் ஆற்றல்கள் மற்றும் நாணயச் சபையின் விசேட பணிப்புரைகள் என்பன ஒதுக்குகள் சொத்துப்பட்டியலின் சொத்து மற்றும் நாணயத்தின் உள்ளடக்கத்தை தீர்மானிப்பதில் முக்கிய விடயங்களாகக் கருதப்படுகின்றன.

2010ஆம் ஆண்டில் வங்கியின் ஒட்டுமொத்த ஒதுக்கு முகாமைத்துவ தொழிற்பாடுகள் ஐ.அ.டொலர் 338 மில்லியன் (ரூ.37 பில்லியன்) கொண்ட தேறிய வெளிநாட்டு வருமானத்தினை உருவாக்கியுள்ளன. ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வட்டிச் சந்தை சூழ்நிலைக்கிடையிலும் சந்தைத் தளம்பல்களின் உயர்ந்தபட்ச பயன்பாடு மற்றும் நிலையான வருமானப் பிணையங்களிலிருந்து பெறப்பட்ட மூலதன இலாபம் என்பனவற்றுடன் வெளிநாட்டு நாணய வர்த்தகப்படுத்தலூடாக குறிப்பிடத்தக்க வருமானத்தினை உருவாக்குவதனைப் பொறுத்தவரை சவால்மிக்க சூழலொன்றின் கீழ் முன்னேற்றமடையப்பட்டது. மேலும், உலகளாவிய பண்டச் சந்தையில் காணப்பட்ட போட்டியற்ற விலைத் தளம்பல்களின் காரணமாக தங்க வர்த்தகப்படுத்தல் மீதான குறிப்பிடத்தக்க வருவாய் மொத்த வருவாயில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பிற்கும் பங்களித்தது.

விரிவடைந்து வரும் ஒதுக்குகளைக் கருத்திற் கொண்டு வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளின் செயற்பரப்பினையும் அறிவினையும் விரிவாக்குவதன் மூலம் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை உயர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதன் பயனாக அலுவலர் ஒதுக்குகளில் அதிகரிப்பு, பௌதீக உட்கட்டமைப்பின் நவீனத்துவம் பல்முறை வேலைமாற்று ஒழுங்குகள், முதலீட்டு அமைப்பு மற்றும் திறைசேரி முகாமைத்துவ முறைமையின் சேகரிப்புடன் தொடர்பான வேலைகளில் மாற்றங்கள் என்பன ஏற்பட்டன. இதன்படி, ஆய்விற்குரிய ஆண்டில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதன் வணிகர்களது எண்ணிக்கையினை 11 இலிருந்து 20இற்கு அதிகரித்தது. பொருத்தமான தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் கருவிகளுடன் நவீன வணிக அறையினை ஏற்படுத்தியது. அதன் வேலை நேரத்தினை விரிவுபடுத்தியது. தோற்றம் பெற்றுவரும் சந்தைகளில் குறிப்பிட்ட சில முதலீடுகளை மேற்கொண்டது. அத்துடன் திறைசேரி முகாமைத்துவ முறைமையின் வழங்கலுக்காக வணிகர்களை தெரிவு செய்யும் இறுதிச் செயன்முறைகளிலும் ஈடுபட்டிருந்தது. இந் நடவடிக்கைகளை வெளிநாட்டு ஒதுக்குகளின் காத்திரமான முகாமைத்துவத்திற்கும் முறைமைகளின் வினைத்திறனை மேலும் அதிகரிப்பதற்கும் பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்தில் மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 15.2 இடர்நேர்வு முகாமைத்துவம்

பன்னாட்டு ஒதுக்குகள் மற்றும் அவற்றின் முதலீடுகளுடன் இணைந்த இடர்நேர்வுகள் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் நடு அலுவலகத்தினால் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகின்றன. பன்னாட்டு ஒதுக்கு மற்றும் அவற்றின் முதலீடுகள் பல வகையான இடர்நேர்வுகளுக்கு உள்ளாகியுள்ளன. இவ்விடர்நேர்வு வகைகளினுள் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு, வட்டி வீத இடர்நேர்வு, கொடுகடன் இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பன பிரதான கூறுகளாகக் கருதப்படுகின்றன.

இலங்கை மத்திய வங்கி செலாவணி வீத இடர்நேர்வை அல்லது நாணய இடர்நேர்வை சொத்துப்பட்டியலைப் பன்முகப்படுத்தல் மற்றும் நேரிடக்கூடிய வெளிநாட்டு நாணய பொறுப்புக்களுக்கேற்ப பொருத்தமான நாணயக் கூட்டுக்களை ஏற்படுத்துவதன் மூலம் கட்டுப்படுத்தியது. வட்டி வீதங்கள் மாறுபடுவதன் காரணமாக வட்டியை உழைக்கின்ற சொத்துக்களின் மூலம் ஏற்படும் இடர்நேர்வு வட்டி வீத இடர்நேர்வு என (பெறுமதியில் வேறுபாடு) அழைக்கப்படுகிறது. பொதுவாக, வட்டி வீதம் உயரும் பொழுது நிலையான வீத முறிகளின் விலைகள் வீழ்ச்சியடையும். வட்டி வீதம் குறையும் போது மறுதலையான நிலைமை காணப்படும். இந்த இடர்நேர்வு நிலையான வருமான முதலீடுகளின் காலப்பகுதியை பன்முகப்படுத்தியதன் மூலமும் அனுமதிக்கப்பட்ட நாணயங்களில் மற்றைய தொடர்பான பணச் சந்தை முதலீடுகளை மேற்கொண்டதன் மூலமும் தணிக்கப்பட்டது. இணைத்தரப்பு கொடுகடன் இடர்நேர்வினைக் கட்டுப்படுத்துவதற்கு பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் இணைத்தரப்பினரினை அடிப்படையாகக் கொண்ட நிதியியல் குறிகாட்டிகள், கொடுகடன் தரமிடல் மற்றும் அவற்றின் சந்தை வெளிப்படுத்துகை என்பனவற்றின் அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீட்டிற்கு வசதியளிக்கும் உள்ளக ரீதியாக அபிவிருத்தி செய்யப்பட்ட முறைமையான இணைத்தரப்பு கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையினைப் பயன்படுத்தியது. காசுப்பாய்ச்சலை எதிர்வு கூறியதன் மூலமும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித்தன்மையினை பகுப்பாய்வு செய்தமையின் மூலமும் திரவத்தன்மை இடர்நேர்வு கட்டுப்படுத்தப்பட்ட வேளையில் உயர் திரவத்தன்மை வாய்ந்த வடிவத்தில் கணிசமானளவு சொத்துக்கள் பேணப்பட்டன. திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பில் அழுத்தப் பரீட்சிப்பும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. மக்கள், முறைமைகள் மற்றும் செயன்முறைகள் என்பனவற்றின் காரணமாகத் தோன்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் சரிபார்க்கும் செயன்முறைகளை வலுப்படுத்துதல், வர்த்தகப்படுத்தல் முறைமைகளை மேம்படுத்துதல் மற்றும் முதலீட்டு வழிகாட்டல்களை இற்றைவரை பூரணப்படுத்தல் போன்ற வழிமுறைகளினூடாக கட்டுப்படுத்தப்பட்டன.

### 15.3 உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகள்

உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சுமுகமான தொழிற்பாட்டினை ஊக்குவிக்கும் பொருட்டும் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் ஒழுங்குமுறையான சீராக்கத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை, வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவு தேறிய வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகள் என்பனவற்றைத் தொடர்ந்தும் நெருக்கமாகக் கண்காணித்தது.

**அட்டவணை - II-11**
**வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களின் அளவு - 2010**
(ஐ.அ.டொ. மில்.)

| மாதம் | உடன் | நாளை | காசு | முன்னோக்கிய | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சனவரி | 320.48 | 151.45 | 104.19 | 257.53 | 833.65 |
| பெப்புருவரி | 273.55 | 150.78 | 40.75 | 213.64 | 678.72 |
| மாச்சு | 449.98 | 172.08 | 99.50 | 353.53 | 1075.09 |
| ஏப்பிறல் | 409.65 | 83.95 | 111.85 | 225.72 | 831.17 |
| மே | 338.05 | 81.20 | 76.75 | 220.96 | 716.96 |
| யூன் | 420.85 | 110.70 | 99.45 | 291.01 | 922.01 |
| யூலை | 457.94 | 138.80 | 84.45 | 555.10 | 1236.29 |
| ஓகத்து | 385.40 | 154.15 | 112.73 | 418.82 | 1071.10 |
| செத்தெம்பர் | 423.08 | 94.90 | 92.12 | 295.51 | 905.61 |
| ஒத்தோபர் | 529.46 | 92.50 | 64.15 | 290.83 | 976.94 |
| நவெம்பர் | 337.35 | 132.90 | 52.75 | 221.31 | 744.31 |
| திசெம்பர் | 574.45 | 88.78 | 106.45 | 304.25 | 1073.93 |
| மொத்தம் | 4,920.24 | 1,452.19 | 1,045.14 | 3,648.21 | 11,065.78 |

மூலம்: பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை - II-12**
**மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனை பற்றிய மாதாந்த தொகுப்பு - 2010**
(ஐ.அ.டொ. மில்.)

| மாதம் | கொள்வனவு | விற்பனை | தேறிய |
|---|---|---|---|
| சனவரி | 27.25 | 34.15 | (6.90) |
| பெப்புருவரி | 28.50 | 80.85 | (52.35) |
| மாச்சு | 44.55 | 4.00 | 45.00 |
| ஏப்பிறல் | 199.40 | 79.65 | 119.75 |
| மே | 62.50 | - | 62.50 |
| யூன் | 59.50 | 25.85 | 33.65 |
| யூலை | 101.10 | 9.75 | 91.35 |
| ஓகத்து | 87.00 | 65.40 | 21.60 |
| செத்தெம்பர் | 37.50 | 106.60 | (69.10) |
| ஒத்தோபர் | 35.50 | 324.20 | (288.70) |
| நவெம்பர் | - | 89.35 | (89.35) |
| திசெம்பர் | 70.40 | - | 70.40 |
| மொத்தம் | 753.20 | 819.80 | (66.60) |

மூலம்: பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

2010ஆம் ஆண்டுப் பகுதியில் ரூபா உயர்வடைந்தமைக்கு வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலில் ஏற்பட்ட உயர்வே முக்கிய காரணமாகும் (ஏற்றுமதிப் பெறுகைகள், பங்குச்சந்தை முதலீடுகளின் பேரிலான உள்முக பணவனுப்பல்கள் மற்றும் பன்னாட்டு முறி வழங்கல்). 2010ஆம் ஆண்டில் முக்கிய நாணயங்களுக்கெதிராக ரூபாவினை படிப்படியாக உயர்வடையச் செய்த செலாவணி வீத தளம்பல்களை மட்டுப்படுத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தீவிரமான பங்கினை ஆற்றியது. உள்நாட்டின் செலாவணிச் சந்தைக்கு மத்திய வங்கியியால் உட்செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 820 மில்லியனாகவும் ஈர்க்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர் 753 மில்லியனாகவும் விளங்கியமையின் காரணமாக ஆய்விற்குரிய ஆண்டில் ஐ.அ.டொலர் 67 மில்லியன் கொண்ட தேறிய விற்பனை விளைவிக்கப்பட்டது.

2010இல் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 3.09 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இது 2009 இறுதியிலான ஐ.அ.டொலர் ஒன்றுக்கான ரூ.114.38இலிருந்து 2010 இறுதியில் ஐ.அ.டொலர் ஒன்றுக்கு 110.95 இலங்கை ரூபாவிற்கு நகர்ந்தது. 2009இல் ஐ.அ.டொலர் 10.96 பில்லியனாகக் காணப்பட்ட வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் அளவு, 2010இல் ஐ.அ.டொலர் 11.06 பில்லியனுக்கு அதிகரித்து ஒரு சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முகவரமைப்புக்கள் ஏனைய பயன்படுத்துநர்களுக்கு மற்றைய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் செலாவணி வீதங்கள் பற்றிய தகவலை வழங்கும் செயன்முறை முன்னைய ஆண்டுகளைப் போன்றே 2010இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

## 16. முகாமைத்துவக் கணக்காய்வு

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் அதன் குறிக்கோள்களை பயனுறும் விதத்தில் அடையும் பொருட்டு வங்கியின் தொழிற்பாடுகள் மற்றும் கடப்பாடுகளின் முறைமைகளை அதிகரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் குறிக்கோளை உறுதி செய்தல் மற்றும் ஆலோசனைப் பணிகளை நிறைவேற்றுகிறது. இது சம்பந்தமாக, திணைக்களம் இடர்நேர்வு முகாமைத்துவம், கடப்பாடுகள் மற்றும் ஆளுகைச் செயற்பாடுகளின் பயனுறுதியை மதிப்பீடு செய்ததுடன் தேவைகளைக் பொறுத்து விதந்துரைப்புக்களையும், சிபார்சுகளையும் மேற்கொண்டது.

உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமனங்களைப் பின்பற்றல், சிறந்த நடைமுறைகள், கணக்காய்வுச் செயற்பாடுகளின் தரத்தினைப் பேணல் என்பன உறுதிப்படுத்தல் மற்றும் ஆலோசனைப் பணிகளை வழங்குவதற்கான முக்கியமான முன்தேவைகளாகும். இது சம்பந்தமாக திணைக்களம் மலேசியாவின் உள்ளகக் கணக்காய்வாளர்கள் நிறுவனத்துடன் இணைந்து கொலம்பஸ் அட்வைசரி வசதியால் சமர்ப்பிக்கப்பட்ட தர மதிப்பீட்டு அறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட பல வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. இதன்படி, திணைக்களம் உள்ளகக் கணக்காளர் நிறுவனத்தின் கணக்காய்வு நியமனங்களைப் பின்பற்றியது. இதனுடன் இணைந்து செல்லும் வகையில் திணைக்களத்தின் செயற்பாடுகள் இணங்குவிப்பை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வு முறைமையிலிருந்து இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வு முறைமைக்கு பகுதியளவில் உருமாற்றப்பட்டது. எனவே, இவ்வாண்டின் வருடாந்த கணக்காய்வுத் திட்டம் இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட முறைமையில் தயாரிக்கப்பட்டது.

திணைக்களம் முகாமைத்துவச் செயற்பாடுகளில் அதன் ஈடுபாட்டிலிருந்து விலகிச் செல்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தமையால் கணக்காய்வுக்கு முன்பான மிகுதிச் செயற்பாடுகள் 2010ஆம் ஆண்டிறுதியில் இடைநிறுத்தப்பட்டன. கணக்காய்வுச் செயற்பாடுகளின் தரத்தை அதிகரிப்பதற்கும் சிறந்த கணக்காய்வு நடைமுறைகளுடன், முன்னோக்கிச் செல்வதற்கும் வெளிச் செல்லும் கூட்டங்களின் எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இதன்படி கணக்காய்வு அறிக்கைகளை வழங்குவதற்கு முன் அத்தகைய கூட்டங்கள் நடத்தப்பட்டன.

திணைக்களம் இவ்வாண்டில் அலுவலர் பலத்தையும் அவர்களது போட்டித் தன்மையையும் அதிகரிப்பதற்கு கூடிய முயற்சிகளை மேற்கொண்டது. இதன்படி, திணைக்களம் மூத்த முகாமைத்துவம் மற்றும் மனித வளத் திணைக்களத்தின் உதவியுடன் அதன் மனிதச் சொத்தைப் பலப்படுத்தக் கூடியதாக இருந்தது. இதற்கும் மேலாக, திணைக்களம் கணக்காய்விலும் இடர்நேர்வு முகாமைத்துவம், கட்டுப்பாடு மற்றும் ஆளுகை போன்ற தொடர்பான ஏனைய தொடர்பான ஒழுக்கப் பயிற்சிகளிலும் அதன் அலுவலர்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பயிற்றுவிக்கக் கூடியதாக இருந்தது. இத்துடன், அலுவலர்கள் திறைசேரி முகாமைத்துவம், நாணயக் கொள்கை, அலுவலக நடைமுறைகள் மற்றும் அது தொடர்பான விடயங்களில் பயிற்றுவிக்கப்பட்டார்கள். கணக்காய்வு அலுவலர்களின் நன்மைக்காக கணக்கீட்டு நியமங்கள் தொடர்பான உள்ளகப் பயிற்சித் தொடர்களும் நடத்தப்பட்டன.

மேலும், திணைக்களம் தகவல் முறைமை கணக்காய்வு அலுவலரின் போட்டித் தன்மையை அதிகரிப்பதற்கும் பல வழிமுறைகளை மேற்கொண்டது. அலுவலர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்பதற்காக நியமிக்கப்பட்டதுடன் தொழில் புரியும் போதான பயிற்சியும் வழங்கப்பட்டது. இத்துடன், கணக்காய்வுகளை மேற்கொள்ளும்போது தரவை எடுத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தலில் கணக்காய்வு கட்டளை மொழியைப் பயன்படுத்துவதற்கு அலுவலரைப் பயிற்றுவிப்பதற்காக உள்ளக பயிற்சித் தொடர்கள் நடத்தப்பட்டன.

திணைக்களம் 2011 ஆம் ஆண்டுக்கான இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு வெளிமூலங்களிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளும் அடிப்படையில் கணக்காய்வு நிறுவனமொன்றின் பணிகளைப் பெற்றுக் கொண்டது. இப் பணிகளைப் பெற்றுக் கொள்வதன் பின்னணியின் முக்கிய காரணம் யாதெனில் அனைத்துக் கணக்காய்வுச் செயற்பாடுகளையும் இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வு முறைமையை நோக்கி உருமாற்றுவதாகும்.

மேலே விளக்கப்பட்டவாறு கணக்காய்வுத் தொழிற்பாட்டுக்கான முன்னேற்றங்களில் கவனம் செலுத்தும் அதேவேளையில், 2010இன் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட கணக்காய்வு ஒப்படைகளை நடத்துவதன் மூலம் ஏனைய திணைக்களங்களின் தொழிற்பாடுகள் மற்றும் செயல்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக பெறுமதி கூட்டப்பட்ட உறுதிப்படுத்தல் மற்றும் ஆலோசனைப் பணிகளை வழங்குவதன் மூலம் உபாயத் திட்டம் 2010 - 2014 இல் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை வங்கி அடைவதற்கு திணைக்களம் அதன் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியது.

திணைக்களம் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் பணத் தரவை அறிவிக்கும் முறைமையின் துல்லியத்தை உறுதிப்படுத்துவதற்கான அனைத்தையும் உள்ளடக்கிய செயல்முறை ஆய்வைச் செயற்படுத்தியது. இவ்வொப்படை தேறிய பன்னாட்டு ஒதுக்குகளின் சட்ட ரீதியானதன்மையை அதிகரித்ததுடன் ஒதுக்குப் பணத் தரவு மாதாந்தம் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டது. இதனுடன் இணங்கிச் செல்லும் வகையில், திணைக்களம் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு அறிவிக்கப்பட்ட தரவை மாச்சு யூன் மற்றும் செத்தெம்பர் 2010 ஆகிய மூன்று பரீட்சயத் திகதிகளில் வாய்ப்புப் பார்ப்பதில் ஈடுபட்டது.

இவ்வாண்டில் நடத்தப்பட்ட ஏனைய முக்கிய கணக்காய்வுகள் இணைத்தரப்பு கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமை தொடர்பான முழுமையான மீளாய்வு, தேசிய கொடுப்பனவு முறைமையை நவீனப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் பற்றிய மீளாய்வு, பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கியின் விதந்துரைப்புக்களுடன் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை/மத்திய வைப்பக முறைமையின் இணங்குவிப்பு தொடர்பான மதிப்பீடு, மாகாண அலுவலகங்களின் செயற்பாடுகளின் மீளாய்வு என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. இத்துடன், நாணய வெளியீடு மற்றும் முகாமைத்துவத் துறையில் கிரமமான கணக்காய்வுகள் உள்ளிட்ட பல கணக்காய்வுகளை திணைக்களம் நிறைவேற்றியது. இத்துடன் நாணயத் திணைக்களம் அதன் தொழிற்பாட்டை நிறைவேற்றுவதை அவதானிப்பதற்கு திணைக்களம் அதன் அலுவலர்களை தொழிலுக்கமர்த்தியது. மேலும், ஒதுக்கு முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்பான தொடர்ச்சியான கணக்காய்வை நடத்துவதற்கு திணைக்களம் அதன் அலுவலர்களை கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தில் நிறுத்தியது. இத்துடன், 2010இன் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்துடன் இணங்கிச் செல்லும் வகையில் ஒதுக்கு முகாமைத்துவத் துறையில் பல கணக்காய்வுகள் நடத்தப்பட்டன. தகவல் முறைமைக் கணக்காய்வுகள் தகவல் பாதுகாப்புக் கொள்கை, மென்பொருள் அபிவிருத்திகள், சம்பளப் பட்டியல் முறைமை மற்றும் தடங்கலற்ற வியாபாரத் திட்டம் தொடர்பாக நடத்தப்பட்டன. இத்துடன், திணைக்களம் கணக்காய்வுகளை நடைமுறைப்படுத்தும்போது கணினிமயமாக்கப்பட்ட தரவுத் தளங்களிலிருந்து தகவலைப் பெறுவதற்கு "கணக்காய்வு கட்டளை மொழி" மென்பொருளைப் பயன்படுத்தியது.

இவ்வாண்டில் திணைக்களத்தால் நிறைவேற்றப்பட்ட ஏனைய செயற்பாடுகளாக 2008, 2009 மற்றும் 2010 முதல் அரைப் பகுதியில் நடத்தப்பட்ட பின் தொடர்ந்த கணக்காய்வுகள், முகாமைத்துவத்தால் வேண்டப்பட்ட பணிகளை வழங்குதல், செயலகம் மற்றும் நலன்புரித் திணைக்களங்களின் கணக்காய்வுக்கு முன்னரான தேவைப்பாடுகளைக் கவனித்தல், விடுப்பு கணக்காய்வுகளை மேற்கொள்ளல் என்பன விளங்கின.

கணக்காய்வுகள் இறுதிப்படுத்தப்பட்டவுடன் திணைக்களம் கணக்காய்வு அவதானிப்புக்களை கணக்காய்வு செய்யப்படும் திணைக்களத்திற்கு அறிவித்தது. அத்தகைய அவதானிப்புக்கள் இவ்வாண்டில் கணக்காய்வு செய்யப்படும் திணைக்களங்களிலிருந்து பெறப்பட்ட பதிலிறுப்புக்களுடன் கிரமமான இடைவேளைகளில் ஆளுநர், நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வுக் குழு மற்றும் நாணயச்சபைக்கும் அரை ஆண்டு அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கும் அறிவிக்கப்பட்டது.

## 17. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் நியதிகளில், நிதியியல் முறைமையின் பாதுகாப்பு வினைத்திறன், போட்டித்தன்மை மற்றும் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் நாட்டில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை மேற்பார்வை செய்வதற்கும் இலங்கை மத்திய வங்கியிடம் சட்ட ரீதியான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இக் குறிக்கோள்களை அடைவதற்காக, மத்திய வங்கி கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினூடாக ஆற்றல்மிக்க மற்றும் வினைத்திறன் நிறைந்த கொடுப்பனவு முறைமைகளை வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் நாட்டின் வங்கிகளுக்கிடையே உயர் பெறுமதியுடைய கொடுப்பனவுகளுக்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையையும் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவம் தொடர்பாக காத்திரமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை செயன்முறைப்படுத்துவதற்காகவும் மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான வணிக முறைகளை நிறைவேற்றுவதற்காகவும் சுவிப்ற் கொடுக்கல்வாங்கல் தொடர்பூட்டல் முறைமைகளை முகாமைப்படுத்துவதற்காகவும் பின்னரங்க அலுவலகத் தொழிற்பாடுகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. மேலும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் சுமுகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தும் பொருட்டும் கொடுப்பனவு முறைமைகளின் உறுதிப்பாட்டினைப் பாதிக்கக் கூடிய உள்ளார்ந்த இடர்நேர்வுகளை தணிப்பதற்காகவும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்திடம் அதன் கொள்கைகளை வடிவமைத்தல் மற்றும் அதேபோன்று நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் ஆகிய பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பு நாடுகளிடையேயான நிதிய மாற்றல்களை தீர்ப்பனவு செய்வதில் தொடர்ந்தும் வசதியளித்ததுடன் பிராந்திய ஒத்துழைப்பினைப் பலப்படுத்தும் குறிக்கோளுடன் சார்க் கொடுப்பனவு முனைவுச் செயலகத்தினை மத்திய வங்கியில் பேணியது.

### 17.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையைத் தொழிற்படுத்தல்

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் நிதியியல் சந்தையிலுள்ள நேர முக்கியத்துவம் வாய்ந்த பங்கேற்பாளர்களிடையேயான கொடுப்பனவுகளையும் அதேபோன்று வாடிக்கையாளர்களின் கொடுப்பனவுகளையும் லங்கா செட்டில் முறைமையினூடாக அதேநேர மொத்த அடிப்படையில் தொடர்ந்தும் தீர்ப்பனவு செய்து வருகின்றது. இவ்வாண்டுப் பகுதியில், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் கொடுக்கல் வாங்கல்களின் அளவுத் தேவைப்பாடுகளையும் தொழில்நுட்ப அபிவிருத்தியினையும் விரிவடையச் செய்வதற்காக இம் முறைமையினைத் தரமுயர்த்துகின்ற நடவடிக்கைகளில் கவனம் செலுத்தியது. 2010 ஆண்டுப் பகுதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், முறைமை தொழிற்படுகின்ற நேரம் முழுவதும் பங்கேற்பாளர்களுக்கு உதவிப்பீடப் பணிகளை வழங்கியது. இவ்வாண்டில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 246,824 ஆகவும் மொத்தப் பெறுமதி ரூ.47 ரில்லியனாகவும் காணப்பட்டது. 2010ஆம் ஆண்டுப் பகுதியில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை ஒரு நாளில் பதிவு செய்த மிக உயர்ந்த அளவாக ரூ.446 பில்லியன் பெறுமதியான 1,729 கொடுக்கல்வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டன. நாளொன்றில் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் சராசரி அளவும் பெறுமதியும் முறையே 1,024 ஆகவும் ரூ.198 பில்லியனாகவும் விளங்கின. அதேவேளை, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் லங்கா செட்டில் முறைமையினூடான கொடுக்கல்வாங்கலின் சுமுகமான தீர்ப்பனவினை உறுதிப்படுத்துவதற்காக ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியினூடாக மேலதிக நிதியினைக் கோருகின்ற அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியின் கீழ் நாளொன்றிற்கு ஏறத்தாழ ரூ.11.4 பில்லியன் நிதியினை விடுவிப்பதற்கு வசதியளித்து அதனைக் கண்காணித்தது.

2010 இறுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்கள் இலங்கை மத்திய வங்கி, 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 6 வங்கியல்லா முதனிலை வணிகர் கம்பனிகள், ஊழியர் சேம நிதியம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. முதனிலை வணிகப் பங்கேற்பாளரான செலான் பாங் அசெட் மனேஜ்மன்ட் லிமிடெட் இவ்வாண்டுப் பகுதியில் செலான் வங்கி லிமிடெட்டுடன் ஒருங்கிணைக்கப்பட்டதன் காரணமாக லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் மொத்தப் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை 2010 இறுதியில் 31இற்கு குறைவடைந்தது. செயலாற்றக் குறிகாட்டியின்படி, 2010இல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் 99.72 சதவீதமான முறைமைக் கிடைப்பனவினைப் பேணக் கூடியதாகவிருந்தது. எதிர்பாராத நிகழ்வுகளின் போது முறைமையின் ஆயத்த நிலைமையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, இவ்வாண்டுப் பகுதியில் இரண்டாவது தலத்தில் இரு நேரடி தொழிற்பாட்டுப் பிரிவுகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் அனர்த்த மீட்புத் தலத்தின் ஒழுங்குகள் மேலும் வலுவூட்டப்பட்டன. ஒவ்வொரு பங்கேற்பாளர் நிறுவனமும் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் அவற்றின் தொடர்பான நிறுவனங்களின் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலைத் தரமுயர்த்துவதற்கு ஊக்குவிக்கப்பட்டன.

2010இல் ஒவ்வொரு நாளினதும் குறிப்பிட்ட காலப்பகுதியில் பங்கேற்கும் நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில் மட்டும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினை வழங்குகின்ற தற்போதைய நடைமுறையிலிருந்தும் விலகி, பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் தற்றுணிபின்படி ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினை வழங்குவதற்காக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை வழங்குகின்ற நடைமுறைகள் தரமுயர்த்தப்பட்டன. மேலும், திட்டமிடப்படாத விடுமுறைகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் நாளாந்த கொடுக்கல்வாங்கல்களைக் கையாள்வதற்கு லங்கா செட்டில்

முறைமை பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. அதேவேளை, செலவை அறவிடுகின்ற பொறிமுறையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கொடுக்கல்வாங்கல் கட்டணம் 2010 மே 1ஆம் நாளிலிருந்து ரூ.400 இலிருந்து ரூ. 420இற்கு அதிகரிக்கப்பட்டது.

### 17.2 வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவத்தின் கீழான வணிகங்களின் தீர்ப்பனவுகள்

2010இல் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம், திறைசேரி வணிக அறை முகாமைத்துவ முறைமையினூடாக சுமுகமானதும் நம்பத் தகுந்ததுமான தீர்ப்பனவு செயன்முறையை வழங்குவதன் மூலமாக பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்காக வெளிநாட்டுச் செலாவணி, தங்கம் மற்றும் வெளிநாட்டு பிணையங்கள் கொடுக்கல்வாங்கல் தொழிற்பாடுகளுடன் தொடர்பான பின்னரங்கத் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ்வாண்டுப் பகுதியில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் ஐ.அ.டொலர் 139.45 பில்லியன் பெறுமதியான 19,030 கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தது. இவ்வாண்டில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் கொடுக்கல் வாங்கல்களின் அளவு 2009 உடன் ஒப்பிடுகையில் 2010இல் 165 சதவீதத்தினால் அதிகரித்தமையாகும்.

பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்ட வெளிநாட்டுச் செலாவணி, தங்கம் மற்றும் வெளிநாட்டுப் பிணையங்கள் மீதான கொடுக்கல்வாங்கல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு கடந்த அண்மைக் காலத்தில் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளில் கணிசமான அதிகரிப்புக்களை ஏற்படுத்தியமையானது, பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களம், எதிர்கால கொடுக்கல்வாங்கல் அளவில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பினை ஈடுசெய்வதற்கும், பல்வேறு முறை மாற்று வேலைகள் மூலம் வணிக அறைத் தொழிற்பாடுகளுக்கு உதவியளிப்பதற்கும் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் செயற்பரப்பினை விரிபடுத்துவதற்கும் சிறந்த பன்னாட்டு நியமங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் என வணிக அறை தொழிற்பாடுகளை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டமொன்றினை ஆரம்பிக்க வழிவகுத்திருக்கிறது. இவ் அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் உயர்ந்தளவு கொடுக்கல்வாங்கல்களை முகாமைப்படுத்துவதற்காக அதன் மனித மற்றும் தொழிற்பாட்டு இயலளவினை உயர்த்துவதற்காகத் தேவையான வழிமுறைகளைப் பின்பற்றியதுடன் தீர்ப்பனவுச் செயற்பாடுகளின் மீதான தொழிற்பாட்டு பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்கள அலுவலர்களுடன் கூட்டங்களையும் நடத்தியது. மேலும், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் பின்னரங்க அலுவலகத்திற்கு தேவைப்பாடுகள் தொடர்பான உள்ளீடுகளை வழங்கியமை மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட வணிகர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப தீர்வுகளை மதிப்பிடுகின்ற செயன்முறைகளில் பங்கேற்றமை என்பனவற்றின் மூலம் வணிக அறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்திலும் தீவிரமாக ஈடுபட்டது. மேலும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் யூரோ கிளியர் முறைமையின் அதிகரித்த வசதிகளுக்கு நிகரான நேரடி செயன்முறைகளை எய்துவதற்காக ஏற்கனவேயுள்ள திறைசேரி வணிக அறை முகாமைத்துவ முறைமையினை தரமுயர்த்துவதிலும் பங்கேற்றுக் கொண்டது.

### 17.3 திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் சார்பில் பங்கேற்கும் நிறுவனங்களுடனான திறந்த சந்தைத் கொடுக்கல் வாங்கல்களில் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் சொத்துப்பட்டியலினை ஒதுக்கீடு செய்வதில் தொடர்பான அதன் பொறுப்புக்களை தொடர்ந்தும் மேற்கொண்டது. எனவே 2010ஆம் ஆண்டில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ரூ.10,723 பில்லியன் தொகை கொண்ட 8,201 மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.13.3 பில்லியன் கொண்ட நேரடி விற்பனைகள் மீதான 37 கொடுக்கல் வாங்கல்களையும் ரூ.1,467.0 பில்லியன் தொகை கொண்ட 1,270 இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களையும் நிறைவேற்றியது. 2010இல் உடனடி கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. திறந்த சந்தைத் தொழிற் பாடுகளுக்காக பின்னரங்க அலுவலக தொழிற்பாடுகள் நீடிக்கப்பட்டு பங்கேற்பாளர்களுக்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ஒரு நாளுக்குள்ளேயான திரவ ஏற்பாடுகளை மேற்கொண்டதுடன் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் தீர்ப்பனவினையும் கண்காணித்ததன் மூலம் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழ் ரூ.2,747.3 பில்லியன் தொகை கொண்ட 7,427 கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிக்கப்பட்டது.

### 17.4 சுவிப்ற் தொடர்பூட்டல்கள்

சுவிப்ற் நிலையத்தினால் நடைமுறைக்கிடப்பட்ட ஆளுகை ஒழுங்குகள், அமைப்பு, செயன்முறை, இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போன்ற நடைமுறைகளுக்கு இணங்கி கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் சுவிப்ற் தொடர்பூட்டல் முறைமையின் முகாமைத்துவத்தினை மேற்கொண்டது.

2010இல் அனுப்பப்பட்ட மற்றும் பெறப்பட்ட சுவிப்ற் செய்திகளின் மொத்த எண்ணிக்கை முறையே 1,538,588 ஆகவும் 816,060 ஆகவும் காணப்பட்டது. 2010இல் பெறப்பட்ட மொத்த செய்திகளில் 212,480 இலங்கை மத்திய வங்கியின் கொடுக்கல்வாங்கல்களுக்கானவையாக இருந்த வேளையில் எஞ்சியவை அதேநேர மொத்தத் தீர்ப்பனவு மற்றும் பிணையங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பானவையாக இருந்தன.

### 17.5 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்கள்

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக இலங்கையினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2009இன் ரூ.190.7 பில்லியனிலிருந்து 2010இல் ரூ.309.8 பில்லியனுக்கு 62 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. இதற்கு 2010 சனவரியிலிருந்து புதுப்பிக்கப்பட்ட

ஈரானிடமிருந்தான எண்ணெய் இறக்குமதிகள் ஆ.தீ. ஒன்றிய முறையினூடாக மேற்கொள்ளப்பட்டமையே காரணமாகும். 2010இல் ஆ.தீ. ஒன்றிய பொறிமுறையினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 16 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன் விளைவாக ஆ.தீ. ஒன்றிய பொறிமுறையின் கீழ் செய்யப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் மொத்த ரூபாய் பெறுமதியும் 2009இன் ரூ.158.5 பில்லியனிலிருந்து 2010இல் ரூ.265.2 பில்லியனிற்கு அதிகரித்தது.

**அட்டவணை II - 13**
**ஏனைய ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய நாடுகளுடனான இலங்கையினுடைய வர்த்தகம் மற்றும் ஆ.தீ.ஒ. கொடுக்கல் வாங்கல்கள்**

ரூபா பில்லியன்

| | 2009 | 2010 |
|---|---|---|
| ஆ.தீ. ஒன்றியத்தினூடாக வழிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள் | 190.7 | 309.8 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் | 67.0 | 85.0 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளிலிருந்தான இலங்கையின் இறக்குமதிகள் | 339.6 | 428.4 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளுடனான இலங்கையின் மொத்த வர்த்தகம் | 406.6 | 513.4 |
| தேறிய ஆ.தீ. ஒன்றியத் தீர்ப்பனவுகள் | 158.5 | 265.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஆ.தீ. ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையின் 38ஆவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி மாலைதீவு குடியரசிற்கு ஆ.தீ. ஒன்றியத்தின் உறுப்புரிமை வழங்கப்பட்டதுடன் 2010 சனவரியில் மாலைதீவு நாணய அதிகாரசபை ஆ.தீ. ஒன்றிய தொழிற்பாடுகளை தொடங்கியதுடன் ஆ.தீ. ஒன்றியத்திலுள்ள உறுப்பினர் நாடுகளின் எண்ணிக்கை 9இற்கு அதிகரித்தது. 2010 யூனில் பூட்டானில் நடைபெற்ற ஆ.தீ. ஒன்றிய பணிப்பாளர் சபையின்39ஆவது கூட்டம், இந்திய றிசேர்வ் வங்கியினால் திரட்டப்பட்டு ஆ.தீ. ஒன்றிய தொழில்நுட்ப குழுவினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களின் மீது முக்கிய கவனம் செலுத்தியது. பணிப்பாளர் சபை பின்வரும் விதந்துரைப்புக்களுக்கு ஏகமனதாக ஒப்புதலளித்தது.

(1) வர்த்தக வங்கிகள், வர்த்தக நிறுவனங்கள், வர்த்தக சம்மேளனம் போன்றவற்றிற்கு விழிப்புணர்வு ஆய்வரங்குகளை நடத்துவதன் மூலம் ஆ.தீ. ஒன்றிய பொறிமுறையினை முன்னேற்றுதல் தொடர்பான நாடுகளினது அதிகார சபைகளின் பிரச்சனைகள்∴ பிணக்குகளை கட்டுப்படுத்துவதற்கான முறைமைகளையும் செயன்முறைகளையும் ஏற்படுத்துதல் செய்திகளை அனுப்புதல், கணக்கீடு மற்றும் இணங்குவிப்பு என்பனவற்றிற்காக உறுப்பினர் நாடுகளிடையேயும் ஆ.தீ. ஒன்றிய செயலகத்திலும் பயன்படுத்துவதற்காக வெப் தளத்தினை அடிப்படையாகக் கொண்ட பிரயோகமொன்றினை நிறுவுதல்.

(2) இரண்டு மாத தீர்ப்பனவுகளுடன் தற்போதுள்ள பரிமாற்றல் வசதியை தொடர்வதன் மூலம் ஆ.தீ. ஒன்றியத்தின் செயற்பரப்பினை விரிவாக்குதல் உள்நாட்டு நாணயத்தின் பயன்பாட்டினையும் அதன் பொருத்தமான தன்மையினையும் சாத்திய வளத் தன்மையினையும் கண்டறிதல் மற்றும் நாணய ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக நிதித்திட்டங்களினை அறிமுகம் செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக ஆ.தீ. ஒன்றிய வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி வங்கியை ஏற்படுத்துதல்

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் செயற்பரப்பினை விரிவுபடுத்துவதற்காகச் செய்யப்பட்ட யோசனைகளை ஆராய்வதற்காக நியம தொழில்நுட்பக் குழுவினை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஆ.தீ. ஒன்றிய பணிப்பாளர் சபையின் 40ஆவது கூட்டத்தினை 2011இல் இந்தியாவில் நடத்துவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது. சுழற்சிமுறைக் கோட்பாட்டினை பின்பற்றி, 2011இல் ஆ.தீ. ஒன்றியத்தின் தலைமைப் பதவி இந்திய றிசேர்வ் வங்கியின் ஆளுநரினாலும் உதவி தலைமைப் பதவி ஈரான் இஸ்லாமிய குடியரசின் மத்திய வங்கியின் ஆளுநரினாலும் வகிக்கப்படும்.

### 17.6 கொடுப்பனவு முறைமைக் கொள்கை மற்றும் மேற்பார்வை

ஆண்டு முழுவதும் நாட்டில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை அடையும் குறிக்கோளினை அடையும் விதத்தில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. தசாப்த காலத்தின் பிற்பகுதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தொடர்பான மேற்பார்வை கொள்கை தொடர்பான முக்கிய கவனம் இலத்திரனியல் சில்லறை கொடுப்பனவு முறைமைகளின் மீது காணப்பட்டது. மிக முக்கியமாக, ஒழுங்குமுறைப்படுத்தப்படாத கொடுப்பனவு அட்டை தொழில் துறையின் இடர்நேர்வுத் தன்மையினையும் அது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீது கொண்டிருக்கக்கூடிய எதிர்மறையான தாக்கத்தினையும் பரிசீலனையில் கொண்டு, 2009இல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டை பணி வழங்குவோர் ஒழுங்குவிதியினை (ஒழுங்கு விதிகள்) வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்தது. இது கொடுப்பனவு அட்டை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பணி வழங்குவோரை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான சட்ட ஆணையினை மத்திய வங்கிக்கு வழங்குகிறது. ஒழுங்குவிதிகள், இலங்கையில் தொழிற்படுகின்ற கொடுப்பனவு அட்டைப் பணிகளை வழங்குகின்ற ஒவ்வொருவரும், கொடுப்பனவு அட்டை வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு ஆண்டு உரிமத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதனைத் தேவைப்படுத்துகின்றது. இதற்கமைய, பெற்றுக் கொண்ட விண்ணப்பங்களை மதிப்பீடு செய்த பின்னர் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் 2010இல் 17 கொடுப்பனவு அட்டைப் பணிகள் வழங்குவோருக்கு அவர்களது வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கு உரிமங்களை வழங்கியது. மேலும் கொடுப்பனவு அட்டைத் தொழில் துறையினை ஒழுங்குபடுத்துவதற்காக பணிப்புரைகள், வழிகாட்டல்கள் மற்றும் சுற்றிக்கைகளை விடுப்பதற்கு ஒழுங்குவிதிகளினால் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கிணங்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் 2010 மாச்சில் 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுகடன் அட்டை வழிகாட்டல்களை வழங்கியதுடன் அவ் வழிகாட்டல்களின் அடிப்படையில் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புக்களையும் தொடங்கியது. இவ் வழிகாட்டல்களின்

குறிக்கோள்கள் யாதெனில் கொடுகடன் அட்டைத் தொழில் துறையின் பாதுகாப்பு, பத்திரமான தன்மை மற்றும் வினைத்திறன் மிக்க தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதும் அட்டை வைத்திருப்போரின் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதுமேயாகும். மேலும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, இலங்கை கொடுப்பனவு அட்டை தொழில் துறைச் சங்கம் கொடுகடன் அட்டை வழங்குநர்களுக்காக ஒழுக்கக் கோவையொன்றைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. 2011இல் இறுதிப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் ஒழுக்கக்கோவை, அட்டை வைத்திருக்கும் தனிப்பட்டவர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருக்கிற அட்டை வழங்குவோருக்கான அடிப்படை அளவுக் குறியீட்டு நியமமொன்றாக தொழிற்படும்.

மேலும், கைத்தொலைபேசியை அடிப்படையாகக்கொண்ட கொடுப்பனவு முறையினை விரிவாக்குவதில் நிதியியல் சந்தையின் ஆர்வம் அதிகரித்து வருவதனைப் பரிசீலனையில் கொண்டு, அத்தகைய கொடுப்பனவுகளுக்குரிய பாதுகாப்பான சூழ்நிலையினை உருவாக்கும் பொருட்டு கைத்தொலை பேசியினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகளை ஒழுங்குபடுத்துவதற்கான வழிகாட்டல் தொகுதியொன்றினை கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் வரைந்திருக் கிறது. கைத்தொலைபேசி கொடுப்பனவு வழிகாட்டலின் வரைவு பொதுமக்களின் கருத்திற்காக 2010இல் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டது. கைத்தொலைபேசி கொடுப்பனவு வழிகாட்டல்கள் 2011இன் முதற் காலாண்டில் இறுதிப்படுத்தப்பட்டு வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய கொடுப்பனவு ஆணைக்குழுவின் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலொன்றினை நிறைவேற்றும் விதத்தில் லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் நாட்டின் முக்கியமான சில்லறைக் கொடுப்பனவு முறைகளி லொன்றான இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை அதே வியாபார நாளன்று (ரி +0 அடிப்படையில்) தீர்ப்பனவை வழங்குவதற்காக 2010இல் கணனி வழி அதேநேரக் கொடுப்பனவிற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளது. ஆகவே, லங்கா கிளியர் லிமிடெட்டிற்கும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்களுக்கும் குறைந்த பட்ச முன்மதியுடைய தேவைப்பாடுகளை நிர்ணயிக்கும் பொருட்டு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் இலங்கை வங்கிகளுக்கிடையிலான தொழிற்பாடுகள் தொடர்பாக தயாரித்த பணிப்புரைகள் 2011இன் தொடக்கப் பகுதியில் வெளியிடப்படவுள்ளது.

முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு முறைமையின் தொழிற்பாட்டு நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு 2010இல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளை தொடர்ந்தும் மதிப்பிட்டு வந்தது. இதற்கமைய இரண்டாம் கட்ட மதிப்பீடாக பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் அனர்த்த மீட்புத் தலத்திலிருந்து மேற்கொள்ளும் பரீட்சிப்பு நடவடிக்கைகளை கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் மேற்பார்வை செய்ததுடன் அவற்றின் தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களை மேம்படுத்துவதற்காக முதலாம் கட்ட மதிப்பீடுகளின் போது செய்யப்பட்ட விதந்துரைப்புக்களையும் நடைமுறைப்படுத்தியது. 2010ஆம் ஆண்டில் 18 பங்கேற்கும் நிறுவனங்களின் அனர்த்த மீட்புத் தலங்கள் பரீட்சிக்கப்பட்டதுடன் அவற்றின் அனர்த்த மீட்புத் தலங்களை மேம்படுத்துவதற்கான விதந்துரைப்புக்களும் வழங்கப்பட்டன. மேலும், லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டின் அனர்த்த மீட்புத் தலமும் லங்கா நிதியியல் பணிகள் பணியகத்தின் அனர்த்த மீட்புத் தலமும் 2010ஆம் ஆண்டுப் பகுதியில் பரீட்சிக்கப்பட்டன.

காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் அறிமுகத்துடன், தீவு முழுவதும் காசோலை தேறல் செய்யப்படும் காலம் ரி+1 இற்கு குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. காசோலை தேறல் செய்யப்படும் செயன்முறை பற்றியும் காசோலைகள் தேறல் செய்யப்படுவதற்கு எடுக்கும் காலம் பற்றியும் வாடிக்கையாளர் கருத்தினை விளங்கிக் கொள்ளும் பொருட்டு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் தேசிய கொடுப்பனவு சபையின் விதந்துரைப்பின் மீது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த நாடு முழுவதனையும் உள்ளடக்கும் விதத்தில் புள்ளிவிபரத் திணைக்களத்தினதும் மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகங்களினதும் உதவியுடன் 2009இல் வாடிக்கையாளர் அளவீடொன்று நடத்தப்பட்டது. 2010இல் இறுதிப்படுத்தப்பட்ட அளவீட்டு அறிக்கையானது, காசோலை தேறல் செயன்முறை தொடர்பாகவும் செயன்முறை தொடர்பாக மத்திய வங்கியினால் பிரயோகிக்கப்படும் ரி+1 விதி பற்றியும் வாடிக்கையாளர் தெளிவான அறிவினை கொண்டிராமையினை எடுத்துக்காட்டியது. ஆகவே, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் தொடர்பூட்டல் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளை பின்பற்றுமாறு காசோலை தேறல் செயன்முறைகள் தொடர்பாக வாடிக்கையாளர்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்குத் தேவையான வழிமுறைகளை மேற்கொள்ளுமாறும் உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளையும் அறிவுறுத்தியது.

2010ஆம் ஆண்டில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் நாட்டிலுள்ள கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் மீதான தகவல்களைப் பரப்புவதற்காக இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் காலாண்டு கொடுப்பனவு செய்தித்திரட்டொன்றினை தொடர்ந்தும் வெளியிட்டது. மேலும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் கொடுப்பனவு முறைமைகள் மற்றும் அவை தொடர்பான விடயங்களில் பொதுமக்களினதும் வங்கித்தொழில் சமூகத்தினரினதும் அறிவினை அதிகரிப்பதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது.

### 17.7 சார்க் கொடுப்பனவு முன்னெடுப்புக்கள்

2010இல் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் உறுப்பினர் நாடுகளின் சார்பில் சார்க் கொடுப்பனவு முன்னெடுப்புச் செயலகத்தினை தொடர்ந்தும் பேணியது. சார்க் கொடுப்பனவுச் சபை மற்றும் சார்க் கொடுப்பனவு முன்னெடுப்பு என்பனவற்றின் முன்னேற்றம் மீதான தகவல்களுடன் சார்க் கொடுப்பனவு முன்னெடுப்பின் வெப்தளம் பேணப்பட்டது. 2010ஆம் ஆண்டுப் பகுதியில் சார்க் கொடுப்பனவு செய்தித்திரட்டின் 4ஆவது மற்றும்

5ஆவது தொகுதிகள் வெளியிடப்பட்டன. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் சார்க் கொடுப்பனவு முன்னெடுப்பின் 7ஆவது கூட்டத்தினை வங்காள தேசத்திலும் 8ஆவது கூட்டத்தினை இந்தியாவிலும் ஒழுங்கு செய்ய வசதியளித்ததுடன் அனைத்து உறுப்பினர் நாடுகளினதும் சார்பில் அனைத்து செயலக வேலைகளையும் தொடர்ந்தும் கவனித்தது.

## 18. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் மீளாய்வுகளை நடத்துதல், மத்திய வங்கியால் பின்பற்றப்படும் கொள்கைகள் அல்லது ஆய்வுகள் மற்றும், கொள்கை மற்றும் நடைமுறைக் கோவையை கிரமமாகப் புதுப்பித்தல், உபாயத் திட்டமிடல் செயல்முறையை ஒருங்கிணைத்தல் மற்றும் மாறிச் செல்லும் ஐந்து ஆண்டு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டத்தைப் புதுப்பித்தல்: உபாயத்திட்ட செயலமர்வு மற்றும் அளவீட்டை நடத்துதல், மற்றும் காலாண்டு ரீதியில் ஒவ்வொரு திணைக்களத்தின் செயற்பாடுகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுகிறது.

### 18.1 கொள்கை மீளாய்வுகளை நடத்துதல்

திணைக்களம் முகாமைத்துவத்துடன் இணைந்து இவ்வாண்டில் பல கொள்கைகள் மீளாய்வுகள் மற்றும் ஆய்வுகளை மேற்கொண்டதுடன் அவ்வாறான மீளாய்வுகள் மற்றும் ஆய்வுகளின் அடிப்படையில் கொள்கை விதந்துரைப்புக்கள் முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. இம் மீளாய்வுகள் மற்றும் ஆய்வுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: நாணயக் கொள்கை தளர்த்தப்பட்ட பின்பு கொடுகடனின் வழங்கல், உள்நாட்டு மோதலின் பின்பு வடக்கு மற்றும் கிழக்கில் அபிவிருத்திக்கான உள்ளார்ந்த வளம் மற்றும் சுற்றுலா மீதான மோதலின் தாக்கம்.

இவ்வாண்டில், அதேநேர இ-கொள்கை மற்றும் நடைமுறை நூலகம் மத்திய வங்கியின் திணைக்களங்களால் வழங்கப்பட்ட பணிப்புரைகள், வழிகாட்டல்கள் மற்றும் வெளியீடுகள் மூலம் புதுப்பிக்கப்பட்டது. இ-கொள்கை மற்றும் நடைமுறை நூலகத்தை இலங்கை மத்திய வங்கியின் மின் அஞ்சலூடாக அடையலாம்.

### 18.2 2010-2014 உபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

உபாயத் திட்டம் 2010-2014 உடன் தம்மைப் பழக்கப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியின் அனைத்து அலுவலக உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வு 2010 சனவரி முதலாம் கிழமை நடத்தப்பட்டது. செயலமர்வுத் தொடர்கள் செயல்முறையில் அவர்களின் பங்கை தெளிவாக விளங்கிக் கொள்வதையும் இலங்கை மத்திய வங்கியின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு பயனுறுதியான பங்களிப்பை மேற்கொள்வதையும், இயலச் செய்வதற்கு கொத்தணி அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்டன. செயலமர்வின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட அளவீடு வங்கி அலுவலர்கள் உபாயத் திட்டமிடல் செயல்முறையின் முக்கிய பகுதிகளை தொடர்பாக உயர்மட்ட விழிப்பூட்டலைக் கொண்டுள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் உபாயத்திட்டம் தொடர்பான செயலமர்வை ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்துவதற்கும் அலுவலர் உறுப்பினர்கள் விதந்துரைத்துள்ளனர். இலங்கை மத்திய வங்கியின் நான்காவது உபாயத்திட்டமான **"விரைந்த வேகத்தில் சுபீட்சம்"** என்ற தொனிப் பொருளைக் கொண்ட உபாயத் திட்டம் 2010 - 2014 வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது. இலங்கை மத்திய வங்கி அதன் திணைக்களங்கள் மற்றும் மாகாண அலுவலகங்களுக்கு 2010ஆம் ஆண்டிற்காகத் திட்டமிடப்பட்ட வேலையில் 91 சதவீதத்திற்கும் கூடுதலான சராசரிச் சாதனை வீதத்தைப் பதிவு செய்தது. ஒவ்வொரு திணைக்களமும் இலங்கை மத்திய வங்கியின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்யும் குறித்துரைக்கப்பட்ட கால இலக்குகளினுள் அவற்றின் முக்கிய செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக தயார்நிலையில் காணப்பட்டன. உபாயத்திட்ட இலக்குகளை அடைவதில் உபாயத்திட்டமிடல் குறிக்கோள்கள், பொறுப்புக்கள் மற்றும் கடப்பாட்டிண் தெளிவான விளக்கங்கள் இவ் வெற்றிகரமான வீதத்தை அடைய காரணமாக இருந்தன.

திணைக்களங்களின் செயலாற்றங்களை மதிப்பிடுவதற்கு திணைக்களங்களுடனான காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டவாறு நடத்தப்பட்டன. திணைக்களங்களின் செயலாற்ற மட்டங்கள் ஆளுநர் தலைமையிலான இலங்கை மத்திய வங்கியின் செயலக முகாமைத்துவத்தை உள்ளடக்கிய உபாய திட்டமிடல் மீளாய்வுக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டன. இக் கண்காணிப்பு அறிக்கைகளின் அடிப்படையில் உபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் பின்னடைவுகள் மற்றும் பற்றாக்குறைகளை அடையாளம் காண்பதற்கும் உபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குமான திருத்த நடவடிக்கையை எடுப்பதற்கும் முகாமைத்துவத்தை இயலச் செய்தது.

### 18.3 2011-2015 உபாயத் திட்டமிடல் செயல் முறையை ஒருங்கிணைத்தல்.

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் **"புதிய யுகத்திற்கு மீள் நிலைப்படுத்தல்"** என்ற தொனிப் பொருளின் கீழ் அதன் ஐந்தாவது உபாயத்திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தது. இத்தொனிப் பொருள் ஒரு பக்கத்தில் மூன்று சதாப்தங்களைக் கொண்ட நீண்ட மோதல் முடிவிற்கு வந்ததன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை விரைந்த வேகத்தில் புதுப்பிப்பதற்கு முன்னெப்போதுமில்லாத வாய்ப்புக்களை உருவாக்கி இலங்கைக்கான புதிய யுகம் தோன்றியதனை சிறப்பாக எடுத்துக் காட்டுவதுடன் மறு பக்கத்தில் இலங்கை மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோள்களை அடையும் அதேவேளை இலங்கைப் பொருளாதாரம் புதியதைக் கண்டுபிடித்தல், புதியதை உருவாக்கல் மற்றும் மீள் நிலைப்படுத்தல் என்பவற்றிலான பலமான ஒருமுகப்படுத்தலுடன் முன்னோக்கி நகர வேண்டிய தேவையை வலியுறுத்துகிறது. இரண்டு நாள் உபாயத்திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டம் அனைத்து திணைக்களத் தலைவர்கள், அவர்களது பிரதிநிதிகள் மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் பங்கேற்புடன் கெறிற்றன்ஸ் கந்தளம இல் 2010 ஒத்தோபர் 1 - 3இல் நடத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் யாதெனில் 2016 அளவில் நாட்டின்

தலைக்குரிய வருமானத்தை இருமடங்காக்கும் அரசாங்கத்தின் இலக்குடன் இணங்கிச் செல்லும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் செயற்பாடுகளை மீள் நிலைப்படுத்தும் நோக்கில் தற்போதைய உபாயத் திட்டத்தை மீளாய்வு செய்வதும் மாறிச் செல்லும் ஐந்து ஆண்டு காலப்பகுதியான 2011 -2015 இல் இதைப் புதுப்பிப்பதாகும். உபாயத்திட்டத்தின் தொனிப்பொருள் பயனுறும் வகையில் திணைக்கள உபாயத்திட்டமிடல் செயல்முறையில் கவனஞ் செலுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு இத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் அனைத்துத் திணைக்களங்களுடனும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்பான கூட்டங்களை நடாத்தியது.

## 19. பணிமனை

பணிமனைத் திணைக்களம் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட பல முக்கிய புதுப்பித்தல் செயற்றிட்டங்களுக்குப் புறம்பாக, அதன் முதன்மைப் பணிகளான வங்கிப் பணிமனையைப் பேணல் மற்றும் சுத்தமாக வைத்திருப்பதையும் திணைக்களத்தால் வழங்கப்படும் அனைத்து முக்கிய பணிகளின் தொழிற்பாட்டு நம்பகத் தன்மையின் உயர் அளவைப் பேணுவதையும் 2010இல் தொடர்ந்து நிறைவேற்றியது. மின்வலு, குளிரூட்டல், நீர் விநியோகம் மற்றும் தொடர்பூட்டல் ஆகிய முக்கிய பணிகளை வழங்குவதில் பணிமனைத் திணைக்களம் 2010இல் அநேகமாக 100% தங்கியிருப்பதை அடையக் கூடியதாக இருந்ததுடன் வங்கியின் தடங்கலற்ற வியாபாரத்திட்டத்தை உறுதிப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தது.

60ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களை வசதிப்படுத்தும் பொருட்டு, இராஜகிரியவிலுள்ள வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையத்தில் தரமுயர்த்தல் மற்றும் நவீனமயமாக்கலுக்கான பாரிய செயற்றிட்டம் 2010இல் ஆரம்பமானது. வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையம் கட்டடக் கலைஞர்கள் திருப்தியடையும் உள்ளக வடிவமைப்பை அறிமுகப்படுத்தி பங்கேற்பாளர்களுக்கான மிக நவீனத்துவம் வாய்ந்த வசதிகளை வழங்குவதற்கு தரமுயர்த்தப்பட்டது. வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையத்தை நவீன பன்னாட்டு பயிற்சி நிலையமாக மாற்றியமைப்பதற்குத் தேவையான பிரதான கட்டடத்தின் தோற்றம், அதன் சூழல், சுகாதாரப் பணிகள், நடைபாதை, தோற்றம் மற்றும் நிறப் பூச்சுக்களை அதிகரிப்பதற்கான மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இலங்கை மத்திய வங்கியின் சொத்திற்குப் புதிதாக சேர்க்கப்பட்ட லோயிட் கட்டடத்தின் புதுப்பித்தல் பணிகள் முக்கிய செயற்பாடுகளுக்கான மேலதிக அலுவலர்களைப் பணிக்கமர்த்தியதன் மூலம் விரைவாக மேற்கொள்ளப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் தொழில்சார் அலுவலர்கள் அதுபோல் வெளி மூலங்களிலிருந்து பெறப்பட்ட நிபுணர்கள் இவ் வரலாற்று ரீதியான கட்டடம் அதன் ஆரம்பத்திலிருந்த அழகை மீள ஏற்படுத்துவதில் கட்டடவாக்கத் தரத்தின் உயர் நியமங்களை அடைவதற்குப் பங்களிப்புச் செய்தனர். இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு எதிராக அமைந்துள்ள நேசனல் மியூச்சுவல் அசூரன்ஸ் கட்டடத்திற்கான புதுப்பித்தல் திட்டமும் 2010இல் இறுதிப்படுத்தப்பட்டதுடன் புதுப்பித்தல் பணிகள் 2011இல் ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பணிமனைத் திணைக்களம் சோமாவதிய தேசிய பூங்காவிலுள்ள புதிய விடுமுறை பங்களாக்களின் கட்டடவாக்கத்தை 2010இல் வெற்றிகரமாக பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. அனுராதபுரம், கதிர்காமம் மற்றும் நுவரெலியாவில் உள்ள விடுமுறை பங்களாக்களிலுள்ள வசதிகளைத் தரமுயர்த்தல் 2010இல் பொறுப்பேற்கப்பட்டதுடன் 2011இன் முதலாம் காலாண்டில் பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 25 ஆண்டுகள் பழமை வாய்ந்த வட மத்திய மாகாணத்திலுள்ள கேட்போர் கூடம் நவீன தோற்றத்தைக் காட்டும் வகையில் புதுப்பிப்பதற்கான ஒழுங்கு முறைகள் நடைபெற்று வருகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இலங்கை மத்திய வங்கியின் செயற்பாடுகளின் விரிவாக்கத்திற்கு வசதியளிக்கும் வகையில் இம் மாகாணங்களில் புதிய மாகாண அலுவலகங்களை நிறுவுவதற்குத் தேவையான கட்டடங்களையும் ஏனைய வசதிகளையும் வழங்குவதில் திணைக்களம் முக்கிய பங்காற்றியது.

பணிமனைத் திணைக்களம் செயற்பாட்டு அறையை விரிவாக்கல் மற்றும் நவீனமாக்கல், மற்றும் மாநாட்டு மண்டபம் இல 3 ஐ பன்னாட்டு நியமங்களுக்கேற்ப நவீனமயப்படுத்தல் உள்ளிட்ட தலைமை அலுவலகக் கட்டடத்தில் தரமுயர்த்தும் பல செயற்றிட்டங்களைப் பொறுப்பேற்றது. இலங்கை மத்திய வங்கி தலைமை அலுவலகப் பணிமனை நுழைவாயிலுள்ள பிளக்ஸ்ராவ் வீதிக்குப் பக்கத்தில் ஆறு மாடிகளைக் கொண்ட ஊர்தித் தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒழுங்கு முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக எழும் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு பணிமனைத் திணைக்களத்தின் ஊர்தித் தொகுதியும் இவ்வாண்டில் பலப்படுத்தப்பட்டது.

தொழிற்பாட்டு இடர்நேர்வைக் குறைப்பதற்கும் தர உறுதிப்பாட்டிற்கும் வங்கிக்குள்ளேயும் வெளிமூலங்களிலிருந்து தொழில்நுட்ப நிபுணர்களின் பணியைப் பெற்றுக் கொள்ளும் கொள்கையுடன் இணங்கிச் செல்லும் வகையில் பணிமனைத் திணைக்களம் 2010இல் புதிய ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பயிற்சியுடனான தொழில்சார் அலுவலர்களின் குழுவை பலப்படுத்துபவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

## 20. மாகாண அலுவலகங்கள் கண்காணிப்பு

### (அ) மாகாண அலுவலகங்களின் தொழிற்பாடுகளைக் கண்காணித்தல்

2009இல் நிறுவப்பட்ட மாகாண அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் கொள்கைக் குறிக்கோள்களுடன் இணைந்து செல்லும் விதத்தில் மாகாண அலுவலகங்களின் செயலாற்றத்தைக் கண்காணிப்பதன் மூலம் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. மேலும், நீண்ட தசாப்தங்கள் நீடித்த மோதல் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்குத் தேவையான நிதியியல் மற்றும் ஏனைய துணைப் பணிகளை வழங்கும் பொருட்டு நாணயச் சட்ட விதியின் 7ஆம் பிரிவின் நியதிகளில் 2010இல் யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் புதிய மாகாண அலுவலகங்கள் நிறுவப்பட்டன.

மாகாண அலுவலகங்களின் உபாயக் குறிக்கோள்களில் ஒன்று யாதெனில் பிராந்தியங்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு உற்பத்தித் துறைகளுக்கான நிதியியல் உதவியை விரிவுபடுத்துவதாகும். பிரதேச அபிவிருத்திக் குறிக்கோள்களை அடையும் பொருட்டு மாகாண அலுவலகங்கள் இலங்கை மத்திய வங்கியால் தொழிற்படுத்தப்படும் சிறப்புக் கொடுகடன் வசதிகளை நடைமுறைப்படுத்துவதில் ஆக்கபூர்வமான பங்கை செயற்படுத்துகின்றன. மேலும், மாகாண அலுவலகங்கள் உள்ளார்ந்த வளமுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதுடன் பரந்தளவு நிதியூடாக குறைந்த வருமானக் குழுவினரின் வருமானத்தை உருவாக்கும் இயலளவை அதிகரிப்பதற்கு அவர்களுக்கு உதவியது.

### (ஆ) பிராந்தியங்களுக்கான சிறப்பு அபிவிருத்திச் செயற்பாடுகள்

மாகாண அலுவலகங்கள் பிரதேச அபிவிருத்தி முன்னெடுப்புக் களிலும் மாகாணங்களிலுள்ள மக்களின் வெவ்வேறு பிரிவுகளின் உற்பத்தியையும் வருமான மட்டங்களையும் அதிகரிப்பதற்குப் பொருத்தமான பிரதேசங்களுக்கே உரித்தான புதிதாக கண்டுபிடிக்க வேண்டிய செயற்றிட்டங்களையும் திட்டங்களையும் அடையாளம் காண்பதிலும் தொடர்ந்து கவனஞ் செலுத்தின.

வட மத்திய மாகாணத்திலுள்ள மாகாண அலுவலகம் பணம் செலுத்தத் தவறிய சோளப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை அறவிடுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை வசதிப்படுத்துவதில் பெருமளவில் ஈடுபட்டதன் காரணமாக 2008/2009 பெரும்போகத்தில் 67 சதவீதமாக அறிவிக்கப்பட்ட இத் துறையின் அறவிடல் விகிதம் 200/2010 பெரும்போகத்தில் 82 சதவீதத்திற்கு அதிகரித்தது. வடமத்திய மாகாணத்திலுள்ள மாகாண அலுவலகம் முன்னோக்கிய விற்பனைகள் ஒப்பந்த முறைமையின் கீழ் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஆதாயமான விலையில் அவர்களின் உற்பத்தியை விற்பதற்கு வேளாண்மையாளர்களுக்கான ஒழுங்குமுறைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. மீளாய்விற்குரிய ஆண்டில் உழுந்து, சோயா அவரை மற்றும் பயறு போன்ற ஏனைய பயிர்கள் தொடர்பாக இதே மாதிரியான ஒழுங்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள மாகாண அலுவலகங்கள் கமத்தொழில் திணைக்களத்தின் உதவியுடன் பெரிய வெங்காய விதைகளின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளன. சிறந்த வேளாண்மை நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதனூடாக மாகாணங்களில் தானிய உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்கள் மூலம் உரிய செயற்பாடுகளை அனைத்து மாகாண அலுவலகங்களும் ஒருங்கிணைத்தன. இது போலவே, நாட்டில் உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு மாகாண அலுவலகங்கள் இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட வேளாண் - கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தை ஊக்குவிப்பதில் பங்கேற்றன.

**அட்டவணை II-14**
**2010 காலப்பகுதியில் மாகாண அலுவலகங்களால் நடத்தப்பட்ட செயற்றிட்டங்களின் முன்னேற்றம்**

| மாகாண அலுவல கத்தின் பெயர் | நடத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் | | நடத்தப்பட்ட தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | |
|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டங்களின் எண். | பங்கேற்ற மக்களின் எண். | நிகழ்ச்சித் திட்டங்களின் எண். | பங்கேற்ற மக்களின் எண். |
| தென் மாகாணம் | 205 | 6,225 | 18 | 641 |
| வட மத்திய மாகாணம் | 100 | 6,825 | 33 | 1,001 |
| மத்திய மாகாணம் | 193 | 4,108 | 43 | 1,282 |
| வடக்கு மாகாணம் | 38 | 1,089 | - | - |
| கிழக்கு மாகாணம் | 08 | 100 | - | - |
| அனைத்து மாகாண அலுவல கங்கள் | 544 | 18,347 | 94 | 2,924 |

### (இ) விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

பொதுமக்களுக்கும் அது போல் மாகாண மட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்குமான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மாகாண அலுவலகங்களால் நடத்தப்பட்டன. அனைத்து மாகாண அலுவலகங்களும் மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கொடுகடன் திட்டங்கள், முன்னோக்கிய விற்பனைகள் ஒப்பந்தங்கள் முறைமை என்பவற்றில் பிரதேசங்களிலுள்ள மக்களை விழிப்படையச் செய்வதில் ஈடுபட்டதுடன் அரச பிணையங்கள் மீதான முதலீடு, சேமிப்புப் பழக்கங்களை ஊக்குவித்தல், போலி நாணயத் தாள்களை அடையாளம் காணல், சட்டத்திற்குப் புறம்பான நிதி வியாபாரம் மற்றும் ஏனைய பொது மற்றும் நடைமுறையிலுள்ள நிதியியல் பிரச்சனைகள் போன்ற வெவ்வேறான நிதி தொடர்பான விடயங்கள் சம்பந்தமாக சிறப்புக் கருத்தரங்குகளை நடாத்தின. உயர் தொழில்நுட்பத்தைக் கொண்ட வேளாண்மை, விஞ்ஞான ரீதியிலான பண்ணை வளர்ப்பு, வீட்டுத்தோட்டம், காளான் பயிர்ச்செய்கை, தும்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், தேன் வளர்ப்பு, தோட்டக்கலை மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பங்கள் போன்ற பல்வேறு துறைகளை உள்ளடக்கும் விதத்தில் மாகாணங்களிலுள்ள தொடர்பான நிறுவனங்களின் பங்கேற்புடன் பல எண்ணிக்கையான தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மாகாண அலுவலகங்களால்

நடத்தப்பட்டன. 2010இல் மாகாண அலுவலகங்களால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் மேலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

### (ஈ) ஏற்பாட்டு உதவி

இலங்கை மத்திய வங்கிக்கு மாகாண அலுவலகங்களால் விரிவுபடுத்தப்பட்ட ஏற்பாட்டு உதவி அளவீடுகளில் பங்கேற்றமை, கருத்தரங்குகள் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தமை, ஊழியர் சேம நிதியம் தொடர்பான உறுப்பினர் விசாரணைகளுக்குப் பதிலளித்தமை, இலங்கை மத்திய வங்கியின் ஞாபகார்த்த நாணயக் குத்திகள் மற்றும் வெளியீடுகளை விற்பனை செய்தமை, இலங்கை மத்திய வங்கியின் 60ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்கு நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டிக்கான ஒழுங்குமுறைகளை மாகாண மட்டத்தில் மேற்கொண்டமை என்பவற்றை உள்ளடக்குகிறது. மாகாணங்களில் கள மட்டத்திலான புலன் விசாரணைகள், அளவீடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளை நடத்துவதற்கு மாகாண அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களை அமர்த்துவதன் மூலம் மாகாண அலுவலகங்கள் பல சந்தர்ப்பங்களில் மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களுக்கு உதவின.

## 21. பொதுப்படுகடன்

பொதுப்படுகடன் திணைக்களம் 2010இலும் பொதுப்படுகடன் முகாமைத்துவ தொழிற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. இது தொடர்பான முக்கியமானதொரு தொழிற்பாடாக இருந்தது யாதெனில் அரசாங்கத்தின் நிதியியல் தேவைப்பாடுகளை சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் நிதிகளைத் திரட்டுவதும் முன்மதியுடைய மட்டத்தில் இடர்நேர்வுகளைப் பேணுவதும் சரியான ரேத்தில் பொதுப்படுகடனை தீர்ப்பனவு செய்வதுமேயாகும். இத் தொழிற்பாடுகளை காத்திரமான முறையில் மேற்கொள்ளும் பொருட்டு 2010இல் பொதுப்படுகடன் திணைக்களமானது, பொதுப்படுகடன் கொள்கையினை வலுப்படுத்துவதற்கும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்கும், உள்நாட்டுப் படுகடன் சந்தையினை அபிவிருத்தி செய்வதற்காக முதனிலை வணிகர் முறைமையின் பாரிய உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும், பொதுப்படுகடன் முகாமைத்துவத்தின் செயற்திறனை மேம்படுத்துவதற்கும் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டது. 2010இல் படுகடன் முகாமைத்துவ உபாயம் இடர்முகாமைத்துவ தொழில் நுணுக்கங்களை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதிலும் நடுத்தரகால பொதுப்படுகடன் முகாமைத்துவ உபாயத்தினை நிறைவேற்றுவதில் செலவுச் சிக்கனத்தினை அடைவதிலும் கவனம் செலுத்தியது.

2010ஆம் ஆண்டுப் பகுதியில் பொதுப்படுகடன் திணைக்களம் அரசின் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான படுகடன் முகாமைத்துவ உபாயங்களை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தியது. இதற்கமைய திணைக்களம் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்பாட்டு எல்லைக்குள் படுகடன்களைத் திரட்டுவதற்கு, வெவ்வேறுபட்ட சந்தைப் பிரிவுகள் மற்றும் முதலீட்டாளர்களின் விருப்பங்கள் என்பனவற்றினைப் பொறுத்து பல்வகைப்பட்ட படுகடன் கருவிகளையும் பயன்படுத்தியது. நாட்டில் நிலவிய சாதகமான பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளினால் தூண்டப்பட்ட மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கையின் விளைவாக வெளிநாட்டுக் கடன்பாடுகள் அதிகரித்தமையின் காரணமாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் படுகடன்கள் தொடர்பான அளவுகள் ஓரளவிற்கு மாற்றமடைந்தன. இவ்வாண்டில் பொதுப்படுகடன் திணைக்களம் குறுகிய நடுத்தர மற்றும் நீண்டகால (10 ஆண்டுகள் வரை) பிணையங்களை வழங்கியது. சந்தையில் நீண்டகாலப் பிணையங்களைப் பயன்படுத்தும் பொருட்டு, சாதகமான வட்டி வீதச் சூழலொன்றின் பின்னணியில் 10 ஆண்டு திறைசேரி முறியொன்று வழங்கப்பட்டது. ஆண்டின் பிற்பகுதியில், நாட்டிற்கான மூன்றாவது ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் கொண்ட பன்னாட்டு முறி வழங்கப்பட்டது. தரமிடல் முகவர்களினால் இலங்கையின் நாட்டிற்கான தரமிடல் உயர்த்தப்பட்டமையானது, பன்னாட்டுச் சந்தையில் குறைந்த செலவில் படுகடனைத் திரட்டுவதற்கு உதவியாக அமைந்தது. இவ்வாண்டுப் பகுதியில் திணைக்களம் தரமிடல் மீளாய்வு செயன்முறையினை வசதிப்படுத்துவதில் முக்கியமான பங்கொன்றினை ஆற்றியதுடன் நாட்டிற்கான தரமிடல் குழுவின் தொழில்நுட்பக்கரமாகவும் தொழிற்பட்டது. மேலும், பொதுப்படுகடன் திணைக்களம் இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கலூடாக உள்நாட்டுச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 628 மில்லியனைத் திரட்டியது.

முதனிலை வணிகர் முறைமையின் உறுதிப்பாட்டினையும் சுமுகமான தொழிற்பாட்டினையும் உறுதிப்படுத்தும் பொருட்டு திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள் தொடர்பான தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினையும் தலத்திலான பரீட்சிப்புக்களையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. சந்தைப் பங்கேற்பாளர்களுடனான உறவுகளைப் பலப்படுத்தும் பொருட்டும், சந்தையில் காணப்படும் பிரச்சனைகள் மற்றும் அபிவிருத்திகளை கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பமொன்றினை உருவாக்கும் விதத்திலும் மேற்கொள்ளப் பட்ட கொள்கைகளை அறிவித்து கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்காகவும் பொதுப்படுகடன் திணைக்களம் முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடன் மாதாந்த அடிப்படையில் கூட்டங்களை நடத்தியது. மேலும், திணைக்களம் இத் தொழில் துறையில் முதனிலை வணிகர்களின் முக்கிய நபர்களினது அறிவினை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு ஆய்வுச் சுற்றுலா, ஆய்வரங்கு மற்றும் செயலமர்வு, பன்னாட்டு ஆய்வுக் குழுக்களுடனான கூட்டங்கள் போன்றன உள்ளிட்ட பல்வேறு வழிமுறைகளைக் கொண்ட வாய்ப்புக்களை இவ்வாண்டில் வழங்கியது.

பொதுப்படுகடன் முகாமைத்துவத்தினை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு, பொதுப்படுகடன் திணைக்களம் 2010இல் படுகடன் முகாமைத்துவ உபாயங்களை காத்திரமான முறையில் நிறைவேற்றும் விடயத்தில் முக்கிய கவனம் செலுத்தியது இதன் விளைவாக மொத்தப்படுகடன் சொத்துப்பட்டியலின் காலப்பகுதி 2009இன் 4.20 ஆண்டுகளிலிருந்து 2010இல் 4.31 ஆண்டுகளுக்கு அதிகரித்த வேளையில், படுகடன் சொத்துப்பட்டியலின் சராசரி முதிர்ச்சிக் காலம் 2009இன் 5.29ஆண்டுகளிலிருந்து 2010இல் 5.25 ஆண்டுகளுக்கு வீழ்ச்சியடைந்தது.

2010இல் பொதுப்படுகடன் திணைக்களம் அரச படுகடன்களை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு படுகடன்கள்) சரியான நேரத்தில் தீர்ப்பனவு செய்தமையின் மூலம் ஒரு சிறிய தவறேனும் இல்லாத விதத்தில் படுகடன் கடன்பாடுகளை தீர்ப்பனவு செய்கின்ற நாடு என்ற அதன் கறைபடியாத பெயரை பாதுகாத்துக் கொண்டது.

பொதுப்படுகடன் திணைக்களம் பொதுப்படுகடன் முகாமைத்துவ தொழிற்பாட்டில் நம்பகத்தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் ஒளிவு மறைவற்ற வெளிப்படையான தன்மை என்பனவற்றை மேம்படுத்தும் விதத்தில் சந்தைக்கு நாளது வரையான பூரணமான தகவல்களை தொடர்ச்சியாக வழங்கும் பொருட்டு இவ்வாண்டுப் பகுதியில் பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. ஆற்றல் வாய்ந்த படுகடன் முகாமைத்துவ முறைமையினை அபிவிருத்தி செய்வதற்கு சரியான நேரத்தில் தகவல்களை வழங்குவதன் முக்கியத்துவம் எத்தகையது என்பதனை வலியுறுத்தும் விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தினை தொடர்ந்தும் பூரணப்படுத்தி வந்ததுடன், சந்தைப் பங்கேற்பாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்குமாக இலங்கையில் படுகடன் முகாமைத்துவம் தொடர்பான மாதாந்த தரவு செய்தித் திரட்டுக்களையும் அதன் ஆண்டு வெளியீட்டினையும் வெளியிட்டது.

இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படும் மத்திய வைப்பக முறைமையில் அரசாங்க பிணையங்களின் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் சரியான நேரத்தில் மற்றும் தவறுகள் இன்றி பதிவு செய்யப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு பொதுப்படுகடன் திணைக்களம், மத்திய வைப்பக முறைமையில் பேணப்படும் பதிவேடுகளை நெருக்கமாகக் கண்காணித்து மேற்பார்வை செய்து வருகின்றது. 2010ஆம் ஆண்டுப் பகுதியில பொதுப்படுகடன் திணைக்களம் காலாந்தரக் கூற்றுக்களை முதலீட்டாளர்களுக்கு விரைவாக வழங்கக்கூடியதாக இருந்தது. கூடியளவு போட்டித்தன்மை, இயக்கவாற்றல் மற்றும் திரவ பிணையங்கள் சந்தை என்பனவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், நாடளாவிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டமையின் மூலம் இவ்வாண்டுப் பகுதியில் முதலீட்டாளர் தளத்தினை விரிவாக்கிப் பன்முகப்படுத்துவதற்காக பொதுப்படுகடன் திணைக்களம் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டது. பொதுப்படுகடன் திணைக்களமானது அரச பிணையங்களின் முதலீடு தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டது.

### 2010இல் அபிவிருத்திகள்

#### (அ) கடன்பாட்டு இலக்கும் உபாயமும்

2010ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் நியதிகளில், பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட அரசாங்கத்தின் முழு மொத்த கடன்பாட்டு எல்லை ரூ.980.0 பில்லியனாக (ஏட்டுப் பெறுமதி) விளங்கியது. இத் தொகையில், ரூ.685.3 பில்லியன் உள்நாட்டு மூலங்களிலிருந்து நிதியிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் மீதி ரூ. 294.7 பில்லியனை வெளிநாட்டு மூலங்களினூடாகத் திரட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், இவ்வாண்டுப் பகுதியில், அதிகரித்த முதலீட்டாளர் நம்பிக்கையின் காரணமாக வெளிநாட்டு நிதியின் உட்பாய்ச்சலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்டதுடன் இதன் காரணமாக வெளிநாட்டு மூலங்களிலிருந்தான கடன்பாடுகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தினை விஞ்சிக் காணப்பட்டது. அதனால் உள்நாட்டு மூலங்களிலிருந்து திரட்டப்பட்ட நிதி ரூ.594.2 பில்லியன்களுக்கு குறைவடைந்தன. வெளிநாட்டு மூலங்களிலிருந்தான கடன்பாடுகள் ரூ.327.9 பில்லியனிற்கு அதிகரித்தன.

இவ்வாண்டில் பதிவுசெய்த ரூ.53.3 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன், 2010 இறுதியில், ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களில் (திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள்) காணப்பட்ட வெளிநின்ற வெளிநாட்டு முதலீடுகள் ரூ.240.9 பில்லியனாக (முகப்புப் பெறுமதியில்) விளங்கின. மேலும், ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் (ரூ.111.8 பில்லியன்) தொகை கொண்ட 10 ஆண்டு கால முதிர்ச்சியைக் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் 6.25 சதவீத வட்டி வீதத்தில் 2010 ஒத்தோபரில் வழங்கப்பட்டன. நாட்டிற்கான முறிவழங்கலின் மூலம் கிடைத்த ஒப்பீட்டு ரீதியில் குறைந்த செலவினைக் கொண்ட நிதி பயன்படுத்தப்பட்டதன் மூலம் உயர் செலவினைக் கொண்ட குறுங்கால கடன்பாடுகளில் குறிப்பிடத்தக்களவு விகிதம் இளைப்பாறச் செய்யப்பட்டதன் காரணமாக அரச படுகடன் இருப்பு மீள அமைக்கப்பட்டது. சலுகை ரீதியான மூலங்களினூடாகத் திரட்டப்பட்ட நிதியம் உட்பட ஏனைய வெளிநாட்டுக் கடன்பாடுகள் (வெளிநாட்டு செயற்றிட்டம்/நிகழ்ச்சித்திட்டக் கடன்கள்) 2010இல் ரூ.163.9 பில்லியன்களாகக் காணப்பட்டன.

ஆண்டின் முதல் ஒரு சில மாதங்களில் சந்தையில் நிலவிய உயர் பணவீக்க எதிர்பார்ப்புக்களின் காரணமாக, வட்டி வீதங்கள் மேல் நோக்கி உயர்வடைந்தன. எனினும், பொருளாதார நடவடிக்கைகளை தூண்டுவதற்கு காரணமாயிருந்த, பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகள், முதலீட்டாளர்களின் குறைந்த பணவீக்க எதிர்பார்ப்புக்கள், அரச பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளூடாக ஏற்பட்ட வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல், சந்தையில் திரவ நிலைமை மேம்பட்டமை, பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பின்பற்றப்பட்ட கவனமான படுகடன் முகாமைத்துவ உபாயங்கள் என்பன ஆண்டின் பிற்பகுதியில் விளைவு வளையி கீழ் நோக்கிப் பெயர்ந்தமையின் மூலம் வட்டி வீதங்கள் படிப்படியாக கீழ் நோக்கி நகர முக்கிய காரணங்களாக அமைந்தன. இது இவ்வாண்டில் 3 மாதங்களிலிருந்து 6ஆண்டுகள் முதிர்ச்சிகள் தொடர்பான விளைவு வளையியிற்கு மேலாக திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்களில் ஏற்பட்ட 37 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 268 அடிப்படைப் புள்ளிகள் வீச்சிலான வீழ்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டது.

ஆண்டின் ஒரு சில மாதங்களில் நிலவிய உயர்ந்த வட்டி வீத எதிர்பார்ப்புக்களின் காரணமாக, முதலீட்டாளர்கள் நடுத்தர மற்றும் நீண்டகால உள்நாட்டுப் படுகடன் கருவிகளில் முதலீடு செய்ய தயக்கம் காட்டியதுடன் அதன் காரணமாக

குறுங்கால உள்நாட்டு படுகடன் கருவிகளினூடாகத் திரட்டப்பட்ட நிதி அதிகரித்தது. இதன்படி 2010இல் திறைசேரி உண்டியல்கள் ஊடாகத் திரட்டப்பட்ட நிதியம் ரூ.82.8 பில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், மேற்குறிப்பிடப்பட்ட சாதகமான அபிவிருத்திகள் காரணமாக பொதுப்படுகடன் திணைக்களம் நடுத்தர மற்றும் நீண்டகால முதிர்ச்சிகளுடன் ரூ.433.6 பில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகளை வழங்கக்கூடியதாக இருந்தது. மேலும், 2010இல் இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கலூடாக ஐ.அ.டொலர் 628 மில்லியன்களை (ரூ.71.2 பில்லியன்) கடன்படக் கூடியதாக இருந்தது. உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலிலிருந்து வர்த்தகப்படுத்த முடியாத படுகடன் இருப்புக்களை குறைக்கின்ற கொள்கையினை தொடர்கின்ற விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களம் 2010இலும் ரூபாய்க் கடன்களைத் நிதிகளைத் திரட்டுவதனை தவிர்த்துக் கொண்டது.

2010இல் பொதுப்படுகடன் திணைக்களம் 91 நாள் மற்றும் 182 நாள் திறைசேரி உண்டியல்களின் வழங்கலை மட்டுப்படுத்துவதன் மூலமும் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் வழங்கலின் பெறுமதியினை அதிகரிப்பதன் மூலமும் மாதாந்தம் ஒரே நேரத்தில் பெருமளவு கடன்கள் முதிர்ச்சியடைவதால் ஏற்படும் அழுத்தத்தினை தணிப்பதற்கான அதன் கடன்பெறும் உபாயத்தினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இதற்கமைய 91-நாள் திறைசேரி ஊண்டியல்களின் வழங்கல், 2009இன் 21 சதவீதத்திலிருந்து 2010இன் மொத்த திறைசேரி உண்டியல் வழங்கல் 19 சதவீதத்திற்கு குறைவடைந்தது. 182 நாள் திறைசேரி உண்டியல்களின் வழங்கல் 2009இன் 35 சதவீதத்திலிருந்து 34.5 சதவீதத்திற்கு சிறிதளவிற்கு குறைவடைந்தது. 2010இல் புதிய வழங்கலில் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் பங்கு 2009இன் 43.6 சதவீதத்திலிருந்து 2010இல் 46 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2010இன் முதல் ஒரு சில மாதங்களில் சந்தையில் நிலவிய உயர்ந்த பணவீக்க எதிர்பார்ப்புக்களின் காரணமாக நடுத்தரத்திலிருந்து நீண்டகாலம் வரையான முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரி முறிகளை கூடுதலாக வழங்குகின்ற உபாயத்தினை நிறைவேற்றுவதில் சவால்கள் காணப்பட்டன. எனினும், திணைக்களம் 5 ஆண்டுகளும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டதுமான நீண்டகால முறிகளை வழங்கக் கூடியதாக இருந்தமை புதிய திறைசேரி முறிகளின் வழங்கலில் அத்தகைய முறிகளின் பங்கினை 2009இன் 33.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 37.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. மேலும், 8 ஆண்டுகள் மற்றும் 10 ஆண்டுகள் முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி முறிகளின் வழங்கலின் மூலம் பொதுப்படுகடன் திணைக்களம் 10 ஆண்டுகள் வரையான நீண்டகால அடிப்படை அளவீட்டுக் குறியீட்டு விளைவு வளையியொன்றை செயற்படுத்தியது.

### (ஆ) படுகடன் கருவிகளின் வழங்கல் பயன்பாடு

பொதுப்படுகடன் திணைக்களம் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்குத் தேவையான நிதியங்களைத் திரட்டுவதற்கு முதலாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. முன்னைய ஆண்டினைப் போன்றே, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வழங்கல்கள், ஏலங்கள் மற்றும் தனிப்பட்ட ரீதியான வழங்கல்கள் ஆகிய இரண்டினூடாகவும் மேற்கொள்ளப்பட்டன. திறைசேரி உண்டியல் நிகழ்ச்சித்திட்டத்தில், திணைக்களம் 2010ஆம் ஆண்டுப் பகுதியில் திணைக்களம் ரூ.1,000 பில்லியன் (முகப்பெறுமதி) தொகையான திறைசேரி உண்டியல்களை வழங்கியது. இத் தொகையில் ரூ.910 பில்லியன்கள் முதிர்ச்சியடைகின்ற திறைசேரி உண்டியல்களுக்காக வழங்கப்பட்ட வேளையில் மீதி ரூ.90 பில்லியன்கள் புதிய வழங்கல்களாகக் காணப்பட்டன. இவ்வாண்டுப் பகுதியில் 53 திறைசேரி உண்டியல் ஏலங்கள் இடம்பெற்றதுடன் அவற்றின் மூலமாக ரூ.520 பில்லியன்கள் திரட்டப்பட்ட வேளையில் ரூ.346 பில்லியன் சந்தைத் தொழிற்பாட்டாளர்களுக்கு நேரடியாக வழங்கப்பட்டமையினூடாகத் திரட்டப் பட்டன. திறைசேரி உண்டியல் நிகழ்ச்சித்திட்டத்தில் வெளிநாட்டுப் பங்கேற்பு தேறிய அடிப்படையில் ரூ.17 பில்லியன்களாகக் காணப்பட்டது.

திறைசேரி முறிகள் நிகழ்ச்சித்திட்டத்தில், 2010இல் ரூ.509 பில்லியன் (முகப்பெறுமதி) கொண்ட மொத்த நிதியம் திரட்டப்பட்டது. இவ்வாண்டில் பொதுப்படுகடன் திணைக்களம் 17 ஏலங்களை வெற்றிகரமாக நடத்தியதுடன் இவ் ஏலங்களினூடாக ரூ.46 பில்லியன்களை திரட்டக் கூடியதாக இருந்த வேளையில் ரூ.462 பில்லியன் தனிப்பட்ட வழங்கலினூடாகத் திரட்டப்பட்டது. திறைசேரி முறிகள் நிகழ்ச்சித்திட்டத்தில் வெளிநாட்டுப் பங்கேற்பு தேறிய அடிப்படையில் ரூ.38 பில்லியன்களாகக் காணப்பட்டது.

பொதுப்படுகடன் திணைக்களம் முதிர்ச்சியடைகின்ற இலங்கை அபிவிருத்தி முறிகளின் மீட்பிற்கு வசதியளிக்கின்ற விதத்தில் 3 இலங்கை அபிவிருத்தி முறிகளின் ஏலங்களை நடத்தியதுடன் இலங்கை அபிவிருத்தி முறைகளின் முதிர்ச்சியின் போது வசதியளிப்பதற்கான தனியார் வைப்புக்களையும் உருவாக்கியது. இந்த ஏலங்களினூடாகவும் தனிப்பட்ட வழங்கலினூடாகவும் திரட்டப்பட்ட நிதியங்களின் மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 628 மில்லியன்களாகக் காணப்பட்டன. இந் நிதியங்கள் இரண்டு மற்றும் மூன்று ஆண்டு முதிர்ச்சிகளுடன் ஆறு மாத இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்தினைக் கொண்ட வட்டி வீதத்துடன் 350 இலிருந்து 395 அடிப்படைப்புள்ளிகள் வரையிலான வீச்சினைக் கூட்டியதொரு வட்டி வீதத்தில் வழங்கப்பட்டன.

உள்நாட்டுச் சந்தைகள் மீதான அழுத்தத்தினைக் குறைத்தல், படுகடன் சொத்துப்பட்டியலைப் பன்முகப்படுத்தல் மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் காணப்படும் குறைந்த வட்டி வீதங்களின் நன்மைகளை அனுபவித்தல் என்பனவற்றின் பொருட்டு 10 ஆண்டு முதிர்ச்சிகளுடன் 6.25 சதவீத நிலையான நறுக்கு வீதத்தில் ஐ.அ.டொலர் 1,000 மில்லியன்களுக்கு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வழங்கப்பட்டன. உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்தமையின் முக்கிய விளைவாக தோன்றிய சாதகமான பொருளாதார தோற்றப்பாடு, தரமிடல்

முகவர்களினால் இலங்கையின் நாட்டிற்கான தரமிடல் உயர்த்தப்பட்டமை, கடன்பாட்டுச் செலவினை குறைப்பதற்கான பொதுப்படுகடன் திணைக்களத்தின் அர்ப்பணிப்பு என்பன 2007இலும் 2008இலும் மேற்கொள்ளப்பட்ட ஐந்து ஆண்டு முதிர்வுக் காலமுடைய ஐந்து ஆண்டு முதிர்வுக் காலமுடைய முதலாவது மற்றும் இரண்டாவது நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வட்டி வீதங்களான முறையே 8.40 சதவீதம் மற்றும் 7.25 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் 6.25 சாதகமான குறைந்த வட்டி வீதத்தினை எய்துவதற்குப் பங்களித்தன.

### (இ) படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

2010ஆம் ஆண்டில் பொதுப்படுகடன் திணைக்களம் ரூ.820 பில்லியன் கொண்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் படுகடன் கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்தது. தீர்ப்பனவு செய்யப்பட்ட மொத்தக் கடன்களில் ரூ.352 பில்லியன்கள் வட்டிக் கொடுப்பனவுகளாக இருந்த வேளையில் ரூ.468 பில்லியன் முதல் தொகையின் மீள்கொடுப்பனவுகளாக விளங்கின. 2010இல் தீர்ப்பனவு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டுக் கடன்கள் ரூ.687 பில்லியன்களாகக் காணப்பட்ட வேளையில் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு ரூ.133 பில்லியன்களாக (ஐ.அ.டொலர் 1,197 மில்லியன்) காணப்பட்டது. மேலும், ரூ.844 பில்லியன் தொகை கொண்ட முதிர்ச்சியடைந்த உண்டியல்கள் இவ்வாண்டில் மீள வழங்கப்பட்டன.

இவ் வழமையான படுகடன் தீர்ப்பனவு தொழிற்பாடுகளுக்குப் புறம்பாக, பொதுப்படுகடன் திணைக்களம் தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாக படுகடன் தீர்ப்பனவு தொழிற்பாடுகளை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய முகாமைத்துவ கணக்காய்வு ஒன்றினை மேற்கொண்டது. இக் கணக்காய்வில் கண்டறியப்பட்ட விடயங்கள் நிதி அமைச்சின் வெளிநாட்டு மூலவள திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டன.

### (ஈ) விளைவு வீதங்களும் இரண்டாந்தரச் சந்தையின் செயலாற்றமும்

இவ்வாண்டுப் பகுதியில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் மீதான விளைவு வீதங்கள் 3 மாத மற்றும் 6 மாத முதிர்ச்சிகள் மீதான விளைவு வளையி முழுவதிலும் 30 இல் இருந்து 268 அடிப்படைப்புள்ளிகள் வரையில் வீச்சில் வீழ்ச்சியடைந்தன. இது தோற்றம் பெற்று வரும் பேரண்டப் பொருளாதார நிலைமைகளைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை நிலையுடன் ஒத்துச் செல்வதாகக் காணப்பட்டது. 2010 இறுதியளவில் குறுங்கால விளைவு வளையி அதாவது 3 மாதங்களிலிருந்து 1 ஆண்டு விளைவுகள் 179 அடிப்படைப்புள்ளிகளுக்கு 30 அடிப்படைப்புள்ளிகளினால் குறைவடைந்த வேளையில் 2 ஆண்டு விளைவு 268 அடிப்படைப்புள்ளிகளினால் 8.23 சதவீதத்திற்கும் 4 ஆண்டு கால விளைவு 213 அடிப்படைப்புள்ளிகளினால் 9.39 சதவீதத்திற்கும் 6 ஆண்டுகால விளைவு 262 அடிப்படைப் புள்ளிகளால் 9.40 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. இதன்படி பொதுப்படுகடன் திணைக்களம் புதிய 10 ஆண்டுகள் திறைசேரி முறித் தொடரொன்றினை ஆண்டிற்கு 9.30 சதவீத விளைவுடன் வழங்கியது. 2010இல் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகள் இரண்டினதும் கொடுக்கல்வாங்கல்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்தன. இரண்டாந்தரச் சந்தையில் இவ்வரச பிணையங்களின் மொத்தப் புரள்வு விகிதம் 2009இன் 16.1 மடங்கிலிருந்து 22.5 மடங்குகளுக்கு அதிகரித்தது. இக் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு 2009 உடன் ஒப்பிடுகையில் 2010இல் உடனடி மற்றும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் இரண்டினதும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

### (உ) பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையும் மத்திய வைப்பக முறைமையும் - லங்கா செக்குயர்

2010இல் பொதுப்படுகடன் திணைக்களமானது 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 6 வங்கியல்லாத முதனிலை வணிகர்கள் மற்றும் 2 வணிகரல்லாத நேரடிப் பங்கேற்பாளர்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அதன் பங்கேற்பாளர்களுடன் லங்கா செக்குயரின் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் பேணக் கூடியதாக இருந்தது. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையினூடாக இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி 60.2 சதவீதத்தினால் ரூ.52.4 ரில்லியனுக்கு அதிகரித்தது. மத்திய வைப்பக முறைமையில் பேணப்படும் கணக்குகளின் எண்ணிக்கை, 2009 இறுதியின் 64,680 இலிருந்து 2010 இறுதியில் 73,396 இற்கு 13.5 சதவீதத்தால் அதிகரித்தது. லங்கா செகுயர், கொடுக்கல் வாங்கலின் சுருக்கமான தொகுப்பு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு மற்றும் உடமைகளின் அறிக்கை ஆகிய மூன்று வகையான கூற்றுக்களை தொடர்ந்தும் வழங்கியது. கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கமான தொகுப்பு பொதுவாக அடுத்து வரும் மாதத்தின் முதல் கிழமைக்குள் வழங்கப்படுகின்ற வேளையில் கொடுப்பனவுக் கூற்று, பெறுகைகள்/வட்டி வீதம் செலுத்தப்பட்ட பின்னரான 1 கிழமைக்குள் உடமைகளின் கூற்று ஒவ்வொரு 6 மாதங்களின் பின்பும் மூன்று கிழமைகளுக்குள் வழங்கப்படுதல் வேண்டும். இவ்வாண்டுப் பகுதியில் 116,962 கொடுக்கல்வாங்கல் சுருக்கங்களும் 69,847 கொடுப்பனவு கூற்றுக்களும் 51,701 உடமைகளின் கூற்றுக்களும் தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

2010 இறுதியில் லங்கா செகுயரில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் மொத்தப் பெறுமதி ரூ.2,399.2 பில்லியனாகக் காணப்பட்டது. இப் பத்திரங்களற்ற பிணையங்கள் ரூ.571.8 பில்லியன் தொகை கொண்ட பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களையும் ரூ.1,827.4 பில்லியன் கொண்ட பத்திரங்களற்ற திறைசேரி முறிகளையும் உள்ளடக்கியிருந்தன.

2010 பெப்புருவரியில் லங்கா செகுயர் வியாபாரத் தொழிற்பாட்டிற்கு பல்வேறு முன்னேற்றங்கள் புகுத்தப்பட்டன. பங்கேற்பாளர்களினால் முகாமைப் படுத்தப்படும் ஒரு

நாளுக்குள்ளேயான திரவ வசதி மற்றும் வாடிக்கையாளர் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் பொருட்டு தன்னியக்கமாக நேர்மாற்றமடையும் வசதி என்பனவற்றை இரண்டு முக்கிய முன்னேற்றங்களாக எடுத்துக்காட்ட முடியும். பங்கேற்பாளர்களினால் முகாமைப்படுத்தப்படும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, பங்கேற்கும் நிறுவனங்களின் திறைசேரி அலுவலர்கள் பல்வேறு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி கோரிக்கைகளை மேற்கொள்வதற்கும் அவர்களது நிதியியல் நிறுவனங்களுக்கு திரவ வசதி தேவைப்படும் போதெல்லாம் வியாபார நாளின் தொழிற்பாட்டு அட்டவணைக் காலத்தில் நேர்மாற்றுச் செய்து கொள்வதனையும் மற்றைய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு அவர்களின் கொடுப்பனவுக் கடப்பாடுகளை மேற்கொள்வதனையும் இயலச் செய்தது. வாடிக்கையாளர் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்கான தன்னியக்கமான நேர்மாற்று வசதியானது அதன் முதிர்ச்சியில் வாடிக்கையாளர் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களை நேர்மாற்றுவதற்குத் தேவைப்பட்ட கைகளினால் மேற்கொள்ளப்படும் தலையீடுகளை அகற்றிவிட்டது.

### (ஊ) முதனிலை வணிகர்களது மேற்பார்வை

முதனிலை வணிகர் முறைமையின் உறுதிப் பாட்டினையும் நம்பகமான தொழிற்பாடுகளையும் பேணும் நோக்குடன் பொதுப்படுகடன் திணைக்களம் தலத்திலான பரீட்சிப்பு மற்றும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு என்பனவற்றினூடாக 2010இலும் அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களின் மேற்பார்வையினை தொடர்ந்தும் மேற்கொண்டது. இதன்படி, இவ்வாண்டுப் பகுதியில் மூன்று அனைத்தையுமுள்ளடக்கிய தலத்திலான பரீட்சிப்புக்களும் இரண்டு உடனடி தலத்திலான பரீட்சிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. இவை சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் முதனிலை வணிகர்கள் அவர்களது தொழிற்பாடுகளை மேற்கொள்கையில் ஏற்படக்கூடிய தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பனவற்றை உள்ளடக்கிய இடர்நேர்வுகளுக்கு முதனிலை வணிகர்கள் உட்படுகின்ற தன்மையின் மீது கூடியளவு கவனத்தைச் செலுத்தியது. தலத்திலான பரீட்சிப்புக்களுக்குப் புறம்பாக, முதனிலை வணிகர்களின் வாராந்த மற்றும் மாதாந்த அறிக்கைகளின் அடிப்படையில் ஒவ்வொரு முதனிலை வணிகர்களினதும் தொழிற்பாடுகள் தொடர்பாக தலத்திற்கு வெளியேயான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுப்படுகடன் திணைக்களத்திற்கும் சந்தைப் பங்கேற்பாளர்களுக்குமிடையில் நேரடியான தொடர்பூட்டல் இணைப்புக்களை ஏற்படுத்தும் விதத்தில் திணைக்களம் முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடன் 8 கூட்டங்களை நடத்தியது. இக் கூட்டங்களில் பொருளாதாரத்திலும் உள்நாட்டுச் சந்தையிலும் அதேபோன்று பன்னாட்டுச் சந்தைகளிலும் ஏற்பட்ட அண்மைய அபிவிருத்திகள் பற்றி முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்டன. முதனிலை வணிகர்களின் நிதியியல் செயலாற்றமும் கூட்டு வடிவத்தில் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் நிதியியல் குறிகாட்டிகளில் ஏதேனும் பாதகமான நிகழ்வுகள் அல்லது போக்குகள் அவதானிக்கப்படுமிடத்து அவை தொடர்பாகவும் பொதுவாக கலந்துரையாடப்பட்டன.

மேற்பார்வை நடவடிக்கைகளுக்குப் புறம்பாக, 2010ஆம் ஆண்டுப் பகுதியில் சந்தைப் பங்கேற்பாளர்களுக்காக அறிவூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அபிவிருத்தியடைந்த படுகடன் சந்தைகளில் பின்பற்றப்பட்ட கொள்கைகள் மற்றும் முறைமைகள் தொடர்பான அறிவாற்றலை அதிகரிக்கும் நோக்குடன் 2010 மாச்சில் முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்காக அவுத்திரேலியாவிற்கான கல்வி ஆய்வுச் சுற்றுலாவொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இவ்வாய்வுச் சுற்றுலாவின் போது முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு அவுத்திரேலிய றிசேர்வ் வங்கி, நிதியியல் முகாமைத்துவத்தின் அவுத்திரேலிய அலுவலகம் (படுகடன் அலுவலகம்) மற்றும் அவுத்திரேலிய பிணையங்கள் பரிவர்த்தனை என்பன உள்ளிட்ட அநேக அரச முகவரமைப்புக்களுக்கு விஜயம் செய்தனர். அவர்கள் நிதியியல் சந்தைச் சங்கம் மற்றும் படுகடன் மற்றும் மூலதனச் சந்தைகளிலுள்ள குறிப்பிட்ட சந்தைப் பங்கேற்பாளர் ஆகியோரின் அலுவலகங்களுக்கும் விஜயம் செய்தனர். 2010 மேயில், பொருளாதாரம் மற்றும் உள்நாட்டு அதேபோன்று பன்னாட்டுச் சந்தைகளில் ஏற்படும் அபிவிருத்திகள் தொடர்பாக அவர்களுக்கு ஆழமான விளக்கங்களை அளிப்பதற்காக முதனிலை வணிகர்கள் மற்றும் திறைசேரி அலுவலர்களை இலக்காகக் கொண்டு ஒரு நாள் செயலமர்வொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. அரச பிணையங்களில் முதனிலை வணிகர்களின் பங்கும் செயலமர்வில் முக்கியமான இடத்தினை வகித்தது.

இவ்வாண்டுப் பகுதியில் பொதுப்படுகடன் திணைக்களம் அரச பிணையங்கள் சந்தையின் தொழிற்பாடுகள் மற்றும் இலங்கையில் முதனிலை வணிகர் முறைமை ஆகிய விடயங்களில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக கானா வங்கி, கென்யா அரசாங்கம் மற்றும் வங்காளதேசம் ஆகியவற்றிலிருந்து வருகை தந்த மூன்று பன்னாட்டு கல்வி ஆய்வுக் குழுக்களுக்கு உபசரணைகளை வழங்கியது.

### (எ) அரச பிணையங்கள் சந்தை அபிவிருத்தி

அரச பிணையங்களை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்ற விதத்திலும் அரச பிணையங்களுக்கான முதலீட்டாளர் தலத்தினை விரிவாக்கும் நோக்குடனும் பொதுப்படுகடன் திணைக்களம் அதன் நாடளாவிய முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ்வாண்டுப் பகுதியில், பொதுப்படுகடன் திணைக்களம் றுகுணு சேவை, இராஜரட்ட சேவை மற்றும் கந்துரட்ட சேவை என்பனவற்றுடன் இணைந்து 18 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் 61 வானொலி நிகழ்ச்சித்திட்டங்களையும் 2 கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களையும் 12 தொலைக்காட்சி கலந்துரையாடல்களையும் நடத்தியது. மேலும், அரச

பிணையங்கள் மீதான முதலீடுகள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் பள்ளிக்கூடப் பிள்ளைகளின் அறிவினை மேம்படுத்துவதற்காக பொதுப்படுகடன் திணைக்களம் தயற்ற கிருளை பொருட்காட்சியில் பங்கேற்றது.

அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பொதுப்படுகடன் திணைக்களம், இரண்டாந்தரச் சந்தை வர்த்தகப் படுத்தலுக்காக இ-வர்த்தக தளமொன்றை மீள அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியங்களைக் கண்டறிந்தது. இந் நோக்கங்களுக்கான முதல் நடவடிக்கையாக, இ-வர்த்தகப்படுத்தல் தளமொன்றின் நன்மை மற்றும் வழமையான தொழிற்பாடுகள் மீதான முதனிலை வணிகர்கள் மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு கல்வியறிவூட்டுவதற்காக பொதுப் படுகடன் திணைக்களம் புளும்பேர்க் இன் உதவியுடன் ஆய்வரங்கொன்றினை ஒழுங்கு செய்தது.

## 22. பிரதேச அபிவிருத்தி

இலங்கை அரசாங்கத்தினதும் இலங்கை மத்திய வங்கியினாலும் ஆரம்பிக்கப்பட்ட/அறிமுகப்படுத்தப்பட்ட கொடை நிதிகள் அல்லது அரசாங்கத்தினால் அனுசரனையளிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினூடாக பொருளாதாரத்தின் அவசியமான முன்னுரிமைத்துறைகளுக்கு நிதி கிடைப்பதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2010ஆம் ஆண்டுப் பகுதியில் வேளாண்மை விலங்கு வளர்ப்பு மற்றும் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் துறைகளுக்கான கொடுகடனை வழங்குவதனை இணைப்பதிலும் வசதிப்படுத்துவதிலும் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகிறது. இந் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் குறிக்கோள்கள் வருமாறு.

(அ) பிரதேசங்களிலுள்ள உள்ளார்ந்த பொருளாதார நடவடிக்கைகளில் முதலீடுகளை வசதிப்படுத்து வனூடாக பிரதேச வளர்ச்சியை அதிகரித்தல்.

(ஆ) வறுமையுடன் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமாக பிரதேசங்களில் வறுமையைக் குறைத்தல் மற்றும் குறைந்த வருமானத்தினைக் கொண்ட மக்களிடையே நிதியியல் உள்ளீடுகளை மேம்படுத்தல்.

(இ) படித்த இளைஞர்களிடையேயும் தொழிலற்ற பெண் களிடையேயும் தொழில் உருவாக்குதல், முறை சார்ந்த நிதியியல் துறைகளிலிருந்து நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு வசதியளிப்பதன் மூலம் சுயவேலை வாய்ப்பினை பெறவும் அவர்களது சொந்த வியாபாரத்தினை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான அறிவாற்றலையும் தொழில்நுட்பத் தேர்ச்சியையும் பெறவும் வசதியளித்தல்.

(ஈ) இயற்கையாலும் மனிதர்களின் அனர்த்தங்களினாலும் பாதிப்படைந்த பிரதேசங்களில் வியாபாரம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குதல்.

(உ) தன்னிறைவினூடாக மக்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உற்பத்தியினை அதிகரித்தல்.

2010இல் மேற் குறிப்பிட்ட குறிக்கோள்களை எய்துவதற்காக கீழே குறிப்பிட்ட கடன் திட்டங்களை பிரதேச அபிவிருத்தி திணைக்களம் நடைமுறைப்படுத்தியது/இணைத்தது. இது தொடர்பாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஒன்றில் மீள் நிதியிடல் வழங்கப்பட்டது அல்லது வட்டி உதவு தொகை செலுத்தப்பட்டது.

### 22.1 பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்தி

மீளாய்விற்குரிய ஆண்டில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நீண்ட காலமாக மோதலால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படும் அபிவிருத்தி தொடர்பான பிரச்சனைகளில் கவனம் செலுத்தியது. மோதலானது 1980களிலிருந்து இரண்டு மாகாணங்களின் வளர்ச்சி வாய்ப்புக்களைத் தடுத்தது. இவ்விரண்டு மாகாணங்களும் விடுவிக்கப்பட்ட பின்னர் இவ்விரண்டு மாகாணங்களுக்காகவும் வடக்கின் எழுச்சி, கிழக்கின் உதயம் என்ற இரண்டு சிறப்புக் கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்விரண்டு திட்டங்களினதும் குறிக்கோள்கள் யாதெனில், இரண்டு மாகாணங்களிலுமுள்ள மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை உத்வேகப்படுத்துவதும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றத்தின் பின்னர் அவர்களது பொருளாதார நடவடிக்கைகளை தொடங்குவதற்கு உதவுவதேயாகும். இவ்விரண்டு கடன் திட்டங்களும் அம் மாகாணங்களில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில் முயற்சிகள், வர்த்தகம் மற்றும் சுய வேலை வாய்ப்புச் செயற்றிட்டங்களில் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கான நிதியியல் உதவிகளை வழங்கின. வடக்கின் எழுச்சிக் கடன் திட்டத்தின் கீழ் ரூ.1,240 மில்லியன் தொகை கொண்ட 9,108 கடன்கள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ளதுடன் இவற்றில் உயர்ந்த எண்ணிக்கையும் (2,938) பெறுமதியும் (ரூ.460 மில்லியன்) கொண்ட கடன்கள் வர்த்தகம் மற்றும் சுயவேலைவாய்ப்பு நடவடிக்கைகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட அதே வேளையில் ரூ.322 மில்லியன் பெறுமதியான 2526 கடன்கள் வேளாண்மை மற்றும் தொடர்பான நடவடிக்கைகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டன. விலங்கு வளர்ப்பு அபிவிருத்தி ரூ.226 மில்லியன் பெறுமதியான 2001 கடன்களையும் நுண்பாக மற்றும் சிறு தொழில் முயற்சிகள் ரூ.150 மில்லியன் பெறுமதியான 954 கடன்களையும் மற்றும் மீன்பிடியுடன் தொடர்பான நடவடிக்கைகள் ரூ.84 மில்லியன் பெறுமதியான 689 கடன்களையும் பெற்றுக் கொண்டன. கிழக்கின் உதயத்தின் கீழ் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் 5,155 பயன் பெறுநர்களுக்காக ரூ.752 மில்லியனை வழங்கியுள்ளன. கிழக்கு மாகாணத்தில் உயர்ந்த எண்ணிக்கையான கடன்களும் (2,755) கடன் பெறுமதியும் (ரூ.433 மில்லியன்) வர்த்தக, சுற்றுலா மற்றும் சுயவேலை வாய்ப்பு நடவடிக்கைகளுக்கானவையாகக் காணப்பட்டன. அவற்றினைத் தொடர்ந்து நீண்ட காலப் பயிர் அபிவிருத்தி (ரூ.255 மில்லியன் கொண்ட 1,660 கடன்கள்) விலங்கு வளர்ப்பு அபிவிருத்தி (ரூ.70 மில்லியன் பெறுமதியான 610 கடன்கள்) மற்றும் மீன்பிடி மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள் (ரூ.13 மில்லியன் பெறுமதியான 127 கடன்கள்) என்பன காணப்பட்டன.

## அட்டவணை II.15
## பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேச அபிவிருத்திக் கடன் வழங்கல் நிகழ்ச்சித் திட்டங்கள்

| செயற்றிட்டமும் நிறைவேற்றுக் காலமும் | | நிதியிடல் மூலம் | பணித் திட்டங்கள் | நிதி ஒதுக்கீடு | கடன்பாட்டாள ருக்கான ஆண்டு வட்டி வீதம் | பொருத்த மானவிடத்து மீளப்பெறல் வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | **வேளாண்மைத்துறை மற்றும் விலங்கு வளர்ப்பு** | | | | | |
| 1.1 | இரண்டாவது நிரந்தரப் பயிர்கள்அபிவிருத்திச் செயற்றிட்டம் சுழலும் நிதியம் 2006-2014 | இலங்கை அரசாங்கம் | நிரந்தரப்பயிர்கள் துறையை வர்த்தக மயப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்றுமேடை அபிவிருத்தி, அறுவடையின் பின்னான கையாளல், பதனிடல் செயற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் | ரூபா 1.2 பில்லியன் | 9 சதவீதம் | ஏறத்தாள 92 □ |
| 1.2 | தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) 2006-2018 | இலங்கை அரசாங்கம் | தேயிலை சிறு உடமையாளர்களின் வருமானத்தை நிலைத்து நிற்கும் அடிப்படையில் அதிகரித்தல் மற்றும் ஏற்றுமதிச் சந்தையின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல். இது தொடர்பில் தீங்குப் பகுப்பாய்வு மற்றும் மிக முக்கிய கட்டுப்பாட்டு அளவு சான்றிதழைப் பெறும் விதத்தில் தேயிலை தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்துவதற்கான அடிப்படை உதவிகள் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. | ரூபா 1.1 பில்லியன் | 9 சதவீதம் | ஏறத்தாள 92 □ |
| 1.3 | புதிய அனைத்தையு முள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் (தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டம்) | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் சொந்த நிதியம் மற்றும் அரச வட்டி உதவு தொகை | சிறிய வேளாண்மையாளருக்கான தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டை வழங்குதல்.<br>- குறுகிய கால உற்பத்திக் கடன்கள்<br>- விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்களின் உற்பத்தி<br>- முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் வேளாண்மை பொருட்களின் கொள்வனவு | பங்கேற்கும் நிறுவனங்கள் தமது சொந்த நிதி மூலம் வழங்கிய கடன்கள் 2010இல் ரூ.3.6 பில்லியன் | 8 சதவீதம் | 90 - 95 □ கிடையில் |
| 1.4 | வேளாண்மை - கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் சொந்த நிதியம் மற்றும் அரச வட்டி உதவு தொகை | பாற்பண்ணைத் தொழிலில் பின்வருவனவற்றுக்கு மூலதனத்தை வழங்குதல்<br>- மாட்டுத் தொழுவங்களை அமைத்தல்<br>- பசுக்களின் கொள்வனவு<br>- திடமான உணவு, விலங்கு மருத்துவ பணிகள் மற்றும் மருந்துகள் போன்றவற்றின் கொள்வனவு<br>- விலங்கு தீன் பயிரிடல்<br>- உயிரினவாயு தாங்கிகளை அமைத்தல்<br>- விலங்கு மருத்துவரால் விதந்துரைக்கப் பட்ட எந்தவொரு ஏனைய தேவைப்பாடுகள்<br>திரவப் பால் பதனிடல் கைத்தொழில்கள் மற்றும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலில் பின்வருவனவற்றுக்கு நிதியங்களை வழங்கல்<br>- தொழிற்சாலைக் கட்டடங்களின் நிர்மாணம்/ நவீனமயமாக்கம்<br>- நவீன பொறி மற்றும் கருவியின் கொள்வனவு<br>- களஞ்சியசாலை, குளிர் அறைகள் மற்றும் போக்குவரத்துப் பணிகள், தேவைப்பட்ட ஏனைய பணிகள், நியமங்களைப் பேணுவதற்கான கருவியின் கொள்வனவு | பங்கேற்கும் நிறுவனங்கள் தமது சொந்த நிதி மூலம் வழங்கிய கடன்கள் மொத்த நிதி வழங்கல் ரூ.5,000 மில்லியனான இருக்குமென எதிர்பார்க்கப் படுகிறது | சிறு பாற்பண்ணை செயற்றிட்டக் கடன்களுக்கு 8 □<br><br>பால் மற்றும் பயிர் பதனிடலுக்கு 12 □ | 90 □ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1.5 | கிருசி நவோதய திட்டம் | பங்கேற்கும் நிதி நிறுவனங்களின் சொந்த நிதியும் அரசாங்கத்தின் வட்டி உதவு தொகையும் | வேளாண்மை தொடர்பான கைத்தொழில் மற்றும் மிகச் சிறிய மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் உள்ளிட்ட வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புச் செயற்பாடுகளுக்கான நடுத்தர காலக் கடன்களின் ஏற்பாடு | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அவற்றின் சொந்த நிதியங்களைப் பயன்படுத்தி வழங்கப்பட்ட கடன்கள். தொழிற்பாட்டு காலப்பகுதியில் வழங்கப்படும் மொத்தக் கடன்கள் ரூ.3,000 மில்லியன் என எதிர்பார்க்கப் படுகிறது. | 14 □ | ஏறத்தாள 90 □ |
| **2.** | **சிறிய நடுத்தர தொழில் முயற்சித்துறை** | | | | | |
| 2.1 | மாத்தளைப் பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) (2007 -2010) | வே.அ.ப.நி | மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு நிதியினை வழங்குவதன் மூலம் கிராமிய மற்றும் வேளாண்மைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துதல் | ரூபா 77 மில்லியன் | 10 □ | 90 □ |
| 2.2 | சப்பிரகமுவ மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) (2007 - 2010) | இலங்கை அரசாங்கம் | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகளை தரமுயர்த்துதல் | ரூபா 100 மில்லியன் | 10 □ | 93 □ |
| 2.3 | சுனாமிக்குப் பின்னைய தொடர் கொடுகடன் ஐரோப்பிய முதலீட்டு வங்கி ஒப்பந்தம் பீ கடன் திட்டம் (2006 -2014) | ஐரோப்பிய முதலீட்டு வங்கி | சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் தமது வியாபாரங்களை மீளத் தொடங்குவதற்கு ஆதரவளித்தல் | யூரோ 10 மில்லியன் | 9 □ | 92 □ |
| 2.4 | சுசகன கடன் திட்டம் (கட்டம் II) | இலங்கை மத்திய வங்கி | சுனாமியால் பாதிக்கப்பட்ட மிகச்சிறிய, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு உதவுவதற்காக | ரூபா 500 மில்லியன் | 6 □ | 90 □ |
| 2.5 | கட்டடவாக்கத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் (2007 -2015) | ஏஜென்ஸ் பிரான்சைஸ் டெவலப்மன்ட் | கட்டடவாக்கம், வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் தரமிடப்பட்ட கம்பனிகளினால் சுனாமிக்குப் பின்னரான கட்டடவாக்கத்திற்காக இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியிடல் | யூரோ 9 மில்லியன் | 9 □ | 95 □ கூடுதலாக |
| 2.6 | வடக்கின் எழுச்சி சிறப்பு மீள் நிதியிடல் கடன் திட்டம் | இலங்கை மத்திய வங்கி | உள்நாட்டில் இடம் பெயர்ந்த ஆட்கள் மற்றும் வட மாகாணத்தில் குடியேற்றப்பட்ட ஏனையோர் அவர்களின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு | ரூபா 3 பில்லியன் | 9 □ | சலுகைக் காலப் பகுதியினுள் |
| 2.7 | “கிழக்கின் உதயம்” கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கான சுழலும் நிதியம் | இலங்கை மத்திய வங்கி | கிழக்கு மாகாணத்தில் பொருளாதார நடவடிக்கைகளை மீள் ஆரம்பிப்பதற்கு | ரூபா 1 பில்லியன் | 9 □ | சலுகைக் காலப் பகுதியினுள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2.8 | சௌபாக்கிய கடன் திட்டம் | இலங்கை மத்திய வங்கி/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் | எந்தவொரு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு, விரிவுபடுத்துவதற்கு அல்லது அழிவினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கு உதவுவதற்கு | ஆரம்பத்தில் ரூபா 500 மில்லியன் | 9-10 □ கிடையில் | சலுகைக் காலப் பகுதி யினுள் |
| 2.9 | சுயதொழில் முன்னெடுப்புக் கடன் திட்டம் | இலங்கை அரசாங்கம் | நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிலையத்தில் கற்கையைப் பூர்த்தி செய்து வெளியேறிய பயிற்றப்பட்ட இளைஞருக்கு நிதியியல் உதவி வழங்குதல் | ரூபா 100 மில்லியன் | 10 □ | சலுகைக் காலப் பகுதி யினுள் |
| 3. | **நுண்பாக நிதியியல்துறை** | | | | | |
| 3.1 | உலர்வலய ஜீவனோபாய உதவி மற்றும் பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (2006 -2012) | வே.அ.ப.நி. | மொனராகலை, குருணாகல், பதுளை மற்றும் அநுராதபுரம் போன்ற தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலுள்ள வறிய வேளாண்மையாளர்களுக்கிடையிலான வறுமை ஒழிப்பும், வருமான உருவாக்கமும் | இலங்கை ரூபா 221 மில்லியன் | 10 □ | 90 □ மேல் |
| 3.2 | சிறு உடமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சியாளர் அபிவிருத் திச் செயற்றிட்டம் (2007 -2015) | வே.அ.ப.நி. மற்றும் ஐ.அ.உதவி | நாட்டின் மத்திய பகுதியில் தேயிலை மற்றும் நிரந்தர பயிர்களைப் பயிரிடுகின்ற வசதி குறைந்த சிறு உடமையாளர்களினதும் மொனராகலை பிரதேசத்தின் இடைநில வலையத்திலுள்ள உயர்நிலத்தில் உணவுப்பயிர் செய்யும் வறிய வேளாண்மையாளர்கள் இறப்பரை பயிரிட விரும்பின் அவர்களது ஜீவனோபாயத்தை மேம்படுத்தல் | சி.எ.உ 15.25 மில்லியன் | 9 □ | சலுகைக் காலப் பகுதியினுள் |
| 3.3 | சிறு வேளாண்மை யாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற் றிட்ட சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | நன்மைபெறுவோரின் பொருளாதார நிலைமைகளையும் பொது நலன்புரிகளையும் மேம்படுத்துவதற்கு வறிய கிராம மக்களுக்கான வருமானத்தை ஈட்டும் செயற்பாடுகளுக்கு அலுவல்சார் கொடுகடனை வழிமுறைப்படுத்துவதற்கான பயனுள்ள கொடுகடன் வழங்கல் பொறிமுறையை ஏற்படுத்துதல் | ரூபா 328 மில்லியன் | 16 -20 □ | 90 □ கூடுதலாக |
| 3.4 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டத் (சுழலும் நிதியம்) திட்டம் 2009 - 2013 | இலங்கை அரசாங்கம் | வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதனூடாக அடையாளம் காணப்பட்ட கடன்படுநர்களின் வறுமையை ஒழித்தல்<br><br>முறைசார் வங்கித்தொழில் முறைமையுடன் குறைந்த வருமானமுடைய குழுக்களை இணைப்பதற்கு ஏற்பாடு செய்தல் | ரூபா 2,010 மில்லியன் | 12 □ | 90 □ கூடுதலாக |
| 3.5 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II | இலங்கை அரசாங்கம் யப்பானிய பன்னாட்டு ஒத்துழைப்பு முகவர் | வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதனூடாக அடையாளம் காணப்பட்ட கடன்படுநர்களின் வறுமையை ஒழித்தல்<br><br>முறைசார் வங்கித்தொழில் முறைமையுடன் குறைந்த வருமானமுடைய குழுக்களை இணைப்பதற்கு ஏற்பாடு செய்தல் | யப்பானிய யென் 2,100 மில்லியன் | கூடியது 15.5 □ | சலுகைக் காலப் பகுதியினுள் |

இவ்வாண்டில் நிலவிய சமாதான சூழ்நிலைகளின் காரணமாக, இவ்விரண்டு மாகாணங்களிலும் ஏனைய அபிவிருத்திக் கடன் திட்டங்களும் தொழிற்பட்டன. கட்டுமானத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டமானது, கட்டுமான நிறுவகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளினால் செய்யப்படும் பொருட்களின் கொள்வனவிற்கு நிதியினை வழங்கியது. சுனாமிக்குப் பின்னரான கட்டுமான நடவடிக்கைகளுக்கான வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி இவ்வாண்டுப் பகுதியில் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. பிரதேச அபிவிருத்தி திணைக்களமும் இவ்வாண்டுப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட பங்கேற்கும் முகவர்கள் மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கங்களின் உதவியுடன் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டத்தின்கீழ் (பிரபோதினி) இவ்விரண்டு மாகாணங்களிலுள்ள வறிய குடியிருப்பாளர்களை இத் திட்டங்கள் சென்றடைவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. கிழக்கு மாகாணத்தில் பிரபோதினியின்கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட நன்மை பெறுநர்களின் எண்ணிக்கை 2009 இறுதியில் 10,302ஆகக் காணப்பட்டது. இதில் 5,837 நன்மை பெறுநர்களுக்கு ரூ.258 மில்லியன் மொத்தப் பெறுமதி கொண்ட கடன்கள் வழங்கப்பட்டன. வடமாகாணத்தில் பிரபோதினியின் கீழ் 8,573 விண்ணப்பதாரிகள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் இது 3,193 தனிப்பட்டவர்களிடையே ரூ.158 மில்லியன் கொண்ட கடன்களை வழங்கியிருந்தது. மேலும், 2010இல் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு புதிய திட்டங்களான சௌபாக்கியா கடன் திட்டம் மற்றும் சுயவேலைவாய்ப்பு ஊக்குவிப்பு கடன் திட்டம் என்பன இவ்விரண்டு மாகாணங்களிலும் தீவிரமாகக் கடன் வழங்கின.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றது. இதில் கிழக்கு மாகாணத்திலுள்ள மோதல்களினால் பாதிக்கப்பட்ட உள்நாட்டில் இடம் பெயர்ந்த 378 பேர் நன்மை பெற்றனர். இச் செயற்றிட்டத்திற்கான நிதிகள் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பனவற்றின் கூட்டுறவு சமூகப் பொறுப்பாண்மை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அவ் வங்கிகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன. இது முறைசார்ந்த துறை நிறுவனங்களான இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச செயலாளர், இலங்கை இராணுவம், சிறப்பு அதிரடிப்படை(இலங்கைப் பொலிசு) மற்றும் சர்வோதயம் என்பனவற்றின் உதவியுடன் பிரபோதினியின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட நன்மை பெறுநர்களுக்காக மீள் குடியமர்த்தப்பட்ட உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கும் அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகயை நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கும் உதவி வழங்குகின்ற ஒரு கூட்டு முயற்சியாகும். இந் நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றியானது மற்றைய பகுதிகளிலும்கூட சனசமூக பங்கேற்புடன் குறைந்தபட்ச செலவுகளுடன் சேதமடைந்த மனித உறைவிடங்களை நிர்மாணிப்பதற்கு இப் பங்கேற்பு முறையினைப் பயன்படுத்த முடியும் என்பதனை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

### 22.2 பிரதேசத்துக்குரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் புறம்பாக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், மற்றைய மாவட்டங்களிலும் உள்ள மக்களின் வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் மூலம் அம் மாவட்டங்களிலுள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகளை உயர்த்தும் நோக்குடன் மற்றைய மாவட்டங்களுக்காக பிரதேசங்களுக்கென குறித்துரைக்கப்பட்ட கடன் திட்டங்களை மேற்கொண்டது. வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித் திட்டம் (மொனராகலை, குருநாகல், பதுளை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்கள்) சிறு உடமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (மத்திய நாட்டுப் பிரதேசம் மற்றும் மொனராகலை மாவட்ட இடைநிலை வலயம்) மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்ற செயற்றிட்டம் மற்றும் சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் குறிப்பிட்ட பிரதேச அபிவிருத்தியினை மையமாகக் கொண்டு இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களாகக் காணப்பட்டன.

### 22.3 வேளாண்மை மற்றும் பன்னாட்டு வளர்ப்புத்துறை

பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நாட்டில் திரவப்பால் உற்பத்தியினை ஊக்குவிப்பதனை முக்கிய நோக்கமாகக் கொண்ட, வேளாண் - விலங்கு வளர்ப்பு அபிவிருத்திக் கடன் திட்டம் இவ்வாண்டுப் பகுதியில் தகுதியுடைய கொள்வனவாளர்களுக்கு கடன்களை வழங்கியதன் மூலம் செயற்பாட்டை தொடர்கின்றது. பாற்பண்ணை வேளாண்மையாளர்களுக்குப் புறம்பாக, தனியார்துறையிலுள்ள நடுத்தர அளவு முதலீட்டாளர்களும் களஞ்சியசாலை/தொழிற்சாலை போன்றவற்றின் கட்டுமானம், பொறிகள், கருவிகள் மற்றும் திரவப்பால் பதனிடல் பொறிகளின் கொள்வனவு, வேளாண்மைப் பதனிடல் பொறிகளுக்கான பொறித் தொகுதிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவு மற்றும் வேளாண்மைப் பதனிடல் கைத்தொழில்கள் போன்றவற்றிற்கு நிதியியல் வசதிகளைப் பெறுவதற்கு தகுதியுடையவர்களாக இருந்தனர். இவ்வாண்டுப் பகுதியில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களும் தகுதியுடைய பெறுநர்களிடையே ரூ.442 மில்லியன் கடன்களை வழங்கக் கூடியனவாக இருந்தன. பாற்பண்ணை வேளாண்மையாளர்களிடையே பண்ணைகளை நல்ல முறையில் பேணுவதற்கான சிறந்த நடைமுறைகளை மேம்படுத்தும் நோக்குடன் வேளாண்மையாளர்களிடையே விநியோகிப்பதற்காக இவ்விடயம் பற்றி கைநூலொன்றினை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வெளியிட்டிருக்கிறது. மேலும், வேளாண்மையாளர்கள் கறவைப் பசுக்களை கொள்வனவு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் வசதியளிக்கும் பொருட்டு ஐந்து பாற்பண்ணை மூலவள நிலையங்கள் ஹொறன, மாதம்பே, கம்பஹா, கெக்கிராவ மற்றும் குருநாகல் ஆகிய இடங்களில் திறக்கப்பட்டன. இது நாட்டில் வேளாண்மை விலங்கு வளர்ப்புத் துறையில் முக்கியமானதொரு நடவடிக்கையாக அமையும்.

வேளாண்மைப் பயிர்களின் பயிர்ச்செய்கைக்கு வேளாண்மை யாளர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் 2010இல் தொடர்ந்தும் தொழிற்பட்டது. 2009/10 பெரும்போகத்தில் வேளாண்மைக் கடனான ரூ.2,016 மில்லியன் 41,950 வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்டது. இது முன்னைய ஆண்டின் தொடர்பான பயிர்ச்செய்கைப் பருவ காலத்தில் வழங்கப்பட்டதனைவிட 5.3 சதவீதம் அதிகமானதாகும். சிறு போகத்தில் வேளாண்மை நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.1,568 மில்லியன்களாக அமைந்து முன்னைய சிறு போகத்தில் வழங்கப்பட்டதனைவிட 55 சதவீதம் அதிகமானதாகக்

காணப்பட்டது. கடன் பகிர்ந்தளிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு நெல் மற்றும் ஏனைய பயிர்கள் பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் பிரதிபலிக்கப்பட்டது. புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடனில் 60 சதவீதத்தினை நெல் உள்ளடக்கியிருந்தவேளையில் சோளம், உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் போன்றனவும் குறிப்பிடத்தக்களவு பங்கினைக் கொண்டிருந்தன. மாவட்ட ரீதியாக, புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் பொலனறுவை, அநுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டை என்பன உயர்ந்த எண்ணிக்கையானதும் தொகையானதுமான வேளாண்மைக் கடன்களைப் பெற்றிருந்தன. அதேவேளை, குருசிநவோதய திட்டத்தின் கீழ் அரசாங்கத்திடமிருந்தான வட்டி உதவுதொகை உதவியுடன் சலுகை ரீதியான வட்டி வீதங்களில் வேளாண்மையுடன் தொடர்பான நடவடிக்கைகளுக்காக, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் நுண்பாக மற்றும் சிறிய முயற்சிகளுக்காக நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன்களை வழங்கின. இத் திட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குருசிநவோதயவின் கீழ் கணிசமான அளவு கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

### 22.4 சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கான நிதியிடலையும் தொழில் உருவாக்கத்தினையும் மேம்படுத்தல்

2010இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கும், நாட்டில் நிகழ்ந்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கும் கொடுகடன் வசதிகளை வழங்கும் நோக்கத்திற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் சுபீட்சம் (சௌபாக்கியம்) என்ற நியதிகளின் கீழ் கடன் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் முழுத் தீவினையும் உள்ளடக்கியிருந்ததுடன் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, மற்றும் ஏனைய நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு ரூ.500,000 கடன்களை வழங்குகின்ற வேளையில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு ரூ.20 மில்லியன் வரையிலான கடன்களும் வழங்கப்பட்டன. குறிப்பிடப்பட்ட உச்ச எல்லைக்கு உட்பட்டு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன் தொகையில் 100 சதவீதமாக மீள் நிதியிடலை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வழங்குகிறது. நிதி திட்டமிடல் அமைச்சு, மற்றும் தொழில் பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு என்பனவற்றின் உதவியுடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2010இல் சுயவேலைவாய்ப்பு முனைவுக் கடன் திட்டமென்ற புதிய கடன் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது. இக்கடன் திட்டம், நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனமொன்றில் சித்தியடைந்த பயிற்சி பெற்ற இளைஞர்கள் அவர்கள் சொந்தமாக சுய தொழில் செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதற்கான நிதியியல் உதவிகளை வழங்குகின்றது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களைத் தவிர, சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் ஊக்குவிப்பு மற்றும் தொழில் உருவாக்கம் என்பனவற்றை இலக்காகக் கொண்ட மற்றைய திட்டங்களும் 2010இல் இலக்கிடப்பட்ட குடித்தொகையினருக்கு உதவின. கட்டுமானத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களும் இவ்வாண்டுக் காலப்பகுதியில் திருப்திகரமான முன்னேற்றத்தினைக் காட்டியதுடன் 2010இல் ரூ.268 மில்லியன் பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டன. ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் சுனாமிக்குப் பின்னைய தொடர் கொடுகடனின் கீழ் (ஒப்பந்தம் பீ) இவ்வாண்டுக் காலப்பகுதியில் ரூ.87 மில்லியன் மொத்தப் பெறுமதி கொண்ட மீள் நிதியிடல் விடுவிக்கப்பட்டது. சப்பிரகமுவா ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதியத் திட்டமும் மாத்தளைப் பிரதேச பொருளாதார முன்னேற்ற நிகழ்ச்சித்திட்ட சுழலும் நிதியத் திட்டமும் தொடர்பான மாவட்டங்களில் 2010இல் தொடர்ந்தும் தொழிற்பட்டன. சப்பிரகமுவா ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்ட சுழலும் நிதியத்தின் கடன்கள் தொடர்பாக இவ்வாண்டுப் பகுதியில் ரூ.42 மில்லியன் மொத்தப் பெறுமதி கொண்ட மீள் நிதியிடல் விடுவிக்கப்பட்ட வேளையில் மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்ற நிகழ்ச்சித் திட்ட சுழலும் நிதித்திட்டத்தின் கீழான கடன்கள் தொடர்பாக ரூ.54.9 மில்லியன் மீள் நிதியிடல் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டது.

### 22.5 வறுமை ஒழிப்பு மற்றும் தொழில் உருவாக்கம்

2010இல் யப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவராண்மையினால் நிதியிடப்பட்ட வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் (பிரபோதினி) நாடு முழுவதிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட 14 மாவட்டங்களில் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தது. இச் செயற்றிட்டத்தின் குறிக்கோள் யாதெனில், வறிய மக்களின் வருமான மட்டத்தினை மேம்படுத்துவதும் வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கு கொடுகடனை வழங்குவதன் மூலம் அவர்களுக்கான முறைசார்ந்த நிதியியல் பணிகளை உயர்த்துவதும் நன்மை பெறுநர்களின் வருமான உருவாக்க வாய்ப்புக்களையும் தேர்ச்சி அபிவிருத்தியினை அதிகரிப்பதும் அதன்மூலம் வறுமை ஒழிப்பிற்கு பங்களித்து பிரதேச ஏற்றத்தாழ்வுகளைத் தணித்து சமாதானத்தினைக் கட்டியெழுப்ப உதவுவதேயாகும். இவ்வாண்டுப் பகுதியில் பிரபோதினியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நன்மை பெறுநர்களின் எண்ணிக்கை 40,384 என பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 19,860 நன்மை பெறுநர்களுக்கு வருமான உருவாக்க நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காக ரூ.865 மில்லியன் பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டன. இது முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட கடன் தொகையினைவிட 17 சதவீதம் அதிகமானதாகும்.

அதேவேளை, கிராமிய மக்களின் பொருளாதார நிலைமைகளையும் பொதுவான நலன்புரியினையும் மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டமும் 5,753 நன்மை பெறுநர்களிடையே ரூ.140 மில்லியன் பெறுமதியான கடன்களை வழங்கியதன் மூலம் முன்னேற்றத்தினைக் காட்டியது. அநுராதபுரம், பதுளை, மொனராகலை மற்றும் குருநாகல் மாவட்டங்களிலுள்ள வசதி குறைந்த சிறு உடைமையாளர் மற்றும் வறிய மேட்டு நில உணவுப் பயிர் செய்வோரின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்ட வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் 909 விண்ணப்பதாரரிடையே ரூ.47 மில்லியன்களை பகிர்ந்தளித்திருந்தது.

### 22.6 கொடுகடன் பற்றாக்குறையினை நிரப்புதல்

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ஆண்டுக் கட்டுப் பணத்தின் சேகரிப்பு கோரல் விண்ணப்பங்களை செய்முறைப்படுத்தல், கோரல்களைக் கொடுப்பனவு செய்தல் அல்லது நிராகரித்தல் மற்றும் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் 12 கொடுகடன் நிரப்பல் திட்டங்கள் தொடர்பாக கோரல்களுக்குப் பின்னரான அளவீடுகளைக் கண்காணித்தல் போன்ற கொடுகடன் பற்றாக்குறையை நிரப்பும் தொழிற்பாடுகளுடன் தொடர்பான வழமையான நடவடிக்கைகளில் 2010இலும் தொடர்ந்து ஈடுபட்டது. 2010ஆம் ஆண்டுப் பகுதியில் இத் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட மொத்த தவணைக் கட்டுப்பணம் ரூ.53 மில்லியன்களாகக் காணப்பட்டன. கொடுகடன் உத்தரவாத கோரல்களின் கொடுப்பனவு இவ்வாண்டுப் பகுதியில் ரூ.184 மில்லியன்களாகக் காணப்பட்டது.

வடமாகாணத்தில் வேளாண்மை சமூகத்தின் நன்மைக்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் புதிய கொடுகடன் திட்ட பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்தியது. புதிய கொடுகடன் உத்தரவாதத் திட்டம் வடமாகாணத்தில் குறுகியகால பயிர்ச் செய்கைக்கான கடன்களை வழங்குவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை வசதிப்படுத்தும். இவ்வுத்தரவாதத் திட்டத்தின் குறிக்கோள் யாதெனில், மோதல்களின் போது உறுதிகள் மற்றும் தொடர்பான ஆவணங்கள் தொலைந்து விட்டமையின் விளைவாக அவர்களினால் பயிர்செய்யப்பட்டு வந்த நிலங்களின் உரிமையினை நிறுவுவதற்கு இயலாமலிருக்கும் வேளாண்மையாளர்கள் பயிர்ச் செய்கை நோக்கங்களுக்கான கடன்களை பெறுவதிலுள்ள இடர்பாடுகளைக் கவனத்திற் கொண்டு முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள வேளாண்மையாளர்களுக்கு கொடுகடன் பாய்ச்சலை உறுதிப்படுத்துவதேயாகும். கடன்பாட்டாளர் பிணையாக வழங்கிய காணியின் சொத்துடமையினை அவர் உண்மையில் கொண்டிருக்கவில்லை என்று தெரியவந்து அதன் காரணமாக கடன் வழங்கும் வங்கி இழப்புக்களினால் பாதிக்கப்படுமிடத்து மேற்குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் காணியை பிணையாக ஏற்றுக்கொண்ட பங்கேற்கும் நிறுவனங்களுக்கு இவ் உத்தரவாதத் திட்டம் இழப்பீடுகளை வழங்கும்.

## 23. செயலகம்

2010 இல் செயலகத் திணைக்களம், சரியான நேரத்தில் பொருட்கள் மற்றும் பணிகளைக் கொள்வனவு செய்தல், முறைமைகளினதும் நடைமுறைகளினதும் தொடர்ச்சியான மதிப்பீடுகள் மற்றும் தரமுயர்த்தல், விடுப்பு, ஓய்வூதிய நிதியங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணம் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளை நிருவகித்து நடைமுறைப்படுத்தல் என்பனவற்றூடாக இலங்கை மத்திய வங்கியின் வினைத்திறன் மிக்க தொழிற்பாட்டை வசதிப்படுத்தியது.

திணைக்களம் இவ்வாண்டில் தரம், சரியான நேரம் மற்றும் போட்டி விலைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் ரூ.208.9 மில்லியன் பெறுமதியான மூலதன மற்றும் மூலதனமல்லாப் பொருட்கள் மற்றும் பணிகளை விலைக்கோரல் மற்றும் கொள்வனவு செய்யும் ஏனைய வழிமுறைகளூடாக கொள்வனவு செய்தது. வழமை போலவே, பயன்படுத்தும் திணைக்களங்களுக்கான பொருட்கள் மற்றும் பணிகளின் நேரம் பிந்தாத வழங்கலை ஒழுங்குமுறைப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கியின் கொள்வனவு முகாமைச் செயல்முறையைக் கண்காணிப்பதற்கு கொள்வனவுத் திட்டமிடல் மேலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக செயலகத் திணைக்களம் இவ்வாண்டில் வங்கியின் மொத்தக் கொள்வனவுத் தேவைப்பாட்டின் 92 சதவீத வழங்கலை வெற்றிகரமாக பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. இத்துடன், திணைக்களம் வங்கியின் சகல சொத்துக்களுக்கான குறைந்த செலவுடனான அனைத்தையும் உள்ளடக்கும் காப்புறுதியைப் பெற்றுக் கொண்டது. மத்திய வங்கி ஓய்வூதியத் திட்டம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், விதுரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் என்பன செயலகத் திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்டன. இத் திட்டங்களின் கீழ், மொத்தமாக 1,987 ஓய்வூதியக்காரர்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், இத்திட்டங்களுக்காக நடைமுறையிலிருக்கும் தரவுத் தளத்தின் தன்னியக்கவாக்கம், ஓய்வுதியத்தை விடுவிப்பதற்கான செயற்திறனை அதிகரிப்பதற்கான மென்பொருள் நிகழ்ச்சித் திட்டத்தின் அபிவிருத்தி மூலம் பூர்த்தி செய்யப்பட்டது.

2010ஆம் ஆண்டில், செயலகத் திணைக்களம் வங்கிக்கு சட்டப் பணிகளைத் தொடர்ந்து வழங்கியது. அத்தகைய பணிகள் வங்கியின் செயற்பாடுகளுக்கு ஊக்கியாகச் செயற்படும் வகையில் கிரமமான சட்டப் பிரச்சனைகளிலிருந்து கொள்கை உருவாக்கம் வரையிலான பல்வேறு செயற்பாடுகளில் கிடைக்கத்தக்கதாக காணப்பட்டன.

நீதிமன்ற வழக்குகளைக் கையாள்வதில் வங்கியின் உரிமைகளை வலியுறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் திணைக்களம் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் பங்கை வகித்தது. வங்கி எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களை சுமுகமாகக் கையாள்வதை வசதிப்படுத்துவதற்கு வங்கித் தொழில் மற்றும் நிதியியல்துறை தொடர்பாக பொருத்தமான சட்டங்களையும் துணைச் சட்டங்களையும் தயாரிப்பதன் மூலம் தேவையான உதவி வழங்கப்பட்டது.

செயலகத் திணைக்களம் 2010இல் பல சமய மற்றும் ஞாபகார்த்த நிகழ்வுகளையும் நீண்டகாலப் பணிக்கான விழா மற்றும் சுதந்திர தின விழா போன்ற வருடாந்த விழாக்களையும் ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தது.

## 24. பாதுகாப்புப் பணிகள்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் மத்திய வங்கியின் ஊழியர்கள், கட்டடங்கள் மற்றும் சொத்துக்கள், வருகை தருவோர் மற்றும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்லும் நாணயத்தைப் பாதுகாக்கும் பொருட்டு பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸார் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்பைத் தொடர்ந்து பலப்படுத்தியது. அனைத்து வருகை தருவோர் மற்றும் உள்வரும் பொருட்கள் மூன்று நிமிடங்களுள் வினைத்திறனுடன் சரிபார்க்கப்பட்டு விடுவிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு புதிய தன்னியக்க வருகை தருவோர் மற்றும் கண்காணிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் புதிதாக நிறுவப்பட்ட மாகாண அலுவலகங்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கு வெளிமூலங்களிலிருந்து பணிகளைப் பெற்றுக்

கொள்ளும் அடிப்படையில் பதினைந்து புதிய ஆளணியினர் தொழிலுக்கமர்த்தப்பட்டனர். இலங்கை மத்திய வங்கித் தலைமை அலுவலகத்தில் மத்தியில் ஒருங்கிணைக்கப்பட்ட பாதுகாப்பு முறைமையை (ஒரு தடவையில் ஒருவரை மட்டமே உள்ளே செல்லவிடும் நுழைவாயில்) மீளாய்வு செய்வதற்கும் புதுப்பிப்பதற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையத்தை பன்னாட்டு பயிற்சி நிலையமாக தரமுயர்த்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக புதிய மூடிய சுற்றைக் கொண்ட தொலைக்காட்சிப் புகைப்படக் கருவியொன்றும், பதிவு செய்யும் முறைமையொன்றும் இராஜகிரியவிலுள்ள வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையத்தில் நிறுவப்பட்டது.

திணைக்களத்தின் சிறந்ததும் வினைத்திறன் மிக்கதுமான ஆளுகைக்கு இராணுவப் பின்னனியுடனான 02 புதிய உயர்பதவி அலுவலர்கள் இவ்வாண்டில் பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்துக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். ஆகப் பிந்திய வர்த்தகப் பாதுகாப்பு அறிவைப் புதுப்பிக்கும் பொருட்டு இரண்டு உயர் பதவி அலுவலர்கள் நவீன பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பான வெளிநாட்டுப் பயிற்சிக்காக மலேசியாவிற்கு அனுப்பப்பட்டார்கள். மேலும் 11 உயர்பதவி அலுவலர்கள் மற்றும் 184 உயர் பதவியல்லா அலுவலர்கள் பாதுகாப்பு மற்றும் அலுவலக முகாமைத்துவம் சம்பந்தமாக உள்நாட்டில் நடத்தப்பட்ட பல்வேறு செயலமர்வுகளில் பங்கேற்றனர்.

இலங்கை மத்திய வங்கியின் பல்வேறு திணைக்களங்கள் மற்றும் மாகாண அலுவலகங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட தீயணைப்புப் பாதுகாவலர்களுக்கு தீயை அணைப்பது, தீயைத் தவிர்த்தல் மற்றும் முதலுதவி தொடர்பாக இரண்டு நாள் ஒருங்கிணைந்த பயிற்சி வழங்கப்பட்டதுடன் விமானப்படை, கொழும்பு தீயணைப்புப் படை மற்றும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் என்பவற்றின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கியின் அனைத்து ஊழியர்களுக்காக வருடாந்த செயல்முறையிலான தீ அணைப்பு மற்றும் பயிற்சித் தொடரையும் வெற்றிகரமாக நடத்தியது.

இலங்கை இராணுவம் 2010ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியின் அனைத்துப் பாதுகாப்பு அலுவலர்களுக்குமான ஆயுத மற்றும் சுடுதல் நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தியது. பாதுகாப்புத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் முக்கியமான தொழிற்பாடுகளுக்கான தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தைப் பரீட்சிப்பது தொடர்பான அனைத்துப் படைப் பயிற்சியிலும் பங்கேற்றது. இவை எல்லாவற்றுடன் பாதுகாப்புத்திணைக்களம் எந்தவிதமான பாதுகாப்பு தவறுமின்றி இன்னுமொரு வெற்றிகரமான ஆண்டைப் பேணக்கூடியதாக இருந்தது.

## 25. புள்ளிவிபரவியல் மற்றும் கள அளவீடுகள்

புள்ளிவிபரவியல் திணைக்களம் தேசிய கணக்குகள், விலைகள், கூலிகள், தொழிற்படை மற்றும் தொழில்நிலை, மற்றும் ஏனைய சமூக பொருளாதார துறைகளின் தரவு சேகரித்தல், திரட்டுதல், பகுப்பாய்வு மற்றும் தரவுகளைப் பரப்பும் அதன் தொழிற்பாடுகளை 2010இல் தொழிற்படுத்தியது. இத் திணைக்களம் ஊடகம் மற்றும் மத்திய வங்கியின் இணையத் தளத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட பொருளாதாரக் குறிகாட்டிகளை வாராந்த மற்றும் மாதாந்த ரீதியில் வெளியிடுவதனூடாகவும் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் நடத்தை பற்றி கிரமமான மாதாந்த பத்திரிகை வெளியீட்டை வெளியிடுவதனூடாகவும் சமூகப் பொருளாதாரத் தரவு மற்றும் தகவலை கிரமமாக பொது மக்களுக்கு வெளியிட்டது.

மேலும், மீளாய்விற்குரிய ஆண்டில் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட பல விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களிலும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலும் வள ஆட்களாகப் பங்கேற்றனர். ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நோக்கில், திணைக்களம் அதன் அலுவலர்களைத் தொடர்ந்து பயிற்றுவித்துடன் இவ்வாண்டில் பல உயர்பதவி அலுவலர்களும் உயர் பதவியல்லாத அலுவலர்களும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

### 25.1 புள்ளிவிபரவியல் அளவீடுகள்

2006 இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட மாதாந்த பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இது கிட்டத்தட்ட 300 பதிலளிப்பவர்களைக் கொண்ட மாதிரியை உள்ளடக்கியிருப்பதுடன் அவர்களது பதில்கள் தலத்திலேயான நேர்காணல் மற்றும் மின் அஞ்சல் போன்ற பல்வேறு வழிகளூடாகச் சேகரிக்கப்பட்டன. ஒவ்வொரு மாத அளவீட்டின் பெறுபேறுகள் நாணயக் கொள்கைக் குழு மற்றும் நாணயச்சபை ஆலோசனைக் குழுவிற்கு அடுத்துவரும் மாதத்தில் நடைபெறும் அவற்றின் மாதாந்தக் கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. 2006இல் ஆரம்பிக்கப்பட்ட காணி விலை அளவீடு தொடர்ந்து நடைபெற்றதுடன் மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்தான தரவைப் பயன்படுத்தி காணி விலைச் சுட்டெண் ஒன்றும் தொகுக்கப்பட்டது.

மேலும், புள்ளிவிபரவியல் திணைக்களம் வட மாகாணத்தில் யாழ் மாவட்டத்தில் மாதிரி அளவீட்டை நடத்தியது. இவ்வளவீட்டின் குறிக்கோள் வாழ்க்கைத தரம், தொழில் சந்தை நிலைமை, குடும்ப அலகுச் செயற்பாடுகள் மற்றும் அபிலாசைகள் தொடர்பாக அனைத்தையும் உள்ளடக்கிய தகவலைச் சேகரிப்பதாகும். மாதிரி யாழ் மாவட்டத்தின் நகர மற்றும் கிராமப் பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட 600 வீட்டு அலகுகளை உள்ளடக்கியிருந்தது. மோதல் முடிவடைந்த பின்பு சமூகப் பொருளாதார நிலைமைகள் மற்றும் வாழ்க்கைத் தரங்களிலான மாற்றங்கள் தொடர்பாக பதிலளிப்பவரின் உள்ளுணர்வுகள் பற்றிய தகவலும் சேகரிக்கப்பட்டது.

உத்தேசித்துள்ள நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2011/12 இற்கான ஆரம்ப வேலையையும் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இவ் அளவீடு வட மாகாணம் உள்ளிட்ட முழு இலங்கையையும் உள்ளடக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் 1981/82 இற்குப் பின்பு மேற்கொள்ளப்படும் இத்தகைய முதலாவது நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு ஆகும். இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட இன்னுமொரு முக்கிய பணி யாதெனில் இலங்கையிலும் மாகாணங்களிலும் சுபீட்சத்தை அளப்பதற்கு திருத்தியமைக்கப்பட்ட சுபீட்சச் சுட்டெண்ணைத் தொகுப்பதாகும்.

### 25.2 வியாபாரம் செய்தல் தரமிடலை முன்னேற்றல்

திணைக்களம் இலங்கையில் 'வியாபாரம் செய்வதை இலகுவாக்கும் தரமிடலை' மேம்படுத்தும் சிறப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை 2010இல் மேற்கொண்டது. இந் நோக்கத்துக்காக, இலங்கையின் தரமிடலை மேம்படுத்துவதற்கான உபாயத்தை விரிவாகத்

திட்டமிடுவதற்காக அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்களுக்காக இவ்வாண்டில் உயர்மட்ட கருத்தரங்கொன்றை முதலில் ஆரம்பித்தது. 'இலங்கையில் வியாபாரம் செய்வதற்கான படி முறையான வழிகாட்டல்'எனப் பெயரிடப்பட்ட தகவல் சிற்றேடும் திணைக்களத்தால் இவ்வாண்டு வெளியிடப்பட்டது. பூர்த்தி செய்யப்பட வேண்டிய பல எண்ணிக்கையான தேவைப்பாடுகள் மற்றும் வியாபாரத்தை நிறுவி தொழிற்படுத்துவதில் தொடர்பான தொழில் முயற்சியாளர்களால் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகளை விளங்கிக் கொள்வதற்கு தனித்துவமான மூல ஆவணமாக இதனை ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் பயன்படுத்தலாம்.

### 25.3 நாடளாவிய தரவு சேகரிப்பு முறை

1978இல் ஆரம்பித்த நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள், வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியாளர் விலைகள் மற்றும் முறைசாராத் துறைக்கான கூலி வீதங்கள் பற்றிய தகவலைத் தொடர்ந்து சேகரித்தது. தரவு வடக்கு மற்றும் கிழக்கிலிருந்தான 18 நிலையங்கள் உட்பட நாடு முழுவதிலும் தொழிற்படும் 102 தரவு சேகரிப்பு நிலையங்களுக்கான புள்ளிவிபரப் பரீட்சகர்களாகத் தொழிற்படும் அரச பாடசாலை ஆசிரியர்களூடாகச் சேகரிக்கப்படுகிறது. இம் முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவு விலைச் சுட்டெண்களைத் தொகுத்தல், கொள்கைத் தீர்மானங்களுக்கான விலை அசைவுகளை எறிவு செய்தல், விலைகள் மீது கொள்கை மாற்றங்களின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல், தேசிய செலவினம் மற்றும் வருமானத்தை மதிப்பீடு செய்தல் என்பவற்றுக்காக பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. விலைகள் மற்றும் கூலிகளிலான பருவ காலவேறுபாடு, தளம்பல் மற்றும் பிரதேச வேறுபாடுகளை பகுப்பாய்வு செய்வதற்கும் தரவுகள் பயனுடையதாகும். தரவு சேகரிப்பின் துல்லியம் ஆண்டின் ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தின்படி நிலையங்களை கிரமமாக கள மேற்பார்வை செய்வதனூடாக உறுதிப்படுத்தப்பட்டது. நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையை மேலும் பலப்படுத்தும் நோக்கில் தெரிந்தெடுக்கப்பட்ட தரவு சேகரிப்பு நிலையங்களின் மேற்பார்வைச் செயற்பாடுகள் பன்முகப்படுத்தப்பட்டு தொடர்பான மாகாண அலுவலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டன.

1978இல் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை ஆரம்பித்ததிலிருந்து 31 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த நிகழ்ச்சித் திட்டத்தின் தொழிற்பாட்டில் ஆசிரிய பரீட்சகர்களால் வழங்கப்பட்ட பெறுமதி மிக்க பணியைப் பாராட்டுவதற்கான சாதனையை முன்வைக்கும் பொருட்டு நாடு முழுவதற்குமான அனைத்து ஆசிரிய பரீட்சகர்களுக்கான கருத்தரங்கொன்று 2010 சனவரியில் நடத்தப்பட்டது. இது தனியான ஒரு கூட்டத்தில் நிகழ்ச்சித் திட்டத்தின் தொழிற்பாடு தொடர்பான பொதுவான பிரச்சனைகளை கலந்தாலோசிப்பதற்கும் பொது நலன்களின் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்குமான வாய்ப்பை வழங்கியது. மேலும், கடந்த சில ஆண்டுகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய உள்நாட்டு மோதல் நிலை காரணமாக அத்தகைய வாய்ப்பை இழந்த பிரதேசங்களிலுள்ள தமிழ் பேசும் ஆசிரிய பரீட்சகர்களும் அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றிருந்தனர். இத்துடன், தரவு சேகரிப்பாளர்களின் தரவு சேகரிப்பில் துல்லியம், தரம், வினைத்திறன், நேரம் தவறாமையை மேம்படுத்துவதற்கு அவர்களுக்கு மேலும் பயிற்சியை வழங்கும் நோக்கில் மூன்று பிரதேச ஆய்வரங்குகள் மாத்தறை, அநுராதபுரம், மற்றும் கண்டியில் நடத்தப்பட்டது. இவ் ஆய்வரங்குகளின் போதான விவாதத்திற்குரிய தொடர்கள் பெரும்பாலும், நாட்டில் மோதலுக்குப் பின்பான அபிவிருத்திகளிலும் விலை மற்றும் கூலிகளில் அவை கொண்டிருக்கும் தாக்கத்திலும் கவனஞ் செலுத்தின. நாட்டுக்கான முறிகளின் வழங்கல்கள், விலை மட்டம் மற்றும் பணவீக்க அசைவு, மற்றும் பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு போன்ற துறைகளிலும் சிறப்பு விழிப்பூட்டல் தொடர்கள் நடத்தப்பட்டன. அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் பயனுறுதி மேம்பாடடைந்த விழிப்புணர்வு மற்றும் ஆசிரிய பரீட்சகர்களால் காட்டப்பட்ட ஆர்வத்தில் பிரதிபலிக்கப்பட்டது. பணவீக்க எறிவுகளைச் சரியான முறையில் கொடுக்கும் பொருட்டு வரும் காலத்தில் உற்பத்தி/ விலை அபிவிருத்திகள் தொடர்பாக முன்கூட்டியே எச்சரிக்கும் முறைமையின் ஒரு பகுதியாக நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையைப் பயன்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

### 25.4 விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

திணைக்களம் தொகைமதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தால் தொகுக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2002 = 100) அடிப்படையில் நுகர்வோர் விலைகளின் அசைவுகளை தொடர்ந்து பகுப்பாய்வு செய்ததுடன் இது தொடர்பாக மாதாந்த பத்திரிகை வெளியீட்டையும் வெளியிட்டது. பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தை வசதிப்படுத்துவதற்கு விலை அபிவிருத்திகள் பகுப்பாய்வு அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன. புள்ளி விபரத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட குறுகிய கால மற்றும் நடுத்தர கால பணவீக்கத்திற்கான எறிவுகள் விலை அசைவுகளின் எதிர்காலப் போக்கின் முதன்மைக் குறிகாட்டிகளாக பயன்படுத்தப்படும். 2010இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் தீர்வை மாற்றங்களில் ஏற்படும் சமகால விலை அபிவிருத்திகளின் உணர்திறனுக்கு எறிவுகளை மேற்கொள்ளும் பொருட்டு கொநுவி சுட்டெண்ணின் விரிதாள் எறிவுகளும் தயாரிக்கப்பட்டன. இவ்வாண்டில் தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தால் இறுதியாக நடாத்தப்பட்ட 2006/2007இன் வீட்டலகு மற்றும் செலவின அளவீட்டால் பிரதிபலிக்கப்பட்டவாறு நுகர்வோர் செலவின மாதிரியின் அடிப்படையில் கொநுவி சுட்டெண்ணை மீள் தளமிடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட திட்டத்தின் முன்னேற்றத்தையும் பிரச்சனைகளையும் கலந்தாலோசனை செய்வதற்கு திணைக்களம் தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்துடன் பல கூட்டங்களை நடத்தியது.

மாகாண அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு மாகாண மட்டத்தில் கொள்கை உருவாக்கத்துக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு திணைக்களம் நுகர்வோர் நிதிகள் மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/2004ஐ அடிப்படையாகக் கொண்டு மாகாண நுகர்வோர் விலைச் சுட்டெண்களைத் தொடர்ந்து தொகுத்தது. இத்துடன், தேசிய மட்டத்தில் விலை மட்டத்தின் அசைவைப் பிரதிபலிக்கும் 2003/2004 நுகர்வோர் நிதிகள் மற்றும் சமூக பொருளாதார அளவீட்டின் அடிப்படையில் முழு நாட்டையும் உள்ளடக்கும் விதத்தில் கூட்டு கொநுவி சுட்டெண் திணைக்களத்தால் தொடர்ந்து தொகுக்கப்பட்டது. இச் சுட்டெண்ணைத் தொகுப்பதற்குத் தேவையான விலைகள் பெரும்பாலும் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையூடாகச் சேகரிக்கப்பட்டன.

திணைக்களம் இலங்கைக்கான முறைசாராத் துறைக் கூலிகளையும் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கூலித் தரவை

அடிப்படையாகக் கொண்டு தொகுத்தது. இத் திட்டத்தின் கீழ் கூலித் தகவலின் சேகரிப்புக்காக உள்ளடக்கப்பட்ட துணைத் துறைகளாக நெல், தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பயிர்ச்செய்கை, சிறிய அளவிலான கைத்தொழில், கட்டடவாக்கம் மற்றும் பணிகள் விளங்கின. இத்துடன், மத்திய அரசாங்கத்திலுள்ள நிறைவேற்றுத் தரமல்லாத மற்றும் சிற்றூழியர் தரங்களிலுள்ள ஊழியர்கள் மற்றும் அரசாங்க பாடசாலை ஆசிரியர்களை உள்ளடக்கும் அரச துறைக்கான கூலி வீதச் சுட்டெண்களும் திணைக்களத்தால் தொகுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. முறைசாராத் தனியார் துறையிலுள்ள கூலிகள் வேளாண்மை, கைத்தொழில் மற்றும், வர்த்தகம் மற்றும் பணிகள் துறைகளுக்கான ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண்களூடாக தொகுக்கப்பட்டன.

இதே வேளை திணைக்களம் முதலாந்தரச் சந்தை மட்டத்தில் விலைகளிலான அசைவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணைத் தொடர்ந்து தொகுத்தது. தற்போதைய மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் பிரதான குறைபாடுகளைத் தீர்க்கும் பொருட்டு தற்போதைய மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணை திருத்தியமைக்கும் சாத்தியம் அல்லது பன்னாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணுக்கு மாறுவதைப் பரிசீலனை செய்வதற்கு 2010இல் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணைத் தயாரிப்பது தொடர்பான தரவு சேகரிக்கும் பணி 2010இல் ஆரம்பமானது.

நாட்டில் அரச துறைத் தொழில்நிலையின் மட்டங்களையும் போக்குகளையும் கண்டறியும் பொருட்டு 2001இல் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்ட வருடாந்த மற்றும் காலாண்டு அரசதுறை தொழில்நிலை அளவீடுகளை திணைக்களம் தொடர்ந்து நடத்தியது. இத்தரவு காலாண்டு தேசிய வருமான மதிப்பீடுகளை மதிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்பட்டது. காலாண்டு அளவீடு மாகாண சபைகளின் கீழ் வருபவர்களை உள்ளடக்காது 2009இன் வருடாந்த அரசதுறை தொழில் அளவிடுகளில் அறிவிக்கப்பட்டவாறு ஒவ்வொன்றும் 1,000 ஊழியர்களுக்கும் கூடுதலாகக் கொண்டிருக்கும் அனைத்து மத்திய அரசாங்க உள்ளூராட்சி மன்றம் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களை உள்ளடக்குகிறது. இவ் அளவீடுகளில் சேகரிக்கப்பட்ட தகவல் அரசின் தற்போதைய தொழில்நிலைக் கொள்கையின் பயனுறுதியை மதிப்பிடுவதற்கு உதவுவதுடன் அரச துறையில் உற்பத்தித் திறனையும் வினைத்திறனையும் மேம்படுத்தும் வழிமுறையாகவும் தொழிற்படுகிறது. வெளிநாட்டுத் தொழில்நிலை தொழிலாளர் உறவுகள் மற்றும் தொழில் சந்தைச் சீர்திருத்தங்கள் மற்றும் தொழிலாளர் உற்பத்தித்திறன் ஆகிய துறைகளை உள்ளடக்கும் தொழிற்படை மற்றும் தொழிற் சந்தை மீதான தகவலும் திணைக்களத்தால் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

### 25.5 தேசிய மற்றும் பிரதேச வருமானம்

புள்ளி விபரவியல் திணைக்களம் பொருளாதாரத்தின் உண்மைத்துறையிலான அபிவிருத்திகளைத் தொடர்ந்து கண்காணித்ததுடன் தேசிய வருமானத்தின் தொடர்பான எறிவுகளையும் தொகுத்தது. இது முதன்மை மற்றும் இரண்டாந்தரத் தரவின் சேகரிப்பு, பொருளாதாரத்தின் அபிவிருத்திகளை பகுப்பாய்வு செய்தல், நாட்டில் உற்பத்தி, நுகர்வு, சேமிப்புக்கள் மற்றும் முதலீடுகளிலான வருங்காலப் போக்குகளை எதிர்வு கூறல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

நாட்டுக்கான அலுவல்சார் தேசிய வருமான மதிப்பீடுகளைத் தொகுக்கும் பொறுப்பைக் கொண்டுள்ள தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்துடன் திணைக்களம் தொடர்ந்தும் தொடர்புகளைக் கொண்டிருந்தமை தகவலின் பாய்ச்சலை இயலச் செய்தது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே திணைக்களம் வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியைத் தொகுத்து பகுப்பாய்வு செய்ததுடன் 2009இற்கான மாகாணப்படி பிரிக்கப்பட்ட மொ.உ.உற்பத்தியை ஒரு ஆண்டு தாமதத்துடன் தொகுத்தது. இப் புள்ளி விபரங்கள் 1996இலிருந்து 2009 வரையான காலத் தொடர்களாக பொது மக்களுக்குக் கிடைக்கத்தக்கதாக இருக்கின்றன. இத் தொடர்கள் நாட்டில் பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் வளர்ச்சிச் செயலாற்றங்களில் பிரதேச ஏற்றத் தாழ்வுகளை பகுப்பாய்வு செய்து அடையாளங் காண்பதில் கொள்கை வகுப்பாளர்களுக்கு அனைத்தையும் உள்ளடக்கிய புள்ளிவிபரத்தை வழங்குகிறது.

### 25.6 புள்ளி விபரத்தைப் பரப்புதல்

இவ்வாண்டிலும், திணைக்களம் "இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளி விபரங்கள் 2010 - தொகுதி XXXII" மற்றும் "இலங்கையின் சமூக பொருளாதாரத் தரவு 2010 - தொகுதி XXXIII" என்ற தலைப்புக்களில் அதன் இரு வருடாந்த வெளியீடுகளை முறையே 2010 ஏப்பிறல் மற்றும் யூனில் வெளியிட்டது. இத்துடன், இலங்கை மத்திய வங்கியின் 2011இற்கான கையடக்கத் தினக் குறிப்பிலுள்ள புள்ளிவிபரவியல் அட்டவணைகளும் புதிய தகவல்களுடன் பூரணப்படுத்தப்பட்டன. திணைக்களம் இவ்வாண்டில் வங்கியின் நியதிச்சட்ட மற்றும் ஏனைய வெளியீடுகளுக்கு அதன் கிரமமான பங்களிப்புக்களை வழங்கியது. உட் பிரதேச வலையமைப்பிலான திணைக்கள வெப்தளம் ஸ்ராம் நெற், இ.ம.வங்கியின் வெப்தளம் என்பவை கிரமமான அடிப்படையில் புதிய தகவல்களுடன் பூரணப்படுத்தப்பட்டன.

## 26. வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் ஒழுங்கு விதிகள் மற்றும் மேற்பார்வையுடன் தொடர்புபட்ட 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 1988.12.12ஆம் நாளன்று நிறுவப்பட்டது. 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டம் இயற்றப்பட்டதுடன் திணைக்களத்தின் செயற்பரப்பு மேலும் விரிவடைந்தது. இச் சட்டம் நிதி குத்தகைக்குவிடல் வியாபாரத்தினை ஒழுங்குபடுத்தவும் மேற்பார்வை செய்வதற்குமான ஏற்பாடுகளை வழங்குகிறது. திணைக்களத்தின் மேற்பார்வைப் பொறுப்புக்கள் முன்மதியுடைய தேவைப்பாடுகளை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைக்கிடுதல், நிறுவனங்களின் தொடர்ச்சியான மேற்பார்வையினையும் காலத்திற்குக் காலம் நியதிச்சட்ட பரீட்சிப்புக்களையும் நடத்துதல், குறித்துரைக்கப்பட்ட ஒப்புதல்களை வழங்குதல், மேற்பார்வையின் கீழ் உள்ள பலயீனமான கம்பனிகள் மீதான தீர்மான நடவடிக்கைகள், அனுமதி இல்லாமல் நிதியியல் வியாபார நடவடிக்கைகள்மீது புலனாய்வுகளையும் சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை

மேற்கொள்ளல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. 2010, இறுதியில் 37 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும், தொழிற்பாட்டிலுள்ள 11 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 4 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் 34 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள், 21 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் என்பனவற்றை உள்ளடக்கிய 70 பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக் கம்பனிகள் காணப்பட்டன. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினதும் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களினதும் பெயர்கள் இணைப்பு II.2இல் தரப்பட்டுள்ளன.

### 26.1 பணிப்புரைகளையும் முன்மதியுடைய தேவைப்பாடுகளையும் வழங்குதல்

2010இல் நாணயச் சபையின் ஒப்புதலுடன் ஏற்கனவேயுள்ள ஒழுங்கு விதிகளுக்கு புதிய முன்மதியுடைய ஒழுங்கு விதிகளும் பல திருத்தங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை கீழே சுருக்கமாத் தரப்பட்டுள்ளன. இவற்றின் விபரங்களை இந்த அறிக்கையின் பகுதி IIIஇல் வழங்கப்பட்டுள்ளன.

### (அ) பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கான ஒழுங்கு விதிகள்

(i) **வைப்புக்களுக்கு வழங்கப்படுகின்ற வட்டி வீதங்களின் மீதான உச்ச எல்லையின் திருத்தங்கள்**: வழங்கப்படுகின்ற வட்டி வீதங்கள் வலுவானதொரு மட்டத்திற்கு அப்பால் செல்லாமல் இருப்பதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் வைப்புக்களின் மீது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் செலுத்தக் கூடிய வட்டியின் உயர்ந்த வட்டி வீதம் திருத்தப்பட்டது. ஓராண்டு அல்லது அதற்கும் குறைவான முதிர்ச்சியைக் கொண்ட தவணை வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வீதம் நிறையேற்றப்பட்ட சராசரி 364 நாள் திறைசேரி உண்டியல் விளைவு வீதத்துடன் 4 சதவீதத்தைக் கூட்டியதொரு வீதமாக அதிகரிக்கப்பட்ட அதேவேளை நீண்டகால முதிர்ச்சிகளைக் கொண்ட வைப்புக்களுக்கு இவ் வீதம் நிறையேற்றப்பட்ட சராசரி 364 நாள் திறைசேரி உண்டியல் விளைவு வீதத்துடன் 5.0 சதவீதம் கூட்டிய வீதத்தில் காணப்பட்டது. எனினும் மூத்த பிரசைகளுக்கு குறித்துரைக்கப்பட்ட உச்ச எல்லைக்கு மேலாக ஒரு சத வீதத்தினை வழங்குவதற்கு பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் அனுமதிக்கப்பட்டன.

(ii) **இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் அறிமுகம்:** நிதியியல் பாதுகாப்பு வலை வழிமுறையொன்றினை அறிமுகப்படுத்தும் பொருட்டும் வைப்பாளர் நம்பிக்கையினை மேம்படுத்துவதற்காகவும் 2010 ஒத்தோபர் 1ஆம் தொடக்கம் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உரிமம் பெற்ற வங்கிகளுக்கும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்குமாக நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் “இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்” என்பதில் வைப்புப் பொறுப்புக்களை காப்புறுதி செய்யுமாறு பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. இத் திட்டத்தின்கீழ் உரிமம் பெற்ற/ பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனியொன்று நாணயச் சபையினால் இடைநிறுத்தப்படும் அல்லது இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்துக்கும் 2012 சனரி 1ஆம் நாளுக்குப் பின்னர் வைப்பாளர் ஒருவர் உயர்ந்தபட்சம் ரூ.200,000 இனை வைப்புக்கான இழப்பீட்டைக் பெற்றுக்கொள்வர். பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் ஆண்டொன்றிற்கு 0.15 சதவீதத்தினை காப்புறுதிக் கட்டுப் பணமாக மாதாந்த அடிப்படையில் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

(iii) **பதிவு கட்டணத்தில் அதிகரிப்பு**: பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனியொன்றினால் முதல் பதிவு செய்யும் ஆண்டில் செலுத்தப்படத்தக்க உரிமக் கட்டணம் ரூ.50,000 இலிருந்து ரூ.500,000இற்கு அதிகரிக்கப்பட்டது. மேலும் ஆண்டு உரிமக் கட்டணம் ரூ.50,000 இலிருந்து பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது.

| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் | ஆண்டு உரிமக் கட்டணம் ரூபா |
|---|---|
| ரூ.1 பில்லியன் அல்லது குறைவானது | 150,000 |
| ரூ.1 பில்லியனிலிருந்து ரூ.10 பில். வரை | 250,000 |
| ரூ.10 பில்லியனுக்கு மேல் | 500,000 |

(iv) **அனைத்து பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட வேண்டும்**: வெளிப்படையான தன்மையினையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் மேம்படுத்தும் பொருட்டும் அதேபோன்று பொதுமக்களின் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்காகவும் இவற்றை கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் 2011 யூன் இறுதியளவில் பட்டியலிடப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டன.

### (ஆ) பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகைக்கு விடும் நிறுவனங்களுக்கான ஒழுங்கு விதிகள்

(i) **சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் குறைந்தபட்ச மைய மூலதனத்தினை அதிகரித்தல்**: ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் பழுதுறாமைய மூலதனத்தினை கீழே காட்டப்பட்டுள்ள தொகைக்குக் குறையாமல் பேண வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன.

| குறைந்தபட்ச மைய மூலதனம் (ரூ. மில்) | நடைமுறைக்கு வரும் நாள் |
|---|---|
| 100 | 01.01.2012 தொடக்கம் |
| 150 | 01.01.2013 தொடக்கம் |
| 200 | 01.01.2014 தொடக்கம் |
| 250 | 01.01.2015 தொடக்கம் |
| 300 | 01.01.2016 தொடக்கம் |

**(ii) புதிய சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கான செலுத்தப்படத்தக்க மூலதனத்தில் அதிகரிப்பு:**

வலுவான வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் தாக்குப் பிடிக்கும் தன்மையினை மேம்படுத்தும் நோக்குடன், நிதியியல் குத்தகைச் சட்டத்தின்கீழ் உரிமத்திற்கு விண்ணப்பிக்கின்ற பகிரங்கக் கம்பனியொன்றின் குறைந்தபட்ச வழங்கப்பட்டுச் செலுத்தப்பட்ட மூலதனம் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது.

| குறைந்தபட்ச வழங்கப்பட்டு, செலுத்தப்பட்ட மூலதனம் (ரூ.மில்) | நடைமுறைக்கு வரும் நாள் |
|---|---|
| 100 | 01.01.2011 தொடக்கம் |
| 150 | 01.01.2012 தொடக்கம் |
| 200 | 01.01.2013 தொடக்கம் |
| 250 | 01.01.2014 தொடக்கம் |
| 300 | 01.01.2015 தொடக்கம் |

**(iii) மத்திய வங்கிக்கு காலாந்தரக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்:**

தொடர்ச்சியான பரீட்சிப்புக்களின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளைக் கண்காணிக்கும் பொருட்டும், அனைத்து சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளும் கடன்பாடுகள், கடன் வசதிகள், கொடுகடன் முதிர்ச்சி இடைவெளி போன்ற தொடர்பான அறிக்கைகளுடன் சேர்த்து நிதியியல் கூற்றுக்களை மாதாந்த/காலாண்டு அல்லது வருடாந்த அடிப்படையில் மத்திய வங்கியின் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட தரவு அனுப்பல் முறைமையினூடாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.

**(iv) கிளைகள்/வியாபாரதத் தலங்களை திறப்பதற்கு/இடம் மாற்றுவதற்கு/மூடிவிடுவதற்கான ஒப்புதல்:**

சிறப்பியல்புகள் வாய்ந்த குத்தகைக் கம்பனியொன்றின் ஏதாவது கிளை/வியாபாரத் தலங்களை திறப்பதற்கு வியாபாரத்தினை இடம் மாற்றுவதற்கு ஏதேனும் கிளைகளை/வியாபாரத் தலங்களை மூடிவிடுவதற்கு வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரிடமிருந்து எழுத்து மூலமான முன் ஒப்புதலொன்றை பெற்றுக் கொள்ள வேண்டுமென சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

**(v) விண்ணப்பம், முதற் பதிவு மற்றும் வருடாந்த புதுப்பிப்பு என்பனவற்றின்போது செலுத்தப்படத்தக்க கட்டணத்தில் அதிகரிப்பு:**

பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனமொன்றாக பதிவு செய்யப்படுவதற்கான விண்ணப்பத்திற்கு செலுத்தப்படத்தக்க கட்டணம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் என்பனவற்றுக்கு ரூ.25,000 ஆக நிர்ணயிக்கப்பட்டது. வேறு ஏதேனும் பகிரங்க கம்பனிகளுக்கு இக்கட்டணம் ரூ.50,000 ஆக இருக்கும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் முதற் பதிவுக்காக செலுத்தப்படத்தக்க கட்டணம் ரூ.250,000 ஆக நிர்ணயிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து செலுத்தப்பட வேண்டிய ஆண்டுக் கட்டணம் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைவிடும் நிறுவனத்தின் மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் பின்வருமாறு இருக்கும்.

| நிறுவனத்தின் மொத்தச் சொத்துக்கள் | ஆண்டு உரிமக் கட்டணம் ரூ. |
|---|---|
| ரூ.1 பில்லியனுக்கு குறைவானது | 150,000 |
| ரூ.1 பில்லியனுக்குக் கூடுதலாக ஆனால் ரூ.10 பில்லியனுக்கு சமமாக அல்லது குறைவாக | 250,000 |
| ரூ.10 பில்லியனுக்குக் கூடுதலாக | 500,000 |

### 26.2 புதிய நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குதலும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான ஒப்புதல்களை வழங்குதலும்

(அ) 2010இல் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் இரண்டு கம்பனிகள் பதிவு செய்யப்பட்டதுடன் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 35 இலிருந்து 37இற்கு அதிகரித்தது. இவ்வாண்டுப் பகுதியில் 98 புதிய கிளைகளுக்கான ஒப்புதல் வழங்கப்பட்டதுடன் இவற்றில் 41 வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிறுவப்படவுள்ளன. மேலும், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் அவற்றின் பெயர்களை மாற்றுவதற்கு அதாவது சிலிங்கோ இன்வெஸ்மன்ட் அன்ட் றியல்டி லிமிடெட்டினை த ஸ்டான்டட் கிறடிட் லங்கா எனவும், நெக்ஸ்ட் பினான்ஸ் லிமிடெட்டினை கன்றிச் பினான்ஸ் லிமிடெட் எனவும், சில்வறீன் பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்டினை பீப்பில்ஸ் மேர்சன்ட் பினான்ஸ் கம்பனி லிமிட்டெட் எனவும் மற்றும் கப்பிட்டல் றீச் லீசிங் பிஎல்சி இனை சொவ்ற் லொஜிக் பினான்ஸ் பிஎல்சி எனவும் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

(ஆ) அதே வேளை, 4 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் ஒன்றிணைக்கப்பட்டதுடன் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 70இற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் 44 புதிய கிளைகள் நாடு முழுவதும் திறக்கப்பட்டதுடன் அவற்றில் 15 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் திறக்கப்பட்டன.

### 26.3 நிதியியல் நிறுவனங்களைத் தொடர்ந்தும் மேற்பார்வை செய்தல்

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினாலும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளினாலும் சமர்பிக்கப்பட்ட காலாந்தரக்

கூற்றுகளினூடாகப் பெறப்பட்ட நிதியியல் தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமாக தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய பகுப்பாய்வுகள் மேலும் பரீட்சிப்புக்களையும் திருத்தியமைக்கும் நடவடிக்கைகளையும் வேண்டிநிற்கும் இந் நிறுவனங்களின் மோசமான நிலைமைகளை நேரகாலத்துடன் அடையாளம் கண்டுகொள்வதற்கான அடிப்படையினை வழங்குகின்றன. தேவையானவிடத்து ஏதேனும் மோசமான நிலைமைகளை தீர்ப்பதற்காக பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வாளர்களுடனான கூட்டங்களும் நடத்தப்பட்டன. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறைகளை வலுப்படுத்தும் ஈடுபாட்டுடன் காலாண்டு அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை நிறுவனங்கள் என்பனவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடன் ஆளுநரின் கூட்டங்கள் நடைபெற்றன. இக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்களிடையே முக்கியமான விடயங்களாக சில நிறுவனங்களினால் எதிர் நோக்கப்படும் திரவத்தன்மை தடைகளை வெற்றி கொள்ளல், உயர்ந்தளவு உண்மைச் சொத்து வெளிப்படுத்தல் காரணமாக ஏற்படும் இடர்நேர்வுகளைத் தணித்தல், வியாபாரத் தொழிற்பாடுகளில் கம்பனி ஆளுகை நடைமுறைகளை நடைமுறைக்கிடல், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளைப் பட்டியலிடல் மற்றும் நிதியியல் ஆலாட்சி அதிகாரி முறையில் உறுப்பினராகச் சேருதல் என்பன காணப்பட்டன.

### 26.4 நிதியியல் நிறுவனங்களைப் பரீட்சித்தல்

நிதியியல் நிறுவனங்களின் திரவத் தன்மை, சொத்துக்களின் தரம், மூலதனப் போதுமை, முகாமைத்துவ வினைத்திறன், வருவாய்கள், இலாபத்தன்மை, முறைமை மற்றும் கட்டுப்பாடு, மற்றும் கம்பனி ஆளுகையின் நிலைமை என்பனவற்றினை மதிப்பிடுவதற்காக காலத்திற்குக் காலம் தலத்திலான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இப் பரீட்சிப்புக்களை மேற்கொள்கையில் இடர்நேர்வுகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இதில் இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், இடர்நேர்வுகளை முகாமைப்படுத்தல், மற்றும் இடர்நேர்வுகளை தணிப்பதற்கான மூலவளங்களை மதிப்பீடு செய்தல் என்பனவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. 2010இல் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 7 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினதும் 5 சிறப்பியல்பு வாய்ந்த கம்பனிகளினதும் தலப்பரீட்சிப்புக்களை மேற்கொண்டது. பரீட்சிப்பு அறிக்கைகள் அடையாளம் காணப்பட்ட ஏதேனும் இடர்நேர்வுகளை சுட்டிக்காட்டுவதுடன் பிழைகளைத் திருத்துகின்ற நடவடிக்கைகளுக்கான விதந்துரைப்புக்களும் தொடர்பான பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டன. மேலும், 4 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும் 4 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளும் வரையறுக்கப்பட்ட அம்சங்களின் அடிப்படையில், திரவத்தன்மை, கொடுகடன் நிர்வாகம், சொத்துப் பட்டியல், மூலதனப் போதுமை, மற்றும் கட்டுப்பாடுகள் போன்ற முக்கியமான துறைகள் தொடர்பாக பரீட்சிக்கப்பட்டன. குறிப்பிடத்தக்க மேற்பார்வை அவதானிப்புக்குரியவை என அடையாளங் காணப்பட்ட தொடர்பான நிறுவனங்களின் பணிப்பாளர் சபை அவற்றின் பிழைகளை திருத்திக் கொள்வதற்கான கால அவகாசத்துடன் கூடிய கட்டமைப்பொன்றினை உறுதியான கடப்பாட்டுடன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. முக்கியமாக மேற்பார்வைக் கரிசனைகள் எழுப்பப்பட்ட விடயங்களாக கம்பனி ஆளுகை மீதான பணிப்புரைகளுக்கு இணங்கி ஒழுகாமை, சிறந்த இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு தேவையான முன்னேற்றங்கள் தொடர்பான தரப்பினருடன் வணிகத்தில் முன்மதிச்செயலாற்றம் போதாமை என்பன காணப்பட்டன.

### 26.5 இடர்பாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் வியாபாரத்திற்கு புத்துயிரளிப்பதற்கான திட்டம்

இவ்வாண்டுப் பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் குறிப்பிடத்தக்க மூலவளங்கள் கடுமையான திரவத் தன்மை தடைகளை எதிர்நோக்கிய 5 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் ஒரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனி என்பனவற்றின் வியாபாரத்திற்கு புத்துயிரளிப்பதனை நோக்கி நெறிப்படுத்தப்பட்டன. கடந்த ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக இக் கம்பனிகளின் முகாமைத்துவம் நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவராண்மையினால் மேற்பார்வை செய்யப்பட்டன. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவம், முகாமைத்துவ முகவரமைப்பு மற்றும் முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் ஆகியோருடன் கிரமமான கூட்டங்களை நடத்துவதனூடாக இடர்பாட்டிலுள்ள கம்பனிகளின் செயலாற்றத்தினை நெருக்கமாகக் கண்காணித்தது. வைப்பாளர்களின் நலவுரித்துக்களையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினையும் பாதுகாக்கும் பொருட்டு, வியாபாரத்திற்கு புத்துயிரளிப்பதற்கான முன்மொழிவுகள் 2009இல் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட 4 உறுப்பினர்களைக் கொண்ட நிபுணர்கள் குழுவின் தொழில்சார் நிபுணத்துவ ஆதரவுடன் மீளாய்வு செய்யப்பட்டன. இதன்படி, குறிப்பிட்ட கம்பனிகள் பொருத்தமானவிடத்து, முன் மொழியப்பட்ட திட்டங்களைத் தொடர அனுமதிக்கப்பட்டன. இடர்பாட்டிலுள்ள ஏனைய குறிப்பிட்ட கம்பனிகளைப் பொறுத்தவரை, தொடர்பான சட்டங்களின்கீழ் நாணயச் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் அது மீள் முகாமைப்படுத்தல் உபாயங்களின் மீதான பணிப்புரைகளை வகுத்தது. இக் கம்பனிகளின் வியாபாரத்திற்கு புத்துயிரளிக்கும் திட்டமானது பொது மக்களுக்கு அல்லது தனியாருக்கான வழங்கல் மூலமாக புதிய பங்குகளை வழங்கல், உண்மைச் சொத்துக்களை விற்பனை செய்தல், மற்றும் வைப்புப் பொறுப்புக்களில் ஒரு பகுதியினை பங்குகளாக மாற்றுதல் என்பன மூலமாக மீள் மூலதனமயப்படுத்தும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட வழிமுறைகளுடன் தொடர்புபட்டதாக இருந்தது. இதற்கமைய 2010இன் இறுதியில் இடர்பாட்டிலிருந்த கம்பனிகளிலொன்று அதன் தொழிற்பாடுகளில் வெற்றிகரமாக மீட்சிபெற்று வழமையான தொழிற்பாடுகளுக்கு திருப்திகரமான முறையில் முன்னேற்றம் கண்டது. இதன் விளைவாக, நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவராண்மை இவ்வாண்டின் இறுதியில் விடுவிக்கப்பட்டது. மற்றைய கம்பனிகள் 2010 இறுதியில் திட்டத்தினை இறுதிப்படுத்தும் நிலையில் காணப்பட்டன.

**இணைப்பு II-2**

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்கு விடும் நிறுவனங்கள்

**புதிய சட்டத்திற்கிணங்க மத்திய வங்கியுடன்**
**பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் (2010 இறுதியிலுள்ளவாறு)**

**பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்**

1. அபான்ஸ் பினான்ஷியல் சேர்விசஸ் லிமிடெட்
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பீஎல்சி
3. ஏஎம்டபிள்யூ கபிடல் லீசிங் லிமிடெட்
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பீஎல்சி
5. ஏசியா அசற் பினான்ஸ் லிமிடெட்
6. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
7. அசோசியேட்ரட் மோட்டார் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
8. பார்ட்லீட் பினான்ஸ் லிமிடெட்
9. பிம்புத் லங்கா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
10. சென்றல் பினான்ஸ் கம்பனி பீஎல்சி
11. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
12. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
13. சிற்றிசன்ஸ் டிவெலப்மென்ற் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட்
14. கொமர்சல் கிறடிட் லிமிடெட்
15. எதிரிசிங்க ட்ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
16. கிராமின் மைக்ரோ கிறடிட் கம்பனி லிமிடெட்
17. இன்டஸ்றியல் பினான்ஸ் லிமிடெட்
18. கன்றிச் பினான்ஸ் லிமிடெட் (முன்னர் நெக்ஸ்ட் பினான்ஸ் லிமிடெட்)
19. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
20. எல்பீ பினான்ஸ் பீஎல்சி
21. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
22. மர்ச்சன்ட் கிறடிட் ஒப் சிறிலங்கா லிமிடெட்
23. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
24. பீப்பிள்ஸ் லீசிங் பினான்ஸ் பி.எல்சி
25. பீப்பிள்ஸ் மேர்ச்சன்ற் பினான்ஸ் கம்பனி லிமிடெட் (முன்னர் சில்வரீன் பினான்ஸ் கம்பனி லிமிடெட்)
26. செங்கடகல பினான்ஸ் கம்பனி லிமிடெட்
27. சிங்கர் பினான்ஸ் (லங்கா) லிமிடெட்
28. சிங்கபுத்ர பினான்ஸ் பீஎல்சி
29. சொப்ற்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி (முன்னர் கப்பிட்டல் ரீச் லீசிங் பீஎல்சி)
30. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் சேர்விஸஸ் லிமிடெட்
31. த பினான்ஸ் அன்ட் கரன்டி கம்பனி லிமிடெட்
32. த பினான்ஸ் கம்பனி பீஎல்சி
33. த மல்ரி பினான்ஸ் கம்பனி லிமிடெட்
34. த சார்டட் கிறரிட் லங்கா லிமிடெட் (முன்னாள் சிலிங்கோ இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் ரியல்டி லிமிடெட்)
35. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
36. வாலிபெல் பினான்ஸ் பிஎல்சி
37. ரீகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்

**பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்கு விடும் நிறுவனங்கள்**

**(அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்**

1. இலங்கை வங்கி
2 கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
3. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
4. எம்சிபி பாங்க் லிமிடெட்
5. நெசனல் டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி
6. நேசன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் பிஎல்சி
7. பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
8. மக்கள் வங்கி
9. சம்பத் பாங்க் பிஎல்சி
10. செலான் பாங்க் பிஎல்சி
11. யூனியன்பாங்க் ஒவ் கொழும்பு லிமிடெட்

**(ஆ) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

1. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட் (முன்னர் செலிங்கோ சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்)
2. டீஎவ்சீசீ பாங்க்
3. லங்காபுத்ர டெவலப்மென்ட் பாங்க் லிமிடெட்
4. சனச டெவலப்மென்ட் பாங்க் லிமிடெட்

**(இ) பிம்புத் லங்கா இன்வெஸ்ட்மன்ட் லிமிடெட், கிறமீன் மைக்ரோ கிறடிட் கம்பனி லிமிடெட், மற்றும் ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட் தவிர்ந்த மேலே பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளும்**

**(ஈ) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

1. ஏசியா கொமர்ஸ் லிமிடெட்
2. அசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்
3. சீலீஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிடெட்
4. செலிங்கோ லீசிங் கோபரேசன் லிமிடெட்
5. கொமர்சல் லீசிங் கம்பனி லிமிடெட்
6. கோபரேடிவ் லீசிங் கம்பனி லிமிடெட்
7. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
8. இசுறு பினான்ஸ் கம்பனி லிமிடெட்
9. களுத்தோட்ட இன்வெஸ்மென்ட் அன்ட் லீசிங் லிமிடெட்
10. கொசீபா லீசிங் கம்பனி லிமிடெட்
11. லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனி பிஎல்சி
12. லிஸ்வின் இன்வெஸ்மென்ட் லிமிடெட்
13. எல்ஓஎல்சி மைக்ரோ கிறடிற் லிமிடெட்
14. மர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா பிஎல்சி
15. நேசன் லங்கா பினான்ஸ் பில்சி
16. ஒறியன்ட் பினான்சியல் சேவிஸ் கோப்பரேசன் லிமிடெட்
17. பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி லிமிடெட்
18. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பாங்க் பிஎல்சி
19. சம்பத் லீசிங் அன்ட் பக்டரிங் லிமிடெட்
20. எஸ்எம்பி லீசிங் பிஎல்சி
21. சொப்ற்லொஜிக் கிரடிட் லிமிடெட் (முன்னர் கப்பிட்டல் ரீச் கிரடிட் லிமிடெட்)

### 26.6ஏனைய நடவடிக்கைகள்

#### (அ) முன்மொழியப்பட்ட புதிய சட்டவாக்கங்களின் முன்னேற்றம்

1988ஆம் ஆண்டின் நிதிக் கம்பனிகள் சட்டத்தினை நீக்கி அதற்குப் பதிலாக நிதி வியாபாரத்தினை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான புதிய சட்டவாக்கமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு 2010 மேயில் அமைச்சரவை ஒப்புதலளித்தது. முன்மதியுடைய வியாபார நடைமுறைகள், அனுமதியில்லாமல் வைப்புக்களை ஏற்கும் வியாபாரங்களை காத்திரமான முறையில் ஒழித்தல், நிதியியல்துறையின் உறுதிப்பாட்டிற்கு ஏற்படும் சவால்களை வெற்றி கொள்ளும் விதத்தில் காத்திரமான ஒழுங்கு விதிகளை அதிகரித்தல் என்பனவற்றிற்கு வசதியளிக்கும் விதத்தில் சட்டங்களை இற்றைவரை பூரணப்படுத்துவதற்கு நிதிக் கம்பனிகள் சட்டத்தினை திருத்துவதன் அவசியம் நிதித் துறையினராலும் அதேபோன்று ஒழுங்குமுறைப்படுத்துனர்களினாலும் உணரப்பட்டது. 2010 திசெம்பர் 29ஆம் நாளன்று வரைவு மசோதாவினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்ப தற்கான ஒப்புதலை அமைச்சரவை வழங்கியது. மேலும், நுண்பாக நிதி நிறுவனங்களின் வியாபார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான மேற்பார்வைப் பொறிமுறையொன்றினை நிறுவுவதற்குத் தேவையான சட்டத்தினை வரையும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. உத்தேச ஒழுங்குமுறைப்படுத்தல் பொறிமுறையின் கீழ் இந் நோக்கத்திற்காக சுதந்திரமான அதிகார சபையொன்று நிறுவப்படும். நிதி திட்டமிடல் அமைச்சிற்கு மத்திய வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளின் விளைவாக அமைச்சரவை 2010யூலையில் நுண்பாக நிதி மசோதாவின் வரைவிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளதுடன் சட்ட வரைஞர் திணைக்களம் மசோதாவை வரையும்.

#### (ஆ) பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

அனுமதியின்றி நிதி வியாபாரத்தினை நடத்துவது தொடர்பாக திணைக்களம் பொதுமக்களுக்கு தொடர்ந்தும் அறிவூட்டியது. பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

(i) வைப்புக்களின் வரைவிலக்கணத்தினைத் தரும் விளக்கக் குறிப்புக்கள் வேறுபட்ட சட்டங்களின் கீழ் வைப்புக்களை ஏற்றுக்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ளன. நிறுவனங்களின்/ அமைப்புக்களின் வகை, வைப்புக்களை ஏற்றுக் கொள்ள மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியல் என்பனவற்றைக் கொண்ட பத்திரிகை அறிவித்தல்.

(ii) நிதிக் கம்பனிகளின் நடவடிக்கைகள், மற்றும் அதிகாரமளிக்கப்படாத நிதி நிறுவனங்களில் முதலீடு செய்வதிலுள்ள இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக பல்வேறு இடங்களிலும் நடத்தப்பட்ட பதினொரு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்.

(iii) அதிகாரமளிக்கப்படாத ஆட்கள் மற்றும், நிறுவனங் களினால் பொது மக்களிடமிருந்து திரட்டப்படுகின்ற நிதிகள் என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரங்கள் மத்திய வங்கியின் மாகாண அலுவலகங்களூடாக பொதுமக்களிடையே விநியோகிக்கப்பட்டன.

#### (இ) நிதிக் கம்பனிகளை ஒடுக்கிவிடும் செயற்பாடுகள்

1990களில் முறிவடைந்த பதினொரு நிதிக் கம்பனிகளில் ஐந்து கம்பனிகளைக் கலைத்துவிடும் செயற்பாடுகள் முடிவடைந்தவேளையில் மற்றைய ஆறு கம்பனிகளையும் ஒடுக்கி விடுவது தொடர்பான வேலைகள் தொடர்ந்தும் இடம்பெற்றன. இவ்வாண்டில், நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் தொடர்பாக இந் நிதிக் கம்பனிகளிடமிருந்து மத்திய வங்கி ஏறத்தாள ரூ.168 மில்லியன்களை சேகரித்துக் கொண்டது.

#### (ஈ) அனுமதியின்றி நிதியியல் வியாபாரத்தினை நடத்துவதன் மீதான நடவடிக்கை

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் பெற்ற முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 11ஆவது பிரிவின் கீழ் திணைக்களம் 14 ஆட்கள்/நிறுவனங்களின்மீது புலனாய்வுகளை மேற்கொண்டதுடன் மற்றைய 45 நிறுவனங்களின் மீது புலனாய்வுகளைத் தொடர்ந்தது. அதேவேளை, பொதுமக்களிடமிருந்து நிதியினைச் சேகரித்து மீள் கொடுப்பனவுகளைச் செலுத்தத்தவறிய இரண்டு நிறுவனங்களுக்கெதிராக அடிப்படை உரிமை மனுக்களைத் தொடர்ந்த முதலீட்டாளர்கள்/பிணைய வைப்பாளர்களின் நலவுருத் துக்களைப் பாதுகாப்பதற்காக உயர் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் குழுவிற்கு திணைக்களம் செயலக வசதிகளை வழங்கியது. ஆண்டின் இறுதியில், மீள் கொடுப்பனவுத் திட்டத்தின் கட்டம் 1இன் கீழ் கோல்டன் கீ கிறடிட் காட் கம்பனியின் 8,110 முதலீட்டாளர்களுக்கு/பிணைய வைப்பாளர்களுக்கு ரூ.805.5 மில்லியன் வழங்கப்பட்ட வேளையில் செயலகப் பணியுடன் தொடர்பான செலவு ரூ.37 மில்லியனாகக் காணப்பட்டது.

### 27. நலன்புரி

நலன்புரித் திணைக்களம் அனைத்துப் பயனாளிகளுக்கும் அதன் வினைத்திறனுடனும் பயனுறும் விதத்திலும் நலன்புரி வசதிகளை தொடர்ந்து விரிவுபடுத்தியது. இந் நன்மைகள் அனைத்து ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் அவர்களது பதிவு செய்யப்பட்ட தங்கியிருப்போர் என மொத்தமாக 12,000இற்கும் அதிகமானவர்களுக்கு வழங்கப்பட்டன. நலன்புரித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வசதிகள் சலுகைக் கடன்கள், மருத்துவ செலவினத்தின் மீளளிப்புக்கள், உள்ளக நலச் சிகிச்சை, உணவக வசதிகள், புகையிரத ஆணைச்சீட்டுக்கள், கடமை நேரம் தவிர்ந்த நேரங்களில் விபத்துக்களை உள்ளடக்குவதற்காக ஊழியர்களுக்கான குழு காப்புறுதிப் பூட்கைகள் மற்றும் நலம் மற்றும் ஏனைய தொடர்பான விடயங்கள் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்குகின்றன. இத்துடன், நலன்

புரித் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் 60ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் தொடர்பான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதில் பங்காற்றியது.

விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த ஐந்து வேலை நாட்களினுள் பயனாளிகளின் முக்கிய வாழ்க்கைத் தேவைகளுக்கான நிதியியல் உதவியை வழங்குவதற்கு நலன்புரித் திணைக்களம் சேமிநிதியக் கடன்கள், ஊர்திக் கடன்கள், கணனிக் கடன்கள் மற்றும் அலுவலர் நன்மைத் திட்டத்தின் கீழான ஏனைய கடன்கள் உள்ளடங்கலாக 1,179 கடன்களை 2010இல் வழங்கியது. மேலும், திணைக்களம் 129 புதிய வீடமைப்புக் கடன்களுக்கு ஒப்புதலளித்ததுடன் இக் காலப்பகுதியில் கடன் தவணைப் பணங்களை பகிர்ந்தளித்தது. கடன் கண்காணிப்பு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டமை ஊழியர்களுக்கு கடன்களை சரியாகவும் விரைவாகவும் பகிர்ந்தளிப்பதை இயலச் செய்தது.

இலங்கை மத்திய வங்கி உணவகம் இலங்கை மத்திய வங்கி அலுவலர் அதுபோல் வங்கிப் பணிமனையில் அமைந்துள்ள ஏனைய நிறுவனங்களின் அலுவலர்களுக்கு காலை உணவையும் மதிய உணவையும் வழங்கும் சுய பரிமாறல் முறைமையைத் தொடர்ந்து மேற்கொண்டது. இத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேநீர்ப் பணியும் இக்காலப் பகுதியில் தொடர்ந்து இடம்பெற்றது. இதற்கு மேலதிகமாக சிறப்புக் கோரிக்கையின் அடிப்படையில் அனைத்துத் திணைக்களங்கள் மற்றும் மூத்த முகாமைத்துவத்திற்கான உணவு மற்றும் பானம் வழங்கும் பணிகள் அவர்களின் திருப்திக்கு ஏற்ப விரிவுபடுத்தப்பட்டன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உணவக வசதிகள் மற்றும் சிறப்பு வேண்டுகோள்களிலிருந்தான நாளாந்த வருமானம் முறையே ரூ.14,023,576இற்கும் ரூ.1,678,614 இற்கும் அதிகரித்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 15.86% மற்றும் 45.86% அதிகரிப்பாகும்.

திணைக்களம் பதிவு செய்யப்பட்ட அனைத்துப் பயனாளிகளுக்கான மருத்துவச் செலவை தொடர்ந்து மீளளிப்புச் செய்தது. வங்கி ஊழியர்களுக்கான மருத்துவ நிலைய வசதிகள் அனைத்து பணி நேரங்களிலும் கிடைக்கக் கூடியதாக இருந்தன. மருத்துப் பணிகளின் தரம் பிரபல்யமான மருத்துவமனையிலிருந்து பணியைப் பெற்றதன் மூலம் மேம்படுத்தப்பட்டது. மருந்து மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுகூடப் பணிகள் நியாயமான விலையில் மருத்துவ நிலையத்தில் வழங்கப்பட்டன. மருத்துவ நிலையத்தின் பதிவுகளை கணனிமயப்படுத்தல் இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டதுடன் புதிய முறைமை 2011 சனவரியிலிருந்து தொழிற்பாட்டுக்கு வரும். இதன் மூலம் ஊழியர்களின் அனைத்து மருத்துவப் பதிவுகளும் இலத்திரனியல் வடிவில் பேணப்படும். திணைக்களம் அலுவலர்களின் நன்மைக்காக சிகிச்சை முகாம்கள் மற்றும் பல விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்து நடத்தியது.